aelay publish

வீரபாண்டியன் தலை கொண்ட கோப்பரகேசரி

# ஆதித்த கரிகாலன்

- இன்ப பிரபஞ்சன்

2000
பிரதிகளை தாண்டி
இரண்டாம் பதிப்பில்



www.indianguide.in

வீரபாண்டியன் தலை கொண்ட
கோப்பரகேசரி

# ஆதித்த கரிகாலன்

இன்ப பிரபஞ்சன்.ஜெ

ஏலே பதிப்பகம்

www.indianguide.in

வீரபாண்டியன் தலை கொண்ட கோப்பரகேசரி
ஆதித்த கரிகாலன் – நாவல்
© இன்ப பிரபஞ்சன்.ஜெ 2021
எழுத்தாளர்: இன்ப பிரபஞ்சன்.ஜெ

முதல் பதிப்பு: செப்டம்பர் 2021

வெளியீடு:
ஏலே பதிப்பகம்
5/175, பாத்திமா நகர்,
கூத்தென்குழி,
திருநெல்வேலி – 627104
தொடர்புக்கு: 9944992571

Veerapandiyan thalai konda kopparakesari aathidhya karikalan - N*ovel*
All CopyRights Reserved By © Inba Prabhanjan 2021
Author: Inba Prabhanjan
First Edition: Septemper 2021

Published By:
Aelay Publish
5/175, Fathima nagar,
Kuthenkuly,
Tirunelveli -627104
Phone: 9944992571

Design And Executed by

aelay Publish.com

ISBN : 978-93-5533-105-2
Page : 266
Price: Rs.290/-

www.indianguide.in

# நாவலோ நாவல்!!!

பொன்னியின் செல்வன் வாசகர்களுக்கு வணக்கம். அமரர் கல்கி அவர்களின் பொன்னியின் செல்வனைப் படித்து, அந்தக் கதாப்பாத்திரங்களோடு வாழ்ந்து வரும் பல்லாயிரம் ரசிகர்களில் நானும் ஒருவன்.

ஒரு கதை படித்து முடித்த பிறகு அதன் தாக்கம் ஒருவர் மீது ஒரு நாள் அல்லது இரண்டு நாள் இருக்கும். ஆனால் பொன்னியின் செல்வன் என்ற வார்த்தையைக் கேட்கும் பொழுதே என் கண்முன்னே அந்தக் கதை படமாக ஓடத் தொடங்கும். எப்பொழுது பார்த்தாலும் என் நண்பர்களோடு இந்தப் புத்தகத்தைப் படியுங்கள் படியுங்கள் என்று வற்புறுத்திக் கொண்டே இருப்பேன்.

ஒரு முறை இந்தக் கதைக்கும் முன்னால் என்ன நடந்திருக்கும் என்று என் நண்பனோடு விவாதம் நடத்திக் கொண்டிருக்கும் பொழுது நான் கூறிய கருத்துக்கள் அவனுக்கு மிகவும் பிடித்து விட்டன. இதை ஏன் நீ எழுதக்கூடாது என்று அவன் கேட்க, பொன்னியின் செல்வனின் ரசிகர்களை ஒரு கதை கூறி சமாதானப்படுத்துவது என்பது முடியாத ஒன்று. பலபேர் இதற்காக முயற்சித்து அந்த முயற்சியில் தோற்றுத்தான் போனார்கள் என்று நான் கூற, முதலில் முயற்சி செய் என்று பதிலுக்கு அவன் கூறினான்.

ஒருமனதாக எனது படவரி (இன்ஸ்டாகிராம்) பக்கத்தில் இந்தக் கதையை எழுதத் தொடங்கினேன். நல்ல வரவேற்பு கிடைத்தது. பின்பு பிரதிலிபியிலும் எழுதினேன்.

கதை நன்றாக இருக்கிறது என்று அனைவரும் கூறினர். சரி ஒரு முயற்சி செய்து பார்த்துவிடலாம் என்று இந்தக் கதையை முழுவீச்சாக ஒரு சிறிய புத்தகமாக எழுதியுள்ளேன்.

www.indianguide.in

இந்தக் கதை முற்றிலுமாக பொன்னியின் செல்வன் நாவல் நடப்பதற்கு முன்பாக என்ன நடந்திருக்கும் என்பதைச் சில வரலாற்று உண்மைகளுடன் எனது கற்பனையையும் சேர்த்து எழுதியுள்ளேன்.

பொன்னியின் செல்வன் கதை படிக்கும் பொழுது ஆதித்த கரிகாலரின் கதாப்பாத்திரம் என்னை வெகுவாகக் கவர்ந்துவிட்டது, நண்பர்களோடு விவாதிக்கும் பொழுது இவரின் பெயரைக் கேட்கும்போது எனக்கு மெய்சிலிர்க்கும்! அதனால் என் கதை இவர் வழியாக பொன்னியின் செல்வனை அடைவதாக இருக்கப்போகிறது.

பொன்னியின் செல்வனில் வரும் எந்த ஒரு கதை திருப்பத்தையும் நான் என் கதையில் உடைக்கவில்லை. ஓரிரு இடங்களில் மட்டும் கல்கி எழுதியுள்ள சில காட்சிகளைக் கதையின் சுவாரசியத்திற்காகப் பயன்படுத்திக்கொண்டேன்.

சில கற்பனை கதாப்பாத்திரங்களையும் நான் இந்தக் கதையில் சேர்த்துள்ளேன். முக்கியமாக கல்கி எழுதாமல் விட்ட உத்தமசீலி எனும் மறக்கப்பட்ட சோழ இளவரசனை எனது கதையின் முக்கிய கதாப்பாத்திரமாகச் சேர்த்துள்ளேன்.

இந்தக் கதை பொன்னியின் செல்வன் ரசிகர்களைத் திருப்திப்படுத்துமா என்று கேட்டால் இதற்குப் பதில் புத்தகத்தைப் படித்துவிட்டு நீங்கள் தான் கூற வேண்டும்.

அன்புடன்,
**இன்ப பிரபஞ்சன். ஜெ**

www.indianguide.in

**சமர்ப்பணம் கருவூராருக்கு!**
**சோழ குலதெய்வம் நிசும்பசூதனிக்கு!**
**என்றும் மக்களின் அரசன்**
**இராச இராச சோழனுக்கு!!!**
**அமரர் கல்கிக்கு!**

www.indianguide.in

கடைசியாக,

இந்த புத்தகத்தில் இருந்த எழுத்துப் பிழைகள் எல்லாம் திருத்திக் கொடுத்து ஆதித்த கரிகாலனுக்கு ஒரு அழகிய பாடல் எழுதித்தந்த **லாவண்யா** அக்காவிற்கு

நெஞ்சார்ந்த நன்றிகள்.!!!

என் நண்பர்களுக்கு & குடும்பத்தார்க்கு நன்றி!!!

# அத்தியாயம் 1

ஆதி அந்தமில்லாத கால வெள்ளத்தில் கற்பனை ஓடத்தில் ஏறிச் சிறிது நேரம் என்னுடன் பயணம் செய்ய உங்களை அழைக்கிறேன்.

குளங்களில் இருந்த தாமரை மொட்டுக்கள் விரியத் தொடங்கின, இருளின் அடர்த்தி குறையத் தொடங்கியது. பறவைகள் சிறகடித்துப் பறக்கத் தொடங்கின. அந்தக் குளங்களுக்கு அருகே ஒரு பெரிய நிலப்பரப்பு இருந்தது. அந்த நிலப்பரப்பு முழுவதும் பிணந்தின்னிக் கழுகுகள் எதையோ கொத்தித் தின்று கொண்டிருந்தன. நன்றாக உற்று நோக்கினால் அது மனிதர்களின் சடலங்கள் என்பது புலப்படும். இந்தக் காட்சிகளை வைத்து அது ஒரு யுத்தக் களம் என்பதை நாம் யூகிக்கலாம். சூரியன் நன்றாக வானில் சிவக்கத் தொடங்க அந்த விடியலை ஆவலோடு எதிர்பார்த்து ஒரு கூட்டம் காத்திருந்தது.

அந்தப் பெருங் கூட்டத்தில் நடுவே ஒரு பெரிய கூடாரம் இருந்தது, அதன் மேல் புலிக்கொடி காற்றில் அசைந்தாட அதன் உள்ளே ஒரு வீராதி வீரன் அவரது கவசங்களை அணிந்து கொண்டே தனது வாளை உறையிலிருந்து எடுத்துக் கையில் பிடித்து ஒளிரும் அந்த வாளை நோக்கி, “இந்த வாள் எத்தனை பாக்கியம் செய்திருக்க வேண்டும் பாண்டிய வம்சத்தை வேரோடு சாய்த்து அவர்களின் இரத்தத்தில் குளிக்கப் போகிற பெரும்பாக்கியம் பெற்றிருக்கிறது” என்று கூற,

www.indianguide.in

அருகில் இருந்த மனிதன், “உத்தமா நான் இன்று இந்தப் போரில் எந்த வியூகத்தையும் அமைக்கப் போவதில்லை. வீரபாண்டியன் பக்கம் ஆட்கள் மிகவும் குறைந்துவிட்டனர், சோழ நாட்டிற்குச் சில அடிமைகள் வேண்டும் அல்லவா

அதனால் அவர்களை உயிருடன் சோழதேசம் அழைத்துச் செல்ல விரும்புகிறேன்” என்றார்.

“அவர்களை அடிமைகள் என்று கூறாதீர்கள் செங்கதிரவரே! அவர்கள் நமது எதிரிகள் தான் ஆனாலும் அவர்கள் வீரர்கள்!” என்றவர், “இன்றைய போரில் வீரபாண்டியனை வென்று வாகை சூடி சோழ தேசத்திற்குச் செல்ல வேண்டும். அண்ணா மிகவும் சந்தோஷப்படுவார்” எனக் கூறிக்கொண்டே கூடாரத்தை விட்டு வெளியே சென்றார் உத்தமன்.

“ஆம்! மிகவும் சந்தோஷப்படுவார் அதுவும் உன் தந்தை உன் மீது அளவில்லாத கர்வம் கொள்வார்” எனக் கூறிக்கொண்டு அவரைப் பின் தொடர்ந்தார் செங்கதிரவன்.

தனது கழுகு பார்வையால் அந்தக் களத்தை ஆய்வு செய்து கொண்டிருந்தார் செங்கதிரவன். இளவரசர் உத்தமசீலிக்கு ஓலை ஒன்று வந்திருக்கிறது என்று ஒரு வீரன் ஓடி வந்து அவரது கையில் ஓலையைக் கொடுக்க, ‘முதல் மந்திரி எழுதிய ஓலை இது' என்று கூறிக்கொண்டே அந்த ஓலையைப் பிரித்தார் உத்தமசீலி.

"வாழ்க வாழ்க சோழ இளவரசர் உத்தமசீலி! நடந்துவரும் போரில் உமது வீரத்தைப் பற்றிக்கேட்டு அரசர் மிகவும் ஆனந்தமாக உள்ளார். நீங்கள் வீரபாண்டியன் படைகளை அழித்து வாகைசூட என் வாழ்த்துக்கள். மேலும் உமது மணவிழாவிற்காக அரசர், கொடும்பாளூர் இளவரசியையும் அவரது குடும்பத்தையும் நமது அரண்மனைக்கு அழைத்திருக்கிறார்" என ஓலையில் எழுதியிருந்தது. இதைப் படித்த நொடி அந்த வீரனின் முகத்தில் ஒரு புன்னகை அரும்பியது.

வீரர்கள் புழுதியைக் கிளப்பிக்கொண்டு போர்க்களம் நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் வேளையில் கூடாரத்தில் ஒரு வீரன் அமர்ந்திருந்தான் அவனது முகம் மிகவும் வாடியிருந்தது. ஏதோ பிடிக்காத ஒன்று நிகழப் போகிறது என்று அவன் தனக்குத்தானே பேசிக்கொண்டிருந்தான். அவனைக் கண்ட உத்தமசீலி அவனை அருகில் அழைத்து, "வா வீரனே போர்க்களம் செல்லலாம். இன்று நாம் வீரபாண்டியனைக் கொன்று போரில் வெற்றிபெற்றால் உங்கள் அனைவருக்கும் இந்த யுத்தக்களத்திலிருந்து விமோசனம் கிடைக்கும். அனைவரும் அவரவர் உறவினர்கள் மனைவி மக்களோடு சந்தோஷமாக இருக்கலாம். இப்படிச் சோர்ந்து இருப்பது வீரனுக்கு அழகல்ல" என்று கூறி அவனது முதுகில் தட்டிக் கொடுத்தார்.

இருவரும் அமைதியாக போர்க்களம் நோக்கிச் சென்றனர். செங்கதிரவன் ஒரு யானை மேல் ஏறி அமர்ந்திருந்தார். செங்கதிரவனைப் போன்ற

www.indianguide.in

ராஜதந்திரி இதுவரை சோழதேசத்திற்கு கிடைத்ததில்லை. அவரின் மதி கொண்டே பல யுத்தங்கள் சோழர்கள் வசமானது. இந்தப் போரில் கூட அவர் அமைத்த வியூகங்களைக் கொண்டு பாண்டியனின் சேனையை எளிதில் அழித்துவிட்டார் உத்தமசீலி. செங்கதிரவரைச் சுற்றி புலிக்கொடி பிடித்த வீரர்கள் நின்றுகொண்டிருக்க, உத்தமர் சேனையின் முதல் வீரனாக ஒரு ரதம் மேல் ஏறி அமர்திருந்தார். இந்தப் போரில் அவரது வாளும் வில்லும் எண்ணற்ற சோழ வீரர்களுக்குக் கேடயமாக இருந்திருக்கிறது. அவர் சரியான சமயத்தில் போர்க்களம் வரவில்லையென்றால் இந்நேரம் சோழப் படைகள் தோல்வியைத் தழுவி பாண்டியர்களுக்கு அடிமையாக இருந்திருக்கக்கூடும்!

இந்தக் கதை இங்கே தொடங்கவில்லை இந்த யுத்தத்தின் பிறகு இது முடியப்போவதில்லை. அன்று பாண்டிய மன்னன் இராசசிம்மனை, பராந்தகச் சோழன் மதுரையை விட்டு விரட்டி அடித்தார். பின் அவன் மறைவிற்குப் பிறகு இன்று இந்த வீரபாண்டியன் இலங்கை மன்னன் உதவியோடு அவனது பகைபோக்க படையெடுத்து வந்துள்ளான்.

சங்கு நாதம் கேட்ட நொடியில் சேனை வீரர்கள் வேகமாக முன்னேறிச் சென்று கொண்டிருந்தனர். உத்தமசீலி அவரது ரதத்தை வேகமாக முன்னோக்கிச் செலுத்துமாறு மலையனிடம் கூறிக்கொண்டிருந்தார். அவருக்கு அரணாக நான்கு வீரர்கள் அவரைப் பின் தொடர்ந்து கொண்டிருந்தனர் அதில் அவர் காலையில் ஆறுதல் கூறிய வீரனும் இருந்தான்.

குதிரையின் கால்களும் உத்தமரின் கண்களும் வீரபாண்டியனைத் தேடிக்கொண்டிருந்தன.

போர் தொடங்கி ஒரு நாழிகை முடிந்துவிட்டது. வீரபாண்டியன் இன்னும் யாருடைய கண்ணிலும் படவில்லை. உத்தமசீலி பாண்டிய வீரர்களை வெட்டி வீசிக் கொண்டிருந்தார்.

பாண்டிய சேனைகள் தங்கியிருக்கும் கூடாரத்திற்கு மேல் பெரு மலை முகடு இருந்தது. அங்கே யாரோ நின்று கொண்டிருப்பது உத்தமசீலியின் கண்களில் பட்டது. அது வேறுயாருமில்லை வீரபாண்டியன் தான் என்று உறுதிசெய்தார் உத்தமசீலி.

“வீரபாண்டியன் அங்கே இருக்கிறான் என்றால் இன்றைய போரின் வியூகங்களை வகுத்துப் போரை வழி நடத்துவது யார்?” என்ற கேள்விகள் அவரின் மனத்தில் எழுந்த பொழுது ஒரு ரதம் அவரின் முன் வந்து நின்றது.

“யாரைத் தேடுகிறாய் என்னையா? நீ என்னைத் தேடுவதைக் கண்டு உன் முன் நானே வந்துவிட்டேன்” என்று ஒரு கம்பீரக்குரல் கேட்டது. அந்தக் குரலின் சொந்தக்காரர் பார்ப்பதற்கு ஆறடி உயரத்தில் வலிமையான உடல் அமைப்போடு கூர்மையான கண்களோடு, முறுக்கேறிய புஜங்களோடு எதிரே நிற்க, அவரைப் பார்த்து,

"உன் மரணத்தை நீயே தேடிக்கொண்டாய் வீரபாண்டியா!" எனக் கூறித் தனது வாளை உருவி குதிரையை விட்டுக் கீழே குதித்தார் உத்தமசீலி.

www.indianguide.in

வீரபாண்டியன் ஒரு வாளும் கேடயமும் ஏந்தி உத்தமசீலியை நோக்கி ஓடிவர, உத்தம சீலி மிகவும் அமைதியாக அதே இடத்தில் நின்றார். வீரபாண்டியனுடைய வாளால் உத்தமசீலியை நெருங்கக்கூட முடியவில்லை. வீரர்கள் இருவரும் சரிசமமாகச் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். வாளுடன் வாள் உரசி தீப்பொறி பறந்துகொண்டிருந்தது.

வீரபாண்டியன் மிகவும் வேகமாகத் தாக்கத் தொடங்கினான் அதற்குச் சற்றும் வேகம் குறையாமல் பதில் தாக்குதல் வந்துகொண்டிருந்தது. இருவரும் சமபலம் கொண்ட காரணத்தால் யார் வெற்றி பெறுவார் என்று யூகிக்க முடியாத சூழ்நிலை வந்துவிட்டது.

மறுபுறம் செங்கதிரவன் தலைமையில் படைகள் மிகவும் நேர்த்தியாக பாண்டியர்களைச் சிறைப்பிடித்துக் கொண்டிருக்க, இங்கே போர் மிகவும் உக்கிரமாக நடந்துகொண்டிருந்தது.

இருதுருவம் ஒன்றோடு ஒன்று முட்டி மோதிக் கொண்டிருந்ததைப்போல அந்தக் காட்சி இருந்தது. வீரபாண்டியனை ஓங்கி ஒரு உதை உதைத்தார் உத்தமசீலி. வீரபாண்டியன் நான்கடிக்கு அப்பால் சென்று கீழே விழுந்தான்.

"என்ன வீரபாண்டியா அதற்குள் களைத்து விட்டாயா. இன்று முழுவதும் உன்னுடன் மட்டும் போர் புரிய வேண்டும் என்று நினைத்தேன். உச்சிப்பொழுதைத்

தாண்ட மாட்டாய் போலிருக்கிறதே?" என்று கேலியாக உத்தமர் பேச, மிகவும் கோபத்துடன் தனது வாளைச் சுழற்றிக்கொண்டு அவரை நோக்கி ஓடிவந்தான் வீரபாண்டியன்.

இம்முறை அடி உத்தமரின் நெஞ்சில் விழ, அவர் ஒரு அடிகூட நகரவில்லை. “அவ்வளவு தானா உன் பலம்? உன் தந்தை இந்த மதுரையை விட்டு ஓடியது போல் இங்கிருந்து ஓடிவிடலாம் என்று மட்டும் கனவிலும் நினைக்காதே! என் தந்தை பராந்தகரைப் போல் தாராள மனப்பான்மை எனக்கு இல்லை, உன்னைக் கொன்று மண்ணில் புதைக்காமல் நான் இந்த இடத்தை விட்டுச் செல்ல மாட்டேன்” என்றார் உத்தமர்.

மீண்டும் கோபமடைந்த வீரபாண்டியன் உத்தமசீலியை நோக்கி ஓடிவந்து கொண்டிருந்தான். அவன் தாக்குதலைத் தடுத்து அவனின் கையில் ஓங்கி ஒரு அடி அடித்தார் உத்தமசீலி. வீரபாண்டியனின் ஆயுதம் தரையில் வீழ்ந்தது. முன்பே உத்தமசீலி ஏற்படுத்திய காயங்களில் இருந்து குருதி பெருக்கெடுக்க ஆரம்பித்தது. வீரபாண்டியன் இரத்தம் சொட்டச்சொட்ட நின்று கொண்டிருக்க, வீரபாண்டியனை அடித்துக் கீழே தள்ளினார் உத்தமசீலி.

மீண்டும் சிங்கம் போல எழுந்து நின்ற வீரபாண்டியன், அவனது வாளை மீண்டும் எடுத்துத் தனது இடது கையில் பிடித்துத் தன் வலது கையில் கேடயம் ஏந்தி நின்றான்.

உத்தமசீலி மனதில் வீரபாண்டியன் மேல் கொண்டிருந்த மதிப்பு பெருகியது. விழுந்தாலும் வீரன் வீரன் தானே என்று எண்ணிக்கொண்டார்.

வீரபாண்டியன் மீண்டுமொருமுறை இடது கையில் தனது வாளைச் சுழற்றிக்கொண்டு உத்தமசீலியை நோக்கி ஓடி வந்தான். இம்முறை கூரிய வாள் உத்தமசீலியின் தோளைப் பிளக்க, அங்கே இருந்து இரத்தம் சொட்ட ஆரம்பித்தது. சற்று பின்னே சென்று மீண்டும் ஒரு முறை உத்தமசீலியைத் தாக்க ஓடி வந்தான் வீரபாண்டியன் .

உத்தமசீலி மிகவும் லாபகரமாக அவனைத் தடுத்து நிலத்தில் வீழ்த்தினார்.

“மலையா!” என்று ஒரு குரல் கொடுத்தார் உத்தமசீலி. மலையனுடன் காலையில் அவர் பேசிய வீரனும் ஓடி வந்தான்.

“இவனைச் சிறை பிடித்துச்செல்!” என்று உத்தமர் கூறிய நொடி, மலையனுக்கு முன்னால் அந்த வீரன் ஓடிச்சென்றான்.

“வேகம்... அவனைச் சிறை பிடி” என்று அவர் கூறிக் கொண்டிருக்கையில் யாரோ மலையனைப் பின்னிருந்து தாக்கி நிலத்தில் இட, “மலையா!” என்று அலறினார் உத்தமர்.

ஓடிச் சென்ற வீரன், வீரபாண்டியனைத் தொட்டுத் தூக்கினான். “என்ன காரியம் செய்கிறாய்” என்று உத்தமசீலி சத்தம் கொடுக்க, அவர் பேசியது ஒன்றும்

காதில் விழாதது போல வீரபாண்டியனைத் தூக்கி, வீரபாண்டியனின் காலில் விழுந்தான் இந்த வீரன்.

“என்ன ரவிதாசா! நான் கூறியதைச் சரியாக முடித்து விட்டாயா? இவனைக் காப்பாற்றுவதற்கு இங்கே யாரும் வர மாட்டார்கள் அல்லவா?” எனக் கேட்டார் வீரபாண்டியன்.

நீங்கள் கூறியவற்றைச் சிறப்பாகச் செய்து முடித்துவிட்டேன். சோழப்படைகளைத் திசை திருப்பி விட்டேன். இவனைக் காப்பாற்ற யாரும் வரமாட்டார்கள்” என்று கூறிய ரவிதாசனை நோக்கி, “துரோகம் செய்கிறாய் வீரனே! தாய் மண்ணிற்குப் பெரிய துரோகம் செய்கிறாய்” என்றார் உத்தமர்.

“என் தாய் மண்ணிற்கு விசுவாசம் காட்டுகிறேன்” என்றான் ரவிதாசன். நேரம் தாழ்த்த வேண்டாம் என்று வீரபாண்டியனை நோக்கிக் கூறினான் ரவிதாசன்.

தனது வாளைச் சுழற்றிக்கொண்டு வேகமாக உத்தமசீலியை நோக்கி ஓடினான் வீரபாண்டியன். உத்தமசீலி அவனைத் தாக்க முற்படும் போது அவரது தாக்குதலைத் தடுத்த வீரபாண்டியனின் வாள் உத்தமசீலியின் தலையைக் கொய்தது!!!

உத்தமரின் தலை தனியாக, உடல் தனியாக கிடக்கையில் அந்தத் தலையை எடுத்து வீரபாண்டியன் கையில் பிடித்துக் கொண்டு, “என் தந்தை ஓடியது உண்மைதான், உன் தலையைக் கண்டு உன் தந்தை என்னை நோக்கி ஓடி வருவான்” எனக்கூறிச் சிரிக்கத் தொடங்கினான்.

www.indianguide.in

இதன் பிறகு சோழப் படைகள் எவ்வளவு தேடியும் வீரபாண்டியனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. பின்பு வீரபாண்டியன் தனது பெயருடன் சோழன் தலைகொண்ட என்று அடைமொழியைச் சேர்த்து, “சோழன் தலைகொண்ட வீரபாண்டியன்” என வைத்துக் கொண்டான்.

இந்தச் செயல் சோழ மக்கள் மத்தியில் பெரிய கோபத்தை ஏற்படுத்தியிருந்தது. இந்நிகழ்வுகளின் பின் சோழ அரியணை ஏறிய அரசர்கள் யாவரும் குறுகிய காலத்திலேயே இயற்கை எய்திவிட, வீரபாண்டியன் தலை கொள்ளப்போகும் அரசன் யார் என்ற எதிர்பார்ப்பு ஒவ்வொரு முறை அரசர் பதவியேறும் பொழுதும் இருந்தது. இந்த நிகழ்வு நடந்து சில வருடங்களுக்குப் பிறகு இன்று சோழ தேசம் சுந்தர சோழர் கைக்கு வந்தது. சுந்தர சோழர் மதுரை மீது படையெடுத்துப் பாண்டியனைக் காட்டிற்குத் துரத்தி "பாண்டியனைச் சுரம் இறக்கின பெருமாள்" என்ற பட்டம் மட்டும் கொண்டார்...

சுந்தர சோழரின் மனைவி பட்டத்து அரசிக்கு இன்று ஒரு ஆண் குழந்தை பிறந்தது என்ற செய்தி நாடு எங்கும் பரவ, அந்நிகழ்வு மிகவும் மகிழ்ச்சியுடன் கொண்டாடப்பட்டு வருகிறது.

நாட்டு மக்கள் அனைவரும் இன்று பழையாறை மாளிகைக்கு வந்துள்ளனர். இன்று அந்த ஆண் குழந்தைக்குப் பெயர் சூட்டும் விழா.

பழையாறை நகர் எங்கும் விழாக்கோலம் கொண்டிருந்தது, மக்கள் ஆரவாரத்துடன் குழந்தையைக் காண்பதற்காக அரண்மனை முன்னே குவிந்திருந்தனர்.

ஒரு பெரிய மேடை அமைக்கப்பட்டு இருந்தது. அதில் அரசர் சுந்தர சோழன், திருக்கோவிலூர் மலையமான், முதல்-மந்திரி அன்பில் அநிருத்த பிரம்மராயர், பெரிய பழுவட்டரையர் மற்றும் சின்ன பழுவேட்டரையர் ஆகியோர் இருந்தனர்.

வேத மந்திரங்கள் முழங்க அக்னி ஜுவாலை வானை முட்டிக்கொண்டிருந்தது, அங்கே எரிந்து கொண்டிருக்கும் அக்னி அந்தக் குழந்தையின் பிறப்புத் தன்மையை மக்களுக்கு எடுத்துரைப்பது போல இருந்தது.

மக்கள் அனைவரும் இந்தக் குழந்தைக்கு என்ன பெயர் வைக்கப் போகிறார்கள் என்று ஆவலுடன் காத்துக் கொண்டிருக்க, பெயர் சூட்டும் தருணமும் வந்தது.

திருக்கோவிலூர் மலையமான் அந்தக் குழந்தையைக் கையில் எடுத்துக் கொண்டு அங்கு தீ ஜுவாலை முன் நின்று மக்கள் காணும் வகையில் அந்தக் குழந்தையைத் தூக்கிப் பிடித்தார். “இராஜாதித்தரின் வீரமும் கரிகாலனின் விவேகமும் உன்னுடன் பிறந்திருக்கிறது உன் பெயர் ஆதித்த கரிகாலன்!!" என்று அவர் கூறிய நொடியில் மக்களின் ஓசை அந்த வானையும் கடந்துதான் விட்டது.

www.indianguide.in

அந்தக் குழந்தையை யார் காணச்சென்றாலும் வீரபாண்டியனை வெல்லப்போகும் வீரன் இவனே என்று கூறுவதுண்டு. இது அந்த வீரச்செல்வனின் மனதில் ஆழமாக பதிந்து விட்டது.

# அத்தியாயம் 2

சில வருடங்களுக்குப் பிறகு......

இருள் சூழ்ந்த ஒரு காட்டில் இரு வாலிபர்கள் குதிரை மேல் பிரயாணம் செய்து கொண்டிருந்தனர். குதிரை மிகவும் சோர்ந்து காணப்பட்டது வெகுதூரம் பிரயாணம் செய்த காரணத்தினால் அந்தக் குதிரை சோர்ந்து விட்டது.

தூரத்தில் ஒரு சிறிய குட்டை அதில் நீரும் அதன் கரையில் புல்லும் காணப்பட்டது. அதனருகே ஒரு குகையும் இருந்தது. "இதோ நம்முடைய இடம் வந்துவிட்டது" என்றான் குதிரைமீது இருந்த வாலிபன்.

"சரி குதிரையை இங்கேயே கட்டிவிட்டு வா! உண்ண உணவு கிடைக்கிறதா என்று பார்க்கலாம்" என்றான் மற்றொருவன்.

இருவரும் வேலும் வில்லும் ஏந்தி காட்டிற்குள் சென்றனர். சற்று தொலைவு வரை கண்ணில் எதுவும் படவில்லை. இன்னும் கொஞ்ச தூரம் போய்ப் பார்ப்போம் என்று அவர்கள் எண்ணிச் சற்று முன்னே நகர்ந்த நொடி எங்கிருந்தோ ஒரு மான் கூட்டம் அவர்களை நோக்கி ஓடி வந்தது.

வில்லை ஏந்தி மானைத் தாக்க தயாராக நின்றான் ஒருவன். மற்றொருவன் அவனைத் தடுத்து, "நில் இவை எதையோ கண்டு பயந்து ஓடி வருகின்றன.

www.indianguide.in

இவை இங்கே பயந்து ஓடி வந்ததின் காரணத்தைக் கண்டுபிடிப்போம். அருகில் ஏதேனும் ஒரு ஆபத்தான விலங்கு இருக்கக்கூடும்” எனக் கூறினான்.

இவர்கள் இங்கே பேசிக்கொண்டிருந்த சமயத்தில் மனிதர்கள் நடந்து வரும் காலடிச் சத்தம் கேட்டது. முதலில் அது ஒருவனின் காலடிச் சத்தம் என்று தான் இருவரும் எண்ணினர். ஆனால் அருகில் வர வர, வருவது ஒருவர் அல்ல அது ஒரு கூட்டம் என்பதை உணர்ந்த இருவரும் அங்கிருந்த மரத்தில் ஏறினர்.

ஒரு கூட்டம் இருளில் தீச்சுடர் ஏந்தி அவர்கள் அமர்ந்திருந்த மரத்தைக் கடந்து செல்ல, மரத்தின் மீது இருந்து சத்தமில்லாமல் கீழே இறங்கி காற்றோடு புகை கலப்பது போல அந்தக் கூட்டத்தோடு கலந்து அவர்களைப் பின் தொடர்ந்தான் இருவரில் ஒருவன்.

மரத்தின் மீது அமர்ந்திருந்த இன்னொருவன் அவர்கள் சென்ற திசையில் சற்று இடைவெளிவிட்டுப் பின் தொடர்ந்து கொண்டிருந்தான்.

அந்தக் கூட்டம் ஒரு குகைக்குள் நுழைய அந்தக் கூட்டத்திலிருந்து ஒருவன் அங்கேயிருந்த கல் மேடை மீது அமர்ந்தான் மீதி இருந்த அனைவரும் கீழே அமர்ந்தனர்.

மேடை மீது அமர்ந்தவன் பேசத் தொடங்கினான். "சோழ தேசம் அசுர வளர்ச்சி அடைந்துவிட்டது, ராஷ்டிரகூடர்களைக் கொஞ்சம் கொஞ்சமாக அழித்துக் காஞ்சியைத் தனக்குச் சொந்தமாக்கி விட்டது. பாண்டிய தேசமும் இப்பொழுது இல்லை

www.indianguide.in

இலங்கையிலும் சில இடங்களில் புலிக்கொடி பறப்பதாக அறிகிறேன், இதற்கெல்லாம் முக்கிய காரணம் சோழ இளவரசன் ஆதித்த கரிகாலன் தான். அவனை வெல்லும் வீரன் நமது கூட்டத்திலும் இல்லை வேறு தேசத்திலும் இல்லை ஏன் இந்த உலகத்திலே இல்லை. அதனால் அவனிடம் போர் புரிந்து அவனை வெல்லுவது கனவிலும் சாத்தியமில்லை, நமது வீரர்கள் சிலரை அவனுக்கு நெருக்கமாகப் பழக விட்டு அவனைக் கொலை செய்வதைத் தவிர வேறு ஒரு வழியும் இல்லை. ஆனால் அதிலும் ஒரு சிக்கல் இருக்கிறது அவனுடன் எப்பொழுதும் அந்த வாணர்குல வீரனும் பல்லவ இளவரசன் பார்த்திபேந்திரனும் இருக்கிறார்கள். அதிலும் அந்த வாணர் குல வீரன் மிகவும் சாமர்த்தியசாலி” என அவன் பேசிக் கொண்டிருக்கும் பொழுது கூட்டத்தில் ஒருவன் பேசத் தொடங்கினான்.

"வாணர் குல வீரனா! அந்த வம்சம் இன்னும் இருக்கிறதா? அதில் வீரர்கள் எல்லாம் இன்னும் இருக்கிறார்களா? அவன் பெயர் என்ன? அவனை நான் பார்க்க வேண்டும்” என்று கூற, கூட்டத்தில் இன்னொருவன் எழுந்து நின்றான்.

“ஏன் எழுந்து நிற்கிறாய்? ஆம் நீ யார் புதியதாக இருகிறாய்?” என்று அந்தக் கல் மேடை மீது அமர்ந்திருந்தவன் கேட்க, "ஐயா நான் உங்களிடம் ஒரு தகவல் கூற வேண்டும். நீங்கள் கூறிய அந்த வீரன் பெயர் வல்லவரையன் வந்தியத்தேவன். அவன் வெகு நேரமாக வெளியே காத்திருக்கிறான்” என்று கூற, “நீ யார்” என்ற சத்தம் குகை எங்கும் எதிரொலித்தது .

தீப் பந்தம் மொத்தம் அங்கே நின்றவன் முகத்தைப் பார்க்க அவன் பக்கம் திருப்பப்பட்டது. இருளில் ஒளிவீசும் முகம்! அந்த முகத்தைப் பார்த்த நொடி, கல்மேடை மேல் அமர்ந்திருந்தவன் எழுந்து நின்றான். கூட்டத்தில் இருந்த வேறொருவன் "நீ யார்?" என்று மீண்டும் கேட்க, பதில் அந்தக் கூட்டத்தின் தலைவரிடமிருந்து வந்தது. "இது... ...இது... "ஆதித்த கரிகாலன்".... இது அவன் தான் கொல்லுங்கள் அவனை...!" என்று ஆணையிட, வாளும் வேலும் அவர் கழுத்தைச் சுற்றி மொய்க்கத் தொடங்கின.

அவர் முகத்தில் ஒரு மாற்றமும் இல்லை. தன் கைகள் இரண்டையும் ஓசைவரும்படி தட்டினார். அவ்வளவுதான் காற்றைக் கிழித்துக்கொண்டு வந்த அம்புகள் அந்த வாளும் வேலும் ஏந்திய கூட்டத்தில் உள்ளவர்களைத் தாக்கியது. ஒரு வினாடி இடைவேளையில் அம்புகள் மழையென பொழிய வில்லும் அம்பும் ஏந்தி குகைக்குள் பிரவேசித்தவனைப் பார்த்து, "உன் வேகம் நன்றாகக் கூடிவிட்டது வந்தியத்தேவா" என்றார் ஆதித்த கரிகாலர்.

பின் அந்தக் கூட்டத்தில் இருந்தவர்களைச் சிறைப்பிடித்துக்கொண்டு காஞ்சி நோக்கிச் செல்லும் சாலையில் இருவரும் முன்னே செல்ல, புலிக்கொடி ஏந்திய வீரர்கள் அந்தக் கைதிகளுடன் பின்னே சென்றனர்.

சற்று நேர பிரயாணத்திற்குப் பிறகு அனைவரும் காஞ்சி நகரத்தை அடைந்தனர்.

அந்த நகரின் மத்தியில் ஒரு உயரமான கோட்டை இருந்தது. அந்தக் கோட்டையைச் சுற்றி மிகப்பெரிய அகழிகள் இருந்தன. வானை முட்டும் அந்தக் கோட்டையைச் சுற்றி வீரர்கள் காவல் செய்தனர்.

ஆதித்த கரிகாலன் எதுவும் பேசாமல் கோட்டைக்குள் நுழைந்தார். அந்த எதிரி கூட்டத்தைப் பற்றி ஒரு வார்த்தை கூட பேசவில்லை. நேராகக் கோட்டையின் மேல் மாடத்தை அடைந்தார். அவரின் மனது மொத்தம் நேற்று அவருக்குக் கிடைத்த செய்தி மீதே இருந்தது. வீரபாண்டியன் மீண்டும் ஒரு போர் எடுக்கப்போகிறான் என்பதே அந்தச் செய்தி.

கோட்டையின் மேல்மாடத்தில் நின்று இயற்கை அழகை எல்லாம் ரசிக்காமல் கனத்த மனதோடு நிலவை உற்று நோக்கிக்கொண்டிருந்தார் அந்த மனிதர். உத்தமசீலியின் நினைவு அவரைத் தாக்கிக்கொண்டே இருந்தது .

ஆறடி உயரம், அகண்ட மார்பு, வலுவான கரங்கள், கூர்மையான பார்வை, தெளிவான முகத்தில் ஒரு தவிப்பு, தீப்பந்தங்களின் வெளிச்சத்தில் அவரை நாம் உற்று நோக்கினால் அது நமக்குப் புரியும். அந்தத் தவிப்பிற்குக் காரணம் சோழ தேசத்தில் இனி நடக்கப்போகும் நிகழ்வுகளைப் பற்றிய சிந்தனை என்றே நாம் வைத்துக்கொள்ளலாம்.

இன்று சோழ தேசம் மிகவும் பெரிய சாம்ராஜ்யம், இதை மீட்டெடுத்தவர் விஜயாலய சோழர். அவரின் காலத்தில் தான் சோழதேசம் மீண்டும் புத்துயிர் பெற்றது. தக்கோலத்தில் நடந்த போரில்

www.indianguide.in

பல்லவர்களுக்குச் சோழர்கள் உதவினர் என்பது அகிலம் அறிந்த உண்மை. இதன் பிறகு பராந்தக சோழரின் ஆட்சி. இதில் பாண்டியர்களுக்கும் சோழர்களுக்கும் பெரும் போர் நடந்தது. அதில் வீராதி வீரர் உத்தமசீலி பங்குபெற்றார்.

பராந்தக சோழரின் மகன் உத்தமசீலியின் வீர மரணத்திற்குப் பின் வீரபாண்டியன் மதுரையின் சில பகுதிகளை மீட்டார், இப்பொழுது மீண்டும் சோழ தேசத்தின் மீது போர் என்று புறப்படப் போகிறான் என்ற செய்தி ஒற்றர்கள் வழி சோழதேசம் மொத்தம் பரவிவிட்டது. இதைப் பற்றித்தான் கரிகாலர் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்.

நிலவை நோக்கி நின்று கொண்டிருந்தவரின் காதில், "கரிகாலரே.. இளவரசே!... கரிகாலரே..." என்ற வார்த்தைகள் விழ, தன் கவனத்தை ஒலிவந்த திசை நோக்கித் திருப்பினார் ஆதித்த கரிகாலர்.

அவரை அழைத்தவன் நாம் முன்னே கண்ட தமிழகத்து வீரச் சரித்திரத்தில் புகழ்பெற்ற வாணர் குலத்தைச் சேர்ந்தவன். வல்லவரையன் வந்தியத்தேவன்.

"என்ன வந்தியத்தேவா? ஏன் என்னை அழைத்தாய்?" என்று ஆதித்த கரிகாலர் கேட்க,

"இளவரசே! நாளை நான் ஒரு முக்கிய வேலையாக கடம்பூர் சம்புவரையரைக் காணச் செல்கிறேன். அங்கே என்னுடைய நண்பன் கந்தமாறன் இருப்பது உங்களுக்குத் தெரியுமல்லவா? அவனுடன்

நான்கைந்து நாட்கள் தங்கி விட்டு வரலாம் என்று நினைக்கிறேன். இதையெல்லாம் உங்களிடம் கூறி அனுமதியும் ஆசியும் பெற்றுச் செல்ல வந்தேன்." என்று வந்தியத்தேவன் கூற,

"சரி சென்று வா! ஆனால் நீ விரைவில் வருவது மிகவும் அவசியம். பாண்டியன் இலங்கையில் இருந்து படைகளைத் திரட்டிக் கொண்டு இருப்பதாக நான் அறிந்தேன். நானும் நாளை தஞ்சை செல்லலாம் என்று இருக்கிறேன் அங்கே ராஜாங்கத்தின் பெரிய வீரர்கள், சிற்றசர்கள், ராஜவிசுவாசிகள் அனைவரும் வருகின்றனர். நான் அங்கிருந்து உத்தரவிட்டதும் நீ நம் படைகளுடன் உறையூர் வந்து விட வேண்டும். அங்கிருந்து நாம் பாண்டியன் மீது போர் எடுத்துச் சென்று புலிக்கொடியை மீண்டும் பாண்டியதேசத்தில் பறக்கவிடவேண்டும்" என்று ஆதித்த கரிகாலர் கூறி முடிக்கும் முன்,

"உத்தரவு இளவரசே! வீரபாண்டியனின் தலை மண்ணில் உருளும் நாள் வெகு தூரத்தில் இல்லை!" என்று கூறி, "ஆதித்த கரிகாலன் வாழ்க! சோழ தேசம் வாழ்க!" என்று வீர முழக்கமிட்டான் வந்தியத்தேவன்.

வந்தியத்தேவன் சென்றதும் ஆதித்த கரிகாலர் மனம் எங்கேயோ போய்க் கொண்டிருந்தது. மதுரை என்ற பெயர் கேட்டதும் அவர் மறக்க நினைக்கும் பல விஷயங்கள் அவர் நினைவில் வர, அந்த நினைவலைகள் பெரும்பாலும் அவரின் மனதில் உள்ள பல காயங்களை ஆற விடாமல் தடுத்துக்கொண்டிருந்தன.

www.indianguide.in

சூரியன் கிழக்கில் எட்டிப் பார்ப்பதற்கு முன் விண்ணகரத்தின் வீரநாராயணபெருமாள் கோவிலுக்கு வந்திருந்தான் வந்தியத்தேவன். சூரிய ஒளி இல்லாத காரணத்தினால் அவனால் வரும் வழியில் இருந்த வீரநாராயண ஏரியின் அழகை ரசிக்க முடியவில்லை. அதுமட்டுமில்லாது அவன் மனம் முழுவதும் மலையமான் அனுப்பிய செய்தியைச் சம்புவரையரிடம் சேர்ப்பதில் தான் இருந்தது.

இது விண்ணகரக் கோவில் இங்கே இருப்பவர் வீரநாராயணப் பெருமாள். அதிகாலையில் பயணத்தைத் தொடங்கியதால் வந்தியத்தேவனுக்கு இப்பொழுது களைப்பும், பசியும் தொற்றிக்கொண்டன. அவன் ஹரியும் சிவனும் ஒன்று எனும் கொள்கை கொண்டவன். அதிகாலை பூஜை முடிந்தவுடன் கோவிலில் பிரசாதம் கொடுப்பார்கள் என்பது வந்தியத்தேவனுக்கு நன்கு தெரியும். அதுவும் பெருமாள் கோவிலின் புளிச்சோறுக்கு அவன் அடிமை.

சூரிய ஒளி மெதுவாகக் கோவிலிலுள்ள கருவறையில் விழுந்தது. அப்படிச் சூரியன் விஷ்ணுவை தரிசித்த பிறகு, அங்கிருந்த அனைவரும் ஆழ்வார் பாசுரங்களைப் பாடினர். பின்பு தெய்வத்திற்கு நெய்வேத்தியம் செய்த பிரசாதங்களை அர்ச்சகர் அனைவருக்கும் கொடுத்துக் கொண்டிருந்தார். கூட்டத்தின் மத்தியில் நின்று கொண்டிருந்தான் வந்தியத்தேவன்.

“தம்பி... தம்பி...” என்று யாரோ யாரையோ அழைப்பது போல குரல் கேட்டும், கேட்காதது போல நின்று கொண்டிருந்தான் வந்தியத்தேவன். திடீரென்று அவன் முதுகில் ஒரு தடி வைத்து யாரோ அவனை அடிக்க, “யாரது என்னை அடித்தது! வாணர்குல வீரனை அடிக்கும் துணிவு இங்கு யாருக்கு உள்ளது. ஒன்றுக்கொன்று மோதி பார்ப்போம் தைரியமிருந்தால் வெளியே வாருங்கள்!" என்று கத்திய வந்தியத்தேவனின் காதில், “மேலே பார்க்காதே கீழே பார்” என்று ஒரு குரல் கேட்டது.

"பெரியவரே! எதற்கு என் முதுகில் அடித்தீர், வேண்டுமென்றால் மார்பில் அடியுங்கள். முதுகு காட்டும் பழக்கம் எங்கள் பரம்பரைக்கே கிடையாது!” என்றான் வந்தியத்தேவன்.

"அதெல்லாம் சரிதான் தம்பி! எனக்கும் சேர்த்துப் புளியோதரை வாங்கு, ஏனென்றால் என்னால் நடக்க முடியவில்லை உடைந்த இந்தக் கால் மிகவும் வலிக்கிறது, இங்குள்ள யாரையும் பார்த்தால் வீரனைப் போலத் தோன்றவில்லை. ஆனால் உன்னைக் காணும் பொழுது நீ ஒரு மாவீரன் என்பதை உணர்ந்தேன். இருவரும் உணவு உண்ட பிறகு நீ என்னை உன் முதுகில் சுமந்து என் வீட்டில் விட வேண்டும்" என்று பெரியவர் மெல்லிய குரலில் கூற, அவன் காதில் அவர் தன்னை வீரன் என்று கூறியது மட்டுமே கேட்டுது.

"சரி போகலாம் போகலாம்...!" என்று கூறியவன் இருவருக்குமான புளியோதரையை வாங்கினான். இருவரும் சீரக மணம் கமழும் அந்தப்

புளியோதரையை ருசித்து உண்டனர். பின் வந்தியத்தேவன் அப்பெரியவரைத் தன் முதுகில் ஏற்றிக்கொண்டு அவரின் வீடு நோக்கி நடந்தான். அந்த முதிர்ந்த கிழவருக்குத்தான் என்ன **பாரம்,** முறுக்கேறிய உடல், நிச்சயம் இவர் ஒரு போர்வீரனாகத்தான் இருக்கவேண்டும். என்று மனதில் நினைத்துக் கொண்டே அவரைக் கொண்டுபோய் அவரின் வீட்டில் விட்டான். திரும்பி வரும் வழியில் விசித்திரமாக இருக்கும் ஒரு கூட்டத்தைக் கண்டான்.

"இந்த இடத்திற்கும் அவர்கள் அணிந்திருக்கும் உடைக்கும் சம்பந்தமே இல்லையே? பார்ப்பதற்கு இவர்கள் சோழ தேசத்துப் பிரஜைகள் போலவும் இல்லை." நேற்று இரவு நடந்த நினைவுகள் அவன் கண்முன்னே வந்து போக, "கையில் வில், வாள் எல்லாம் வைத்திருக்கிறார்கள். இவர்கள் யார் என்று அறிந்து கொண்டே தீரவேண்டும்" என்று தனக்குத்தானே பேசிக் கொண்டு, அவர்களைப் பின்தொடர்ந்து அவர்கள் அமர்ந்திருந்த இடத்திற்கு அருகில் இருந்த மரத்தில் ஏறினான் வந்தியத்தேவன்.

"ஆதித்த கரிகாலனைக் கொன்றே தீரவேண்டும்! சென்ற முறை போரில் அதிர்ஷ்டம் அவன் பக்கம் போய் விட்டது! இராஷ்டிரகூடர்களின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற முடிவுடன் இருக்கிறான் கரிகாலன்" என்று ஒருவன் கூற,

"அவனிடம் இருப்பவர்கள் எல்லாருமே வீரனாக இருக்கிறார்கள். விவேகம் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். அதிலும் அந்த வாணர் குலத்தைச்

www.indianguide.in

சேர்ந்தவன் அவன் பெயர் என்ன?” என்று இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் பொழுது,

மரத்திலிருந்து தொப்பென்று கீழே குதித்து, “அவன் பெயர் வந்தியத்தேவன்" என்றான் வந்தியத்தேவன்.

"நான் கூறிக் கொண்டிருந்தது இவனைப் பற்றித் தான். இவன் நம் திட்டங்களை எல்லாம் கேட்டுக் கொண்டு இருந்திருக்க வேண்டும். இவனை இங்கேயே கொன்றுவிடலாம்" என்று கூறி வாளை உருவி ஏழு பேர் வந்தியத்தேவனை நோக்கி ஓடிவர, “நேற்றும் இவர்களைப் போன்ற ஒரு கூட்டத்தை அல்லவா நாம் சிறைபிடித்தோம் எத்தனை பேர் இப்படிச் சுற்றிக்கொண்டிருக்கிறார்களோ?” என்று நினைத்தபடி வாளைச் சுழற்றிக்கொணடு ஒரு அடி கூட எடுத்து வைக்காமல் நின்று கொண்டிருந்தான் வந்தியத்தேவன்.

அவன் அவர்கள் ஏழு பேர் என்று நினைத்துக் கொண்டிருக்க, புதிதாக எட்டாவதாக ஒருவன் வந்தியத்தேவன் பின்னால் இருந்தது அவன் கண்ணில் படவில்லை. பின்னாலிருந்து காய்ந்த மரக்கட்டையினால் வந்தியத்தேவனை அவன் தாக்க, அங்கேயே மூர்ச்சை அடைந்தான் நம் வாணர்குல வீரன்.

அவன் கண் திறந்து பார்க்கும் பொழுது ஒரு புளிய மரத்தில் தான் கட்டி வைக்கப்பட்டிருந்தது தெரிந்தது. “இவர்கள் ஏன் என்னைக் கொலை செய்யவில்லை?”

என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டிருந்த வந்தியத்தேவனை நோக்கிய ஒருவன்,

“உன்னை எல்லாம் நாங்கள் எதற்குக் கொல்ல வேண்டும்? எங்கள் கையால் மாண்டு வீரன் என்ற பெயரை அடையப் பார்த்தாயா? இங்கே சுற்றித்திரியும் நரிகளே போதும் உன் கதையை முடிக்க” என்று கூறும்பொழுது மேற்கே சூரியன் மறையத் தொடங்கினான்.

இரவின் இருள் பரவத்தொடங்கியது. எதிரே நின்றவர்கள் அனைவரும் செல்வது தெரிந்தது. தூரத்தில் நரி ஊளையிடும் சத்தமும் கேட்டது.

# அத்தியாயம் 3

வந்தியத்தேவன் கடம்பூர்ச் சம்புவரையர் மாளிகையை நோக்கிச் சென்று கொண்டிருந்த சமகாலத்தில், காஞ்சியிலிருந்து ஆதித்த கரிகாலர் தஞ்சை நோக்கிப் புறப்பட்டார்.

ஒரு பெரிய சேனை ஆதித்த கரிகாலருடன் செல்வதற்கு ஆயத்தமாக இருந்தது. யானை மேல் ஏறி அமர்ந்த ஆதித்த கரிகாலர் பார்த்திபேந்திர பல்லவனை நோக்கி,

"பல்லவரே நான் தஞ்சை நோக்கிச் செல்கிறேன். நான் சென்ற பிறகு இராஷ்டிரகூடர்கள் மீண்டும் சில சில தொல்லைகள் நமக்குத் தரக்கூடும். நீங்கள்தான் முன்னிருந்து ஆக வேண்டிய காரியங்களை நோக்கவேண்டும். வந்தியத்தேவனையும் உங்களையும் தான் நான் நம்புகிறேன். வீரர்களுக்குப் பயிற்சி மிகவும் அவசியமானது. முக்கியமான வேலையாக நான் தஞ்சை செல்வதால் நீங்கள் முன்னிருந்து நமது வீரர்களுக்குப் பயிற்சி அளியுங்கள்" என ஆதித்த கரிகாலர் கூற,

"அப்படியே ஆகட்டும் இளவரசே! நீங்கள் பத்திரமாகச் சென்று வாருங்கள் நான் ஆக வேண்டிய காரியங்களை நோக்குகிறேன்" என்றான் பார்த்திபேந்திரன்.

பரிவாரங்கள் தஞ்சை நோக்கிச் செல்லத் தொடங்கின. யானைமேல் புலி போல அமர்ந்திருந்தார் ஆதித்த கரிகாலர்! ஆனால் அவர் மனம் முழுவதும் வேறு எங்கோ சென்று கொண்டிருந்தது.

‘தஞ்சைக் காவல் பழுவேட்டரையர்கள் கையில் உள்ளவரை தஞ்சைக் கோட்டையை நெருங்குவது என்பது வீரபாண்டியனுக்குச் சிம்ம சொப்பனமே! இலங்கையிலிருந்து வீரர்கள் வந்தாலும்கூட தஞ்சையை ஒன்றும் செய்து விட முடியாது. எனது கவலை தஞ்சை பற்றியது அல்ல. ஒருவேளை நான் இல்லாத சமயம் ராஷ்டிரகூடர்கள் காஞ்சியைத் தாக்கினால்?’ என்று அவருக்கு அவரே பேசிக்கொண்டிருக்கும் பொழுது,

மக்கள் இருபுறமும் கடலென திரண்டு “ஆதித்த கரிகாலர் வாழ்க! சோழ தேசம் வாழ்க!” என்று கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.

மக்கள் வெள்ளத்தில் இருந்து திடீரென்று ஒரு ஆள் ஆதித்த கரிகாலர் அமர்ந்திருந்த யானையை நோக்கி ஓடிவந்தான். அவன் உடம்பெல்லாம் ஊர்த்வபுண்டரமாகச் சந்தனம் அணிந்து, தலையில் முன் குடுமி வைத்திருந்த வைஷ்ணவ பக்த சிகாமணி. அவன் கையில் ஒரு குறுந்தடி இருந்தது. கட்டையான குட்டையான உடல் அமைப்பு, வைரம் பாய்ந்த திருமேனியுடன் கூட்டத்தைப் பிளந்துகொண்டு கரிகாலரை நோக்கி வந்துகொண்டிருந்தான்.

“இளவரசே இளவரசே...” என்று கூச்சலிட்டுக் கொண்டு வந்தவனை வீரர்கள் தடுத்து நிறுத்த, யானை மேலிருந்த ஆதித்த கரிகாலன், "யார் நீ?" என்று கேட்டார்.

“என்னை உங்களுக்கு ஞாபகம் இல்லையா இளவரசே? நான்தான் ஆழ்வார்க்கடியான் நம்பி, திருமலை!” என்று கூறினான் அவன்.

“சரி நீ எதற்காகக் கூட்டத்தைப் பிளந்து கொண்டு ஓடி வந்தாய்?” என்று மீண்டும் ஆதித்த கரிகாலர் வினா வைக்க,

"உங்களுக்குச் சேர வேண்டிய ஒரு ஓலை என்னிடம் உள்ளது, அதை உங்களிடம் சேர்ப்பதற்காகவே நான் வந்தேன்" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"எனக்கு ஓலையா? யார் கொடுத்தது?”

"அவனை எனக்கும் தெரியாது இளவரசே! முதல் மந்திரி பிரம்மராயர் உங்களை விரைந்து அழைத்து வருமாறு என்னை அனுப்பினார். நான் உங்களுக்காகக் காத்திருக்கும் அந்த வேளையில் ஒருவன் என்னிடம் வந்து இந்த ஓலையைக் கையில் கொடுத்துவிட்டு இதை ஆதித்த கரிகாலரிடம் கொடுத்து விடு என்று கூறி ஓடிவிட்டான். பிடிக்க முற்படும் முன் காற்றோடு காற்றாகக் கலந்துவிட்டான்"

"அப்படியா! பிரம்மராயரின் ஆளா நீ? சரி அந்த ஓலையை என்னிடம் கொடு” என்றார் ஆதித்த கரிகாலர்.

தன் இடுப்பில் சொருகி வைத்திருந்த ஓலையை எடுத்து ஆதித்த கரிகாலரிடம் நீட்டினான் ஆழ்வார்க்கடியான்.

ஓலையை வாங்கி படிக்கத் தொடங்கினார் ஆதித்த கரிகாலர்.

"பாண்டியனின் சதியை முறியடிக்க அவனது மணிமுடியும் இந்திரா ஆரமும் சோழர்கள் வசம் வரவேண்டும். அது இருக்கும் இடம் எனக்குத் தெரியும். அதை உங்களுக்குச் சொல்ல வேண்டுமென்றால், வருகிற அமாவாசையன்று காவிரி ஆற்றங்கரையில் தனியாக எனக்காகக் காத்திருங்கள் இப்படிக்குச் சோழப் புலி"

இதைப் படித்ததும் யானை மேலிருந்து கீழே குதித்தார் ஆதித்தர், "இந்த ஓலையை நீங்கள் படித்தீர்களா?” என்று கேட்க,

"ராஜாங்க விஷயத்தில் நான் இடை படுவதே இல்லை இந்த ஓலையை நான் படிக்கவே இல்லை” என்றான் ஆழ்வார்க்கடியான்.

சிரித்துக்கொண்டே ஓலையை நீட்டினார் ஆதித்த கரிகாலர். ஓலையை வாங்கிப் பார்த்தவுடன், “என்ன இது சோழ கொடிகளில் உள்ள புலிகள் மேல் நோக்கிப் பாய்பவை இதிலுள்ள குறியோ கீழ்நோக்கி இருக்கிறது” என்று முணுமுணுத்தான் ஆழ்வார்க்கடியான்.

"அநிருத்தரின் ஆள் என்பதை நிரூபித்து விட்டீர்கள்! அதைத்தான் நானும் கூற வந்தேன், இது எதோ எனக்கு எதிரே நடக்கும் சதி! நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று கூறிச் சிரித்துக் கொண்டே யானை மேல் ஏறினார் ஆதித்த கரிகாலர்.

"சரி இளவரசே! நான் விடைபெற்றுக் கொள்கிறேன். உங்களை வேகமாக தஞ்சை போகச் சொல்வதே, நான் கொண்டிருந்த பணி. இப்பொழுது நான் திருவேங்கடம் செல்ல வேண்டும் அங்குள்ள வைஷ்ணவ கோவில்களுக்குச் சென்று ஆழ்வார் பாசுரங்களைப் பாட வேண்டும்". என்று கூறி முடிக்கும் முன், ஆதித்த கரிகாலர், "சரி உங்களின் விருப்பம் நான் எதுவும் சொல்ல முடியாது. நான் வேகமாக தஞ்சை நோக்கிச் செல்கிறேன்" என்று கூறிப் புறப்படத் தயாரானார்.

# அத்தியாயம் 4

சோழ வரலாற்றில் மிகவும் முக்கியமான ஒரு நகரம் பழையாறை. விஜயாலய சோழன் இங்கே தான் வாழ்ந்துவந்தார், பல்லவர்கள் அவருக்குத் தஞ்சையை வழங்கிய பிறகு சோழர்கள் கவனம் தஞ்சை மேலே விழுந்தது.

தஞ்சையில் பரந்துவிரிந்த காவேரி நதி பழையாறை வரும்போது சுருங்கிவிடுகிறது, அங்கே காவேரியாற்றங்கரையில் மக்கள் பெரிய பெரிய பானைகளில் நீர் எடுத்துச் சென்று கொண்டிருந்தனர்.

பழையாறை வீதிகள் மொத்தமும் விழாக்கோலம் கொண்டிருந்தது. காரணம் சோழர்களின் தலைநகரம் தஞ்சையாக இருந்தாலும் குந்தவை தன் தோழிகளுடன் இருக்குமிடம் பழையாறை தான்.

பழையாறை தஞ்சையை விட மிகவும் அழகான நகரம், சுந்தர சோழரும் ஒரு காலத்தில் இங்கே தான் இருந்தார், வீரபாண்டியனின் ஆபத்துதவிகள் ஒரு முறை அவரைக் கொலை செய்ய முயற்சித்தபொழுது அவரைப் பெரிய பழுவேட்டரையர் காப்பாற்றினார் . பின் பாதுகாப்புக் கருதி சோழர்களின் தலைநகராகத் தஞ்சை மாற்றப்பட்டது .
இளவரசி குந்தவையைப் பற்றி சொல்ல வேண்டுமானால், அழகும் அறிவும் ராஜதந்திரமும்

ஒரு பெண்ணிடம் இருப்பதைக் கண்டு சோழதேசத்தின் ராஜவிசுவாசிகள் கூட பொறாமை படுவதுண்டு. செந்தாமரை நிறம், கைதேர்ந்த சிற்பிகள் செதுக்கிய சிலை வடிவைப் போன்ற சிறிது நீளவட்ட முகம், நீலோத்பலத்தின் இதழைப் போன்ற கண்கள், பூவின் மொட்டைப்போல மூக்கு, அழகியின் அரசி என்பதற்கு அடையாளமாகச் சூட்டிய மணிமகுடம் போன்ற சிகை அலங்காரம்.

குந்தவையும் அவளது தோழி வானதியும் யானைமேல் ஏறி தஞ்சை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். உறவினர்கள் அனைவரும் இணைந்து வெகு நாட்கள் ஆகிவிட்டது.

ஆதித்த கரிகாலர் காஞ்சியிலேயே தங்கிவிட்டார். குந்தவை பழையாறையில், அருள்மொழி தஞ்சாவூரில் எனக் குடும்பங்கள் ஒன்றாக இருந்து வெகு நாட்கள் ஆகிவிட்டது. குந்தவை மனம் முழுதும் வெகு நாட்களுக்குப் பிறகு ஆதித்த கரிகாலரைக் காணப்போகிறோம் என்பதில் மிகவும் பூரிப்படைந்து இருந்தது.

"யானைப்பாகா! யானைப்பாகா!" என்று வீதி முழுவதும் வானதியின் கூச்சல் மட்டும்தான் கேட்டது.

"என்னக்கா! இந்த யானைப்பாகனின் செவிகளில் நான் பேசும் வார்த்தைகள் கேட்கவில்லை போல! யானைப்பாகா ஏன் இப்படி யானை மெதுவாகச் செல்கிறது?" என்று கூச்சலிட்டுக் கொண்டே வந்தாள் அந்தப் பெண்.

"சும்மா இருடி! யானை வேகமாகச் சென்றால் நீ பயத்தில் மூர்ச்சை ஆகிவிடுவாய்" என்று கூறி குந்தவை சிரித்ததும் யானைப் பாகனும் சிரித்தான்.

"இது மட்டும் இந்த யானைப்பாகன் காதில் விழுகிறதே? உனக்குக் காது கேட்குமா யானைப் பாகா?" என்று வானதி கூற,

யானைப்பாகன் சற்று திரும்பி வானதியை நோக்கிவிட்டு "யானை வேகமாகச் சென்றால் நீ பயந்துவிடுவாய் பெண்ணே" என சிரித்துக்கொண்டே யானையின் காதில் ஏதோ முணுமுணுத்தார்.

யானை மதம் பிடித்தது போல வீதிகளில் ஓடத்தொடங்கியது! "ஐயோ அம்மா! ஐயோ அம்மா!" என்று வானதி அலரி மூர்ச்சை அடைந்து விட்டாள்.

"தம்பி போதும்! நிறுத்து உன் விளையாட்டை அவள் மூர்ச்சையாகி விட்டாள், உங்கள் இருவருக்கும் இதே வேலையாகி விட்டது!"

"நான் என்ன செய்தேன் அக்கா. அவள்தான் கேட்டாள் யானை வேகமாகச் செல்ல வேண்டும் என்று" என்றார் அந்த யானைப்பாகன்.

"அருள்மொழி! நீ அவளிடம் இப்படி நடந்து கொள்ளாதே!" என்று குந்தவை கூற, 'சரி' என்பது போலத் தலையசைத்தார் அருள்மொழிவர்மர்.

தனது அக்காவைத் தஞ்சை அழைத்துச் செல்லவே இந்த யானைப்பாகனின் வேடத்தில் வந்தார் இளையவர் இளங்கோ அருள்மொழி வர்மர்.

வானதி கொடும்பாளூர் இளவரசி. வானதியின் தந்தை கொடும்பாளூர் சிறியவர் சோழப்படைகளுடன் இலங்கை சென்றிருக்கிறார்.

விண்ணகரக்கோவில் .....

சூரியன் அஸ்தமித்துவிட்டது. இருள் மெதுவாகப் பரவத்தொடங்கியது. கைகள் கட்டப்பட்ட நிலையில் வந்தியத்தேவன் இருந்தான், அவன் எத்தனை கத்தியும் கூச்சலிட்டும் அவனைக் காப்பாற்ற யாரும் வரவில்லை.
நரிகளின் ஊளை நொடிக்கு நொடி அருகாமையில் கேட்டுக் கொண்டிருந்தது!

"என்ன இப்படி வந்து சிக்கி விட்டோமே! இங்கிருந்து எப்படியாவது தப்பிக்க வேண்டும்! மேலிருந்து ராஷ்டிரகூடர்கள் தொல்லை! மத்தியில் பாண்டியனின் தொல்லை. இப்பொழுது புதிதாகச் சிங்களர்களும் கீழே இருந்து தொல்லை கொடுக்கிறார்கள். சோழ தேசத்தை இம்முறை சூழ்ந்திருக்கும் அபாயத்திற்குப் பராபட்சமில்லை. நாம் தான் இந்தச் சோழதேசத்தைப் பாதுகாக்க வேண்டும்” என்று தனக்குத்தானே பேசிக்கொண்டு இருக்கும்பொழுது, முழுமையாக இருட்டி விட்டது ஆனால் எங்கிருந்தோ,

"வந்தியத்தேவா! வந்தியதேவா!" என்று குரல் வந்து கொண்டிருக்க. தன்னை நெருங்கி வரும் ஒளிவீசும் பல கண்களைக் கண்டு நின்றான் வந்தியதேவன்.

# அத்தியாயம் 5

வந்தியத்தேவன் அவை அனைத்தும் நரிகளின் கண்கள் என்று நினைத்துக் கொண்டிருந்த வேளையில் பல குதிரைகள் நடந்து வரும் சத்தம் அவன் காதில் விழுந்தது. அத்துடன் நில்லாது அவன் உயிர் நண்பன் கந்தமாறன் குரலும் கேட்டது.

கந்தமாறன் குரல் கேட்ட மறு நொடியே, "நண்பா.... கந்தமாறா வந்துவிட்டாயா என்னைக் காப்பாற்ற வந்துவிட்டாயா?" என்று மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தான் வந்தியதேவன்.

கந்தமாறனும் அவனது வீரர்களும் வந்தியத்தேவன் கட்டி வைக்கப்பட்டிருந்த மரத்தின் அருகே வந்தனர். கந்தமாறன் அவன் உறையில் இருந்து வாளை உருவி வந்தியத்தேவன் கையில் கட்டப்பட்டிருந்த கயிற்றை அறுத்து எறிந்தான்.

வந்தியத்தேவன் அடுத்த நொடியே அவன் நண்பனை ஆரத்தழுவி, "நண்பா எப்படி வந்தாய்? நான் இங்கு இருப்பது உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேள்வி மேல் கேள்வியாக கேட்க,

கந்தமாறன் மௌனமாக ஒரு இடத்தைச் சுட்டிக் காட்டினான். அவன் சுட்டிக்காட்டிய இடத்தில் வந்தியத்தேவனின் குதிரை ஆழி நின்றது.

வந்தியத்தேவனுக்கு ஒரு நொடி ஒன்றும் புரியவில்லை. "என்ன ஆழி என்னைக் காப்பாற்றியதா? எனக்கு ஒன்றும் புரியவில்லை கொஞ்சம் தெளிவாகக் கூறு நண்பா" எனக் கூறினான் வந்தியத்தேவன்.

"மாலை நேரம் மணிமேகலை மேல் மாடத்தில் நின்று கொண்டிருந்தாள். அவள் அங்கிருந்து காணும் பொழுது வீரர்கள் பலர் ஒரு குதிரையைத் தொல்லை செய்து கொண்டிருப்பது தெரிந்தது, இதை அனைத்தும் அவள் என்னிடம் கூற, நான் சென்று கீழே பார்த்தேன். குதிரையைப் பார்த்தவுடன் எனக்குச் சற்று சந்தேகமாக இருந்தது ஒருவேளை இது ஆழியாக இருக்குமோ என்று. குதிரையின் சேனம் அடியில் பார்த்தேன் அதில் உனது கத்தி இருந்தது. பத்து வீரர்களைப் பின் தொடரச் சொல்லி ஆழி மேல் ஏறி அமர்ந்தேன். அது என்னை இங்குக் கொண்டு வந்துவிட்டது" எனக் கந்தமாறன் கூறிக்கொண்டிருக்க, ஆழி அருகே சென்று அதன் நெற்றியில் முத்தமிட்டான் வந்தியத்தேவன்.

"கூறு நண்பா யார் உன்னைக் கட்டிப்போட்டது? நீ ஏன் அவர்களை ஒன்றும் செய்யவில்லை" என்று பல கேள்விகளை கந்தமாறன் கேட்டுக்கொண்டிருக்க,

வந்தியத்தேவன் பதிலை ஆதித்த கரிகாலரிடம் இருந்து தொடங்கினான், "நேற்று முன்னிரவில் நானும் இளவரசர் ஆதித்த கரிகாலரும் தனியாக மேல்மட்டத்தில் பேசிக் கொண்டிருந்தோம். அவர் ஒரு வீரனின் கதையைக் கூறினார்."

"வீரனின் கதையா? யாருடைய கதை?" எனக் கந்தமாறன் ஆர்வமாகக் கேட்க, “உத்தமசீலியின் வீரக்கதை அது!” எனக் கூறினான் வந்தியத்தேவன்.

"கரிகாலர் இன்னும் அவற்றை மறக்கவில்லையா?" என்றான் கந்தமாறன்.

"எப்படி கந்தமாறா மறப்பது, அன்று வீரபாண்டியனுடன் நடந்த யுத்தத்தில் பாண்டிய படை நான்கு புறமும் தெறித்து ஓடியது. போரின் முடிவில் சோழர்களின் கடைக்குட்டி புலியானது வீரமரணம் அடைந்தது. அந்தப் புலியின் பெயர் உத்தமசீலி என்பதை நீ நன்கு அறிவாய். உத்தமசீலியரின் தலையை வெட்டிய காரணத்தினால் சோழர் தலைகொண்ட வீரபாண்டியன் என்ற பட்டத்தைப் பாண்டியன் தனதாக்கினான். இன்று மீண்டும் சோழர்களின் மீது போர்த் தொடுப்பது என முடிவெடுத்து, படைபலம் சேர்ப்பதற்காக இலங்கை அரசன் மகிந்தனின் உதவியை நாடி அவனது படைகளையும் பெற்று நம்மை எதிர்ப்பதற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறான். இம்முறை அவனுக்கு வெற்றி கிட்டக் கூடாது! அவனை எதிர்க்க அவசர கூட்டம் தஞ்சையில் நடக்கிறது. சோழர்களுக்குக் கீழிருக்கும் எல்லா சிற்றரசர்களும் அங்கு வருகிறார்கள், உன் தந்தை சம்புவரையர் அங்கே வர வேண்டும் என்பது திருக்கோவிலூர் மலையமான் அவர்களின் உத்தரவு. இந்தச் செய்தியைச் சம்புவரையரிடம் தெரிவிக்கவே வந்தேன், ஆனால் வந்த இடத்தில் வேறு ஒரு விஷயமும் தெரிந்தது அதை இங்கே சொல்ல முடியாது நீ இந்தச் செய்தியை உன் தந்தையிடம் கூறி

www.indianguide.in

விட்டு நேராகக் காஞ்சிபுரம் வந்துவிடு நான் காஞ்சியில் இருப்பேன் அங்கே எனக்குச் சில வேலைகள் இருக்கிறது" என்று கூறி ஆழி மேல் ஏறி அமர்ந்தான் வந்தியத்தேவன்.

"என்னைக் காப்பாற்றியதற்கு மிகவும் நன்றி நண்பா இப்பொழுது பேசுவதற்கு நேரமில்லை செயலில் இறங்க வேண்டிய நேரம் இது. நான் வருகிறேன்" என்று கூறி குதிரையைக் காஞ்சி நோக்கிச் செலுத்தினான் வந்தியத்தேவன்.

***குடந்தை ...***

பண்டைய தமிழகத்தில் குடந்தை சோழர்களின் கருவூலமாக இருந்திருக்கிறது என்று அகநானூறு கூறுகிறது. காவேரியின் கரையோரமாக அமைந்த ஒரு நகரம் குடந்தை. அந்நகரில் பாயும் காவேரியின் அழகை எத்தனை வரிகளில் வர்ணித்தாலும் அவை மிகையாகாது. குடந்தை ஒரு அற்புத நகரம் மிகவும் அழகான நகரம்!

அருள்மொழி, குந்தவை, வானதி மூவரும் குடந்தை நகரை மாலையில் அடைந்துவிட்டனர். குடந்தை ஜோதிடர் வீடு அந்த நகரின் காளிக்கோவிலுக்கு அருகே இருந்தது. அந்த வீட்டிற்கு வரவேண்டும் என்றால் ஊருக்குள் புகுந்தும் வரலாம் இல்லையென்றால் ஊரைச்சுற்றிக் கொண்டும் வரலாம். குடந்தை ஜோதிடர் வீட்டின் முன்னால் யானை வந்து நின்றது. குந்தவையும் வானதியும் கீழே இறங்கி உள்ளே சென்றனர்.

வாயிற்காவலன் அருள்மொழிவர்மரை யானைப்பாகன் என்று எண்ணி உள்ளே செல்ல அனுமதி கொடுக்கவில்லை. இரண்டொரு நிமிடம் கழித்து உள்ளிருந்து கட்டையாக குட்டையாக நீண்ட தாடி வைத்த ஒருவர் ஓடிவந்து, "இளவரசே! என்னை மன்னித்து விடுங்கள்" என்று அருள்மொழி காலில் விழ அவரைத் தடுத்த அருள்மொழி,

"இல்லை இல்லை ஒன்றும் ஆகிவிடவில்லை அவன் அவன் பணியைச் செம்மையாக செய்கிறான்" என்று கூறினார். பின் அந்தக் காவலனும் அவர் காலைப் பற்றி மன்னிப்பு கேட்டான்.

வாயிற் கதவு திறந்தது. குடந்தை ஜோதிடருடன் அருள்மொழி அந்த வீட்டிற்குள் பிரவேசித்தார். உள்ளே சென்றவுடன் அங்கு இருந்த பலகை மேல் பெண்கள் இருவரும் அமர்ந்திருந்தனர்.

குடந்தை ஜோதிடர் அவர்களுக்கு எதிரே அமர்ந்தவர், "தேவி யாரின் ஜாதகத்தை முதலில் பார்ப்பது?" என்று கேட்க, பதில் அருள்மொழியிடம் இருந்து வந்தது.

"எல்லோருக்கும் மூத்தவருடைய ஜாதகத்தைப் பாருங்கள். எனக்கு இதில் எல்லாம் நம்பிக்கை இல்லை இருந்தாலும் என் அக்கா இதை எல்லாம் நம்புகிறார் " என்றார் அருள்மொழிவர்மர்.

"ஆதித்த கரிகாலரின் ஜாதகம் இங்கே உள்ளது இதோ பார்க்கிறேன்" என்று ஒரு ஓலைச் சுவடியை எடுத்துச் சில நொடிகள் உற்றுப் பார்த்து ஒவ்வொரு விரலாக

விட்டு எண்ணிக்கொண்டிருந்த குடந்தை ஜோதிடரை ஆச்சரியமாகப் பார்த்தார் அருள்மொழிவர்மர்.

குடந்தை ஜோதிடர் தொடங்கினார், "இராஜாதித்தர் மற்றும் கரிகால சோழர் இவர்கள் இருவரின் பெயரும் சேர்த்து இவருக்கு ஆதித்த கரிகாலர் என்று பெயர் சூட்டியது உங்கள் நினைவில் இருக்கும். இவரைப் போன்ற ஒரு மாவீரரைச் சோழ தேசம் இதுவரை கண்டதும் இல்லை இனிக் காணப் போவதும் இல்லை. இவரின் வீரத்திற்கு நிகர் இந்த உலகில் இவர் ஒருவரே! போர்க்களம் புகுந்தால் வெற்றி எனும் தேவதையைச் சிறைபிடித்துத் தன்னுடன் அழைத்து வருவதில் இவர் பெயர் போனவர். கரிகாலரின் குணத்தையும் அவரையும் புரிந்துகொள்பவர்கள் வெகுசிலரே! கோபம் இருக்கிற இடத்தில தானே குணமும் இருக்கும். இவரின் கோபத்தை மட்டுமே இவரைச் சுற்றி உள்ளவர்கள் அறிவார்கள். இவரின் குணத்தை யாரும் அறிய மாட்டார்கள்" என்று கூறியவர் தயங்கியவாரே, "ஆனால் இவருக்கு..." என்று அவர் நிறுத்தினார். அவரின் முகத்தில் வியர்க்கத் தொடங்கிவிட்டது.

.

"ஆனால்... என்ன... ஆனால்? கூறுங்கள்" என குந்தவை கேட்க,

"இவர் இன்னும் நீண்ட நாட்கள் வாழப் போவதில்லை, இவரின் மரணம்தான் புதிய சோழ தேசத்தை உருவாக்கப் போகிறது, இவருக்கு அரசாலும் அதிர்ஷ்டம் இல்லை" என்று தயக்கத்தோடும், பயத்தோடும் கூறிக் கொண்டிருக்கும் பொழுதே, அருள்மொழி அங்கிருந்த சுவற்றை ஓங்கிக் குத்தி,

“நிறுத்துங்கள் உங்களின் பிதற்றலை” என்று கர்ஜித்து விட்டு வெளியேறினார்.

அவரைப் பின் தொடர்ந்து குந்தவையும் வானதியும் வந்தனர். வெளியே வந்த குந்தவை, "உன்னிடம் பலமுறை கூறியிருக்கிறேன் எதிரே உள்ளவர் கூறுவதை முதலில் கேள்! உன் அண்ணனுக்கும் உனக்கும் இருக்கும் ஒரே வித்தியாசம் உன்னுடைய பொறுமை. அதையும் நீ இப்பொழுது இழந்து கொண்டிருக்கிறாய்" என்று கூறிக் கொண்டிருக்கும் போதே,

"அக்கா எனக்கு இதிலெல்லாம் சுத்தமாக நம்பிக்கை இல்லை. இங்கிருந்து உன் நேரத்தை வீணடிக்காமல் வேகமாக யானையில் ஏறு  தஞ்சை போகலாம். அண்ணன் நாளை அங்கே வந்து விடுவார்" என்று கூறி யானைமேல் ஏறி அமர்ந்தார் அருள்மொழி.

குடந்தை சோதிடரை  நோக்கி, "நான் மிக விரைவில் வருகிறேன்" என்று கூறி யானைமேல் ஏறி அமர்ந்தார் குந்தவை தேவி. யானை தஞ்சை நோக்கிச் சென்றது...

வெகு நேரமாகச் சோழதேசத்திலே சுற்றிவிட்டோம் இப்பொழுது சற்று பாண்டியதேசம் வரை போய் வருவோம்...

***மதுரை .....***

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பாண்டியனின் வழி வந்தவன் வீரபாண்டியன். இவன் சோழர்களுடன்

போரிட்டு அவன் முன்னோர் இழந்த சில பகுதிகளை மீட்டான்.

வைகை சிவபெருமான் அருளால் பிறந்த நதி, மதுரை நகரை இந்த நதி மிகவும் செழுமையாக்கியது. மதுரையெங்கும் பெரிய பெரிய வீதிகள். வீதிகள் எங்கும் மக்கள் கூட்டம். இரவு கூட மக்கள் அலைந்து திரிந்து உழைத்துக் கொண்டிருந்தார்கள்.

மீனாட்சி அம்மன் கோவில் மதுரை நகரை மேலும் புனிதமாக்கியது. வெகு நாட்களாக இந்தப் பாண்டிய தேசம் சோழதேசத்திற்கு அடிமையாக இருக்கிறது. வீரபாண்டியன் இதை மீட்டு மீண்டும் அங்கே பாண்டியதேசம் அவன் வசம் வரவேண்டும் என்று மிகவும் போராடிக் கொண்டிருக்கிறான்.

உத்தமசீலியுடன் நடந்த போருக்குப் பிறகு மீண்டும் ஒருமுறை அவன் சுந்தரசோழன் மீது படையெடுத்துச் சென்றான். அப்போரில் சோழப் படைகள் மிகவும் சிறப்பாகச் செயல்பட்டது. அன்று அந்தப் போரில் பாண்டியர்கள் சிதறி ஓடினர். இதற்குக் காரணம் சோழப் படைகளை வழி நடத்திய செங்கதிரவன் எனும் மாவீரன்.

அன்றைய போரில் வீரபாண்டியனை எதிர்த்துச் செங்கதிரவன் அமைத்த வியூகங்களை அவனால் உடைக்க முடியவில்லை. ஒரு கட்டத்தில் அவனின் படைகள் சிதறி ஓட வீரபாண்டியன் தன் உயிரைக் காக்க காட்டில் ஓடி மறைந்தான்.

அன்று முதல் அவனின் கனவு சுந்தரசோழனைப் போரில் வெல்வதாகவே இருந்தது. அவனின் பலத்தைப் பெருக்க இலங்கையின் அரசன் மகிந்தனை நாட, அவனும் உதவி செய்வதாகச் சம்மதித்தான்.

மதுரை முழுதாகப் பாண்டியனிடம் இல்லை அது சோழர்களிடம் இருந்தது. மதுரையில் வைகை ஆற்றங்கரையில் அமைந்திருந்தது அந்தக் கிராமம்.

அங்கே இருந்த ஒரு வீட்டில்,

**"மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்;**
**நீராடப் போதுவீர்! போதுமினோ, நேரிழையீர்!**
**சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!**
**கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்,**
**ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்,**
**கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்**
**நாராயணனே, நமக்கே பறைதருவான்,**
**பாரோரர்ரப் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்."**

எனும் திருப்பாவை பாடல் தேனினும் இனிய கானமாகக் கேட்டது.

இதைப்பாடிய பெண்ணும் பார்ப்பதற்கு அந்த ஆண்டாளைப் போலவேயிருந்தாள். பொன்னிறம், நிலவைப் போன்ற வட்டமுகம், விரிந்ததேன் வண்டுகளைப் போன்ற அகன்ற கண்கள், அவள் கூந்தலைக் கொண்டைபோட்டு அதில் மலர்களை வைத்து அலங்கரித்து இருந்தாள்.

www.indianguide.in

அவள் பாடிய பாடல் முடிந்த பிறகு அவளது வீட்டின் பின்புற வாசலில் இருந்து, "நந்தினி நந்தினி" என்ற குரல் ஒலித்துக் கொண்டிருக்க, குரல் வந்த திசையை நோக்கி நடந்தாள்.

ஆம் இவள் பெயர் நந்தினி. இவள் சோழ தேசத்தின் மீது கடும் கோபத்தில் இருக்கிறாள் , அதிலும் குந்தவையை இவளுக்கு அறவே பிடிக்காது. வீரபாண்டியனுடன் தன் தாய் நாட்டை மீட்டு, குந்தவைக்கு நல்ல பாடம் கற்பிக்கவேண்டும் என்பது அவளது நீண்ட நாள் கனவு.

# அத்தியாயம் 6

குரல் வந்த திசையை நோக்கி நந்தினி நடக்கத் தொடங்கினாள். அந்த வீட்டின் பின்புற வாசலில் அடர்ந்திருந்த ஒரு புதரின் உள்ளேயிருந்து வெளிவந்து கொண்டிருந்தது அந்த ஓசை.

நந்தினி வெளியே வந்து ஆந்தை போல் ஒலி எழுப்பினாள். அந்த ஒலி கேட்டவுடன் புதரில் இருந்து வெளி வந்தான் ஒருவன்.

"என்ன மந்திரவாதி ஏன் பகலில் வந்திருக்கிறாய்? அவ்வளவு அவசரமான செய்தி என்ன கொண்டு வந்திருக்கிறாய்?" என்று நந்தினி கேள்விகள் கேட்க, மந்திரவாதி ஒன்றும் பேசாமல் அந்த வீட்டிற்குள் நுழைந்தான். அவனைப் பின்தொடர்ந்து நந்தினியும் வீட்டிற்குள் நுழைந்தாள்.

"தேவி! இன்று இரவு நடுநிசியில் நாம் எப்பொழுதும் கூடும் அந்த வாய்க்கால் மேட்டில் போருக்கு முன்னால் நடத்தப்படும் சடங்குகள் நடக்க உள்ளன. நீங்கள் உங்கள் கரங்களால் பலிகொடுத்து மன்னர் வீரபாண்டியனுக்கு வெற்றித் திலகம் சூட்ட வேண்டும் என்பது எங்கள் அனைவரின் ஆசை. மன்னருக்கும் அதுதான் ஆசை. இன்று இரவு நீங்கள் சரியாக இரவின் முதல் நாழிகையில் வாய்க்கால் மேட்டிற்கு வந்து சேர வேண்டும்" என்று கூறினான் ரவிதாசன்.

www.indianguide.in

நந்தினி எதுவும் பேசாமல் மௌனமாக இருக்க, "ஏதேனும் தவறு நடந்து விட்டதா தேவி?" என்று ரவிதாசன் கேட்டான்.

"இல்லை தவறு எதுவும் இல்லை இன்னும் எத்தனை நாட்களுக்கு நான் என் அடையாளத்தை மறைத்து, என் அண்ணன் அந்த வீர வைஷ்ணவ சிகாமணியை ஏமாற்றிக்கொண்டு இருப்பேன் என்று எண்ணிப்பார்த்தேன். சரி அதையெல்லாம் விடு சரியாக இரவின் முதல் நாழிகையில் நான் அங்கு இருப்பேன் இதை அவரிடம் கூறி விடு!" என்று நந்தினி கூறி மீண்டும் திருப்பாவைப் பாடல்களைப் பாடத் தொடங்கினாள்.

நள்ளிரவின் முதல் நாழிகை ......

பண்டைய தமிழ் மக்களின் போர்க் கடவுள் கொற்றவை. ஒரு அரசர் போருக்குச் செல்லும் முன்னால் கொற்றவை தேவியை வணங்கி, தேவிக்குப் பூஜைகள் செய்து ஆசி பெற்று வாகை சூடுவது வழக்கம்.

வைகை நதி வாய்க்கால் வழியே ஓடிக்கொண்டிருந்தது. சுற்றிலும் தென்னை மரங்கள் அந்தத் தோப்பின் குறிப்பிட்ட இடத்தில் ஒரு கூட்டம் தீப்பந்தங்களோடு யாருக்காகவோ காத்திருந்தது.

அன்று இரவு வாய்க்கால் மேட்டில் ஒரு நான்கடி கொற்றவையின் சிலை மங்கல அலங்காரங்களுடன் வைக்கப்பட்டிருந்தது. பலி கொடுப்பதற்காக ஒரு எருமைக் கிடா அங்கே ஒரு மூலையில்

www.indianguide.in

கட்டப்பட்டிருந்தது. அன்று முழு நிலவு ஆதலால் நிலவின் ஒளி மிகவும் பிரகாசமாக இருந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் ஒற்றையடி பாதையில் நான்கைந்து தடியர்கள் சேர்ந்து ஒரு பல்லக்கைத் தூக்கிக் கொண்டு வந்தனர்.

அந்தப் பல்லக்கு நேராக தென்னந்தோப்புக்குள் புகுந்தது. குறிப்பிட தொலைவு சென்றதும் ஓர் இடத்தில் பல்லக்கு நிற்க, நிலவின் ஒளியில் இன்னொரு நிலவாய்ப் பல்லக்கின் திரையை விலக்கி வெளியே இறங்கினாள் நந்தினி.

"வணக்கம் அரசே!" என்று இறங்கிய மறுகணம் அங்கிருந்த ஒரு வீரனை நோக்கிப் பணிவாக வணங்கினாள்.

"வா தேவி! உன்னைத்தான் எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தேன்" என்று ஒரு கம்பீரக் குரல் ஒலித்தது. அந்தக் குரலுக்குச் சொந்தக்காரர் வேறு யாரும் இல்லை உத்தமசீலியின் தலை கொண்ட வீரபாண்டியன்!

வயதானாலும் கம்பிரமான உடல், நீண்டு சுருண்ட முடி, கூர்மையான ஈட்டி போன்ற பார்வை, குறுகிய இடை, வலிமையான தோள்கள், வீரத்தைப் போற்றும் விதம் உடலெங்கும் வீரத்தழும்புகள் இதுவே வீரபாண்டியனின் தோற்றம்.

"சடங்குகள் தொடங்கட்டும்" என்று வீரபாண்டியன் கூற... அங்கே அமர்ந்திருந்த சில பெண்கள் எழுந்து கொற்றவையின் முன்னால் நடனமாடத்

www.indianguide.in

தொடங்கினர். அவர்கள் ஆடிய வேகத்தில் அவர்கள் முடிந்து வைத்திருந்த கூந்தல் அவிழ்ந்து மேலும் கீழுமாக, இடம் வலமாக ஆடியது காண்போருக்கு அச்சத்தை வரவழைத்தது. இதெல்லாம் சாதுவாகப் பார்த்துக்கொண்டிருந்த நந்தினி திடீரென கொற்றவையே தனக்குள் வந்ததுபோல, ஆடிக் கொண்டிருந்த பெண்களின் மத்தியில் சென்று ஓங்கார நடனம் ஆடத் தொடங்கினாள். நிலம் அதிரத் தொடங்கியது. குலவைச் சத்தம் இரவின் அமைதியைக் கிழித்து எதிரொலித்தது. தாரை தப்பட்டை என்று இசைக்கருவிகள் ஒலியெழுப்ப, கொம்புகள் சத்தம் அவள் ஆடிய ஆட்டத்திற்கு உயிர் கொடுத்தது. இதைக் காணும்பொழுது வீரபாண்டியன் நெஞ்சமே படபடத்து விட்டது.

பூசாரி ஒருவர் கொற்றவைக்குத் தீபாராதனைக் காட்ட, எருமைக்கிடா கொற்றவை முன்னால் கொண்டு வந்து நிறுத்தப்பட்டது. இன்னொருவன் ஒரு நீண்ட வாளை எடுத்துக்கொண்டு வந்து நந்தினி முன் நீட்டினான்.

சாதாரணமாக அந்த வாளை ஒரு வீரனால் தூக்கிச் சுழற்றுவது கடினம் ஆனால் நந்தினி இருந்த வேகத்தில் அந்த வாளைச் சுழற்றி எருமையின் கழுத்தில் வெட்டிய வேகத்தில் தலை உருண்டு சென்று கொற்றவை தேவியின் பாதத்தில் விழுந்தது. அந்த இடமே ரத்த வெள்ளமானது. நந்தினியின் ஆட்டம் இன்னும் முடியவில்லை நந்தினி ஏதோ பேசத் தொடங்கினாள்.

"இன்று இந்த எருமையின் தலை எப்படி என் காலடியில் இருக்கிறதோ அதுபோலச் சோழ வம்சத்தில் பிறந்த அனைவரின் தலையும் என் காலடியில் இருக்க வேண்டும். தஞ்சைக் கோட்டையின் மீது மீன் கொடி பறக்க வேண்டும், அந்தக் குந்தவை என் முன்னால் மண்டியிட வேண்டும். என் உத்தரவு கேட்டு நடக்கும் பணிப்பெண்ணாகப் பணிபுரிய வேண்டும்", என்று கூறி மூர்ச்சை அடைந்தாள் நந்தினி.

இதுவரை இது போன்று நடந்துகொண்ட நந்தினியை யாரும் பார்த்ததே இல்லை. வீரபாண்டியனுக்குக் கூட இது புதிதாகத் தெரிந்தது. என்ன நடந்தாலும் பூஜை வெற்றிகரமாக முடிந்துவிட்டது வெற்றி நம் பக்கம் தான் என்று கூறி களிப்புற்றன் வீர பாண்டியன்.

***தஞ்சை ....***

பொன்னி நதி வளைந்து நெளிந்து ஆனந்தமாக ஓட , காணும் இடமெல்லாம் பச்சைப் போர்வை போற்றியது போல இருக்கும் நிலங்கள், மகிழ்ச்சியை மட்டும் வெளிப்படுத்தும் பூக்கள், அன்பிற்கு இலக்கணமாக மக்கள் என்று தஞ்சையை வர்ணித்துக்கொண்டே போகலாம்.

தஞ்சை நகரமே திருவிழாக் கோலம் பூண்டிருந்தது. எங்கு பார்த்தாலும் மகிழ்ச்சியின் வெள்ளம் கரை புரண்டு ஓட, எண்ணற்ற மக்கள் தஞ்சை வீதிகளில் குவிந்திருந்தனர். கோட்டை முழுவதும் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு இருந்தன. எல்லா வீடுகளின்

வாசலிலும் வாழை மரங்கள் கட்டி மாவிலைத் தோரணம் தொங்கவிடப்பட்டிருந்தது.

ஆதித்த கரிகாலரின் வருகை ஒரு திருவிழாவாகவே மாறிவிட்டது. இன்னும் சற்று நேரத்திற்கெல்லாம் ஆதித்த கரிகாலர் வந்துவிடுவார். அவர் வரவையொட்டி கோட்டையின் வாசல் முன் திரண்டிருந்த கூட்டம் கடலைப் போன்று காணப்பட்டது. நகரின் மத்தியில் கோட்டை மிகவும் பிரமாண்டமாகக் காட்சியளித்தது. நாட்புறமும் வானைத் தொடும் அளவு உயரமான மதில் சுவர்கள், சுவர்களுக்கு வெளியே பெரிய அகழி. அதையொட்டி மரங்கள் இங்குமங்குமாக இருந்தது. அதில் பறவைகள் கரிகாலரின் வருகைக்காக இசைக்கச்சேரி நடத்திக்கொண்டிருக்க, கோட்டைக்குள்ளே சோழப் படைகள் எல்லாம் அணிவகுத்து நிற்க, ராஜ குடும்பதினர் அரண்மனை முன் அமைக்கப்பட்டிருந்த மேடை மேல் நின்று அங்கே நடக்கும் ஆட்டங்களை மகிழ்ச்சியுடன் கவனித்துக் கொண்டிருந்தனர்.

அந்த ராஜ குடும்ப கூட்டத்தில் சுந்தரசோழர், அவரது மனைவி வானவன்மாதேவி, மகள் குந்தவை, அவளது தோழி வானதி, முதல்-மந்திரி பிரம்மராயர், சேனாதிபதி பூதி விக்கிரம கேசரி, தன தான்ய காவலர்களான பழுவேட்டரையர்கள் என அனைவரும் நின்று கொண்டிருந்தனர்.

ஆதித்த கரிகாலர் வந்துகொண்டிருந்த யானை இப்பொழுது தஞ்சை நகரை அடைந்துவிட்டது. ஊரின் எல்லையில் அமைந்திருந்த ஆலமரத்துக்கு அடியில்

www.indianguide.in

அவர்கள் வருகையில், மேலிருந்து யாரோ ஈட்டி ஒன்றை அவர்கள் வழியில் எறிய, மேல் நோக்கிப் பார்த்தார் ஆதித்த கரிகாலர்.

www.indianguide.in

# அத்தியாயம் 7

காற்றைக் கிழித்துக் கொண்டு சரமாரியாக ஈட்டிகள் நிலத்தில் குத்தி நிற்க, மேலிருந்து ஈட்டி எரிவது யார் என்று மேலே பார்த்தார் ஆதித்த கரிகாலன்.

அவன் முகம் சரியாகத் தெரியவில்லை, கண்கள் இரண்டைத் தவிர எல்லா இடத்திலும் ஒரு சிவப்பு நிறத்துணி கொண்டு முகத்தை மூடி இருந்தான்.

ஆதித்த கரிகாலர் யானையை நிறுத்தச் சொல்லி, 'வா!' என்பது போல சைகை செய்ய, மேலிருந்து ஒரே பாய்ச்சலில் நிலத்தை வந்தடைந்தான் அந்த முகமூடி அணிந்திருந்த மனிதன்.

ஆதித்த கரிகாலர் அவனை நோக்கிப் புன்முறுவல் செய்துவிட்டு யானை மேலிருந்து வாளுடன் கீழே குதித்தார்.

அவனும் தன் வாளை உருவி ஆதித்த கரிகாலரை எதிர் நோக்கிக் காத்திருக்க, முதல் தாக்குதலை ஆதித்த கரிகாலர் தொடங்கினார்.

வாளுடன் வாள் மோதித் தீப்பொறிகள் பறக்க, இருபெரும் வீரர்கள் ஒருவருடன் ஒருவர் மோதிக் கொண்டிருந்தனர். ஆதித்த கரிகாலனின் படைகள் முன்னோக்கி வர, "வர வேண்டாம்" என்று தடுத்து நிறுத்தினார் கரிகாலர். எதிரே நின்றவன் சாதாரண

ஆள் இல்லை அவனின் வாள் வீச்சு கரிகாலரின் வாளுக்குச் சற்றும் குறைந்ததாகத் தெரியவில்லை.

இந்தத் துவந்த யுத்தத்தின் முடிவு என்ன என்பது யாருக்கும் தெரியவில்லை. கரிகாலருடன் வந்த பரிவாரங்கள், நடக்கும் இந்த யுத்தத்தை ஆர்வமாகப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஒரு முறை அந்த முகமூடி அணிந்தவன் நிலத்தில் விழ, சுற்றி நின்ற மற்றவர்கள் அனைவரும் "ஆதித்த கரிகாலர் வாழ்க!" என்று கோஷமிட்டனர். சற்று நேரத்திற்கெல்லாம் கரிகாலர் நிலத்தில் கிடந்தார். அப்பொழுது வீரர்கள் அனைவரும் 'கட்டளையிடுங்கள் இவனை இங்கே கொன்று விடுகிறோம்' என்று முழக்கமிட்டனர்.

ஒருமுறை முகமூடி அணிந்தவனின் கை ஓங்க, மறு முறை கரிகாலரின் வீரம் வெளிப்பட்டது. இப்படி இருவரும் சரிக்குச் சமமாகப் போட்டியிட்டுக் கொண்டிருக்க வீரர்கள் அனைவரும் யார் வெற்றி பெறுவார் என்று ஆர்வமாகப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

இரு பெரும் வீரர்கள் ஒருவரை ஒருவர் வெல்ல போராடிக்கொண்டிருந்த பொழுது வாள்கள் இரண்டும் மோதி, பெரும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

கரிகாலரின் ஒவ்வொரு தாக்குதலுக்கும் பதில் தாக்குதல் வந்துகொண்டே இருந்தது. இடக்கை வைத்து வாள் சுழற்றுவதிலும் கரிகாலர் வல்லவர்,

www.indianguide.in

அவரின் வாள்வீச்சுக்குச் சற்றும் சளைத்ததாக இல்லை எதிரே நின்றவனின் வாள் வீச்சு.

அந்த இடத்தைச் சுற்றி புழுதிப்படலம் சூழ, வெளியே இருந்து பார்ப்பவர்களுக்கு உள்ளே என்ன நடக்கிறது என்றே தெரியவில்லை.

கொஞ்சம் கொஞ்சமாக வேகத்தை அதிகரிக்கத் தொடங்கினார் கரிகாலர். சற்று நேரத்திற்கெல்லாம் ஆதித்த கரிகாலர் அவரது முழு வேகத்தைக் காட்ட எதிரே நின்றவன் ஒரு நொடிப் பொழுது அயர்ந்த காரணத்தினால் அவனின் வாளை அவனிடம் இருந்து பறிக்க, அவனின் கையைக் குறிவைத்துத் தாக்கினார். ஆனால் அந்தத் தாக்குதல் அவனை ஒன்றும் செய்யவில்லை, மீண்டும் அவன் கரிகாலரைத் தாக்காமல் தன்னுடைய வாளைத் தூக்கி எறிந்தான்.

சோழப் படைகள் அந்த முகமூடியைச் சூழ்ந்தன. கரிகாலர் அவரின் வாளைக் கீழே எறிந்துவிட்டுச் சிரிக்கத் தொடங்கினார்.

சூழ்ந்த வீரர்களைத் தள்ளி நிற்குமாறு ஆதித்த கரிகாலர் கூறினார். வீரர்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

சிரித்துக் கொண்டே கரிகாலர் கேட்டார், "இவரை இன்னுமா உங்களுக்கு அடையாளம் தெரியவில்லை? என்னுடன் சரிக்குச் சமமாகப் போரிடும் வல்லமை யாருக்கு உண்டு? இவர் வேறு யாருமில்லை!..."

"சதய நட்சத்திரத்தில் பிறந்தவன், கையில் சங்கும் சக்கரமும் பெற்றவன், சோழ தேசத்து அன்பு புதல்வன், வீராதி வீரன், பொன்னியின் செல்வன், காவிரியின் மைந்தன்" என்று கூறிக் கொண்டே அந்த மர்ம மனிதனின் முகமூடியை அவிழ்த்தார். சூரியனைப் போன்ற முகம், விஷ்ணுவைப் போன்ற அகன்ற மார்பு, பிரம்மா போன்று வலுவான கால், சிவனின் செஞ்சடை கலந்த ரோமமுடைய தலை. வீரர்கள் எல்லோர் முகத்திலும் அதிர்ச்சி ஒன்றே குடிகொண்டிருந்தது.

"எழுந்து வா தம்பி!" என்று கை நீட்டினார் ஆதித்த கரிகாலர்.

"வந்திருப்பது நீ என்று எனக்கு நன்கு தெரியும்! நீ மரத்தின் மேல் நிற்கும் பொழுதே நான் உன்னைக் கண்டு
கொண்டேன். வெகுநாட்களாகத் தஞ்சையைப் பிரிந்து இருக்கும் எனக்கு இதை விடச் சிறப்பாக ஒரு வரவேற்பை யாரும் கொடுக்க முடியாது தம்பி" என்று ஆதித்த கரிகாலர் கூற,

மெல்லிய புன்னகை புரிந்த அருள்மொழி, “ஆசி வழங்குங்கள் அண்ணா” என்றுகூறி கரிகாலரின் பாதம் தொட்டு வணங்கினார்.

அவரைத் தொட்டுத் தூக்கியவர், "என்ன உடை இது? யானைகளுடன் கூடிக்கூடி நீயும் ஒரு யானைப் பாகனாகவே மாறிவிட்டாய்", என்று கேலியாகக் கூறிச் சிரித்தார் ஆதித்த கரிகாலர்.

www.indianguide.in

"யாரங்கே? இவனுக்கு மாற்றுவதற்கு வேறு உடைகள் கொடுங்கள்" என்று கரிகாலர் கட்டளையிட, மஞ்சளும் சிவப்பும் கலந்த பட்டுத்துணிகள் எடுத்து வரப்பட்டன. அவைகளை அணிந்து, ஆபரணங்களும் சூடி அருள்மொழி நடந்து வந்த அழகைக் காண கண் கோடி வேண்டும்!

நேராக அருள்மொழி வந்து ஆதித்த கரிகாலரின் காலில் விழுந்து, "அண்ணா! இன்று உங்களின் யானைக்கு நான் பாகனாக வேண்டும் வாருங்கள் செல்லலாம்!" என்றார்.

இரு மாவீரர்களும் யானை அருகே சென்று நிற்க, அருள்மொழி யானைப் பாகனாக ஆதித்த கரிகாலனை அரண்மனைக்கு அழைத்து வருவது நாடு மொத்தம் பரவத் தொடங்கி மக்கள் கடலெனத் திரண்டனர்.

***அரண்மனை ....***

மேடைமேல் நின்றுகொண்டிருந்த வானதி வெகுநேரமாக யாரையோ தேடிக் கொண்டிருக்கிறாள் என்பதை உணர்ந்த குந்தவை, "அவன் அவனுடைய அண்ணனைக் காணச் சென்றுவிட்டானடி" என்று கூறிச் சிரிக்க, வானதி வெட்கத்தில் தலை குனிந்தாள்.

யானை ஒன்று வருவது மேடை மேல் நின்றவர்கள் கண்ணில் பட, அதில் வருவது வேறு யாருமில்லை சோழ தேசத்துத் தவப் புதல்வர்கள் என்று குந்தவை கூற, ஆட்டம் களைகட்டியது.

மக்கள் அனைவரும் இரு வீரர்களின் வருகையைப் பார்த்து சிலை போல நின்றனர். இரண்டு வீரர்களும் யானை மேலிருந்து கீழே இறங்கி வந்து நிற்க, குந்தவை ஆரத்தி எடுத்தாள். பின் குந்தவை கரிகாலரின் கால் தொட்டு வணங்கி, "அண்ணா! ஆசிர்வாதம் செய்" என்று கூறி எழுந்த நொடி, "சோழ தேசம் மட்டும் அல்ல இந்த அகிலம் போற்றும் உன்னை, உன் செயல்களை!" என்று கரிகாலர் வாழ்த்தினார்.

மூன்று செல்வங்களும் தங்கள் தந்தை தாய் காலில் விழ வரிசையாக நின்றனர். முதலில் கரிகாலரும், இரண்டாவதாக குந்தவையும் சென்று ஆசி பெற்றார்.

பின் அவர்கள் இருவரும், சுந்தர சோழன் மற்றும் அவரின் மனைவி வானவன்மாதேவி அருகில் சென்று நால்வராக  நிற்க, அருள்மொழி அவர்கள் காலில் விழ வந்த நொடியில் அருள்மொழி அருகே வானதியும் வந்து இருவரும் சேர்ந்து மூத்தவர்களை வணங்கினர்.

குந்தவைக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை, அவள் வாய் விட்டுச் சிரித்த நொடியில் மேடையில் இருந்த அனைவரும் சிரிக்க ஆதித்த கரிகாலரும் சிரித்தார்.

இந்த நிகழ்வுகள் ஒருபுறமிருக்க, மறுபுறம் சோழப்படைகள் வெகு நாட்களுக்கு முன்பே இலங்கைப் படைகளைத் தடுத்து நிறுத்த, கொடும்பாளூர் சிறிய வேளார் தலைமையில் சென்றது. அவர்கள் பற்றிய செய்தி வந்த ஓலையை

வீரன் ஒருவன் அநிருந்தப் பிரம்மராயரிடம் கொடுத்தான்.

அதை வாங்கித் தனது இடுப்பில் சொருகி வைத்துக்கொண்டு கரிகாலரை நோக்கி, "நீங்கள் சற்று நேரத்திற்குப் பிறகு என் மாளிகைக்கு வாருங்கள் இளவரசே!" என்றார்.

# அத்தியாயம் 8

வந்தியத்தேவனை நாம் மறந்தே விட்டோம். வந்திய**த்**தேவன் அன்று காலையில் திருக்கோவிலூர் மலையமான் தங்கியிருந்த அரண்மனையை அடைந்தான்.

அரண்மனை வாசலில் காவலர்களுடன் பேசிக்கொண்டிருந்த பார்த்திபேந்திர பல்லவனுக்கு ஒரே ஆச்சரியம், "நேற்று சென்று இன்று வந்து விட்டான்! ஏதேனும் செய்தி கொண்டு வந்திருக்கிறானா? " என்று தனக்குத்தானே பேசிக்கொண்டிருந்தான்.

வந்தியத்தேவனின் குதிரை மிகவும் களைப்படைந்து சோர்ந்து காணப்பட்டது. குதிரை மெதுவாகப் பார்த்திபேந்திர பல்லவனிடம் வந்து நின்றது.

"என்ன வந்தியத்தேவா ? என்ன நேர்ந்தது? உடம்பெல்லாம் ஒரே அழுக்காக இருக்கிறது? ஏதேனும் இடர் வந்துவிட்டதா?" எனக் கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டுக்கொண்டே இருந்தான் பார்த்திபேந்திர பல்லவன்.

வந்தியதேவன் நடந்தவற்றைக் கூறினான். பார்த்திபேந்திர பல்லவன், "என்ன நீ கூறுவதெல்லாம் உண்மை தானா?" என ஆச்சரியத்துடன் கேட்க, "ஆம் உண்மைதான்" என்றான் வந்தியத்தேவன்.

"சரி, மலையமான் தாத்தா கோவிலுக்குச் சென்றிருக்கிறார். நீ சென்று ஓய்வெடு" என்றான் பார்த்திபேந்திர பல்லவன்.

வந்தியதேவன் சற்று நேரத்திற்கெல்லாம் கண்ணயர்ந்து விட்டான். கனவு லோகத்தில் மிதந்து கொண்டிருந்தான் வந்தியத்தேவன்.

அவனைச் சுற்றி பனி படர்ந்திருந்தது, அது பனியல்ல மேகமூட்டம். ஆம், அவன் ஒரு படகில் அமர்ந்திருந்தான், அந்தப் படகு வானில் மேகத்தில் மிதந்து கொண்டிருந்தது. அந்தப் படகைச் செலுத்திக் கொண்டிருந்தவள் ஒரு பெண். அவளுக்கு அருகே வேறொரு பெண்ணும் இருந்தாள். அவள் முகம் சரியாகத் தெரியவில்லை மேகம் மறைத்து விட்டது. ஆனால் அந்தப் பெண் வந்தியத்தேவனின் கையைப்பற்றி "இனியும் தாமதிக்க விரும்பவில்லை, தங்களது கரத்தைப் பற்றிய எனது கரம் இனி வேறொரு ஆணின் கரத்தைப் பற்றாது" எனக் கூறி முடிக்கும் நொடியில் அவளின் முகத்தை மறைத்திருந்த பனிமூட்டம் விலகியது. ஆனால் எதிரே இருப்பது ஒரு பெண்ணாக இருக்க முடியாது? பெண்ணாக இருந்தால் மீசை இருந்திருக்காது, ஐயோ இந்த முகம் இது எங்கோ கண்டு இருக்கிறேன் என்று தனக்குத் தானே பேசிக் கொண்டிருந்தான் வந்தியத்தேவன்.

ஒரு நொடியில் பிடி கிட்டியது அவன் கண்ட முகம் திருக்கோவிலூர் மலையமானின் முகம். அவன் கண்ட கனவு கலைந்ததை உணர்ந்தான் வந்தியத்தேவன்.

நிஜமாகவே எதிரே திருக்கோவிலூர் மலையமான் வந்தியத்தேவனை நோக்கிக் கொண்டிருந்தார்.

"ஐயா.. நீங்கள் எப்பொழுது வந்தீர்கள்?" என மெதுவாக கேட்டான் வந்தியத்தேவன்.

"நான் வருவது இருக்கட்டும் நீ எப்பொழுது வந்தாய்? எல்லாம் கேள்விப்பட்டேன்! போயும் போயும் புளிச்சோற்றுக்கு ஆசைப்பட்டு புளிய மரத்தில் கட்டி வைக்கப்பட்டிருகிறாய். உன்னை நான் என்னவென்று சொல்ல?" எனக் கேலிக் கூத்தாகப் பேசிக்கொண்டிருந்தார் திருக்கோவிலூர் மலையமான். பிறகு,

"நடந்தவற்றை எல்லாம் அறிந்தேன் வந்தியத்தேவா! இப்பொழுது நீ உடனடியாக எல்லைக்குச் செல் அங்கே சென்று முதன்மைக் காவல் வீரனிடம் நடக்கவிருப்பதைக் கூறு. பின் நேராக தஞ்சை நோக்கிப் புறப்படு! இல்லை தஞ்சை வேண்டாம். நீ நேராக உறையூரை நோக்கிச் செல்! நமது சிற்றரசர்களின் படைகள் எல்லாம் அங்கே வரும் அவற்றை ஒன்று திரட்டி நீ அங்கேயே இரு" எனத் திருக்கோவிலூர் மலையமான் கூற, அப்படியே ஆகட்டும் என்றான் வந்தியத்தேவன்.

***மதுரை ....***

வைகை ஆற்றங்கரையில் ஒரு பாறை மேல் அமர்ந்து வீரபாண்டியனுடன் அவனது ஆபத்துதவிகள் பேசிக்கொண்டிருந்தனர். நந்தினி அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக வந்து கொண்டிருந்தாள்.

www.indianguide.in

நந்தினி அந்தப் **பாறைத்** திட்டை அடைந்தவுடன் ஆபத்துதவிகள் எழுந்து நின்றனர்.

"அமருங்கள்" என மெல்லிய குரலில் கட்டளையிட்டாள் நந்தினி.

"என்ன அரசே! ஆழ்ந்த சிந்தனையில் இருக்கிறீர்கள்."

"போருக்கான வியூகத்தைத் தேடிக்கொண்டிருந்தேன், இம்முறை அந்தக் கிழவன் சுந்தர சோழனை உயிருடன் விடக்கூடாது!"

"நீங்கள் கூறுவது முற்றிலும் சரி! சோழ வம்சத்தை அடியோடு அழிக்கப் போகும் இந்தப் போரில் வரலாற்றில் அழிக்க முடியாத ஒரு வீரன் உருவாகப் போகிறான்" என்றாள் நந்தினி.

"தமிழ் மொழியின் சிறப்பை அறிவாயா நந்தினி?" என்ற வீரபாண்டியனின் வினாவை நந்தினி எதிர்பார்க்கவில்லை. நந்தினி மௌனம் சாதித்தாள். "கூறுகிறேன் கேள்!" என்று வீரபாண்டியன் தொடங்கினார்.

"நீ கூறியது இரு பிரிவினருக்கும் பொருந்தும். ஒன்று நமக்கு இன்னொன்று சோழ தேசத்திற்கு. நீ கூறியவை உண்மையே! இந்த உலகறிய ஒரு மாபெரும் வீரன் தோன்றத்தான் போகிறான். அது யார் என்பதைக் காலம் நிச்சயிக்கும்" என வீரபாண்டியன் கூறும்போது நந்தினி மனதில் வந்த ஒரு பெயர் *"ஆதித்த கரிகாலன்!"*. ஒருவேளை அவர் போர்க்களம்

வந்தால்? என எண்ணிப் பார்க்கக்கூட பயந்தாள் நந்தினி.

நந்தினியின் மௌனம் கண்டு வீரபாண்டியன், "பயப்படாதே நந்தினி" என்றான்.

நந்தினி எழுந்து நின்று வீரபாண்டியன் காலில் விழுந்தவள், “உங்களுக்கு ஒன்றும் ஆகக் கூடாது” என்றாள்.

"எனக்கு ஒன்றும் ஆகாது இன்றிலிருந்து பதினெட்டு நாட்கள் கழித்துச் சேவூரில் நடக்கும் அந்த மாபெரும் போரில் வெற்றி நமக்கே!" அறைகூவலை நேற்று சோழ தேசத்திற்கு அனுப்பிவிட்டேன் என்று கூறிச் சிரித்தான் வீரபாண்டியன்.

***தஞ்சை...***

வெகு நாட்களுக்குப் பிறகு தஞ்சைக்கு வந்தது ஆதித்த கரிகாலரின் மனதுக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தந்தது.

அவர் குந்தவை தேவியிடம் பேசிக் கொண்டிருந்தார். அருள்மொழி வருவதைக் கண்டு, "அவன் வருகிறான் வேறொரு நாள் இதைப் பற்றி விவாதம் செய்வோம்" என்றார் ஆதித்த கரிகாலர்.

அருள்மொழி வந்தவுடன் அண்ணன் காலில் விழுந்து எழுந்து "அண்ணா நீங்கள் வந்து வெகு நேரம் ஆகிவிட்டது இன்னும் பிரம்மராயரை நாம்

சந்திக்கவில்லை" எனக் கூற, "சரி வா போகலாம்" என்றார் ஆதித்த கரிகாலர்.

"சென்று வருகிறோம் குந்தவை" என்று கூறி ஆதித்த கரிகாலர் முன்னே நடக்க, "வருகிறோம் அக்கா" என்று பின்னே நடக்கத் தொடங்கினார் அருள்மொழிவர்மர்.

***பிரம்மராயரின் மாளிகை ....***

முன்பு நாம் கண்ட முன்குடுமி நம்பி, அநிருத்தர் முன்பு நின்று கொண்டிருக்க, "நடந்ததைக் கூறு திருமலை" என்று அன்புக் கட்டளையிட்டார் அன்பில் அநிருத்தர்.

ஆழ்வார்க்கடியான் மெல்லிய குரலில், "இவன் பாண்டிய தேசத்து ஒற்றன். நான் உங்களின் சிஷ்யன் என்று அறியாமல் ஆதித்த கரிகாலரைச் சூழ்ச்சி வலையில் சிக்க வைக்கும் முயற்சிக்குத் தீட்டப்பட்ட திட்டத்தைச் செயல்படுத்த இவன் என்னிடம் ஒரு ஓலையைக் கொடுத்தான். பின் தங்களிடம் கொடுக்குமாறு இன்னொரு ஓலையும் கொடுத்தான் இரண்டும் என்னிடம் உள்ளது. அன்று கரிகாலர் அங்கே புறப்பட்டவுடன் இவனைத் தேடி நானும் சென்றேன். இவனை இங்கே காவிரி ஆற்றங்கரையில் கையும் களவுமாகப் பிடித்த பின்பு உங்களிடம் அழைத்து வந்தேன்" எனக் கூறி முடித்தான் முன்குடுமி நம்பி.

"அந்த ஓலையில் அப்படி என்னதான் எழுதி இருக்கிறது? வாசித்துக் காட்டு" என்றார் பிரம்மராயர்.

ஆழ்வார்க்கடியான் அந்த ஓலையில் உள்ளதை உள்ளவாறு படித்தான், "பாண்டியனின் இந்திரா ஆராமும் மணிமுடியும் இலங்கையில் உள்ளது அதை அடைவதற்காக சோழ அரசு பெரும்பாடுபடுகிறது என்பதை நான் அறிவேன். என்னுடன் ஆதித்த கரிகாலன் வந்தால் அதை நான் உங்களுக்கு மீட்டுத் தருவேன்"

"இதெல்லாம் இதில் எழுதி இருக்கிறதா?" எனக் கேட்டார் பிரம்மராயர். ‘ஆமாம்’ என்பது போலத் தலையசைத்தான் ஆழ்வார்க்கடியான்.

பின் அந்த அறையின் மூலையில், கரங்களில் சங்கிலியால் பிணைக்கப்பட்ட அந்தக் கைதியிடம், "உன் பெயரென்ன?" என்று கேட்டார் அன்பில் அநிருத்த பிரம்மராயர்.
அதற்கு அவன் "என் பெயர் கருத்திருமன்" என்று கூறினான்.

# அத்தியாயம் 9

கருத்திருமன் தனது பெயரைக் கூறி முடித்தவுடன், "நீ கோடிக்கரையில் வாழ்பவன் தானே?" என வினா எழுப்பினார் பிரம்மராயர்.

இதற்கு பதில் ஆழ்வார்க்கடியானிடம் இருந்து வந்தது, "இவன் அவனேதான்" எனக் கூறினான் ஆழ்வார்க்கடியான்.

"உன்னைப்பற்றி எனக்கு நிறைய செய்திகள் வந்திருக்கின்றன, வீரபாண்டியனைக் காப்பாற்றியவன் நீ அல்லவா? இப்பொழுது எல்லாம் தெளிவாகிவிட்டது! இதையெல்லாம் காசுக்காக செய்கிறாயா? சொல் உங்களின் திட்டம் என்ன? இல்லையென்றால் உன்னை நான் பாதாளச் சிறையில் அடைத்து விடுவேன்" எனக் கூறினார் அநிருத்தப் பிரம்மராயர்.

மௌனம் சாதித்தான் கருத்திருமன். "இல்லை நீ சொல்லப்போவதில்லை உன்னை நான் பாதாளச் சிறையில் தான் அடைக்கப் போகிறேன்" என பிரம்மராயர் கூறிக் கொண்டிருக்கையில், ஒரு காவலன் உள்ளே வந்து இளவரசர்கள் இருவரும் உங்களைக் காண்பதற்காக வந்து கொண்டிருக்கிறார்கள் எனும் செய்தியைத் தெரிவித்தான்.

"திருமலை அவர்கள் இதைப் பற்றி அறிய வேண்டாம் இவனை உள்ளே இருக்கும் அறைக்கு அழைத்துச் செல்லும். நீயும் அங்கேயே இரு. அவர்கள் சென்றவுடன் இவனைப் பத்திரமாகப் பாதாளச் சிறையில் அடைத்து விடு. இவனிடம் சில சந்தேகங்களைக் கேட்டறிய வேண்டியிருக்கிறது. நான் இவனை அங்கு வந்து சந்திப்பேன். வேகமாக உள்ளே செல்" என்று பிரம்மராயர் கூற, வேகமாக அவனை அழைத்துக்கொண்டு உள்ளே சென்றான் ஆழ்வார்க்கடியான்.

வீரப் புலிகள் இரண்டும் ஒன்றன்பின் ஒன்றாக பிரம்மராயர் மாளிகைக்குள் வர, மகிழ்ந்த முகத்துடன் வரவேற்றார் அநிருத்தப் பிரம்மராயர்.

"வாருங்கள்! இருவரையும் ஒருசேரக் காண்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சி" என பிரம்மராயர் கூற,

"முதல்-மந்திரி நாங்கள் வந்த விஷயம் உங்களுக்கு இந்நேரம் தெரிந்திருக்கும். இலங்கை சென்ற படைகள் பற்றிய செய்தி அல்லவா உங்களுக்குச் சற்று முன் கிடைத்த ஓலையில் இருக்கிறது" என வினவினார் கரிகாலர் .

"இலங்கைக்குச் சென்ற படைகளுக்கு என்ன நடந்தது? கொடும்பாளூர் சிறியவர் என்ன ஆனார்?" என ஆதித்த கரிகாலர் கேட்கும் பொழுது அவர் கண்ணில் கோபத் தீ கொழுந்துவிட்டு எரிந்தது.

"ஆம் அந்த ஓலையில் அதைப் பற்றித்தான் இருக்கிறது. எனக்கு இன்றுதான் செய்தி வந்தது, இலங்கையின் தளபதி ராணாவைப் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். சூழ்ச்சி செய்வதில் அவன் வல்லவன் இலங்கை சென்ற நமது படைகள் அவனின் பொறியில் அடைபட்ட எலி போலச் சிக்கிக் கொண்டனர். அங்கே இலங்கையில் ரோஹான என்று ஒரு மலைத்தொடர் உள்ளது. அது ஒரு மாய மலைத்தொடர். எல்லா பக்கமும் ஒரே போல் இருக்கும், இலங்கையின் தளபதி நமது படைகளை முதலில் முன்னேறிச் செல்ல விட்டான். நமது படைகள் வீரத்துடன் முன்னேறிச் செல்ல, அவர்கள் அனைவரும் ரோஹான மலைப் பகுதிக்குள் சென்று மறைந்து கொண்டனர். இவர்களைப் பின் தொடர்ந்து சென்ற நமது படையும் எதிர்பாராத விதமாக உள்ளே சென்று அகப்பட்டுவிட்டது. சரியான நேரம் பார்த்து ராணா நமது சிறியவரைத் தாக்க, அவர் அங்கேயே இறந்துவிட்டார். தலைவன் அற்ற படை வீரர்கள் இங்கும் அங்குமாக ஓட அவர்களைச் சிறை பிடித்தது இலங்கை அரசு" எனக் கண்ணில் கண்ணீர் வழியக் கூறினார்.

சற்று நேரம் மவுனம் அந்த அறையை ஆட்கொண்டது. ஆதித்த கரிகாலன் மீண்டும் பேசத் தொடங்கினார். “நான் இங்கே வருவதற்கு முன் எனக்கு ஒரு ஓலை கிடைத்தது. அதில் பாண்டிய மணி முடி இருக்கும் இடம் எனக்குத் தெரியும் என்று எழுதப்பட்டிருந்தது. இவையெல்லாம் எனக்குச் சந்தேகத்தைத் தூண்டுகிறது" என ஆதித்த கரிகாலர் கூறி முடிக்க,

"எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை இளவரசே! நீங்கள் இந்தப் போரில் பங்கு எடுக்கக் கூடாது என்று யாரோ நினைக்கிறார்கள். உங்களைத் திசைமாற்ற அவர்கள் செய்யும் சதிதான் இது!" எனப் பிரம்மராயர் கூறினார்.

"உங்களை இந்தப் போரில் இருந்து விலக்கி வைக்கவே இந்தச் சதிகள் எல்லாம் தீட்டப்படுகின்றன. இதற்கு பின்னால் யார் இருக்கிறார்கள் என்று வெகு விரைவில் நான் அறிந்து விடுவேன்" என மீண்டும் பிரம்மராயர் கூற,

"என்னிடம் ஒரு யோசனை இருக்கிறது" என்றார் ஆதித்த கரிகாலர். "கூறுங்கள் இளவரசே!" என்றார் பிரம்மராயர்.

"கூறுகிறேன்" எனத் தொடங்கினார் ஆதித்த கரிகாலர். "இந்தப் போரில் இருந்து என்னை விலக்கி வைப்பது என்னைக் காப்பாற்றுவதற்காக செய்யப்படுகிறதா இல்லை அந்த வீரபாண்டியனைக் காப்பாற்றுவதற்காகச் செய்யப்படுகிறதா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் சேவூர் எனது களம்! இலங்கையிலிருந்து நமது வீரர்களை மீட்பதும் இலங்கை வீரர்கள் இங்கே வராது தடுப்பதும் அருள்மொழியின் வேலை அதனால்

அருள்மொழி இலங்கை செல்லட்டும் நான் சேவூர் செல்கிறேன்" என்றார் ஆதித்த கரிகாலர்.

"நல்ல யோசனை அண்ணா! இதைத் தான் நானும் சொல்ல வந்தேன்" என்று அருள்மொழி மகிழ்ச்சியுடன்

www.indianguide.in

கூறினார். முதல் மந்திரியும் இதற்கு ஒப்புக்கொண்டார்.

"நாங்களிருவரும் இப்பொழுதே அரசவை சென்று அரசரைக் கண்டு வருகிறோம்!" எனக்கூறி இருவரும் விடைபெற்று அரசவை நோக்கிச் சென்றனர்.

தஞ்சை அரண்மனை ...

வாயிற் காவலன் அரசவைக்குள் வந்து, "இளவரசர்கள் இருவரும் அரசவை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். பராக்! பராக்!" என்றான்.

சற்று நேரத்திற்கெல்லாம் இருவரும் அரசவைக்குள் வந்து சேர்ந்தனர். அங்கிருந்த அவையோருக்கு வணக்கம் செலுத்திவிட்டு ஆதித்த கரிகாலர் பேசத் தொடங்கினார்,

"அரசே! சேவூரில் நடக்கவிருக்கும் இந்தப் போர், அமாவாசை தினத்தன்று தொடங்கும் என்பதை நாம் அனைவரும் அறிவோம்! இப்பொழுது நமக்குக் கிடைத்த செய்தியின் படி நமது வீரர்கள் அனைவரும் இலங்கையில் கைதிகளாக உள்ளனர்! அதுமட்டுமல்லாது இலங்கைப் படைகள் வீரபாண்டியனுக்கு உதவி புரிவதற்காக வந்து கொண்டிருக்கின்றன. அதை நாம் தடுத்தே தீர வேண்டும். அதற்கு நமது படைகளில் சில, இலங்கை நோக்கிப் போக வேண்டும். அந்தப் படைகளுக்குத் தலைமை தாங்கி அருள்மொழி போகவேண்டும் இதை நான் உங்களிடம் கூறி அனுமதி பெற வந்தேன் அரசே"

சுந்தர சோழரின் முகத்தில் மகிழ்ச்சி தென்பட்டது. வேறொரு சிந்தனை இல்லாமல் அப்படியே ஆகட்டும் என்று உத்தரவு கொடுத்தார் சுந்தர சோழர். பின் பெரிய பழுவேட்டரையரை நோக்கி, "எடுத்து வாருங்கள்" என்றார் சுந்தர சோழர்.

பழுவேட்டரையர் வாள் ஒன்றைக் கையில் ஏந்தி வந்தார். அதைத் தனது இரு கரங்களிலும் பிடித்துக் கொண்டு ஆதித்த கரிகாலனை நோக்கி, "இந்த வாள் சாதாரணமான வாள் அல்ல! வீரபாண்டியன் நம்மை எதிர்த்து வந்த பொழுது, உத்தமசீலி அவர்கள் போரில் பயன்படுத்திய வாள் இது! இந்த வாள் இனி உன்னுடையது பெற்றுக்கொள்" என்று பழுவேட்டரையர் வாளை நீட்டினார்.

அந்த வாளைப் பெற்றுக்கொண்டு அதன் உரையிலிருந்து அதை வெளியே எடுத்து மேல் நோக்கி உயர்த்தினார் ஆதித்த கரிகாலர். பின், ஒளிரும் அந்த வாளை நோக்கி, “இந்த வாள் எத்தனை பாக்கியம் செய்திருக்க வேண்டும்! பாண்டிய வம்சத்தை வேரோடு சாய்த்து அவர்களின் இரத்தத்தில் குளிக்கப் போகிற பெரும்பாக்கியம் பெற்றிருக்கிறது” என்று கூறி, "ஆதித்த கரிகாலன் எனும் நான் உத்தமசீலியின் தலை கொண்ட வீரபாண்டியனின் தலையைக் கொய்து அதைத் தஞ்சைக் கோட்டை முன் காட்சிக்கு வைப்பேன்!!! இல்லையெனில் போர்க்களத்திலே நவகண்டம் செய்து மடிவேன் இது நமது குலதெய்வம் நிசும்பசூதனி மீது ஆணை! இதுவே நான்

மேற்கொள்ளும் சபதம்!!!" எனக் கூறிய நொடியில் அரசவை அதிர்ந்து போனது.

அங்கே அமர்ந்திருந்த அனைவரின் கண்முன் நின்றுகொண்டிருந்தது ஆதித்த கரிகாலன் இல்லை உத்தமசீலி! இத்தனை நாள் ஆதித்த கரிகாலனை இதுபோன்று யாரும் கண்டதே இல்லை! கரிகாலனின் கண்களிரண்டும் நெருப்பைக் கக்கிக்கொண்டிருந்தன. அவர் அருகே நெருங்கக் கூட அச்சமாகத் தான் இருந்தது. இப்படி ஒரு சபதத்தை யாரும் எதிர்பார்க்கவில்லை! இத்தனை நாள் கரிகாலரைத் தூக்கி வளர்த்த செம்பியன் மாதேவியின் கண்களில் கூட ஆதித்த கரிகாலர் அன்று உத்தமசீலியாகத் தான் தெரிந்தார்.

அங்குக் குடிகொண்டிருந்த மௌனத்தை அவரே கலைத்தார்.
"இன்றிலிருந்து மூன்றாம் நாள் கொற்றவைக்குப் பூஜை எடுத்து நவகண்டம் செய்ய ஏற்பாடு செய்யுங்கள்" என்று அரங்கம் அதிர முழக்கமிட்டார் ஆதித்த கரிகாலர்.

அவை முழுவதுமிருந்து "சோழம்! சோழம்!" என்று கோஷங்கள் வரத் தொடங்கின.

# அத்தியாயம் 10

வந்தியத்தேவன் குதிரை மேல் சவாரி செய்து கொண்டிருந்தான். அவனது எண்ணம் முழுவதும் கனவில் வந்த பெண்ணை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

"அந்தப் பெண் யார்? அவள் அணிந்திருந்த ஆடை ஆபரணங்கள் எல்லாம் ராஜ குடும்பத்துப் பெண்கள் அணிவது போன்றல்லவா இருந்தது?" என்ற கேள்வி அவனுக்குள் மீண்டும் மீண்டும் எழுந்து கொண்டே இருந்தது.

"சரி. அது வெறும் கனவுதான் நிஜத்தில் வாழ்க்கை அவ்வளவு இனிமையாக இல்லை. எப்பொழுது பார்த்தாலும் வாளும் வில்லும் ஏந்திப் போர் செய்ய வேண்டியிருக்கிறது" என எண்ணியவன் மறுகணமே, "நாம் இல்லை என்றால் இந்தச் சோழ தேசத்தைப் பாதுகாப்பவர் யார்?" என்று பெருமிதம் கொண்டான்.

வந்தியத்தேவனின் நினைவு இப்பொழுது அவனது சிறு பிராயத்திற்கு அவனை அழைத்துச் சென்றது. அவனுக்கு அப்பொழுது பதினாறு வயதிருக்கும். ராஜ்யத்தை இழந்து பெற்றோர்களையும் இழந்து முன்னோர்களின் பெருமையுடன் இங்கும் அங்குமாக அடைக்கலம் வேண்டி அலைந்து கொண்டிருந்த பிராயம் அது!

அப்படி ஒரு நாள் வந்தியத்தேவன் காவிரி ஆற்றங்கரையில் குளித்துக் கொண்டிருக்கும் பொழுது சோழர்களின் படை அவன் கண் முன் வருவது தெரிந்தது! தூரத்தில் வந்து கொண்டிருந்த படைகளில் கந்தமாறன் இருந்தான், பார்த்திபேந்திர பல்லவனும் இருந்தான்.

கூட்டமாக வந்த படை வீரர்களில் ஒருவன் அங்கு நீர் எடுத்துக் கொண்டிருக்கும் பெண்களிடம் வம்பு செய்து கொண்டிருந்தான்.

இதைக் கவனித்த வந்தியத்தேவன், அந்த வீரர்கள் அங்கு இருப்பதைக் கூட பொருட்படுத்தாது வம்பு வளர்த்துக் கொண்டிருந்த வீரனைத் தாக்கி, "பெண்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று தெரியாதா உனக்கு?" எனக் கேட்க அந்தச் சோழ வீரன் கத்திக்கூச்சலிட்டான்.

இப்பொழுது சோழப் படைகள் மொத்தம் வந்தியத்தேவனைச் சூழ்ந்திருந்தது, இதெல்லாம் கண்டு அஞ்சுபவனா வந்தியத்தேவன்? வந்தியத்தேவன் அவனது வாளை உருவி சண்டைக்குத் தயாரானான்.

சோழ வீரர்கள் அவனைத் தாக்கத் தொடங்க, சற்று நேரத்திற்கெல்லாம் அனைத்து வீரர்களும் கீழே விழுந்து கிடந்தனர். மான் கூட்டங்களை வேட்டையாடும் சிங்கமென அந்தக் கூட்டத்திற்கு நடுவே நின்று கொண்டிருந்தான் வந்தியத்தேவன்.

இளங்கன்று பயமறியாது அல்லவா? அடுத்து என்ன நடக்கப் போகிறது என்று வந்தியத்தேவன் சற்று யோசித்தான். அவன் அடித்தது சோழ வீரர்களை, நிச்சயம் மரண தண்டனை அல்லது பாதாளச் சிறை வாசம் என்று முடிவுக்கு வந்தான்.

அங்கே தூரத்தில் வீரர்கள் தங்குவதற்கான கூடாரம் அமைக்கப்பட்டிருந்தது.

"அவர்கள் என்னைத் தேடி வருவதற்கு முன் நானே அங்கு சென்று நடந்தவற்றைக் கூறிச் சரணடைகிறேன்" என்று

மனதிற்குள் எண்ணிக்கொண்டு அந்தக் கூடாரத்தை நோக்கி வந்தியத்தேவன் சென்றான்.

ஒரு பெரிய கூடாரம் நடுவிலும், அதைச் சுற்றிலும் சிறிய சிறிய கூடாரங்களும் அமைக்கப்பட்டிருந்தது. வந்தியத்தேவனின் கண் அந்தப் பெரிய கூடாரத்தின் மீது விழுந்தது. வந்தியத்தேவன் நேராக உள்ளே சென்றான்.

அங்கே மூவர் அமர்ந்து எதையோ பேசிக் கொண்டிருந்தனர், அதில் ஒருவனுக்கு வந்தியத்தேவனின் பிராயமே இருக்கும், வந்தியதேவன் மீதமுள்ள இருவரை நோக்கினான்.

அதில் மத்தியில் அமர்ந்திருந்தவர் நெஞ்சில் புலிச்சின்னம் பொறிக்கப்பட்டிருந்த கவசம் அணிந்து பார்ப்பதற்கு வீராதி வீரனைப் போல் காட்சியளித்தார்.

www.indianguide.in

வந்தியத்தேவன் அவரை நோக்கி "வணக்கம் ஐயா! என் பெயர் வல்லவரையன் வந்தியத்தேவன், வாணர் குல இளவரசன் இப்பொழுது எனக்கு ராஜ்ஜியம் எதுவும் இல்லை."

"சரி வீரனே! இப்பொழுது இங்கே எதற்கு வந்தாய்?" என அந்தக் கவசம் அணிந்து இருந்த வீரர் கேட்க, வந்தியத்தேவன் ஆற்றங்கரையில் நடந்தவற்றையெல்லாம் கூறினான்.

கவசம் அணிந்த வீரரின் முகத்தில் புன்னகை பூத்தது. ஆனால் அருகிலிருந்த இருவரின் முகத்தில் கோப அக்னி வெளிப்பட்டது. "உன்னை.... இங்கேயே கொன்று விடுகிறேன்" என்று வாளேந்தி வந்தியத்தேவனை நோக்கி வந்தவனை, "நில்லுங்கள் பல்லவரே!" என்ற கம்பீரக் குரல் தடுத்து நிறுத்தியது.

இருவருக்கும் ஒன்றும் புரியவில்லை. "நமது வீரர்களை அடித்து இருக்கிறான் இவனை எப்படிச் சும்மா விடுவது?" என்று பல்லவன் என்ற பெயர் கொண்டவன் கேட்க,

"இவனைச் சும்மா விடப்போவதில்லை!" என்று கவசம் அணிந்தவர் பதில் தெரிவித்தார். வந்தியத்தேவனின் மனதில் ஏதோ ஒரு பதற்றம் நிலைகொண்டது.

"அப்படி என்றால் இவனை என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று வந்தியத்தேவனின் பிராயம் உள்ளவன் கேட்க, "இவனையும் உன்னுடன் எல்லைக்

காவலுக்கு அனுப்பப் போகிறேன் காந்தமாறா!" என்று பதில் வந்தது.

அந்த இரு வீரர்களும் பேச்சு மூச்சற்று நின்று கொண்டிருக்க, சற்றும் யோசிக்காமல் கவசம் அணிந்த வீரரின் அருகில் வந்தான் வந்தியதேவன்.

அவன் அருகில் வருவதைக் கண்ட அந்த வீரர் எழுந்து நின்றார். பாதம் தொட வந்தவனைத் தடுத்து அவனை ஆரத் தழுவினார். வந்தியதேவன் அவரது காதருகே சென்று "ஐயா உங்கள் பெயர்?" எனக் கேட்க,

சிரித்துக்கொண்டே "ஆதித்த கரிகாலன்" எனக் கூறினார் கவசம் அணிந்த வீரர். வந்தியத்தேவனுக்கு மயக்கமே வந்துவிட்டது. "இத்தனை நாள் நான் பட்ட துன்பம் எல்லாம் முடிவுக்கு வந்தது" என எண்ணிக் கொண்டான்.

“இந்த நொடி முதல், என் உடல் சோழ தேசத்திற்கு என் உயிர் ஆதித்தருக்கு" என்று சபதம் எடுத்தான் வந்தியத்தேவன்.

அன்று முதல் வெவ்வேறு காரணங்களால் ஆதித்த கரிகாலரின் உயிர்த்தோழன் ஆகிவிட்டான்.

இந்த நினைவுகளை எல்லாம் அசை போட்டுக்கொண்டே காஞ்சியின் எல்லையை அடைந்த வந்தியத்தேவன் தலைமை காவலனிடம் நிலமையை விரிவாக எடுத்துக் கூறி உறையூர் நோக்கிப் புறப்பட்டான்.

www.indianguide.in

***மதுரை ....***

வீட்டின் உள் அறையில் ஒரு மூலையில் சுவற்றை வெறித்துப் பார்த்துக்கொண்டு அமர்ந்திருந்தாள் நந்தினி.

அவள் உடல் இங்கே இருக்கிறது மனது எங்கே என்று வாருங்கள் பார்ப்போம்!

நந்தினி மனது முழுவதும் ஒருவிதமான பயம் நிலவியிருந்தது. யாருமே இல்லாத தனக்கு அடைக்கலம் கொடுத்த இருவரின் இடையில் நடக்கும் போர்.

இதில் யார் இறந்தாலும் இழப்பு நந்தினியினுடையது. அவரா இவரா யாரைக் காப்பது என்று குழம்பிப் போய் அமர்ந்திருந்தாள் நந்தினி.

ஆதித்த கரிகாலனைத் திசை திருப்ப அவள் எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்தது. கடைசியாகக் கருத்திருமனை அனுப்பியதும் கூட நந்தினியின் வேலைதான்!

செய்வதறியாது தவித்துக் கொண்டிருந்தாள் நந்தினி. "அம்மா என்னம்மா இப்படி ஒக்காந்து இருக்க" என்று ஒரு பச்சிளங்குழந்தை அவளை நோக்கி வினா எழுப்ப,

ஒரு மனதாக அவள் ஒரு முடிவுக்கு வந்தாள். இந்தக் குழந்தைக்காக வீரபாண்டியன் வாழ வேண்டும்! என்பது அவள் எடுத்த முடிவு.

www.indianguide.in

அன்று சோழர்கள் என்னைத் தூக்கியெறிந்துவிட்டார்கள், ஆள் இல்லாத இந்தப் பேதை**ப்** பெண்ணிற்கு அடைக்கலம் கொடுத்தவர் வீரபாண்டியன்.

என்னைப் பெற்றவள்கூட என்னை வேண்டாம் என்று தூக்கியெறிந்துவிட்டாள். எனக்கென இருந்த என் காதலரும் தங்கை சொல் கேட்டு என்னை வேண்டாமென்றார். நான் பாண்டிய நாட்டின் பிரஜை என்ற ஒரே காரணத்தினால் என்னை வீரபாண்டியர் இன்று வரை ஒரு ராணியாகவே நடத்துகிறார் . இவர்களில் என்னை பாதுகாப்பது வீரபாண்டியரே அதனால் அவர் உயிர்போகாமல் பாதுகாப்பதே என்னுடைய கடமை என்று ஒரு முடிவெடுத்தாள் நந்தினி.

குந்தவை அன்று மட்டும் என்னை வேற்றுக்குலப் பெண் என்று முத்திரை குத்தாதிருந்தால் இந்நேரம் அந்தச் சோழ சிம்மாசனம் என்னுடையது**.** எல்லாவற்றிற்கும் கரணம் அந்தப் பிசாசு குந்தவை. அவளை நிச்சயம் ஒரு நாள் என் முன் மண்டியிட வைப்பேன் என்று எண்ணிக்கொண்டே அந்தக் குழந்தையைத் தூக்கினாள் நந்தினி.

அனால் நந்தினியை வீரபாண்டியன் இப்படி நடத்துவதற்கு வேறு காரணங்களும் இருந்தன. ஓர் இரவு உத்தமசீலியைக் கொன்று காட்டில் அலைந்து திரிந்த காலம். உணவுக்கு வழியில்லாமல் காட்டில் கிடைத்ததைக் கொண்டு வாழ்ந்த காலம். அன்று வீரபாண்டியன் ஒரு நீர் நிலையில் தண்ணீர் குடிக்கச்

www.indianguide.in

சென்றான். அப்பொழுது ஒரு பெண் நீரில் நீந்திக்கொண்டிருப்பது தெரிந்தது.

அவள் அழகை ரசித்தபடி நின்றுகொண்டிருந்தவன் உடனடியாக, “அம்மா! முதலை முதலை உன் பின்னே முதலை” என்று கத்திக் கூச்சலிட்டான். அது அந்தப் பெண்ணின் காதில் விழுவது போலத் தெரியவில்லை. உடனடியாக வீரபாண்டியன் அவனது வில்லை எடுத்து

அம்பெய்தான். அது அந்த முதலையின் மேல் சொருகியது. அந்தப் பெண்ணும் முதலையைக் கவனித்துவிட்டாள். அவள் முகத்தில் ஒரு துளிக் கூட பயமில்லை. முதலை அவளை நோக்கி வந்துகொண்டிருந்தது. அவள் அவளின் உடையில் எங்கேயோ குறுங்கத்தியை மறைத்து வைத்திருந்தாள். முதலை அருகில் வந்ததும் அவள் அந்த முதலையின் கண்ணில் குத்திவிட்டாள் முதலை பார்வையிழக்க, வீரபாண்டியன் அம்புகளைத் தொடுத்தான். முதலை மடிந்தது.

பின் கரைக்கு வந்த அந்தப் பெண் வீரபாண்டியனுக்கு நன்றி கூறும் விதத்தில் கைகளைக் கூப்பினாள். பின்புதான் இவள் வாய் பேசமுடியாதவள் என்பது வீரபாண்டியனுக்குப் புரிந்தது. பாவம் என்று நினைத்துக்கொண்டான்.

மறுகணமே அந்தப் பெண் அழுகத் தொடங்கினாள். வீரபாண்டியனுக்கு ஒன்றும் புரியவில்லை. தன்னை எப்படியாவது தஞ்சை அழைத்துச் செல்லுமாறு வேண்டினாள்.

தஞ்சையில் என்ன நடந்ததோ தெரியாது அந்தப் பெண் அங்கிருந்து வந்தவுடன் தற்கொலை முயற்சி செய்ய வீரபாண்டியன் அவளைத் தடுத்தான். பின் நீ என்னை விட்டுப்போனால் நான் எங்கே போவேன் உன்னைப் போன்று தான் நான். எனக்கு யாரும் இல்லை ராஜ்ஜியம் இல்லை மனைவி இல்லை மக்கள் இல்லை யாருமே இல்லை என்று கூற அந்தப் பெண் மனதில் ஒரு ஆறுதல் கிடைத்தது.

பின் மகிந்தனைக் காண வீரபாண்டியன் ஒரு முறை சென்ற நேரத்தில் அவனது கூடாரத்தை அவனுடன் இருந்த கூட்டத்தை எல்லாம் சோழர்கள் சூறையாட இவன் அந்தப் பெண் இறந்துவிட்டதாக நினைத்துக்கொண்டான்.

வெகு வருடங்களுக்குப் பிறகு வேறொரு பெண்ணையும் மணந்துகொண்டான். இப்பொழுது சில வருடங்களுக்கு முன்னே நந்தினியைப் பார்த்த பிறகு அந்த ஊமைப் பெண்ணின் ஞாபகம் வந்துவிட அந்த ஊமைப் பெண்ணை எப்படி நடத்தினானோ அவ்வாறே நந்தினியையும் நடத்துகிறான்.

***தஞ்சை .....***

கோட்டைக்கு முன்னால் இரண்டு குதிரைகள் தயாராக நிறுத்தப்பட்டிருந்தன. ஆதித்த கரிகாலர் வந்து அவர் முன் நின்ற கருப்புக் குதிரை மேல் ஏறினார். பின்னால் வந்த அருள்மொழியோ அவர் முன் நின்ற வெள்ளைக் குதிரை மேல் ஏறினார்.

www.indianguide.in

இரு குதிரைகளும் புழுதியைக் கிளப்பிக்கொண்டு முன்னோக்கிச் செல்லத் தொடங்கின.

"தம்பி உன்னிடம் நான் ஒன்று கூற வேண்டும்".

“என்ன அண்ணா? கூறுங்கள்”

“இந்த உலகம் போற்றும் ஒரு பேரரசனாக நீ வரவேண்டும். ஆயிரம் ஆண்டுகள் தாண்டியும் உன் பெயர் அவர்கள் உள்ளத்தில் குடியிருக்க வேண்டும், ராஜனுக்கு எல்லாம் ராஜனாக, ராஜராஜனாக நீ திகழ வேண்டும். கடல் கடந்து சென்று பல இடங்களில் சோழ கொடியை நீ பறக்க விட வேண்டும், என்றேனும் ஒரு நாள் ஏதேனும் ஒரு போரில் நான் மரணிப்பேன், என் மரணம் உன்னைப் பாதிக்கக்கூடாது. கவலையே படாதே நானே உனக்கு மகனாகப் பிறப்பேன்" என ஆதித்த கரிகாலன் கூற அருள்மொழியின் கண்ணிலிருந்து வெள்ளம் பெருகியது.

இப்பொழுது அருள் மொழி பேசத் தொடங்கினார், "அண்ணா! இப்படியெல்லாம் நீங்கள் பேசக் கூடாது, இந்த ராஜ்யமும் எனக்கு வேண்டாம் ராஜாங்கமும் எனக்கு வேண்டாம், எனக்குக் கப்பலேறி தூரதேசங்களுக்குச் சென்று அங்குள்ள கலாச்சாரங்களும் கலைகளும் கற்று வரவேண்டும். ஒரே சிம்மாசனத்தில் அமர்ந்து இருப்பதில் எனக்கு விருப்பமில்லை" என அருள் மொழி கூற,

“தம்பி இது உன் பிராயத்தில் நீ பேசும் பேச்சு. உனக்குத் தெரியாது, என் ஒரு தலையை வாங்க இங்கு ஒரு கூட்டமே இருக்கிறது. நான் கூறுவது உனக்கு ஒரு நாள் புரியும்” எனக் கரிகாலர் கூறிக்கொண்டிருக்கும் பொழுது இருவரும் அவர்கள் வர வேண்டிய இடத்திற்கு வந்து சேர்ந்தனர்.

சமகாலத்தில் பிரம்மராயர், பாதாளச் சிறையில் அடைக்கப்பட்ட கருத்திருத்திருமனைக் காணச் சென்றிருந்தார்.

கருத்திருமனை நோக்கி, “நீ இங்கே உள்ளவரை வீரபாண்டியனின் சதி நிறைவேறாது. கூறு உனக்கு அறிந்தவற்றை எல்லாம் கூறு இல்லையென்றால் உன்னைக் கொன்றுவிடுவேன்” என்றார் பிரம்மராயர்.

“உண்மைகள் வெளிவரும் காலம் இன்னும் வரவில்லை, காலம் வரும்பொழுது நானே உங்களை வந்து பார்க்கிறேன். கதையே இப்பொழுது தான் தொடங்குகிறது” என்று கூறிச் சிரிக்கத் தொடங்கினான் கருத்திருமன்.

“பைத்தியக்காரா! உன்னை எல்லாம் ஒரு ஆளென்று மதித்துப் பார்க்க வந்த என்னைக் கூற வேண்டும்” என்ற பிரம்மராயர் கோபமாக அவ்விடத்தை விட்டு வெளியேறினார். பின் நேராகக் கோட்டைக் காவலர் சின்ன பழுவேட்டரையரைக் காணச்சென்றார்.

இதுவரை பிரம்மராயரிடம் யாரும் இதுபோல பேசியதே கிடையாது, அவருக்குக் கோபமே வராது. இந்தச் செய்தியை அவர் சின்ன பழுவேட்டரையரிடம்

www.indianguide.in

தெரிவிக்க அவர், “நான் பார்த்துக்கொள்கிறேன் நீங்கள் அமைதியடையுங்கள்” என்றார்.

# அத்தியாயம் 11

ஆதித்த கரிகாலனும் அருள்மொழியும் குதிரையை விட்டு இறங்கி நடக்கத் தொடங்கினர். அவர்கள் நடக்கும் திசையில் ஒரு அரை காதத் தூரத்தில் ஒரு கோவில் இருந்தது.

மிக எளிமையாக இருந்தது அந்தக் கோவில். கோவிலின் சுவர்கள் எல்லாம் சுண்ணாம்புக் கற்களால் கட்டப்பட்டிருந்தது. கோவிலைச் சுற்றி உள்ள மதில்கள் எல்லாம் பழைய கற்களால் ஆனவை. கோவிலின் முன்னே பல திரிசூலங்களும் வேல் கம்புகளும் இருந்தன. கோவிலில் ஆள் நடமாட்டம் சுத்தமாக இல்லை, கோவிலில் பூஜை செய்யும் ஒரு வயதான கிழவர் மட்டும் தான் இருந்தார்.

இது சோழர் குலத்தைக் காக்கும் நிசும்பசூதனி ஆலயம். இன்றும் தஞ்சையில் இந்த ஆலயம் உள்ளது. இங்கு தான் நமது புலிக்குட்டிகள் இரண்டும் வருகின்றன.

ஆதித்த கரிகாலர் அருள் மொழியை நோக்கித், "தம்பி நீ உன் குருவைக் காணப் போகவில்லையா?" என்று கேட்க,

"ஒரு குரு இப்போது கருவூர் சென்று இருக்கிறார். ஈசானிய சிவப்பட்டர் பழையாறையில் இருக்கிறார். நான் இலங்கை செல்லும் முன் பழையாறை சென்று அவரைக் கண்டு செல்வேன். கருவூர்த் தேவரை இனி

காண்பது மிகவும் அரிது. அவர் சில தினங்கள் கருவூர் நகரில் தங்கிவிட்டுப் பின் கொல்லிமலை செல்வதாகச் சொன்னார். எப்படியும் அவரைக் காண இனி இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகும் அண்ணா" என்றார் அருள்மொழி.

இருவரும் கோவில் அருகே வந்து சேர்ந்தனர். கோவிலின் பூசாரி இரு இளவரசர்களையும் வரவேற்று கோவிலினுள் அழைத்துச் சென்றார். கோவில் இருந்த நிலை இருவரின் மனத்திற்கும் அத்தனை திருப்தி தரவில்லை.

“இந்தப் போர் முடியட்டும். இந்தச் சுண்ணாம்புக் கற்களை எல்லாம் கருங்கற்களாக மாற்ற வேண்டும். கோவிலுக்குக் குடமுழுக்குச் செய்ய வேண்டும்” என்று ஆதித்த கரிகாலர் கூற,

“ஆம் அண்ணா! தந்தையிடம் இதை முதலில் சொல்ல வேண்டும்” என்று அருள்மொழி பதில் கூறினார். கோவிலுக்குள் நுழைந்தபோது கருவறையில் ஒரே ஒரு தீபம் மட்டும் ஏற்றப்பட்டு இருந்தது.

கருவறை மொத்தமும் இருள் கொண்டு வர்ணம் தீட்டியது போல இருந்தது. ஆனால் சுடர்விட்டு எரியும் அந்த ஒளி இருளை மங்க வைத்துக் கொண்டு இருந்தது.

அங்கிருந்த தேவியின் சிலை பார்ப்பதற்கு அச்சத்தைத் தோற்றுவிக்கும் வகையில் இருந்தது. ஆறடி உயரம், பன்னிரண்டு கைகள், ஒவ்வொரு கையிலும் பற்பல ஆயுதங்கள், இரண்டு கோரைப்

www.indianguide.in

பற்களும் நீண்ட நாவும் அந்த இருட்டில் கூட ஒளிர்விடும் கண்களும் கொண்ட தேவியை அண்ணன் தம்பி இருவரும் வணங்கிக் கொண்டிருக்க, தேவியின் தலையில் வைக்கப்பட்டிருந்த ஒற்றைத் தாமரை மலர் கீழே விழுந்தது. கோவில் பூசாரி, “நல்ல சகுனம்! தேவியின் துணை நமக்கே! சோழப் பதாகை வாழ்க!” எனக் கூறினார்.

ஆதித்த கரிகாலரின் மனம் பூரண சாந்தி அடைந்திருந்தது. அந்த இடத்தைவிட்டு நகர்வதற்குக் கூட அவருக்கு மனம் வரவில்லை, நிசும்பசூதனியைப் பார்த்துக்கொண்டு அங்கேயே நின்று விட்டார். அருள்மொழி அவரருகே வந்து, “அண்ணா! நவ கண்டத்திற்குச் சமயம் ஆகிவிட்டது வாருங்கள் செல்லலாம்” என்று கூறிய பின்பே சுயநினைவு பெற்றார் ஆதித்தர்.

“ஆம் போகலாம் வா!” என்று ஒருமனதாக அந்தக் கோவிலை விட்டு வெளியே வந்தார். ஆனால் அவர் மனம் தேவியின் பாதத்திலே இருந்தது.

இருவரும் குதிரை நின்ற இடத்தை நோக்கி நடக்கத் தொடங்கினர். அருள்மொழி ஆதித்த கரிகாலரை நோக்கி, “அண்ணா நம்மீது இத்தனை அக்கறையும் பாசமும் வைத்திருக்கும் இந்தத் தேவிக்கு நாம் ஒன்றுமே செய்யவில்லை” எனக் கூற,

"அதனால் தான் அவளைக் கடவுள் என்கிறோம். மனிதர்கள் பிறப்பிலே நன்றி கெட்டவர்கள், தன் சுயநலத்திற்காக எத்தனைப் பேரை

www.indianguide.in

வேண்டுமானாலும், யாரை வேண்டுமானாலும் வஞ்சிப்பர்"

“நீங்கள் கூறுவது முற்றிலும் சரி! நமது சுயநலத்திற்காக எத்தனை உயிர்கள் இந்த பூமியில் துன்பப்படுகின்றன. இப்பொழுது கூட நமக்காக ஒருவன் உயிர் விடப் போகிறான். இந்தப் போருக்கு முன்னால் நவ கண்டத்தின் அவசியம் உள்ளதா? ஒருவனைப் பலி கொடுத்து அவன் ரத்தம் கொண்டு நம் வரலாற்றை எழுதுவதா?” என்று அருள்மொழி கேட்க,

"எனக்குத் தெரியும் தம்பி நீ சுற்றிவளைத்து இதற்குத் தான் வருவாய் என்று! வாய்ப்பேச்சில் கெட்டிக்காரன் ஆகிவிட்டாய்!
அங்கே நடக்கவிருக்கும் நவகண்டம் நீயும் நானும் சொன்னால் நின்று விடுமா என்ன? காலம் காலமாக நடக்கிற வழக்கம் அது!”

“அடுத்த உயிரைத் துன்பப்படுத்துவதில் எனக்குத் துளியும் விருப்பம் இல்லை அண்ணா!” என்று அருள் மொழி கூறி மௌனமானார்.

குதிரைகள் தஞ்சைக் கோட்டைக்குள் இருக்கும் ஒரு பெரிய மைதானத்தில் வந்து நின்றன. மைதானத்தைச் சுற்றிலும் ஜனக் கூட்டம் அலைமோதியது.

நவகண்டம் என்றால் என்ன? இதைப் பற்றய குறிப்புகள் வரலாற்றில் பல இருக்கின்றன. பழந்தமிழ்

மன்னர்கள் போருக்குச் செல்லும் முன்பு செய்யும் பலி சடங்கே நவகண்டம் ஆகும். ஒரு மெல்லிய மூங்கிலை வளைத்து அதன் நுனியில் ஒரு வீரனின் முடியைக் கட்டி வைத்திருப்பர். ஒருவன் வாளுடன் வந்து அவனது தலையை வெட்டி கொற்றவைக்கு பலியிடுவான். இப்படிப் பலி கொடுக்கும் வீரனின் ரத்தம் மன்னன் மீது விழுந்தால் அந்தப் போரில் அவருக்கு வெற்றி என்பது நம்பிக்கை.

ஆதித்த கரிகாலனும் அருள்மொழியும் மைதானத்தின் ஒரு புறத்தில் நின்று கொண்டிருந்த சுந்தரசோழர், பழுவேட்டரையர்கள், பூதி விக்கிரமகேசரி, ஆகியோருக்கு அருகே சென்று நின்றனர். “தாத்தா வந்து விட்டாரா” என்று ஆதித்த கரிகாலர் விக்ரம கேசரியிடம் கேட்க, “அவர் இன்று மாலை நேரத்தில் சிற்றரசர்கள் உடன் வந்து சேருவார் என்று செய்தி வந்தது” என்று விக்கிரமகேசரி கூறினார்.

மைதானத்தின் மத்தியில் ஒரு இளம் மூங்கில் நடப்பட்டிருந்தது. அதன் அடிப்பகுதி மிகவும் பெரிதாகவும் மேலே செல்லச் செல்ல அதன் சுற்றளவு குறைந்து கொண்டே போனது. அனைவரது பார்வையும் அந்த மூங்கில் மேலிருக்க ஒருவன் உடம்பெல்லாம் விபூதி பூசிக்கொண்டு நடந்து வந்து கொண்டிருந்தான்.

இப்பொழுது அனைவரின் பார்வையும் அவன் பக்கம் திரும்பியது. அவன் அந்த மூங்கில் நடப்பட்டிருந்த இடத்திற்கு வந்து நிற்க ஆதித்த கரிகாலர், சுந்தர

www.indianguide.in

சோழர், பழுவேட்டரையர்கள் அனைவரும் அந்த மூங்கில் வைக்கப்பட்டிருந்த பகுதியை நோக்கி நடக்கத் தொடங்கினர். அருள்மொழி நின்ற இடத்தில் நின்று கொண்டிருந்தார்.

இவர்கள் அந்த இடத்தைச் சென்று அடைந்ததும் அவன் பேசத் தொடங்கினான்.

“என் பெயர் மலையன்! அன்று வீரபாண்டியன் போர் எடுத்து வந்தபோது உத்தமர்சீலியுடன் போருக்கு நானும் சென்றிருந்தேன். அவரின் ரத சாரதியாக இருந்தவனும் நானே.” என்று கூற ஜனக்கூட்டத்தில் பேரமைதி நிலவியது. மலையன் தொடர்ந்தான்,

“அன்று உத்தமசீலி மிகவும் ஆனந்தமாகப் போருக்கு வந்தார். அனைவரையும் உற்சாகப்படுத்தினார். இன்று உங்கள் அனைவருக்கும் யுத்தக்களத்திலிருந்து விமோச்சனம் என்று மிகவும் ஆனந்தமாகக் கூறினார். ஆகா! அன்றைய போரில் அவர் வெளிப்படுத்திய வீரம் இன்னமும் என் கண்களுக்குள்ளேயே இருக்கிறது! இப்பொழுது நினைத்தாலும் மெய்சிலிர்க்கிறது” என்று கண்களில் நீரோடு கூற, கூட்டத்திலிருந்து ஒருவன்,

“அந்தப் போர்க்காட்சியை உங்கள் கண்கொண்டு விவரியுங்கள் நாங்கள் கேட்க வேண்டும்” என்று கூக்குரலிட்டான்.

“முதலில் வீரபாண்டியனும் நமது உத்தமரும் ஒரே போல சண்டையிட்டனர். ஆனால் நேரமாக ஆக உத்தமசீலியாரின் கை ஓங்கியது. ஒரு கட்டத்தில்

www.indianguide.in

உத்தமர் வீரபாண்டியனை வீழ்த்தி மண்ணில் தள்ளி, சிறையிலடைக்க ஆணையிட்டார்! ஆனால் அந்த வீரபாண்டியனின் திட்டம் வேறாக இருந்தது. நமது சேனையைத் திசை திருப்பிவிட்டு யாரும் அவருக்கு உதவக்கூடாது என்று சதியைச் செய்தான். மேலும் நமது வீரர்களின் கூட்டத்தில் பாண்டியர்களின் கருப்பு ஆடுகளும் கலந்திருந்தது. அதில் ஒருவன் உத்தமரை ஏமாற்றி என்னையும் அடித்துவிட்டான், நான் மூர்ச்சையடைந்தேன். என் நினைவு திரும்பும் பொழுது" என்று கூறிய மலையனின் குரல் தழுதழுத்தது. அதற்கு மேல் அவரால் பேச இயலவில்லை. கண்களில் இருந்து அருவியென நீர் பொழிந்தது.

மைதானத்தத்தின் அமைதியைக் கிழித்துக் கொண்டு, "மேலே கூறுங்கள்" என்று கம்பீரமாக ஒலித்தது ஆதித்தரின் குரல்.

மலையன் தன்னை ஒருநிலைப்படுத்திக்கொண்டு கூறத் துவங்கினான். "கண் திறந்து பார்க்கையில் உத்தமர் உடல் வேறு தலைவேறாக இருந்தார். என்ன நிகழ்ந்தது அவர் எப்படி இறந்தார் என்று அறியவில்லை. ஆனால் அம்மாவீரரைச் சூழ்ச்சியால் மட்டுமே கொன்றிருக்க இயலும்! அவரின் சாரதியான என்னால் அவரைக் காக்க இயலவில்லை அதனால் தான் இந்த உயிரை இப்போது அவருக்காகக் கொடுக்க நினைக்கிறேன்" என்ற மலையனின் கண்ணில் கண்ணீர் பெருக்கெடுத்தது.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ஆதித்த கரிகாலரின் கண்கள் சிவந்தன. எதிரே நின்ற

www.indianguide.in

மலையனைக் கட்டித்தழுவினார் கரிகாலர். பின் அனைவரும் கேட்கும் வகையில், "இந்த மாவீரனுக்கு இன்று வீர சொர்க்கம் பிராப்தி பெறப் போகிறது. இவருக்காக தஞ்சை எல்லையில் ஒரு நவகண்ட சிலை வைக்கப்படும்" என்று கூற மக்கள் அனைவரும் கோஷமிட்டனர்.

நீண்ட சுருண்ட அந்த மலையனின் முடியை மூங்கிலின் நுனியோடு வளைத்து கட்டினான் ஒரு வீரன். பின் ஒரு கூரான வாளுடன் வந்தான் இன்னொருவன். ஆனால் மலையன் வாளுடன் வந்தவனைத் தடுத்து நிறுத்தி, “ஐயா நீங்கள் அங்கே நில்லுங்கள்” என்றான்.

அனைவருக்கும் ஒன்றும் புரியவில்லை. பின் ஆதித்த கரிகாலனை நோக்கி, "இளவரசே! உத்தமரின் வாள் உங்களிடம் உள்ளது என்று அறிந்தேன் அந்த வாளைத் தாருங்கள். அந்த மாவீரரின் வாளால் என்னுயிர் நீங்க வேண்டும். இதுவே எனக்குக் கடைசி ஆசை" என்று கேட்க,

ஆதித்த கரிகாலர் தன் இடுப்பில் இருந்த உறையில் வைத்திருந்த வாளை எடுத்துக் கொடுத்தார். அந்த வாளைக் கையில் பெற்றவன் அனைவரையும் நோக்கி, “நான் சென்று வருகிறேன்” என்று கூறித் தன் கழுத்தை வெட்டிகொண்டார்.

மலையனின் தலை முங்கிலுடன் கட்டப்பட்டிருந்ததால் அந்த மூங்கில் வளைந்தும் இருந்தது. அவரது தலையைத் துண்டித்த நொடியில்

மூங்கில் மீண்டும் அதன் இயல்பு நிலைக்குத் திரும்ப மேல் எழும்பியது அப்பொழுது மலையனின் தலை அந்த மூங்கில் உடன் மேலே வர, அந்தத் தலையிலிருந்து வழிந்து கொண்டிருந்த ரத்தம் ஆதித்த கரிகாலரின் முகத்தில் பளீரென்று தெறித்து விட்டது.

சோழ மக்கள் அனைவரும் “சோழ**ம்** வாழ்க! சுந்தர சோழர் வாழ்க! பழுவேட்டரையர்கள் வாழ்க! ஆதித்த கரிகாலர் வாழ்க! அருள்மொழி வாழ்க! மலையன் வாழ்க! சோழ நாட்டிற்காக உயிர் துறந்த அனைவரும் வாழ்க!” என்று கோஷமிட்டனர்......

# அத்தியாயம் 12

கொல்லிமலை அன்றும் இன்றும் என்றும் தமிழகத்தில் ஒரு மர்மமான பகுதி. இன்னும் கொல்லிமலை காடுகளைப் பற்றிய பொதுஅறிவு நம்மிடம் இல்லை. அன்று சோழர் காலத்தில், சோழர்களுக்கு எதிராக பாண்டியர்கள் நடத்திய சதி யாகங்கள் எல்லாம் கொல்லிமலைப் பகுதியில் நடந்தவை. இதைப்பற்றி விரிவாக உடையார் என்னும் புதினம் கூறுகிறது. என்னுடைய கதை அதைப்போன்ற ஒரு யாகம் கொல்லிமலையில் நடக்கிறது, பொன்னியின் செல்வன் புதினத்தில் சுந்தர சோழருக்கு உடல்நலக்குறைவு **ஏற்படும்.** அதை எனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி அவர் உடல்நலக் குறைவுக்கு காரணம் கொல்லிமலையில் நடத்தப்படும் யாகம் என்று கூறுகிறேன். இனி கொல்லிமலை பகுதியில் நடப்பவை பற்றி காண்போம்.

***கொல்லிமலை ...***

இரவு நேரம். ஒரு பொட்டு வெளிச்சம் கூட எங்குமில்லை! காடு அடர்ந்து இருந்தது. வானில் தெரியும் நட்சத்திரங்கள் கூட அந்த அடர்ந்த வனத்திற்குள் தெரியவில்லை. குளிர்ந்த காற்று இதமாக வீசிக் கொண்டிருந்தது. இருளிலும் கூட அவர் அணிந்திருக்கும் நகைகளை நம்மால் பார்க்க முடியும். அத்தனைப் பிரகாசமான வேலைப்பாடுகள் பொருந்திய நகைகளை அவர் அணிந்திருந்தார்.

www.indianguide.in

வெள்ளை முடி, தலை மீது ஒரு கொண்டை, கழுத்தெல்லாம் ருத்ராட்சமும் தங்க ஆபரணங்களும் அணிந்திருந்தார். முகத்தில் ஒரு தெளிவு! ஒரு பொறுமை! கூர்மையான கண்கள், கூர்மையான மூக்கு, தேகத்தில் இங்கும் அங்குமாக விபூதி பூசி இருந்தார். அவர் இந்தக் காட்டிற்குள் உள்ள அனைத்து வழிகளும் அறிந்தது போல நடந்து சென்று கொண்டிருந்தார். அவர் வேறு யாரும் இல்லை கருவூர்த்தேவர்! கொல்லிமலைப் பகுதியில் சோழர்களுக்கு எதிராக நடக்கும் யாகத்தைப் பற்றி அறிந்துகொண்டு அதைத் தடுத்து நிறுத்த அவர் இங்கே வந்துள்ளார்.

தூரத்தில் ஒரு மலை முகடு தெரிந்தது. அதைச் சுட்டிக்காட்டி, “அங்கிருந்து சற்று தொலைவில் ஒரு குகை உள்ளது. அந்தக் குகைக்கு நாம் இப்போது செல்லப்போகிறோம்” என்று அருகிலிருந்தவருடன் பேசிக்கொண்டு வந்தார்.

"குருவே! எனக்கு ஒரு சந்தேகம்" என்று அருகிலிருந்தவர் கூற

“என்ன சந்தேகம்” என்று அமைதியாய்க் கேட்டார் கருவூரார்.

"யாகங்கள்! இவை நிஜமாகவே சோழ தேசத்தை அழித்து விடுமா? வெறும் நெருப்பில் இடும் பூஜைப் பொருட்கள் அவ்வளவு ஆபத்தானவையா?"

www.indianguide.in

“கூறுகிறேன் கேள் அமரா! கடவுள் இருப்பதாக நீ நம்புகிறாயா?” எனக் கருவூர்த்தேவர் கேட்க,

“அது எப்படி இல்லாமல் இருக்க முடியும்? உங்களையும் என்னையும் இந்த உலகத்தையும் படைத்தவர் அவர் தானே?” என அமரன் பதில் கூறினார்.

"நல்லது என்ற ஒன்று இந்த உலகில் இருந்தால் அதற்கு எதிராகத் தீயது என்ற ஒன்று இருக்கும் அல்லவா?
உன் மனதின் எண்ணங்களின் வெளிப்பாடே நல்லதும் கெட்டதும், ஒரு காரியம் நீ செய்யும் பொழுது நல்ல எண்ணங்களால் அதைச் செய்தால் அது நல்ல பலனைத் தரும். இவர்களின் எண்ணங்கள் மொத்தமும் தீய சிந்தனை நிறைந்திருக்கிறது. அவர்களின் சிந்தனைகளின் வெளிப்பாடு தீய பலனைத் தான் தரும். இதில் அவர்கள் நடத்தும் யாகமானது, அவர்களின் எண்ணங்களை ஒரு நிலைப்படுத்தும் ஒரு கருவி தான். நாம் இங்கே அழிக்க வந்தது யாகத்தை அல்ல! அவர்களின் தீய எண்ணத்தை என்பதைப் புரிந்து கொள்” என்றார் கருவூரார்.

“அப்படியானால் இந்த யாகங்கள் பூஜைகள் இவை அனைத்தும் பயனற்றவையா?” என அமரன் மீண்டும் வினாவெழுப்பினான்.

“நான் அப்படிக் கூறவில்லை அமரா, கவனமாகக் கேள்! நீ கோவிலுக்குச் சென்றால் உன் மனது அமைதியாக ஆனந்தமாக இருக்கிறதல்லவா? இதே நீ சுடுகாட்டுக்குச் சென்று பார். உன் மனதைக் கவலை

www.indianguide.in

சூழும், பயம் அழுகை உன்னைத் தொற்றும். இவை இரண்டும் அந்த இடத்தைச் சுற்றி உள்ள எண்ண ஓட்டங்கள். அதை நீ உனக்குள் வாங்குகிறாய். அதன் பின்னரே நீ கூறியவை எல்லாம் உன்னில் நடக்கிறது. அது இடத்திற்குத் தகுந்தார் போல மாறும்" எனக் கூறினார் கருவூர்த்தேவர்.

அவர் கூறியது அவனுக்குப் புரிந்தும் புரியாமலும் புதிராகவே இருந்தது. பேசிக்கொண்டே அவர்கள் இருவரும் அந்த மலை முகட்டுக்கு அருகில் இருக்கும் குகைக்கு வந்தனர். இருவரும் அந்தக் குகைக்குள் வந்தவுடன், "நீங்களே வந்து இந்த யாகத்தைத் தடுக்குமளவு சோழதேசம் இந்த உலகத்திற்கு முக்கியமானதா?" என்று கேட்டான் அமரன்.

"ஆம்! உனக்கு ஒரு கதை கூறுகிறேன் கேள். அருள்மொழி வர்மன் பிறந்த நட்சத்திரம் ஐப்பசி சதயம்! அவனைப் பாதுகாத்து ஒரு அரசனாக்குவதே எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் தெய்வப்பணி. அவனின் எதிர்காலமே இந்தத் தமிழ்நாட்டின் எதிர்காலம்! அதை அழிக்கும் முயற்சி செய்தாலோ, அவனுக்கு எதிராக யாருடைய மனதிலாவது சிறு எண்ணம் தோன்றினால் கூட அதை அழிக்க அவர்முன் நான் நிற்பேன்! அவனுக்கு யுத்த சாஸ்திரம், அரசியல், வானியல் போன்ற சாஸ்திரங்களைப் பயிற்சியளிக்க ஈசான சிவபண்டிதரை அந்த இறைவன் நியமித்திருக்கிறான். சுந்தர சோழரின் ஆட்சியின் கடைசி காலத்தில் நாட்டில் பெரிய குழப்பம் வரும். அதன் பிறகு அருள்மொழியால் ஒரு நல்ல எதிர்காலம் உண்டாகும். நடக்கப்போகும் யுத்தத்திற்குப் பிறகு ஆதித்தகரிகாலனின் வேலை

www.indianguide.in

முடிந்துவிடும். சோழ தேசம் சில வருடங்கள் அமைதியாக இருக்கும். ஆதித்த கரிகாலன் மகாபாரதத்தில் வரும் கர்ணனைப் போன்றவன். அவனை வெல்ல அர்ஜுனனுக்குக் கிருஷ்ணனின் துணை வேண்டியிருந்தது. கரிகாலனை ஒருவன் யுத்த**க்**களத்தில் வெல்வது என்பது நடக்காத ஒன்று! இவனை எதிரிகள் சதிசெய்து அழித்துவிடுவார்கள். இவன் வீரபாண்டியனை அழிக்க அவதாரமெடுத்தவன்" எனச் சொல்லிக்கொண்டே அவர் அவரது புலித்தோலை விரித்து அதன்மேல் அமர்ந்தார்.

***தஞ்சை ....***

நவகண்டம் சிறப்பாக நடந்து முடிந்தது. அனைவருக்கும் அதில் மகிழ்ச்சியே அருள்மொழி ஒருவரைத்தவிர! மௌனமாக அந்த இடத்தைவிட்டு அரண்மனை நோக்கிச்சென்றார் அருள்மொழி. அவரின் மனதை அந்த நிகழ்வு மிகவும் பாதித்தது.

அரண்மனை சென்றதும் நேராக அக்கா இருக்கும் அறை நோக்கிச் சென்றார்.

"வா தம்பி!" என்று ஆசை மொழி கூறி வரவேற்றாள் குந்தவை.

"அக்கா என் மனது மிகவும் பதறுகிறது! நான் இன்று கண்ட காட்சி என் கண்ணுக்குள்ளே இருக்கிறது. அதை எப்படி மறப்பேன் என்று எனக்குத் தெரியவில்லை"

அருள்மொழியின் பதற்றத்திற்கான காரணத்தை அறிந்த குந்தவை, “இதைப்பற்றியெல்லாம் நினைத்துக் கொண்டு இருக்காதே! நாளை நீ இலங்கை நோக்கிச் செல்ல வேண்டும். உன் மனது முழுவதும் அதில் இருக்கட்டும். நான் இப்பொழுதே பழையாறை செல்லப் போகிறேன்” என்றாள்.

“அக்கா நானும் வருகிறேன். நான் அங்கிருந்து இலங்கை நோக்கிச் செல்வேன், எனக்குக் குருவைக் காண வேண்டும்” என்றார் அருள்மொழி.

“சரி தம்பி! மாலை நாம் இருவரும் வானதியையும் அழைத்துக்கொண்டு இங்கிருந்து செல்வோம்!” என்று கூறிக் கொண்டே மடியில் தலை வைத்துப்படுத்த அருள் மொழியின் தலையைக் கோதி விட்டாள் குந்தவை.

“அக்கா அந்தப் பெண் எப்படி இருக்கிறாள்? தந்தையை இழந்த அவளுக்கு இப்பொழுது இருக்கும் ஒரே ஆறுதல் நீதான்”

“தம்பி அவளுக்கு நாம் அனைவரும் இருக்கிறோம். அவளை இப்பொழுது நான் பார்த்துக்கொள்கிறேன். பிறகு...” என்று தொடங்கும் பொழுதே, “நீ எங்கே வருகிறாய் என்று எனக்குத் தெரியும். அதை இன்னொரு நாள் பேசலாம் நான் சற்றுநேரம் உன் மடியில் உறங்குகிறேன்” என்றார் அருள்மொழி.

அருள்மொழியின் மனது சற்றே அமைதி அடைந்தது! “சரி அக்கா நான் சென்று அண்ணாவைக் கண்டு

www.indianguide.in

வருகிறேன்.” என்று கூறி அறையை விட்டு வெளியே சென்றார் அருள்மொழி.

ஆதித்த கரிகாலர் தனது அறையில் தனது கத்தியைக் கூர் செய்து கொண்டிருந்தார். அருள்மொழி “அண்ணா” என்று கூறி அறைக்குள் பிரவேசித்தார்.
"இன்று மாலை நான் அக்காவுடன் பழையாறை செல்கிறேன் அங்கிருந்து நான் நாளை கோடிக்கரை சென்று இலங்கை செல்வேன் என்னை ஆசீர்வதியுங்கள்" என்று ஆதித்தரின் காலில் விழுந்து எழுந்தார் அருள்மொழி.

“விஜயீ பவ!” என்று கூறி, “தம்பி நான் உன்னிடம் சில விஷயங்களைக் கூறவேண்டும். இந்தப் போர் மிகவும் கடுமையாக இருக்கும் உனது மனதையும் உடலையும் சோதிக்கும். வீரர்களுக்கு உற்சாகம் அது உன் பெயர் மட்டுமே! நீ துவண்டு விட்டால் வீரர்கள் சோர்ந்து போய் விடுவார்கள். அங்கே நடக்கும் எந்தச் செயலும் உன்னை மனதளவிலோ உடலளவிலோ பாதிக்காமல் நீ பார்த்துக் கொள்ள வேண்டும். போர் வீரம் வெளிப்படும் இடம் மட்டுமல்ல விவேகம் வெளிப்படும் இடமும் அதுவே! உன்னிடம் அந்த விவேகம் என்னை விட அதிகமாக இருப்பது எனக்கு நன்கு தெரியும். நீ அதைச் சரியான சமயத்தில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்”

அருள்மொழி ஆதித்தரின் சொற்களைப் பணிவுடன் கேட்டுக்கொண்டிருந்தார்.

"முதலில் நீ அங்கு சென்றவுடன், அங்கே இருக்கும் நிலப்பரப்புகளைப் பற்றி அறிந்து கொள். பின் நமது

www.indianguide.in

வீரர்கள் அங்கே அடிமைகளாக உள்ளனர் அவர்களை மீட்டு உன்னுடன் வரும் வீரர்களுடன் சேர்த்துக்கொள்! அனைவரும் சேர்ந்து விட்டால் இலங்கையில் இருந்து புறப்படும் மகிந்தனின் படைகளை எளிதில் தடுத்து விடலாம். இவை என் மனதில் உள்ள திட்டம் அங்கு சென்று சந்தர்ப்ப சூழ்நிலைக்குத் தகுந்தது போலத் திட்டத்தை நீ மாற்றிக்கொள்" என்று ஆதித்த கரிகாலர் கூறினார்.

மௌனமாகத் தலையசைத்த அருள்மொழி, “அண்ணா! உங்களுடைய போரில் நீங்கள் திறம்பட செயல்பட நான் எல்லாம் வல்ல சிவபெருமானை வேண்டிக் கொள்கிறேன், வெற்றி நமக்கே!” என்றார்.

"இவை அனைத்தும் சரியானவுடன் நாம் இருவரும் சேர்ந்து கடல் கடந்து தூர தேசங்களில் சுற்றித்திரிந்து வரலாமா அண்ணா?" என்று அருள்மொழி கேட்க.

“நிச்சயம் போய் வரலாம்!” என்று கூறி அருள்மொழியைக் கட்டி அணைத்துவிட்டு உச்சி முகர்ந்தார் ஆதித்த கரிகாலர். பிரியா விடை கொடுத்து அருள்மொழி அந்த அறையைவிட்டு வெளியேறினார். இருவரும் ஒரு மனதாகப் பிரியா விடை கொடுத்துப் பிரிந்தனர்!

***தஞ்சை அரண்மனை ....***

திருக்கோவிலூர் மலையமானோடு சிற்றரசர்களும் அவையில் நிறைந்திருந்தனர். சுந்தரசோழர் அவரது சிம்மாசனத்தில் கம்பீரமாக வீற்றிருந்தார். “வரவேண்டிய அனைவரும் வந்துவிட்டனர்

www.indianguide.in

தொடங்கலாமா?” எனச் சின்ன பழுவேட்டரையர் கேட்க,

"செம்பியன் மாதேவி இன்னும் வரவில்லையே?" என சுந்தரசோழர் பதில் கூறினார்.

“அவர் இப்பொழுது தளிக்குளத்தார் ஆலயத்திற்குச் சென்று இருக்கிறார்” என சின்னப் பழுவேட்டரையர் கூற,

“அவரும் வந்து விடட்டும்” என்றார் சுந்தர சோழர்.

சற்று நேரத்திற்கெல்லாம் “செம்பியன்மாதேவி வருகிறார் பராக் பராக்” என்ற ஒலி அரங்கம் எங்கும் ஒலித்துக்கொண்டிருந்தது.
செம்பியன்மாதேவி வந்ததும் அனைவரும் எழுந்து நின்றனர். அவர் சுந்தர சோழருக்கு அருகிருந்த அரியாசனத்தில் அமர்ந்த பின்னர் அனைவரும் தத்தம் ஆசனங்களில் அமர்ந்தனர். அமர்ந்த மறுகணமே செம்பியன்மாதேவி நினைவு மொத்தமும் கோவிலில் நடந்தவை பற்றியே இருந்தது.

அங்கே ஆலயத்தில் கூட்டம் இன்று சற்று கூட இல்லை. இருப்பினும் செம்பியன்மாதேவி வருவதால் காவல் பலமாக இருந்தது. அந்தச் சன்னதியில் அன்று செம்பியன் மாதேவியும் வேறொரு இளவயது ஆண் பிள்ளையும் மட்டுமே இருந்தனர்.

***"பொன்னார் மேனியனே புலித் தோலை அரைக்கசைத்து***
***மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை யணிந்தவனே***
***மன்னே மாமணியே மழ பாடியுள் மாணிக்கமே***
***அன்னே உன்னையல்லால் இனி யாரை நினைக்கேனே."***

என்று அவன் பாடிய பொழுது அவன் குரல் கேட்டு சிவபெருமானே ஓடி வருவார் என்பதுபோலத் தேனினும் இனிமையாக இருந்தது அந்தக் குரல்.

செம்பியன் மாதேவி அந்தப் பிள்ளையை முன்பே தெரிந்தது போலப் பார்த்துக் கொண்டிருந்தார். அவன் பாடி முடித்ததும் அவனை அருகில் அழைத்து, "பாடல் மிகவும் அருமையாக இருந்தது இதை நீ வைத்துக்கொள்" என்று பொற்காசுகளை அவனிடம் கொடுக்க அந்தப் பிள்ளை,

"இதெல்லாம் வேண்டாம் தாயே! சிவ தொண்டு செய்வதற்குக் காசெல்லாம் வாங்கக்கூடாது" என்று கூறி அங்கிருந்து வெளியே சென்றான்.

செம்பியன் மாதேவி அவனையே நோக்கிக் கொண்டிருந்தார், அந்தப்பார்வை ஒரு மகன் தாயிடம் இருந்து விடைபெற்று செல்லும் பொழுது ஒரு தாய் பார்ப்பது போல இருந்தது......

# அத்தியாயம் 13

***தஞ்சை அரண்மனை ....***

அன்று அந்த அரண்மனையின் அரசவையில் முக்கியமான, நெருங்கிய, நம்பிக்கையான அதிகாரிகளைத் தவிர வேறு யாரும் இல்லை. அனைவரையும் வெளியே செல்லுமாறு உத்தரவிட்டார் சுந்தர சோழர்.

மன்னர் கட்டளையை மீற முடியுமா? அனைவரும் அமைதியாக வெளியே சென்றனர். வேளக்காரப் படைகள் கூட உள்ளே அனுமதிக்கப்படவில்லை.

ஆபத்து எவ்வகையிலும் அவர்களை அணுகலாம் என்று சுந்தரசோழர் அறிந்து வைத்திருந்தார். அதனால் நம்பிக்கையான நபர்களைத் தவிர வேறு யாரையும் உள்ளே அனுமதிக்கவில்லை.

அன்று நடந்த கூட்டத்தில் அருள்மொழியும், கரிகாலரும் பங்கு பெறவில்லை. அங்கு நிலவிய மௌனத்தைக் கலைத்தார் பெரிய பழுவேட்டரையர்,

"அரசே சேனைகள் இரண்டாகப் பிரிக்கப்பட்டு விட்டன. ஒன்று அருள்மொழியுடன் இலங்கை செல்லப்

போகிறது. இன்னொன்று ஆதித்தனுடன் சேவூர் செல்லப் போகிறது.

ஏற்கனவே இலங்கையில் இருந்து பத்தாயிரம் வீரர்கள் கொண்ட படை பாண்டியனை அடைந்துவிட்டது. மீண்டும் அங்கிருந்து படைகள் இங்கு வராமல் தடுப்பதே அருள்மொழியின் வேலை. அங்கிருந்து வந்த படைகளை நிர்மூலமாக்கி ஓடவிடுவது ஆதித்தனின் வேலை. பின் ஒற்றர்கள் வழி கிடைத்த செய்தி ராஷ்டிரகூடர்கள் கூட சரியான நேரம் பார்த்து நம்மை அழிப்பதற்காகக் காத்துக் கொண்டிருக்கின்றனர். இருக்கிற எல்லாப் படைகளும் மூன்று திசைகளில் பிரித்துவிட வேண்டும். நம்பிக்கையான சில வீரர்களை மட்டும் வைத்துக் கோட்டையைப் பாதுகாக்க வேண்டும். மன்னனின் உதவிப் படைகள் அறுபது நாழிகையும் இங்கேயே இருந்து விட வேண்டும். பழுவூர்ப் படைகளில் சில, தஞ்சை எல்லையைச் சுற்றி வரும். என் தம்பி இங்கேயே இருந்து கோட்டைக் காவலை மேலும் வலுப்படுத்துவான்” எனக் கூறி முடித்தார்.

திருக்கோவிலூர் மலையமான் இப்பொழுது பேசத்தொடங்கினார், “சோழர்களுக்கு உதவி புரியும் அனைத்துச் சிற்றரசர்களின் படையும் நமது பண்டைய தலைநகரான உறையூரில் அணி வகுக்கப்பட்டு அங்கிருந்து சேவூர் செல்ல ஏற்பாடு நடை பெறுகிறது” என்று கூறினார்.

மன்னர் இப்பொழுது எழுந்து நின்றார். "ராஜ்யத்திற்காகப் பாடுபடும் உங்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

www.indianguide.in

உங்களை நான் இங்கே அழைத்தது போர் பற்றிய விவாதத்திற்காக மட்டுமன்று, என் மகனிடம் நான் ராஜ்யத்தைக் கொடுத்து விடலாம் என்று எண்ணி வருகிறேன் அதைப்பற்றி உங்களிடம் கருத்து கேட்கவே உங்களை இங்கு வரவழைத்தேன்.

இந்தப் போர் முடிந்தவுடன் ஒரு நல்ல நாளில் அவனுக்கு பட்டாபிஷேகம் செய்து விடவேண்டும் என்று தீர்மானித்துள்ளேன் இதில் யாருக்காவது எதிர்க் கருத்து இருந்தால் தெரிவிக்க வேண்டும். இப்பொழுது அவர்களின் கருத்து வரவேற்கப் படுகிறது" என சுந்தர சோழர் கூற ஒருவர் கூட வாய் திறக்கவில்லை.

"சரி அப்படி என்றால் இந்தப் போர் முடிந்தவுடன் ஆதித்த கரிகாலனுக்குப் பட்டாபிஷேகம் செய்து சோழநாட்டை அவனிடம் கொடுத்து விடப் போகிறேன்" எனக் கூறினார் மாமன்னர் சுந்தரசோழர்.

அவருடைய விருப்பத்தை ஆமோதித்து அவையோர் தலையசைத்தனர்.

"நம்மிடம் நேரம் மிகவும் குறைவாக உள்ளது அனைவரும் சென்று அவரவர் பணியைச் செய்யுங்கள்" என்று கட்டளையிட்டார் மன்னர்.

தஞ்சையில் இருந்து ஒரு பெரிய படை பழையாறையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. அந்தக் கூட்டத்தில் குறைந்தது ஐம்பதாயிரம் வீரர்களும், ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட

www.indianguide.in

யானைகள், பத்தாயிரம் குதிரைகள், யுத்தத்திற்குத் தேவையான ஆயுதங்களும் இருந்தன.

இந்தக் கூட்டத்திற்கு நடுவே ஒரு பல்லக்கில் குந்தவை மற்றும் வானதி அமர்ந்திருக்க முன்னே குதிரையில் அருள்மொழிவர்மர் சென்று கொண்டிருந்தார்.
அவரின் மனம் முழுவதும் இலங்கையில் நடக்க வேண்டிய காரியங்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தது.

"இங்கிருந்து அழைத்துச் செல்லும் வீரர்களுக்கு உணவு மருத்துவம் இதெல்லாம் சரிவர கிடைக்க வேண்டும், இவர்களின் குடும்பத்தினர் என்னை நம்பித்தான் இவர்களைப் போருக்கு அனுப்பியிருக்கின்றனர் , இவர்களுக்கு ஒன்றும் நேராது நான் பாதுகாக்க வேண்டும்" என்று தனக்குத்தானே பேசிக்கொண்டு வந்தார் அருள்மொழிவர்மர்.

அதிகாலையில் இவர்கள் பழையாறை நகரை அடைந்தனர். அருள்மொழி பழையாறை சென்றவுடன் முதல் வேலையாக அவரது குருவைக் காணச் சென்று விட்டார்.

குந்தவை அவரது தம்பியை உற்சாகப்படுத்துவதற்காகச் சில மங்கல நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தார்.

ஈசான சிவ பட்டரின் வீடு வடமேற்கு சிவன் கோவிலுக்கு மிக அருகில் இருந்தது. அரண்மனையிலிருந்து அரைக் காத தூரம் இருக்கும்

www.indianguide.in

சோலை மாளிகையிலிருந்து வடமேற்கு ஆலயத்திற்குப் போனால் அந்தச் சிவன் கோவில் வந்துவிடும்.

வீரர்கள் யாரும் தன்னைப் பின் தொடர வேண்டாம் என்று கூறிவிட்டுத் தனது குதிரையோடு புறப்பட்டார் அருள்மொழிவர்மன். சற்று நேரத்திற்கெல்லாம் அவர் தன் ஆசானின் வீட்டில் இருந்தார். பணியாள் ஒருவன் வந்து அருள்மொழியை வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றான். “நீங்கள் வருவீர்கள் என்று அவர் கூறி இருந்தார். நீங்கள் வந்தால் உங்களை அமர்ந்திருக்குமாரு கூறினார். இப்பொழுது அவர் கோவிலுக்குச் சென்றிருக்கிறார் சற்று நேரத்திற்கெல்லாம் திரும்பி வந்துவிடுவார்” எனக் கூறிய பணியாளன் அருள்மொழி அருந்துவதற்கு மோரை எடுத்தவரச் சென்றுவிட்டான்.

முகத்தில் சலனம் இன்றி அங்கு தியானிப்பதற்கு விரிக்கப்பட்டிருந்த புலித் தோலின் மீது அமர்ந்து தியானம் செய்யத் தொடங்கினார் அருள்மொழி.

ஒரு நாழிகைப் பொழுது கழிந்தது. அருள்மொழி கண் திறந்து பார்க்கையில் அவர் முன் ஈசான சிவ பண்டிதர் அமர்ந்திருந்தார்.

அருள்மொழி கண்திறந்த தருணம் குருவின் வாயிலிருந்து உதிர்ந்த முதல் சொல் "திருச்சிற்றம்பலம்". அருள்மொழிவர்மர் சமயம் ஏதும் எடுக்காமல் திருச்சிற்றம்பலம் என்று கூறி அவர் வந்த நோக்கத்தை எடுத்துரைக்கத் தொடங்கினார்.

"குருவே! என் மனம் மிகவும் அலைபாய்கிறது, மிகவும் பெரிய பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. என்னை நம்பி ஆயிரக்கணக்கான உயிர்கள் என்னுடன் பிரயாணம் செய்யப் போகின்றனர். என்னை எதிர்நோக்கி ஆயிரக்கணக்கான உயிர்கள் இலங்கையில் வாடிக் கொண்டிருக்கின்றன. ஆனால் என் மனமோ நிலையான ஒரு சூழலில் இல்லை. எனக்கு என் மேல் சந்தேகமெல்லாம் இல்லை, என்னால் இதைச் செய்து முடிக்க முடியும் அது எனக்குத் தெரியும் ஆனால் என்னை நம்பி வந்த இத்தனை உயிர்களுக்கும் பாதுகாப்பு நான் கொடுப்பது என்னால் முடியுமா என்று தெரியவில்லை" என அருள்மொழிவர்மர் கூற,

ஈசான சிவ பட்டர் தொடங்கினார், "மகாபாரதப் போரில் தனது சொந்தங்களை எதிர்த்து நிற்கும் பொழுது அர்ஜுனனுக்கும் இதேபோன்ற ஒரு மனநிலை தான் இருந்தது. அன்று கிருஷ்ணன் அவனிடம் கூறியது 'சொல்பவன் கண்ணன், செய்பவன் கண்ணன், உன் முன் நிற்கும் அனைவரும் என்னில் ஒரு பாதி. இவர்களை நீ இன்று அழிக்கவில்லை என்றாலும் கூட இவர்கள் ஒருநாள் மரணித்து விடுவார்கள். இவர்கள் கொல்லப்பட வேண்டும் என்பது விதி அது அவரவரின் கர்மபலன் நீ இங்கே ஒரு கருவி மட்டுமே இதை நீ புரிந்து கொள் அர்ஜுனா' என்றார். இதையேதான் நான் உனக்கும் கூறுகிறேன்"

"நடந்தவை, நடப்பவை, நாளை நடக்கப் போகின்றவை எல்லாம் விதிப்படியே நடக்கும். நீ இங்கு வெறும் கருவிதான். இதை நீ புரிந்து கொள்.

www.indianguide.in

மனதில் அமைதி கொள், செய்யும் பணியை முழுமையாகச் செய். அதில் உன் பங்கு எந்த விதத்திலும் குறைந்து விடாமல் பார்த்துக்கொள்!" என்று ஈசான சிவபண்டிதர் கூற அருள்மொழியின் ஆழ் மனதில் இருந்த ஆழி அலை அடங்கியது.

"உங்களின் ஆசி எனக்கு வேண்டும்! எனக் கூறி அவரின் பாதம் தொட்டு வணங்கினார்.

"இந்த அகிலம் ஆள்வதற்குப் பிறந்தவன் நீ ! சென்று வா!" என்று கூறி அவரை அனுப்பி வைத்தார் ஈசான சிவ பண்டிதர்.

ஏதோ ஒரு புதிய வலுவுடன் பழையாறை மாளிகையை நோக்கி மீண்டும் சென்றார் அருள்மொழிவர்மர்.

சற்று நேரத்திற்கெல்லாம் போருக்குச் செல்ல ஆயத்தமானார் அருள்மொழி. அருள்மொழியை வாழ்த்தி வழியனுப்புவதற்காக, அரண்மனை வாசற்படியில் குந்தவை தேவியின் தோழிப் பெண்கள் கையில் தீபம் ஏந்திக் கொண்டு நின்றார்கள்.

அந்தக் கூட்டத்தில் கொடும்பாளூர் சிறிய வேளானின் புதல்வி வானதியும் இருந்தாள். இளவரசி குந்தவைக்கு மிகவும் நெருங்கிய தோழியவள்.

இளவரசர் சற்று தூரத்தில் வருவதைப் பார்த்ததும் அந்தப் பெண்கள் எல்லோரும் மனக்கிளர்ச்சி அடைந்தார்கள். இளவரசர் அருகில் வந்ததும் கையில் ஏந்திய தட்டுகளைச் சுற்றி ஆரத்தி எடுத்தனர்.

www.indianguide.in

அப்பொழுது வானதியின் மேனி முழுவதும் திடீரென்று நடுங்கிற்று. கையில் இருந்த தட்டு தவறிக் கீழே விழுந்து பெரும் சத்தத்தை உண்டாக்கியது.

அடடா இது என்ன அபசகுணம் என்ற எண்ணம் எல்லோருடைய மனதிலும் உண்டாயிற்று. ஆனால் தட்டு கீழே விழுந்த பிறகும் திரி மட்டும் எரிந்து கொண்டு இருப்பதைப் பார்த்துவிட்டு அனைவரும் நிம்மதி அடைந்தார்கள். இது மிக நல்ல சகுனம் என்று முதியவர்கள் உறுதி கூறினார்கள்.

எந்தவித காரணமும் இன்றி கலங்கி நின்ற வானதியைப் பார்த்துப் புன்னகை புரிந்துவிட்டு அருள்மொழிவர்மர் மேலே சென்றார். அவர் அப்பால் சென்றதும் வானதி மூர்ச்சை அடைந்து விழ, அவளைக் குந்தவை தனது அறைக்கு எடுத்து வருமாறு உத்தரவிட்டாள். குந்தவையைத் தொடர்ந்து அருள்மொழியும் அந்த அறைக்குச் சென்றார்.

“அக்கா! இவள் இப்பொழுது ஏன் மூர்ச்சையானாள்?” என்று அருள்மொழி கேட்க.

“தெரியவில்லை தம்பி” என்று குந்தவை கூறினாள்.

“இந்தப் பெண்ணின் தந்தை தானே இலங்கை சென்று மீண்டும் வராமல் போர்க்களத்தில் மாண்டார்? அதை நினைத்துக் கொண்டாள் போலிருக்கிறதே” என்றார் அருள்மொழி.

“இவளைப் பற்றி நீ கவலைப் பட வேண்டாம் நான் பார்த்துக்கொள்கிறேன். இலங்கை சென்று விரைவில்

www.indianguide.in

வெற்றி வீரனாகத் திரும்பி வா! அடிக்கடி எனக்குச் செய்தி அனுப்பு” என்றாள் இளைய பிராட்டி.

"ஆகட்டும் அக்கா! இங்கே ஏதாவது விசேஷம் நிகழ்ந்தாலும் எனக்குச் செய்தி அனுப்புங்கள்" என்றார் அருள்மொழி.

அருள்மொழியின் குரல் கேட்ட நொடி வானதியின் மூர்ச்சை தெளிந்து. அவளது கண்கள் லேசாக திறந்த பொழுது எதிரே நின்று கொண்டிருந்த அருள்மொழியைக் கண்டவுடன் அகன்று விரிந்தன. முகமும் மலர்ந்தது. உணர்வு வந்ததும் நாணமும் கூட வந்துவிட்டது. சட்டென்று எழுந்து உட்கார்ந்தாள்.

“அக்கா என்னை மன்னித்து விடுங்கள்!” என்றாள் வானதி.

“இதற்காக நீ ஒன்றும் கவலைப்பட வேண்டாம் வானதி தவறுவது எல்லாருக்கும் நடப்பது  தான். உனக்கு இப்படி நடப்பதற்கு ஒரு முக்கிய காரணமும் உண்டு அதைத் நான் அக்காவிடம் சொல்லிக் கொண்டிருந்தேன். இருவரும் பத்திரமாக இருங்கள்! நான் போய் வருகிறேன்” என்று கூறி அறையை விட்டு வெளியே வந்தார் அருள்மொழிவர்மன்.

வானதிக்கு தான் காண்பது கனவா நினைவா என்று ஒன்றும் புரியவில்லை. குந்தவையும் வானதியும்அரண்மனையின் மேல்மாடத்திலிருந்து அருள்மொழியைப் பார்த்துக் கொண்டிருந்தனர். ஒரு பெரிய சைனியத்தின் நடுவில் யானை மீதேறி

இலங்கையை நோக்கிய பிரயாணத்தை இனிதே தொடங்கினார் அருள்மொழிவர்மர்!

# அத்தியாயம் 14

மாலை நேரம் சூரியன் மேற்கில் மறையத் தொடங்கினான். கோடிக் கரையின் ஓரத்தில் கடல் அலை அடங்கி ஓய்ந்திருந்தது. கட்டு மரங்களும் படகுகளும் கரையை நெருங்கிக் கொண்டிருந்தன. இரை தேடச் சென்ற பறவைகள் கூடு நோக்கிச் சென்று கொண்டிருந்தன. பறவைகள் சென்ற திசையில் நோக்கினால் பெரிய அடர்ந்த காடு இருந்தது. பெருங்காற்று வீசி கிளைகள் இங்குமங்கும் ஆடிக்கொண்டிருந்தன. கருமேகங்கள் திரண்டு கொண்டிருந்தன. இவை அனைத்தும் இரவு வரப்போகும் மழையின் ஒத்திகையே!

இளவரசர் அருள்மொழிவர்மரும் அவரது சேனா வீரர்களும் கோடிக்கரையை அடைந்து வெகுநேரம் ஆகிவிடவில்லை. இளவரசர் கோடியக்கரை வந்தவுடன் கடற்கரையைக் காணச் சென்றார். இலங்கை செல்வதற்காக அணி வகுக்கப்பட்டிருக்கும் கப்பல்களைக் காணச் சென்று கொண்டிருந்தார். ஆயிரம் ஆயிரம் படகுகள் அணிவகுத்து நின்ற அந்தக் காட்சியைக் காணும் பொழுது அது கடலா? இல்லை சோழக் கப்பல்கள் நிற்பதற்காக வெட்டப்பட்ட ஏரியா என்ற சந்தேகம் நமக்கு வரும்.

விரிந்திருந்த அந்தக் கடலைச் சோழக் கப்பல்கள் மொத்தமாக ஆக்கிரமித்துவிட்டன. கடல் அலைக்கு ஏற்றவாறு கப்பல்கள் முன்னும் பின்னும்

ஆடிக்கொண்டு இருந்த காட்சி பார்ப்பதற்கு தொட்டிலில் ஆடும் குழந்தை போல மனதிற்கு இதமாக இருந்தது.

இதெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த அருள்மொழி, அவரது பார்வையை அங்கே கடலில் விளையாடிக்கொண்டிருந்த ஒரு சிறிய படகின் மீது செலுத்தினார். அவர் கண் ஆச்சர்யத்தில் விரிந்தது. ஒரு பெரிய அலை அந்தச் சிறிய படகை நோக்கி வந்து கொண்டிருந்தது. ஆனால் அந்தப் படகில் இருந்த படகோட்டி அதைப்பற்றி கவலைப்படாமல் ஏதோ பாடிக் கொண்டிருந்தாள். ஆம் அந்தப் படகைச் செலுத்தியது ஒரு பெண் தான். அந்தப் பெண்ணின் தேனினும் இனிய குரல் அலையோசை காரணமாகக் கரை வரை எட்டவில்லை, நாம் சற்று அவள் அருகில் சென்று அவள் பாடுவதைக் கேட்கலாம் வாருங்கள்!

***"அலைகடல் கொந் தளிக்கையிலே***
***அகக்கடல்தான் களிப்பதுமேன்?***
***நிலமகளும் துடிக்கையிலே***
***நெஞ்சகந்தான் துள்ளுவதேன்?***
***இடி இடித்து எண்திசையும்***
***வெடிபடும் அவ்வேளையிலே***
***நடனக் கலைவல்லவர்போல்***
***நாட்டியந்தான் ஆடுவதேன்?"***

அந்தப் பெண்ணின் ஆனந்தம் அவளின் பாடலில் வரியில் நமக்குப் புரிகிறது.

“முருகைய்யா…” என்றார் அருள்மொழிவர்மர்.

www.indianguide.in

“கூறுங்கள் இளவரசே!” என்றான் ஒருவன்.

“அலை கடலுக்கும் அச்சம் கொள்ளாமல் இப்படிப் படகைச் செலுத்திக் கொண்டிருக்கும் அந்தப் பெண் யார்?” என்று கேட்டார் அருள்மொழிவர்மன்

“அவள் என் தங்கை அவள் பெயர் பூங்குழலி.”

“பூங்குழலியா? சரியாகத்தான் பெயர் வைத்திருக்கிறீர்கள்.” என்று கூறி மென்மையாய்ப் புன்னகைத்தார் அருள்மொழி.

பெயருக்குத் தகுந்தார் போல அவள் கூந்தலில் ஒரு தாழம்பூவின் இதழ் அழகு பெற்றுத் திகழ்ந்தது. நீண்ட கரிய கூந்தல் சுருண்டு சுருண்டு விழுந்து அவளுடைய தோள்களை அலங்கரித்தன. கடல் அலைகள் கரை கொண்டு வந்து சேர்க்கும் சங்குகளும் சிப்பிகளும் ஆபரணம் ஆக்கி அவள் அணிந்து கொண்டிருந்தாள். இப்பொழுது ஒரு பெரிய அலை அவளின் படகை நெருங்கி விட்டது. அவளோ அதற்கெல்லாம் அஞ்சுவது போல் தெரியவில்லை. அலையைப் பார்த்துச் சிரித்து விட்டு, இந்தச் சிறிய அலை என்னை என்ன செய்துவிட முடியும்? என்பதுபோலத் துடுப்பு போட்டுக் கரை நோக்கி வந்து கொண்டிருந்தாள். கரை மிக அருகில் வந்ததும் அவளின் குரல் அலையோசையை விடச் சற்று அதிகமாக அனைவரது காதிலும் விழுந்தது.

அவளது படகை அங்கிருந்த ஒரு இடத்தில் கட்டிவிட்டு கரை நோக்கி நடந்து கொண்டிருந்தாள், எதேச்சையாக அவள் கண்கள் அருள்மொழிவர்மர்

www.indianguide.in

இருந்த திசை நோக்கிப்போனது. “ஐயோ இவர் யாரையோ பார்த்துக்கொண்டு நிற்கிறார் அதுவும் நாம் இருக்கும் திசையில் வேறு யாரும் இல்லையே! ஒருவேளை நம்மளைத்தான் பார்த்துக்கொண்டிருக்கிறாரோ! ஐயோ நம்மை அழைக்கிறார்” எனத் தனக்குத்தானே பேசிக்கொண்டு அருள்மொழி இருந்த திசை நோக்கி நடக்கத் தொடங்கினாள் பூங்குழலி.

“வணக்கம் இளவரசே!” என்று பவ்யமாக கைகூப்பி அருள்மொழியை வணங்க, முகத்தில் ஒரு மகிழ்ச்சியுடன்,
“உன் பெயர்தான் பூங்குழலியா? அலையுடனும் கடலுடன் விளையாடுவது உனக்கு ரொம்பப் பிடிக்கும் போலிருக்கிறதே?” என்றார் இளவரசர்.

“இந்தக் கடல் எனது தாய்! ஒரு தாய் அவளது பிள்ளையை ஒன்றும் செய்து விட மாட்டாள் அந்த நம்பிக்கைதான், இதுதான் கடலுக்கும் எனக்கும் இருக்கும் உறவு” என்றாள் பூங்குழலி.

“அப்படியா சமுத்திர குமாரி?” என்றார் இளவரசர். சமுத்திர குமாரி என்ற பெயர் அவளுக்குப் புதிதாக இருந்தது மேலும் அவளால் ஒரு நொடி கூட அங்கே நிற்க முடியவில்லை பதிலேதும் கூறாமல் ஓடத் தொடங்கினாள்.

ஓடிக் கொண்டிருக்கும் பொழுதே, “ஐயோ என்னைச் சந்திரகுமாரி என்று கூறிவிட்டாரே? இனி நான் என்ன செய்வேன்? எங்கே போவேன்? இதை யாரிடம் கூறுவேன்?” எனப் பேசிக்கொண்டு ஒரு பித்துப்

www.indianguide.in

பிடித்தவளைப் போல அந்த அடர்ந்த காட்டிற்குள் ஓடினாள் பூங்குழலி.

தனது ஒற்றர்கள் மூலம் இளவரசர் அருள்மொழி இலங்கை செல்வதை வீரபாண்டியன் அறிந்தான். ஆனாலும் சேவூர்ப் போர்க்களத்திற்கு வரப்போவது ஆதித்த கரிகாலன் என்ற செய்தி அவனது செவிகளுக்கு எட்டாமல் தான் இருந்தது.

கோடியக்கரையிலே அருள்மொழிவர்மனைக் கொன்று விட வேண்டும் என்று திட்டம் தீட்டி, தனது ஆபத்துதவிகள் உடன் நம்பிக்கையான சிலரை முன்னமே கோடிக்கரை நோக்கி அனுப்பி வைத்தான் வீரபாண்டியன்.

இரவு அனைவரும் உறங்கும் நேரம் பார்த்து இளவரசர் இருந்த குடிலை நோக்கிச் சென்று அங்கேயே அவரைக் கொன்றுவிட வேண்டும் என்பது வீரபாண்டியனின் திட்டம்.

மதுரையிலிருந்து கோடியக்கரை வந்த வீரர்கள் அனைவரும் கோடிக்கரையில் அடர்ந்த வனத்தில் ஒரு குகையில் மறைந்து இருந்தனர்.

***உறையூர் ...***

வந்தியத்தேவன் ஒருவழியாக உறையூரை அடைந்துவிட்டான். பார்த்திபேந்திர பல்லவன், கந்தமாறன் இருவரும் சற்று முன்னர்தான் வந்து சேர்ந்தனர்.

அலைகடலென சேனா வீரர்கள் திரண்டிருந்தனர், அவர்களை உற்சாகப்படுத்தி பொழுது போக்குவதற்காகச் சில போட்டிகள் நடத்தப்பட்டுக் கொண்டிருந்தது.

நாளை காலை ஆதித்த கரிகாலனும் திருக்கோவிலூர் மலையமானும் உறையூர் வந்தடைவார்கள் எனும் செய்தி வந்தியத்தேவன் காதில் எட்டியது.

வந்தியத்தேவனின் மனம் மிகவும் சந்தோஷமாக இருந்தது. வீரர்கள் போட்டி போடும் அழகைக் காணும் போது வரும் உற்சாகம்தான் அது. ஒரு புறம் வீரர்களுக்குத் தேவையான உணவு செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. மற்றொருபுறம் தேவையான மருந்து பொருட்கள் எடுத்து வைக்கப்பட்டுக் கொண்டிருந்தன. நாட்டின் தலைசிறந்த மருத்துவர்கள் அனைவரும் போர்க்களத்திற்குப் போவதற்குத் தயாராகிக் கொண்டிருந்தனர்.

ஆயுதக் கிடங்கில் ஆயுதங்களின் தன்மைகள் சோதிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. வாள், வில், ஈட்டி, கேடயம், கவசம் இவை அனைத்தும் பரிசோதிக்கப்பட்டு எடுத்து வைக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

போர்க்களத்தில் தேவைப்படும் இதர பொருட்கள் அனைத்தும் சேமிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. இதெல்லாம் நடந்து கொண்டிருந்தது வந்தியத்தேவனின் தலைமையில். அவன் அந்தப்

பணிகளை மிகவும் சிறப்பாகச் செய்து கொண்டிருந்தான்.

இரவு நெருங்கிக் கொண்டிருக்க வீரர்களுக்கு இன்னும் வீரம் சேர்க்கும் வகையில் ஒரு நாடகம் அரங்கேற்றப்பட்டது.

அந்த நாடகம் கரிகால் சோழனைப் பற்றிது. அதில் வரும் ஒரு காட்சி வந்தியத்தேவனின் மனதை விட்டு விலகவே இல்லை.

கரிகால சோழனின் ஆட்சி இன்றிலிருந்து சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தையது, அங்கே அவன் கண்ட காட்சி இதுவே!

சோழ தேசம் செல்வச் செழிப்பு மிக்க நாடாக கரிகாலனின் ஆட்சியில் திகழ்ந்தது. தூர தேசங்களில் இருந்து வணிகர்கள் வணிகம் செய்வதற்காகச் சோழதேசம் வந்துகொண்டு இருந்தனர். அப்படிச் சீனாவிலிருந்து சோழ தேசம் நோக்கி ஒரு கப்பல் நிறைய பொருட்களைச் சுமந்து வந்து கொண்டிருந்தது. ஆனால் இந்தக் கப்பல் சோழ தேசம் வந்து சேரவில்லை காரணம் கடல் கொள்ளையர்கள்.

கடற்கொள்ளையர்களின் கூட்டம் கூடி விட்டது. அவர்கள் அந்த கப்பலைச் சிறைபிடித்து அதை நடுக்கடலில் நிறுத்தி வைத்திருந்தனர்.

இந்தச் செய்தி கரிகாலனின் காதில் விழ, இரவோடு இரவாக அந்தக் கப்பலை மீட்பது என்று முடிவெடுத்து,

சேனைகளுடன் ஆயிரம் யானைகளும் கொண்டு கடற்கரைக்குச் சென்றார்.

அன்று அவர் கப்பல் எடுத்துக் கொண்டு சென்றிருந்தால் அவர்கள் வருவது கடற் கொள்ளையர்களுக்குத் தெரிந்து தப்பித்துப் போயிருப்பார்கள்.

இயற்கையிலே யானைகளுக்கு நீச்சல் தெரியும். இருட்டில் யானை கடலில் நீந்திக் கொண்டு சென்றால் அதைப் பார்ப்பது அத்தனை எளிதும் அன்று. அதனால் யானைகளின் மேல் அமர்ந்து அந்தச் சீனக் கப்பலை மீட்பதற்காகக் கரிகாலச்சோழன் சென்று கொண்டிருந்தார்.

யானை மீது இவர்கள் வருவார்கள் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. யானை மீதிருந்த பெரிய நீளமான கயிற்றைத் தூக்கிக் கப்பலின் மீது எறிந்தார் கரிகாலர். அந்தக் கயிற்றின் நுனியில் உடும்பு ஒன்று கட்டப்பட்டிருந்தது. அந்த உடும்பு கப்பலின் மேல்பாகத்தைப் பற்றிக்கொள்ள இரண்டு முறை கயிற்றை இழுத்துப் பார்த்துவிட்டுக், கயிற்றைப் பிடித்து மேலே ஏறினார் கரிகாலர்.

பின்பு என்ன நடந்திருக்கும் என்று நீங்களே யூகிக்கக் கூடும். காலை பொழுது விடியும் பொழுது கடல் கொள்ளையர்களுடன் கப்பலும் கரை வந்தடைந்து இருந்தது.

இந்தக் காட்சியைக் கண்டவுடன், “இவர்களின் அறிவுக்கு நிகர் இந்த உலகில் சோழர்கள் மட்டுமே!

www.indianguide.in

இத்தனை ஆண்டிற்கு முன்னாலே இந்த கரிகாலர் வீர சாதனைகளைப் புரிந்து இருக்கிறார். அவரது பெயரைத் தன் பெயருடன் வைத்திருக்கும் ஆதித்த கரிகாலர் நிச்சயம் இந்த உலகையே அவரது காலடியில் வைக்கப் போகிறார்!” என மனதிற்குள் நினைத்துக் கொண்டான் வந்தியத்தேவன்.

***கோடியக்கரை ....***

பூங்குழலி அவள் எப்பொழுதும் செல்லும் அந்தக் குகை நோக்கிச் சென்று கொண்டிருந்தாள். ஆனால் அன்று குகைக்கு மிக அருகில் சென்றவுடன் ஏதோ ஒன்று சரியாக இல்லை என்பதை உணர்ந்த பூங்குழலி அங்கேயே மரத்தின் மீது ஏறி அங்கிருந்து வரும் ஒலிகளைக் காது கொடுத்துக் கேட்கத்தொடங்கினாள்.

# அத்தியாயம் 15

கருவூர்த்தேவர் கொல்லிமலை வந்து இரண்டு தினங்கள் ஆகிவிட்டது. ஆனால் அவர் அந்தக் குகைக்குள் தியானம் செய்து கொண்டிருக்கிறார். அவரது முகத்திலோ எந்த ஒரு அசைவும் தென்படவில்லை. ஒரு சிலை போல எந்த ஒரு அசைவுமின்றி அமர்ந்திருந்தார்.

அவருக்கு முன்னால் அவரது சீடன் அமரன், அமர்ந்து அவரை வெறித்து நோக்கிக் கொண்டிருந்தார். சற்று நேரம் கழித்து அவர் ஏதோ முணுமுணுத்தது போல இருந்தது. அமரன் அவரது பேச்சைக் காது கொடுத்துக் கேட்க எண்ணினான்.

“அகிலம் ஆளப் பிறந்தவனை அடியாட்கள் பத்து பேர் சேர்ந்து சாய்த்து விட முடியுமா? அவன் ராஜனுக்கு எல்லாம் ராஜனாகப் போகிறவன். சதி செய்து அவனைக் கொன்று விடலாம் என்று அவன் அருகில் சென்றால் அவன் மூச்சுக்காற்று உங்களை பஸ்பமாக்கிவிடும்” என்று கூறிச் சிரிக்கத் தொடங்கினார் கருவூர்த் தேவர்.

அமரனுக்கு ஒன்றும் புரியவில்லை! மௌனமாக அவர் பேசுவதைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

“அவனை நெருங்க வேண்டும் என்றால் அதற்கு நீங்கள் முதலில் என்னைத் தாண்ட வேண்டும். நான் உள்ளவரை உங்களால் அவனது காலடி மண்ணைக்

www.indianguide.in

கூடத் தொட முடியாது. மகனே! அருள்மொழி! கூறுவதை கேள்! நன்றாக உறங்கு. நாளை உனக்கு இலங்கையை நோக்கிப் பிரயாணம் உண்டு.
உன்னைச் சுற்றி எப்பொழுதும் மனித காவலோ! அல்லது தெய்வக் காவலோ! இருந்து கொண்டே இருக்கும். நன்றாக உறங்கு...” என்று கூறி மெதுவாக கருவூர்த்தேவர் கண்ணைத் திறந்தார். அவரது கண்ணில் இருந்து ஒருவிதமான பிரகாசம். அவரது முகத்தைக் காணும் பொழுது அதில் ஒரு தெய்வீகம்.

“குருவே!” என்றான் அமரன்.

"உனது கேள்விகளுக்கு நான் பிறகு விடை அளிக்கிறேன். நீ இங்கிருந்து சரியாக ஒரு காத தூரத்தில் அமைந்திருக்கும் அருவிக்கு அருகில் இருக்கும் குகைக்குச் செல்! அங்கேதான் பாண்டியனின் சதி யாகம் நடக்கிறது. போகும் வழியில் ஒரு காட்டெருமையைக் கையோடு அழைத்துச் செல்! இப்பொழுதே போ...” என்றார் கருவூர்த் தேவர்.

அவர் என்ன சொல்கிறார் என்பது புரிந்தது, ஆனால் இப்படிச் செய்தால் என்ன நடக்கும் என்பது அவனுக்குப் புரியவில்லை. காட்டில் காட்டெருமை தேடி நடந்து கொண்டிருந்த பொழுது, தூரத்தில் ஒரு காட்டெருமையும் அதன் கன்றும் அவன் கண்ணில் பட்டன. அவன் சற்றும் யோசிக்காமல் அந்தக் காட்டெருமைக் கன்றைத் தூக்கிக் கொண்டு ஓடத் தொடங்கினான்.

கன்று காண்பது போன்று இல்லை. மிகவும் பாரமாக இருந்தது. மின்னல் வேகத்தில் அந்தப் பெரிய காட்டெருமை அவனைத் துரத்திக் கொண்டிருந்தது. போதாக்குறைக்கு இந்தக் கன்றும் “மா…” என்று அடி தொண்டையில் கத்த, அவன் இன்னும் வேகமாக ஓடத் தொடங்கினான்.

சிறிது தூர ஓட்டத்தின் பிறகு, குரு கூறிய இடம் வந்தது. அந்தக் குகையின் வாசலில் அந்தக் கன்றை விட்டுவிட்டு அருகில் இருந்த மரத்தின் மீது ஏறிக் கொண்டான்.

கன்று பயத்தில் அந்தக் குகைக்கு உள்ளே ஓட, குகைக்குள் சென்ற கன்று மீண்டும் ஓசை எழுப்பியது. அந்த ஓசை காடெங்கும் எதிரொலித்தது. எங்கிருந்தோ மின்னல் வேகத்தில் வந்த தாய் எருமை அந்தக் குகைக்கு உள்ளே செல்ல, குகைக்குள் இருந்த அனைவரும் வெளியே ஓடிவந்தனர். சற்று நேரத்திற்கெல்லாம் தாயும் சேயும் நலமாக வெளியே வந்தனர்.

வெளியே ஓடியவர்கள் எங்கே போனார்கள் என்ற தடயம் இல்லை. உள்ளே என்ன இருக்கிறது என்று பார்ப்பதற்காக அமரன் சென்றான். ஒரு பெரிய காளி சிலையின் கீழ் நிறைய காய்ந்த மிளகாய் போன்ற பொருட்களைக் கொண்டு யாககுண்டம் வளர்த்துள்ளனர் என்பது நன்றாகத் தெரிந்தது.

உள்ளே சென்ற காட்டெருமை, மொத்த இடத்தையும் தவிடு பொடியாக்கி விட்டது. எதிர்பாராதவிதமாக அந்தக் குகைக்குள் எரிந்த விளக்குக் கீழே விழுந்து

www.indianguide.in

அங்கிருந்த துணி மேல்பட்டு எரியத் தொடங்கியது. சற்று நேரத்திற்கெல்லாம் தீ மண்டலம் சூழ்ந்தது. அமரன் குகையை விட்டு வெளியே வந்தான்.

குரு கூறியவற்றைச் சிறப்பாக முடித்தான். அவனை அவனால் நம்பமுடியவில்லை. இத்துணை பாரமுள்ள காட்டெருமைக்கன்றை எப்படித் தூக்கிக்கொண்டு ஓடினான் என்பது.

***கோடியக்கரை ....***

பூங்குழலி அந்த மரத்தின் மீது அமர்ந்துகொண்டு நடப்பதை எல்லாம் கேட்டுக் கொண்டே இருந்தாள். அவர்களது சதித் திட்டம் அவளுக்குப் புரிந்துவிட்டது.

இரவு மழை பெய்யத் தொடங்கிவிட்டது. மேலும் பொழுது நடு சாமத்தை எட்டி விட்டது. பூங்குழலி கலங்கரை விளக்கம் நோக்கி ஓடத் தொடங்கினாள்.

அங்கிருந்து குறுக்கு வழியில் அருள்மொழியின் குடிலுக்கு முன்னால் வந்து நின்று கொண்டாள். கையில் ஒரு வேலும் கேடயமும் எடுத்துக்கொண்டாள்.

சற்று நேரத்திற்கெல்லாம், பாண்டிய ஆபத்துதவிகள் வர, வாருங்கள் உங்களுக்குத் தான் காத்துக் கொண்டிருந்தேன்! என்று பத்து வீரர்களைப் பார்த்துக் கூறிய பூங்குழலியை விரி**ந்**த கண்களுடன் பார்த்துக் கொண்டிருந்தனர் பாண்டிய வீரர்கள்.

"இளவரசர் உறங்குகிறார்! நமது சண்டையை அந்த வனத்திற்குள் வைத்துக்கொள்ளலாமா! மீசை முளைத்த ஆண்கள் என்றால் என்னை வென்று விட்டு அவரைத் தொடுங்கள்” என்று கூறினாள் பூங்குழலி.

பாண்டிய நாட்டு ஆண்களுக்குக் கோபம் தலைக்கேறியது! “இந்தப் பெண்ணை முதலில் அடக்கி விட்டுப் பின் அவனைக் கொல்லலாம்” என்று அந்தக் கூட்டத்தின் தலைவன் கூற அனைவரும் பூங்குழலியை நெருங்கி வந்தனர்.

அவர்கள் நெருங்கி வருவதைக் கண்ட பூங்குழலி வனத்திற்குள் ஓடத் தொடங்கினாள். அந்தக் காட்டில் பூங்குழலி அறியாத இடங்களே இல்லை! அதுவும் அங்கிருக்கும் புதைமணல்களைப்பற்றி பூங்குழலி தவிர வேறு யாரும் அறிந்திருக்க மாட்டார்கள்.

பூங்குழலி ஓடிய வேகத்தில் அவளைப் பின் துரத்திக் கொண்டு சென்றனர் பாண்டிய வீரர்கள். சற்று நேரத்திற்கெல்லாம் மீதி இருந்த வீரர்கள் யாரையும் காணவில்லை ஒருவன் மட்டும் பூங்குழலியின் முன் நிற்க, அவனை அந்த ஈட்டியைக் கொண்டு அடித்துக் கீழே தள்ளி அவனது கைகளைக் கட்டிப் போட்டாள் பூங்குழலி.

பின்பு அவள் ஓடி வந்த திசையை நோக்கி மீண்டும் நடக்கத் தொடங்கினாள். சற்று இடைவெளிவிட்டு ஒரு புதைக்குழியில் இரண்டு பாண்டிய வீரர்களைக் கண்டாள். காப்பாற்று என்னைக் காப்பாற்று என்று அவர்கள் கத்திக் கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர்.

மழை மிகவும் பெரிதாக பெய்யத் தொடங்கியது. ஒரு மரக் கிளையை வளைத்து அவர்கள் கையில் கொடுத்துவிட்டு, "சாமர்த்தியம் இருந்தால் வெளியே வந்து கொள்ளுங்கள்" என்று கூறி மீண்டும் நடக்கத் தொடங்கினாள் பூங்குழலி.

இன்னும் சற்று தூரத்தில் இரண்டு வீரர்கள், அதிலிருந்து சற்று தூரத்தில் நான்கு வீரர்கள் என்று பாண்டிய ஆபத்துதவிகள் மொத்தம் பூங்குழலி விரித்த வலையில் விழுந்துவிட்டன.

சத்தம் கேட்டு சேனா வீரர்கள் எழுந்துவிட்டனர்! அருள்மொழிவர்மரும் சேனாதிபதி பூதி விக்ரம கேசரியும் கூடாரத்தின் வெளியே நிற்க, உடம்பெல்லாம் சேறு பூசி வந்து கொண்டிருந்தாள் பூங்குழலி.

“என்னம்மா? ஏன் இப்படிக் கத்தினயாய்? வெளியே வந்து பார்ப்பதற்கு முன் எங்கோ ஓடி விட்டாயே? கீழே விழுந்து விட்டாயா? உனக்கு அடிபட்டு விட்டதா?” என்று இளவரசர் கேள்வி மேல் கேள்வியாகக் கேட்க, பூங்குழலி மனதிற்குள் பட்டாம் பூச்சி பறந்துகொண்டிருந்தது.

அவளது வாய் உளரத் தொடங்கியது, கால்களோ விண்ணில் பறந்து கொண்டிருந்தது. அவளது உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு நடந்தவற்றை எடுத்துக்கூற சோழ வீரர்கள் அவர்களைச் சிறைபிடிக்கச் சென்று விட்டனர்.

"உனது வீரமும் விவேகமும் என்னை வியப்பில் ஆழ்த்திவிட்டது! நீ நிஜமாகவே சமுத்திரகுமாரி தான். நான் இலங்கை சென்று வந்ததும் ஒரு முறை தஞ்சையில் வந்து என்னைப் பார்" என்று கூறினார் அருள்மொழிவர்மர்.

பூங்குழலியின் காதில் இது ஒன்றும் விழவில்லை அவள் சொர்க்கலோகம் செல்லும் குதிரை ஏறிச் சென்று கொண்டிருந்தாள்.

***சேவூர் ...***

வீரபாண்டியனின் படைகள் சேவூரை அடைந்து நீண்ட நேரம் ஆகிவிட்டது. கூடாரங்கள் அமைக்கும் பணி மிகவும் தீவிரமாக நடந்து கொண்டிருந்தது.

நந்தினியின் வேண்டுகோளுக்கிணங்க அந்தக் களத்தின் அருகிலிருந்த மலைமுகட்டில் அமைந்திருந்த காட்டிற்குள் கூடாரம் அவளுக்கு அமைக்கப்பட்டது. அங்கிருந்து அவள் யுத்தத்தை நேராகக் காண முடியும். ஆனால் அவள் அங்கிருந்து பார்ப்பதை யாரும் பார்க்க முடியாது! தெளிவாக**த்** திட்டம் தீட்டி அவள் அங்கேயே கூடாரத்தை அமைத்துக் கொண்டாள்.

ஆயுதங்கள் எல்லாம் எடுத்து வைக்கப்பட்டுக் கொண்டிருந்தது. வீரபாண்டியன் ஆயுதக் கிடங்கில் மேற்பார்வை நடத்திக் கொண்டிருந்தான். இலங்கையிலிருந்து வந்த வீரர்கள் வைத்திருந்த ஆயுதம் அவனை வியப்பில் ஆழ்த்தியது. அது காற்றைக் கிழித்துக்கொண்டு செல்லும் ஒருவித

www.indianguide.in

அம்பு. அந்த அம்பு சுருள் வடிவத்தில் இருந்தது காற்றின் வேகத்திற்கு ஏற்ப அம்பு தன்னை வேகப்படுத்திக் கொண்டு சுருண்டு சென்று எதிரியைத் தாக்கும். இரும்புக் கவசங்களைக் கூடத் துளைத்தெடுக்கும் வல்லமை பொருந்திய அந்தச் சுருள் அம்புக்கு இந்த யுத்தத்தில் மிகப்பெரிய பங்கு உள்ளதை உணர்ந்தான் வீரபாண்டியன்.

அவன் மனது முழுவதும் சுந்தரசோழனைப் பற்றிய சிந்தனையே இருந்தது. போருக்காக வியூகங்களை யோசித்துக் கொண்டே இருந்தான் வீரபாண்டியன்.

இப்படி யோசித்துக் கொண்டே அங்கிருந்த வனத்திற்குள் சென்றான் வீரபாண்டியன். அங்கே இயற்கையாக உருவான ஒரு குளம் இருந்தது மாலைப் பொழுது ஆதலால் உயிரினங்கள் நீர் அருந்துவதற்காக அங்கே வருவதற்கு வாய்ப்புண்டு என்று உணர்ந்தான் வீரபாண்டியன்.

சற்று நேரத்திற்கெல்லாம் அவன் நினைத்த படி அங்கே ஒரு புலி நீர் அருந்த வந்தது. புலி நீர் அருந்திக் கொண்டிருக்க, புலியின் எதிரே மீன் ஒன்று இங்கும் அங்குமாக தண்ணீரிலிருந்து துள்ளிக் கொண்டு இருந்தது.

இதை உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தான் வீரபாண்டியன். அவனது கண்களுக்கு அது அவனும் சோழர்களும் போலத் தெரிந்தது.

புலி அந்த மீனைப் பிடிக்க முடியாமல் அங்கிருந்த புதருக்குள் செல்ல, வீரபாண்டியனின் மனம் மகிழ்ச்சியில் துள்ளியது.

ஆனால் எதிர்பாராத விதமாக புலி அந்த மீனின் மீது பாய்ந்து அதைப் பிடித்து விட்டது. புலி பதுங்கியது பாய்வதற்கு என்று வீரபாண்டியன் உணர்ந்த நொடி அவன் மனதில் ஒரு நொடி இந்த யுதத்தில் நாம் தோற்றுவிடுவோமோ என்ற எண்ணம் வந்தது! அந்தப் புலி ஒரு நொடி வீர பாண்டியனை நோக்கி உருமிவிட்டுப் புதருக்குள் மீண்டும் சென்றது...

# அத்தியாயம் 16

போர்க்களம் செல்வதற்கு முன்னால் செம்பியன் மாதேவியைக் கண்டு ஆசி பெற்று போவது என்று தீர்மானித்துப் பழையாறை வந்துவிட்டார் ஆதித்த கரிகாலர்.

பழையாறையில் தான் அவர் அவரது குழந்தைப் பருவத்தைக் கழித்தார். அவரை வளர்த்தது செம்பியன் மாதேவி தான். அவர் குழந்தையாக இருந்த பொழுது அவர் இருந்த மாளிகையிலேயே இப்போதும் தங்கியிருந்தார்.

எண்ணற்ற நினைவலைகள் அவரின் மனதை இடி மின்னலென தாக்க, அம்மாளிகையின் கிழக்குச் சுவற்றில் யார் கண்ணிலும் தெரியாத படி அவர் அன்று எழுதிய கவிதை இன்னும் இருக்கிறதா என்று பார்ப்பதற்குச் சென்றார். அங்கே அந்தக் கலைஞனின் கவிதை இன்னும் இருக்கிறது.

அந்தச் சுவற்றில் இருந்த தூசியை ஊதினார் ஆதித்த கரிகாலர். அவர் கிறுக்கிய கவிதைத் தெரிந்தது. அதை வாசித்தார்,

***மலர்கள் அற்ற நந்தவனத்தில்***
***மலர்ந்த மலர் நீ நந்தினி !***
***ஒளியற்ற இரவில் ஒளி உன் விழி !***
***இரவும் பகலும் உன்னைக் காண வர,***
***நீயோ என்னைக் காண வருகிறாய் !***

இதெல்லாம் அவர் மனதில் புதைந்து கிடந்த பழைய நினைவுகளை மீண்டும் தூண்டியது.

முதல் முறை அவர் நந்தினியைப் பார்த்தது இன்னும் அவர் கண்ணுக்குள்ளே நீங்காத காட்சியாக இருக்கிறது. அந்தக் காட்சிக்குள் நுழைந்தார் கரிகாலர்.

அன்று எனக்குக் குதிரை ஏறும் பயிற்சி கொடுக்கப்பட்டது. எதிர்பாராத விதமாக குதிரை கட்டுப்பாட்டை இழந்து ஓடத் தொடங்கியது.

அந்தக் குதிரை மிகவும் பொல்லாத குதிரை! நேராக நகருக்குள் ஓடத் தொடங்கியது. ஒரு வீட்டிற்கு முன் என்னைத் தள்ளிவிட்டு அது வேகமாக ஓடிவிட்டது.

என் கைகளில் ரத்தம் சொட்டிக் கொண்டிருந்தது. எனக்கு எதிரே ஒரு வீடு இருந்தது. அந்த வீட்டிற்குள் இருந்தவர்கள் அனைவரும் சத்தம் கேட்டு ஓடிவந்தனர். அதில் ஒரு ஆணும் என் வயதில் ஒரு பெண்ணும் இருந்தனர். அந்தப் பெண் என்னைப் பார்த்தவுடன் உள்ளே ஓடிச் சென்று புதர்களில் மண்டிக்கிடக்கும் ஒற்றைப் பூ பூக்கும் செடியின்

www.indianguide.in

சாறை எடுத்துவந்தாள். அவள் கைகள் என்னை அழைக்க நான் அவளை நோக்கிச் சென்றேன். என் காயத்தில் அந்தச் சாறை ஊற்றிய நொடியில் ரத்தம் நின்றது.

ஒரு செம்புப் பாத்திரத்தில் களிம்பை எடுத்து என் காயத்திற்கு மருந்திட்டாள். இதே போல் என் மனதில் ஏற்படும் காயங்களுக்கு மருந்திடுவாயா பெண்ணே என்றேன். நாணம் கொண்டு ஓடிவிட்டாள். உன் பெயரைக் கூறிவிட்டு ஓடு என்றேன் நந்தினி என்று கூறி மான் குட்டி போல் அந்த வீட்டிற்குள் ஓடி மறைந்தாள்.

என்னைத் தேடிக்கொண்டு காவல் வீரர்கள் வந்தனர். அவர்களோடு நான் மீண்டும் பழையாறை அரண்மனை சென்றேன்.

சில தினங்களுக்குப் பிறகு நானும் குந்தவையும் கோவிலுக்குச் செல்ல, அங்கே இருந்த சன்னதியில் ஒரு பெண் பாடும் இனிய ஓசை கேட்டது. அதைக் கேட்ட குந்தவை வாய் பிளந்து நின்றாள். அன்று அங்கே பாடியதும் அதே பெண்தான். நந்தினி பாடி முடித்த பிறகு அவளை நோக்கி ஓடினேன். என்னை நினைவிருக்கிறதா? இங்கே பார் என் காயம் முழுவதுமாக ஆறி விட்டது என்றேன். அவள் சிரித்துக்கொண்டே, “நல்லது! மிகவும் சீக்கிரம் ஆறிவிட்டதே” என்று கூறி, “நான் வருகிறேன் அம்மா தேடுவாள்” என்று ஓட, அவளுடன் அன்று என் மனமும் ஓடியது.

ஒருநாள் எனக்கு வாள் பயிற்சி கொடுக்கப்பட்டுக் கொண்டிருந்தது. செம்பியன் மாதேவி என் பயிற்சிகளை மேற்பார்வையிட வந்திருந்தார். அன்று அவரைக் காண ஒரு பட்டர் குடும்பம் வந்திருந்தது. அவர்களோடு நந்தினியும் வந்திருந்தாள்.

அவளைக் கண்ட அந்த நொடி என் வேகம் மேலும் இருமடங்காகியது. என்னைத் தாக்க வந்தவர்களை அன்று நான் இரட்டிப்பு வேகத்தில் தாக்கினேன். அவள் அங்கிருந்து சென்றவுடன் அவளுடன் பேச வேண்டும் என்ற எண்ணமும் கூடியது.

அவளைத் தனியே நந்தவனத்திற்கு வரும்படி தூது அனுப்பியதும் என் நினைவில் இருக்கிறது. அவள் எனக்காக அந்த நந்தவனத்திற்கு வந்தாள். அவளின் கண்களைக் கண்டு என்னை நானே மறந்த நாட்கள், அவளின் சொல் கேட்டு இதை விட இனிமையான இசையும் உண்டோ என்று ஏங்கிய நாட்கள், அவளோடு இருந்த ஒவ்வொரு நொடியும் வாழ்க்கையின் முழு திருப்தியும் எனக்குக் கிடைத்தது என்று எண்ணிய நாட்கள்!

அன்று நந்தவனத்தில் வந்த அவளிடம் என் மனதில் உள்ளதைக் கூற முயற்சித்தேன்.

“என்னுடன் புறப்பட்டு வருவதற்கு உன்னுடைய சம்மதத்தைத் தெரியப்படுத்து, உடனே புறப்பட்டுச் செல்வோம். உனக்காக நான் இந்தப் பெரிய சோழ இராஜ்யத்தைத் தியாகம் செய்துவிட்டு வரச் சித்தமாயிருக்கிறேன். பிறந்த நாட்டையும் தாய் தந்தையரையும் உற்றார் உறவினரையும்

www.indianguide.in

துறந்துவிட்டு வருகிறேன். கப்பல் ஏறிக் கடல் கடந்து செல்வோம். கடல்களுக்கு அப்பால் எத்தனை எத்தனையோ அற்புதமான தீவுகள் இருக்கின்றன. அவற்றில் ஒன்றை அடைவோம். உன்னைக் காட்டிலும் இந்த இராஜ்யம் எனக்குப் பெரியதன்று." என்று கூறினேன். இன்று அந்த வார்த்தைகளுக்கு மிகவும் வருந்துகின்றேன்!

அவளைச் சாதாரண பட்டர் குலத்துப் பெண் என்று அனைவரும் கூறினர். எனக்கு அவள் ஒரு நாளும் சாதாரண பெண்ணாகத் தெரியவில்லை.

கரிகாலரின் மனக்குமுறல் கேட்டது போல குந்தவை அந்த அறைக்குள் வந்தாள்.

"நாளை காலை நீங்கள் போருக்குச் செல்வதாக அறிந்தேன்! உன்னைப் பார்க்கவேண்டும் என்று தோன்றியது அண்ணா அது தான் வந்தேன்"

ஆதித்தர் மௌனம் சாதித்தார்.

"உன் மனதை இன்னும் சில துயர்கள் வாட்டுகிறது என்று உன்னைப் பார்க்கும்போதே அறிகிறேன்! உன் கவனம் போரில், நீ எடுத்த சபதம் நிறைவேறுவதில் இருக்கவேண்டும்."

"நீ கூறுவது முற்றிலும் உண்மை குந்தவை! நான் உன்னிடம் நிறைய பேச வேண்டும் ஆனால் அதற்கு இது சரியான நேரம் இல்லை. போர் முடியட்டும் நாம் மூவரும் சேர்ந்து காஞ்சி செல்வோம் அங்கே

இப்பொழுது நாம் கட்டிக்கொண்டு இருக்கும் பொன் மாளிகையில் வசிப்போம்!”

அண்ணன் தங்கை இருவரும் பேசிக்கொண்டே அந்த இரவைக் கழித்தனர்.

அடுத்த நாள் அதிகாலையில், ஆதித்த கரிகாலர் மாளிகையின் தோட்டத்தில் உலாவினார். அங்கே இருந்த ஒரு மரம் அவரை அதனிடம் இழுத்தது. அந்த மரத்தில் தான் அவரது காதல் முதல் முதலில் பொறிக்கப்பட்டது!

அந்த மரத்தைத் தடவிய கரிகாலரின் கையைப்பிடித்து காலத்தின் முன்னோக்கி அழைத்துச் சென்றது அந்த மரம்.

“திருக்கோவிலூர் மலையமான் ஒரு முறை பழையாறை வந்திருந்தார். அவர் என்னை அவருடன் அழைத்துச் சென்று எனக்கு எல்லா வித பயிற்சிகளையும் வழங்கினார். அவருடன் நான் இருந்த நாட்கள் என்னை நானே செதுக்கிய நாட்கள்! என்னுடைய கோபத்தை ஆக்கப்பூர்வமாக எப்படிக் காட்டுவது எனும் வித்தையை எனக்குக் கற்றுக்கொடுத்த குரு அவர்.

நான் சில வருடங்கள் கழித்து மீண்டும் பழையாறை வந்தேன். எனக்கு வரவேற்பு மிகவும் சிறப்பாகக் கொடுக்கப்பட்டது.

அன்று அந்தக் கூட்டத்தில் நான் கண்ட அந்த முகம், அன்று என்னுடன் என் காயங்களுக்கு மருந்திட்ட அதே

www.indianguide.in

முகம்! ஒளி பொருந்திய சந்திரன் மண்ணுலகில் பெண்ணாக பிறந்தால் அவளைப் போலத்தான் இருக்கும். அவளின் கண்கள் இமைக்க மறுத்து என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அன்று இரவு அவளை நாங்கள் எப்பொழுதும் சந்திக்கும் அந்த நந்தவனத்திற்கு வரச்செய்தேன். அவளிடம் உனக்கு என்ன வரம் வேண்டுமோ கேள் நந்தினி என்றேன் அதற்கு அவள், "எனக்குச் சோழ சிங்காதனத்தில் ஏறவேண்டும் இந்த மொத்த சோழ ராஜ்யமும் என்னை மஹாராணி என்று அழைக்கவேண்டும். நான் காலால் இட்ட பணியை அனைவரும் தலையால் செய்யவேண்டும். இதற்கு இடையூறாக யார்வந்தாலும் அவர்களை நீங்கள் கொன்றுவிடவேண்டும்!

குந்தவைக்கு என்னை அறவே பிடிப்பதில்லை. அவளுக்கு என்னைக் கண்டு உள்ள பொறாமையால் என்னை நசுக்கப் பார்க்கிறாள். நான் ராணியாக பதவியேற்ற நொடி அவளை நாம் பாதாளச் சிறையில் அடைத்து விடலாம். அருள்மொழி தடுத்தால் அவனையும் கொன்றுவிடலாம்."என்று அவள் கூற, நிறுத்து உன் பேச்சை என்று நிலம் அதிரக் கத்தினேன்!

அடியே ராட்சசி! உன்னை எப்படி நான் விரும்பினேன்!? உனக்காக நான் என் ராஜ்யத்தையும், என் உறவுகளையும் துறக்க நினைத்தேன். ஆனால் நீயோ என் நாட்டையும் என் உறவுகளையும் பலி கேட்கிறாய். உனக்காக நான் எதையும் செய்வேன் என்று நீ என்னை வைத்து என் நாட்டை என் உயிரிலும் மேலான இந்தச் சோழதேசத்தைக் கேட்கிறாய்.

www.indianguide.in

சென்றுவிடு இல்லையெனில் நானே உன்னைக் கொன்றுவிடுவேன்.

குந்தவையைத் தொட முடியுமா உன்னால்? இல்லை அருள்மொழியைக் கொல்லத்தான் முடியுமா? அவர்களை நீ தொட வேண்டாம் இந்த எண்ணம் போதும் உன்னை நீயே அழித்துக்கொள்ள! உனக்குப் புத்திசொல்லி திருத்தும்

நோக்கம் எனக்கு இல்லை. உன்னைக் காணவே எனக்கு அருவருப்பாக இருக்கிறது! செல் இங்கிருந்து என்று கத்தினேன்.

“கோமகனே! நான் கூறியதை எல்லாம் மன்னித்துவிடுங்கள். ஆனால் என்னால் உங்களை மறக்க முடியாது” என்று அவள் கூற,

நந்தினி நீ ஒரு பாம்பு உன் குணம் விஷத்தைக் கக்குவது. உன் விஷம் சோழ தேசத்துக்கு ஆபத்து. காலைச் சுற்றும் பாம்பைக் கொல்வதே பாதுகாப்பு என்று கூறி வாளை உருவினேன். ஆனால் உன்னை என்னால் கொலை செய்ய முடியாது. உனக்குக் கடைசி வாய்ப்பளிக்கிறேன் ஓடிவிடு! இந்த நாட்டை விட்டு எங்கேயாவது ஓடிவிடு! என் கண் முன்னே மீண்டும் வராதே என்று கூறி வேகமாக நடக்கத் தொடங்கினேன்.

அதற்கு பிறகு ஒருமுறை அவள் இந்த ராஜ்யத்தை விட்டு மதுரைக்குச் செல்லும்போது அவளைக் கடைசியாகப் பார்த்தேன். அதன் பிறகு அந்த முகத்தை இன்னும் நான் பார்க்கவில்லை.

www.indianguide.in

சட்டென்று ஒரு குரல் கேட்க கண்ணைத் திறந்தார் ஆதித்தர். கண்ணைத் திறந்த நொடி எல்லாம் கனவு போல மறைந்தது. சேனை புறப்பத் தயாராக இருக்கிறது என்று வீரன் ஒருவன் வந்து கரிகாலரிடம் கூற, கரிகாலர் செம்பியன் மாதேவியைக் காணச் சென்றார்.

அரியணை ஒன்றில் மிகவும் கம்பிரமாக அமர்ந்திருந்தார் செம்பியன் மாதேவி. அவரைக் கண்ட நொடி கரிகாலரின் மனதில் இருந்த காயங்கள் எல்லாம் மறைந்து முகம் மலர்ந்தது.

“வணக்கம் அன்னையே!” என்று கரிகாலர் கூற, “வா! மகனே உனக்காகத் தான் காத்திருந்தேன். இந்த யுத்தம் உனக்குப் பெயரையும் புகழையும் பெற்றுத் தரும். நீ வரலாற்றில் ஒரு மாவீரனாக இடம் பிடிக்க என் ஆசிகள்” என்றார் செம்பியன்மாதேவி.

அவரின் பாதம் தொட்டு வணங்கி, “நான் சென்று வென்று வருகிறேன்” என்று கூறினார் கரிகாலர். செம்பியன் மாதேவி அவரை ஆரத்தழுவி உச்சி முகர்ந்தார்......

சேனா வீரர்கள் எல்லாம் அணிவகுத்து நிற்க, கடலென வீரர்கள் இருந்தனர். தேர்ப் படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை என்ற நால்வகை படைகளும் அப்போரில் பங்குபெற இருந்தன. பழைய தலைநகரான உறையூரில் சேனைகள் அணிவகுக்கப்பட்டு அனைவரும் போருக்கு அழைத்துச் செல்லத் தயாராக இருந்தனர்.

www.indianguide.in

“வெற்றிவேல்! வீரவேல்” என்ற முழக்கம் விண்ணைத் தொட, சேனை இப்பொழுது உறையூர் நோக்கிப் புறப்பட்டது.

www.indianguide.in

# அத்தியாயம் 17

தஞ்சை மற்றும் பழையாறையிலிருந்து சேனா வீரர்களும் சேனைத் தளபதிகளும் உறையூர் வந்து சேர்ந்து விட்டனர். அந்தக் கூட்டத்தில் கரிகாலர் வரவில்லை. வீரர்களை முன்னே செல்லுமாறு கூறி அவர் குதிரையோடு எங்கோ போய்விட்டார்.

வந்தியத்தேவன் வீரர்களை அணிவகுத்து நிற்குமாறு உத்தரவிட்டான். நால்வகைப் படைகளும் அணிவகுத்து நின்றன. அதில் யானைப்படை அனைத்துப் படைகளைக் காட்டிலும் கூடுதலாகவே இருந்தது. யானைப் படையின் தளபதி இமயனை அழைத்தான் வந்தியத்தேவன்.

“தளபதி இமயரே! நம்மிடம் உள்ள யானைகளுக்குப் போதுமான குடிநீர் வசதி சேவூரில் உண்டு அல்லவா? அதை நீங்கள் பார்த்து விட்டீர்களா? உணவுப் பொருட்கள் எல்லாம் சரிவர கிடைக்கும் அல்லவா?” என்று வந்தியத்தேவன் கேட்க.

“கிடைக்கும் வந்தியத்தேவரே! அங்கே இயற்கையாகவே அமைந்திருக்கும் குளங்கள் அதிகம். நீர்த் தட்டுப்பாடு ஏதும் வராது.”

“சரி அனைவரும் கவனமாகக் கேளுங்கள்! செம்பியன் கிலானடி நல்லூர், செம்பியன்

மாதேவியின் பெயரால் அமைந்திருந்த ஊரே இன்று பாண்டியனின் வெற்றிக்குப் பின்னால் சேவூர் என்று அறியப்படுகிறது! பாண்டியனின் இரண்டாம் தலைநகரம் என்றும் கூட இந்தச் சேவூரைக் கூறலாம். இந்தப் போரில் வெற்றி பெற்று மீண்டும் செம்பியன் கிலானடி நல்லுரை மீட்டு அதில் சோழ கொடியை பறக்கவிடவேண்டும்" என்று வந்தியத்தேவன் கூறிக் கொண்டிருக்கும் பொழுதே, புழுதியைக் கிளப்பி கொண்டு ஒரு குதிரை வந்து நின்றது.

அந்தக் குதிரையின் மீது அமர்ந்து இருந்தவர் ஆதித்த கரிகாலர்**.**

"எங்கே சென்று விட்டீர்கள்?" உடம்பில் எல்லாம் ஏதோ காயம் இருக்கிறதே" என்று வந்தியத்தேவன் கேட்க,

"வரும் வழியில் ஒரு அடர்ந்த வனத்தைக் கண்டேன் எப்பொழுதும் போல வேட்டைக்குச் சென்றேன்!"

"வேட்டை நல்லபடியாக முடிந்ததா?"

"நல்லபடியாக முடிந்தது நண்பா!" என்று புன்னகையோடே கூறினார் கரிகாலர்.

"எங்கே வேட்டையாடிய விலங்குகளைக் காணவில்லையே?" என்று ஐயத்தோடு வந்தியத்தேவன் கேட்க,

"வேட்டைக்குச் சென்றேன் என்று கூறினேன், விலங்குகளை வேட்டையாடச் சென்றேன் என்று

கூறினேனா? நான் வேட்டையாடச் சென்றது ராஷ்டிரகூடர்களை!"

"அவர்கள் இங்கே எங்கே வந்தார்கள்?" என்று ஆச்சர்யமாகக் கேட்டான் வந்தியத்தேவன்.

"சேனையுடன் நான் வந்து கொண்டிருக்கும் பொழுது அந்த அடர்ந்த வனத்தில் ஓரிடத்தில் பத்துப் பேர் போவதைக் கண்டேன். எனக்குச் சந்தேகம் வந்துவிட்டது. இது பாண்டியனின் சதியா என்று! பின்பு நான் அவர்களைப் பின்தொடர்ந்து செல்ல, அங்கே அவர்களின் ரகசிய மந்திராலோசனை சபை நடந்து கொண்டிருந்தது, பின்பு நடந்தவற்றை நான் கூற வேண்டுமா?"

"வேண்டாம் வேண்டாம் புரிகிறது இளவரசே! இங்கே நமது சிற்றரசர்களின் சேனை மொத்தமும் அணிவகுக்கப் பட்டுவிட்டது. இன்று இரவு விருந்து முடிந்ததும் அனைவரும் சேவூர் நோக்கிப் புறப்படலாம்" என்றான் வந்தியத்தேவன்.

"உன் விருப்பம் போல் நடக்கட்டும்! எனக்குச் சேனை தளபதிகளுடன் நாளை காலை நேர்காணலை ஏற்பாடு செய்! நாளை போருக்கு முன்னால் எடுக்கப்படும் முடிவுகள் அனைத்தும் அந்தக் கூட்டத்தில் எடுக்கப்படும். உன்னை இந்தச் சேனையின் தலைமைத் தளபதியாக நியமிக்கிறேன்" என்று ஆதித்தர் கூற, வீரர்கள் அனைவரும் 'ஆதித்த கரிகாலர் வாழ்க! வந்தியத்தேவன் வாழ்க' என்று கோஷங்களை எழுப்ப, வந்தியத்தேவன் ஆதித்த கரிகாலரை ஆரத் தழுவினான்.

www.indianguide.in

***கோடியக்கரை ….***

பொழுது விடிந்து சில நாழிகைகள் ஆகிவிட்டது. பூங்குழலி அருள்மொழிவர்மருடன் கடற்கரையில் நடந்து கொண்டிருந்தாள்.

“பெண்ணே! உனது வீரம் என்னை வியப்பில் ஆழ்த்தி விட்டது. நீ இந்தக் கடலில் சுற்றாத இடமில்லை என்று முருகையன் கூறினார்.” அவர் சொற்களைக் கேட்டு வெட்கம் கொண்டாள் பூங்குழலி.

“நல்லது சமுத்திர குமாரி! நான் இப்போது இலங்கை நோக்கிச் செல்ல வேண்டும். அங்கிருந்து வந்தவுடன் ஒரு முறை தஞ்சையில் வந்து அரண்மனையில் என்னைச் சந்திப்பாயாக!”

பூங்குழலிக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை மீண்டும் ஓடத் தொடங்கிவிட்டாள்.

“விசித்திரமான பெண்ணாக இருக்கிறாளே? இப்போது நான் என்ன கூறி விட்டேன் என்று ஓடிப் போகிறாள்! பெண்களைப் புரிந்து கொள்வது கடலைப் புரிந்து கொள்வது போலக் கடினம்!” என்று தனக்குத் தானே பேசிக்கொண்டு புலிக்கொடி உயர்ந்து பறந்து கொண்டிருந்த ஒரு பெரிய கப்பலில் ஏறினார் அருள்மொழிவர்மர்.

கப்பல் கோடிக்கரை விட்டு இலங்கை நோக்கிச் சென்று கொண்டிருக்க, அருள்மொழிவர்மர் பூதி விக்கிரமகேசரியை நோக்கி,

www.indianguide.in

"ஐயா! இலங்கையில் உள்ள அந்த மலைத் தொடரைப் பற்றி நீங்கள் அறிவீர்களா?" என்றார்.

"நானும் இப்போதுதான் முதன்முறை இலங்கை வருகிறேன். அதனால் அம்மலையைக் கண்டதில்லை இளவரசே! ஆனால் அதைப் பற்றிய கேள்வி ஞானம் எனக்கு உண்டு"

"எல்லாம் சிவன் விட்ட வழி! அவன் என்ன நினைக்கிறான் என்று அவனுக்குத் தான் தெரியும். அனுராதபுரத்தைப் பற்றி நான் கேட்டதுண்டு. அங்கே அருமையான நகரங்கள் எல்லாம் உள்ளது என்று ஒருமுறை அக்கா கூறினாள்."

"இளையபிராட்டி அறியாத செய்தி ஒன்றும் இல்லை, அங்கே அழகிய நகரங்கள், ஓவியம் தாங்கி நிற்கும் பாறைகள், பெரிய பெரிய புத்தர் சிலைகள் இவை அனைத்தும் உள்ளது. என்று நானும் கேள்வியுற்றேன்"

"இந்த மகிந்தன் ஒரு முட்டாள், பேராசைப் பிடித்தவனாக இருக்கிறான். எங்கோ கடல் கடந்து இருந்துகொண்டு தஞ்சையில் வசிக்கும் நம்முடன் வீண்வம்பு கொள்வது ஏன்?" என்றுஅருள்மொழி கேட்க,

"இலங்கைக்கும் நமக்கும் இருக்கும் தொடர்பு மிகவும் தொன்மை வாய்ந்தது. விஜயாலய சோழனின் வழி வந்த ஆதித்த சோழருக்கு, கண்ணர தேவர், பராந்தக தேவர் என்று இரு மகன்கள் இருந்தனர். கண்ணர தேவன் ராஷ்டிரகூடர்களின் வழி வந்தவன். அதனால்

www.indianguide.in

ராஜ்யம் பழுவேட்டரையர்களின் வழிவந்த பராந்தக சோழனுக்குப் போகிறது. இதைக் கண்டு கோபமுற்ற கண்ணர தேவன் ராஷ்டிரகூடர்களின் கூட்டத்தோடு இணைகிறான். அவர்களுடன் சேர்ந்து சோழ தேசத்தை அழிக்க நினைக்கும் பொழுது, பராந்தக சோழர் படை பலம் கொண்டு அவர்களைத் தடுத்து விட்டார். பின்பு சேரர்களும் பாண்டியர்களும் கூட சோழ தேசத்திற்கு கீழ் வந்து விட்டனர்.

அப்பொழுது பராந்தக சோழனுக்கு ஒரு ஆசை வருகிறது. நாம் பாண்டியனின் மணி முடியை எடுத்து அணிந்து கொள்ள வேண்டும் அது நம்மிடம் வந்து விட்டால் பாண்டிய தேசம் சோழ தேசம் ஆகிவிடும் என்று எண்ணுகிறார்.

ஆனால் பாண்டிய மன்னன் அவனது மணிமுடியை இலங்கையில் எங்கோ மறைத்து வைத்து விட்டான்.
அன்று தொடங்கியது இலங்கைக்கும் நமக்குமான பந்தம்" என்றார் பூதி விக்கிரம கேசரி.

"இலங்கை பற்றிய வர்ணனை சில இலக்கியங்களில் உள்ளது. அங்கே வசிக்கும் மக்களுக்குத் துன்பமே என்ன என்று தெரியாதாம்! உயரமான கட்டிடங்கள் அதன் உயரத்தை வர்ணிக்க அந்தக் கட்டிடங்களில் மேல் மேகம் உரசுமாம். அங்கே அந்த மேகங்களைப் பிழிந்து அதிலிருந்து பொழியும் நீரை உபயோகிப்பார்களாம்." என்று கூறினார் அருள்மொழி.

"ஆஹா! உங்களிடம் இலக்கியங்களில் ஞானமும் உள்ளதா?"

www.indianguide.in

“எனக்குத் தமிழ் என்றால் மிகவும் பிடிக்கும் அதுவும் இலக்கியங்களைப் படிப்பது மிகவும் பிடித்தமான ஒன்று. ஒரு நாள் தமிழுக்காகவும் நமது தேசத்திற்காகவும் ஒரு வரலாற்றுச் சுவடை நான் நிச்சயம் விட்டுச் செல்வேன்” என்றார் அருள்மொழி.

“மகிழ்ச்சி இளவரசே! இலங்கை இன்னும் சற்று நேரத்தில் வந்து விடும் என்றார் பூதி விக்கிரம கேசரி”

“அற்புதம்! அண்ணன் கூறிய முதல் கட்டளை இலங்கையின் நிலங்களை ஆராய்ந்து அதன் அறிவைப் பெற வேண்டும் என்று. நான் அங்கே சென்றவுடன் குதிரை ஏறி அருகிலுள்ள இடங்கள் எல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு வருகிறேன் நீங்கள் இவர்களுடன் சேர்ந்து தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள்” என்றார் அருள்மொழிவர்மர்.

“அவ்வாறே ஆகட்டும் இளவரசே!” என்றார் விக்கிரம கேசரி.

மாலைப் பொழுதில் இலங்கை வந்துவிட்டது அருள்மொழி தலைமையிலான சோழப்படை. அருள்மொழி ஏற்கனவே கூறியவாறு ஒரு குதிரை ஏறி அங்குள்ள அடர்ந்த வனத்திற்குள் நுழைந்தார்.

***பழையாறை ....***

குந்தவையின் மடியில் தலை வைத்துப் படுத்துக் கொண்டிருந்தாள் வானதி.

www.indianguide.in

“அக்கா அவர் இலங்கை சென்றிருப்பாரா?”

“அவன் சென்று விட்டானா என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் உன் மனம் எங்கோ பறந்து தூரதேசம் சென்று விட்டதை நான் உணர்கிறேன். எனக்கு உன்னைக் கண்டால் தான் பயமாக இருக்கிறது. எப்பொழுது எங்கு மூர்ச்சை அடைந்து விழுந்து விடுவாயோ என்று.”

“அக்கா!” என்று கூறிய வானதியின் தலையைக் கோதி விட்டாள் குந்தவை.

“செம்பியன் மாதேவி உங்களைக் காண வேண்டும் என்று சொல்கிறார் இளவரசி” என்று பணிப்பெண் வந்து கூற, செம்பியன் மாதேவியின் மாளிகையை நோக்கி அரசிளங்குமரிகள் இருவரும் புறப்படத் தொடங்கினர்.

***செம்பியன் மாதேவியார் மளிகை ....***

பெரிய பெரிய தூண்கள் அந்த மாளிகையைத் தாங்கி நிற்க, அவருக்கென இடப்பட்டிருந்த சிம்மாசனத்தில் சாந்தமாக அமர்ந்திருந்தார் செம்பியன் மாதேவி.

அவருக்கு முன்னால் நின்று கொண்டு பேசிக் கொண்டிருந்த மனிதன் யார் என்ற கேள்வி வானதியின் மனதில் எழுந்தது!

குந்தவையிடம் இவர் யார் என்று கேட்க, "இவர்தான் திருமலை நமது முதல் மந்திரி அநிருத்தப்

பிரம்மராயரின் சீடர்களில் ஒருவர்" என்றாள் குந்தவை.

அரசிளங் குமரிகள் இருவரும் அவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த அரியணையில் அமர, குந்தவை பேசத் தொடங்கினாள்.

“ஏதேனும் செய்தி உண்டா திருமலை?”

“முக்கியமான செய்தி ஒன்று உண்டு தேவி” என்றான் ஆழ்வார்க்கடியான்.

“என்ன செய்தி கொண்டு வந்து இருக்கிறாய்” என குந்தவை கேட்க,

“உங்களை வியப்பில் ஆழ்த்தும் அத்தகைய ஒரு செய்தி கொண்டு வந்திருக்கிறேன்.”

“காலம் கடத்தாதே! செய்தியைக் கூறு” என்று செம்பியன் மாதேவி கூற,

“பழுவேட்டரையர்கள் இருவருக்கும் ராஜ்யத்தின் மீது ஆசை வந்துவிட்டது.”

“இப்படி இருப்பதற்கு வாய்ப்பே இல்லை!” என்றார் செம்பியன் மாதேவி.

“இந்தச் செய்தியை உங்களிடம் கூறச் சொன்னது முதல் மந்திரி.” என்று பணிவுடன் கூறினான் திருமலை.

“மேலும் கூறு” என்றாள் குந்தவை.

“சின்ன பழுவேட்டரையர் தனது மகளைச் செம்பியன் மாதேவியின் புதல்வரான மதுராந்தகருக்குக் கல்யாணம் செய்து வைப்பது என்று முடிவெடுத்து விட்டார். மதுராந்தகருக்குக் கல்யாணம் செய்து அவரை அவர்கள் பக்கம் இழுத்துக் கொண்டு செம்பியன் மாதேவியிடம் ராஜ்யத்தை மதுராந்தகருக்குக் கொடுக்கும்படி கேட்கப் போவதாகத் திட்டம் தீட்டியுள்ளனர். சின்னப் பழுவேட்டரையர் உங்களை காண வந்தால் இந்தச் சம்பந்ததை ஏதேனும் கூறி வேண்டாம் என்று கூறுமாறு முதல்-மந்திரி கூறி அனுப்பினார்.”

“மதுராந்தகன் ஆட்சிக்கு வருவது கனவிலும் நடைபெறாத ஒன்று, அவன் கடைசி வரை சிவ தொண்டு செய்வான் என்று நான் என் கணவருக்கு வாக்குக் கொடுத்திருக்கிறேன்” என்றார் செம்பியன் மாதேவி.

குந்தவை ஏதோ கூற வந்துவிட்டு கூறாமல் அமைதியாக யோசித்தாள்.

அரங்கம் முழுதும் அமைதி நிலவ,

“சின்ன பழுவேட்டரையர் உங்களைக் காண வந்து கொண்டிருக்கிறார் என்று செய்தி வந்துள்ளது” என்று மெய்க் காவல் வீரன் வந்து கூறினான்.

# அத்தியாயம் 18

***இலங்கை ....***

இலங்கையின் நிலங்களை அறிவதற்காக அருள்மொழி ஒரு குதிரை ஏறி அங்கிருந்த காடுகளுக்குள் சென்றார். எங்கு பார்த்தாலும் வானளவு உயர்ந்து நிற்கும் மரங்கள். மரத்தைச் சுற்றி அடர்ந்த புதர்கள், உடம்பும் சதையும் போல் பின்னி பிணைந்திருக்கும் கொடிகள், இங்கும் அங்குமாக தேங்கி நிற்கும் குட்டைகள், குட்டைகளில் துள்ளிக்குதிக்கும் மீன்கள், அந்தக் குட்டைகளில் நீர் அருந்த வரும் வனவிலங்குகள் என்று பார்க்கும் காட்சிகள் அனைத்தும் ரம்மியமாக இருக்க, அருள்மொழி அடர்ந்த வனத்திற்குள் சென்று கொண்டிருந்தார்.

வெகுநேரமாக யாரோ அவரைப் பின்தொடர்ந்து வருவது போல ஒரு உணர்வு அவரின் மனதிற்குள் இருந்து கொண்டிருந்தது. அதற்கேற்றார்போல அவ்வப்போது புதர்களுக்குள் அசைவுகளும் சத்தங்களும் கேட்டுக்கொண்டிருக்க, குதிரையை விட்டு இறங்கி சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டிருந்தார் அருள்மொழி.

அவர் நின்ற இடத்திற்கு வலப்புறம் இருந்த புதரில் இருந்து அசைவுகள் தென்பட அவர் அங்கே உற்று நோக்கிக் கொண்டிருந்தார். அவர் அந்தப் புதரை உற்றுநோக்கிக் கொண்டிருந்த சமயத்தில் அந்தப்

புதரின் உள்ளிருந்து ஒரு பெண் அவரை இழுத்துத் தரையில் இட , அவருக்குப் பின் புறமாய் இருந்தது எய்யப்பட்ட அம்பு அவர் முன்பு இருந்த மரத்தில் சொருகி நின்றது.

அந்தப் பெண்ணின் கண்ணை ஒரு நொடி உற்று நோக்கினார் அருள்மொழி. அதில் கருணை பொங்கி

வழிந்தது, அடுத்த நொடியே அருள் மொழி எழுந்து நின்று அவர் குதிரையுடன் பிணைக்கப்பட்டிருந்த வளரியைப் புதர்நோக்கி எறிந்தார். அந்த வளரி காற்றில் சுழன்று சுழன்று சென்று யாரையோ தாக்கியது போலத் தெரிந்தது.

மீண்டும் அருகில் இருந்த பெண்ணை நோக்க அவர் நின்ற பக்கம் திரும்பிய பொழுது அங்கே யாரும் இல்லை. அப்பெண் எங்கோ ஓடி விட்டதை உணர்ந்தார் இளங்கோ அருள்மொழி.

அந்தப் புதரின்  உள்ளே இருந்தவனைத் தோளில் தூக்கி குதிரை ஏறினார் அருள் மொழி. அவன் தலையில் வளரி தாக்கியதால் அவன் மயங்கி இருந்தான்.

அவனைச் சோழர்கள் அமைத்திருந்த கூடாரம் நோக்கி எடுத்துச் சென்றுகொண்டிருந்தார் அருள்மொழி.

***பழையாறை .....***

வீரம் எனும் சொல்லுக்கு எடுத்துக்காட்டாக திகழ்ந்து விளங்கும் பழுவேட்டரையரின் வரவு அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது என்பதை அவர்கள் முகத்தைப் பார்க்கும் பொழுதே உணரலாம்.

"நல்வரவு!" என்று செம்பியன் மாதேவி கூறி வரவேற்றார்.

“வணக்கம் தாயே! நான் உங்களிடம் மதுராந்தகன் திருமணம் பற்றி பேசிவிட்டுப் போகலாமென்று வந்தேன்” என்றார் சின்ன பழுவட்டரையர்.

"அஹா! அவனுக்குத் திருமண வயது வந்துவிட்டதை நீங்கள் கூறித் தான் எனக்குத் தெரிகிறது!" என்று செம்பியன் மாதேவி கூற, ஒரு நொடி என்ன கூறுவது என்று தெரியாமல் தடுமாறி நின்றார் சின்னப் பழுவட்டரையர். பிறகு தன்னைச் சமாளித்துக்கொண்டு,

“தேவி! தங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றால் என்னுடைய மகளுக்கு உங்கள் மகன் மதுராந்தகனைத் திருமணம் செய்து வைக்கலாம் என்று ஆசைப்படுகிறேன்.”

செம்பியன்மாதேவி முகத்தில் எந்த ஒரு சலனமும் இல்லாமல், "தவறாக எடுத்துக் கொள்ள வேண்டாம்! அவன் உயிர் உள்ளவரை சிவ தொண்டு செய்ய வேண்டும், அவன் சிவதொண்டு செய்வான் என்று

www.indianguide.in

நான் என் கணவருக்கு வாக்களித்து இருக்கிறேன்" எனக் கூறினார்.

“எனக்கு இது நன்றாகத் தெரியும் தேவி! அது தெரிந்துதான் மதுராந்தகன் என் மருமகனாக வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். நானும் ஒரு சிவ பக்தன் தானே! அதனால் தான் என்னைப் போன்று சிவனை வணங்கும் அவனை என் மருமகன் என்று கூற விரும்புகிறேன்” எனச் சின்ன பழுவட்டரையர் கூற செம்பியன் மாதேவி எதுவும் பேசாமல் மௌனமாக இருந்தார்.

மீண்டும் சின்ன பழுவேட்டரையர் பேசத் தொடங்கினார், “உங்களுக்குச் சம்மதம் என்றால் வருகின்ற முழு நிலவு தினத்தில் அவர்களது திருமணத்தை நடத்தலாம்” என்றார்.

“திருமணம் பற்றி நான் யோசிக்க வேண்டும். பிறகு ஆதித்த கரிகாலனும், அருள்மொழியும் போர்க்களத்தில் இருக்கும் பொழுது எப்படி என்னால் மங்கல நிகழ்வுகளை நடத்த முடியும்? இந்தப் போர் முடிந்த பிறகு இதைப் பற்றி நாம் ஆலோசிப்போம்” என்றார் செம்பியன் மாதேவி.

சின்ன பழுவட்டரையர் அவர் கூறுவதும் சரியே என்பது போல எதுவும் பேசாமல் சரி என்று ஒப்புக்கொண்டார்.
“நான் விடை பெற்றுச் செல்கிறேன் ,கோட்டைக் காவல் பற்றி அரசருடன் கலந்து பேச வேண்டும்” என்று கூறி அந்த அறையில் இருந்து வெளியேறினார்.

குந்தவை வானதி இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்க, அங்கே அறைக்குள் ஒளிந்து கொண்டிருந்த ஆழ்வார்க்கடியான் வெளியே வந்தான்.

***சேவூர் ....***

சோழ சைனியம் சேவூரை வந்தடைந்துவிட்டது. அங்கே அவர்கள் தங்குவதற்காகக் கூடாரங்கள் அமைக்கப்பட்டு, பாசறை முழுவதும் ஆட்கள் நிரம்பி வழிய உணவுகள் தயார் செய்யப்பட்டுக்கொண்டிருந்தது.

தளபதிகள் அனைவரும் கரிகாலன் அழைப்பை ஏற்று மந்திராலோசனை சபைக்கு வந்தனர். அங்கே ஒரு பெரிய வரைபடம் இருந்தது.

ஒரு மேடையை எடுத்து வரும்படி உத்தரவிட்டார் ஆதித்தர். அதன் மேலே சேவூரின் வரைபடம், பின் சிப்பாய்கள், யானைகள், குதிரைகள் போன்ற மாதிரிகளை வைத்தார்.

“இந்த வரைபடம் சேவூரின் போர்க்களம். இந்த மலைப் பகுதிகள் எல்லாம் பாண்டியனின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. அங்கேதான் நிறைய மறைவிடங்கள், குகைகள் எல்லாம் இருக்கின்றன. பின்பு மேலிருந்து அம்பு எய்து மிக எளிதாக ஒரு சேனையை வெறும் நூறு வீரர்களைக் கொண்டு வென்று விட முடியும். அதனால் அந்த மலை இருக்கும் எல்லைக்குள் யாரும் செல்லக்கூடாது” எனக் கூறிக் கொண்டிருக்கும் கிழவரே சோழர்களின் போர் வியூகங்களை வகுக்கும் செங்கதிரவன்.

www.indianguide.in

பராந்தக சோழர் காலத்திலிருந்து சோழ நாட்டுக்குப் போர் வியூகங்களை வகுப்பது அவரது வேலை. இன்று அந்தக் கிழவருக்கு எப்படியும் தொண்ணூறு வயதுக்கு மேல் இருக்கும். இந்தத் தள்ளாத வயதிலும் சோழ தேசத்திற்காகப் பாடுபட்டுக் கொண்டுதான் இருக்கிறார்.

ஒரு முறை இவரும் உத்தமசீலியும் கண்ணரதேவரை எதிர்த்துப் போருக்குச் செல்ல வழியில் ஒரு பெரிய நதி அவர்களைத் தடுத்து நிறுத்தியது. அந்த நதியைக் கடந்தாலே சோழர்கள் போருக்குச் செல்ல முடியும்.

சற்றுநேரம் இருவரும் என்ன செய்வது என்று யோசித்துக்கொண்டிருந்தனர். பின் யானை பிளிறும் சத்தம் கேட்டது. “யாரங்கே யானைப் படைத்தளபதியை வரச் சொல்லுங்கள்” என்றார் செங்கதிரவர்.

யானைப்படைத் தளபதி வர அவனைப் பார்த்து, “யானைகளை வரிசையாக நீரில் இறக்கி நிறுத்து பின் அதன் மேல் ஏறி நாம் அனைவரும் அந்தப்பக்கம் சென்றுவிடலாம்” என்றார் செங்கதிரவன். இவர்கள் திட்டத்தின் படியே அந்தக் கரைக்குச் சென்றனர். பின் அந்தப் போரில் வெற்றியும் பெற்றனர்.

அந்தக் கிழவனின் மூளை, பொல்லாத மூளை என்று அனைவரும் கூறுவதுண்டு!

செங்கதிரவன் பேசத் துவங்கினார் . “இன்று இரவின் முதலாம் நாழிகையில் பாண்டிய தளபதிகளுடனான

www.indianguide.in

போர் விதிகளைப் பற்றி விவாதிக்கும் கூட்டம் நடக்க உள்ளது என்பதை இங்கு அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். வீரபாண்டியனை எதிர்த்த மன்னர்கள் யாரும் அவனை மறுமுறை போர்க்களத்தில் சந்தித்ததே இல்லை. ஆனால் சுந்தர சோழர் மட்டும் மீண்டும் அவரிடம் போருக்குச் செல்கிறார். அந்த வீரபாண்டியனை நான் கூட இதுவரைக் கண்டதில்லை" என செங்கதிரவன் கூற,

"ஆம் சென்றமுறை உத்தமசீலி பங்கெடுத்த போரில் கூட கடைசி நாள் மட்டும் வீரபாண்டியன் போர்க்களம் வந்ததாகக் கூறுவார்கள்" என்றான் வந்தியத்தேவன் .

"வீரபாண்டியனைக் கண்டவர்கள் யாரும் இந்த அரங்கில் இல்லை" என்றார் ஆதித்த கரிகாலர்.

"போர்த் தந்திரங்கள் பற்றி நாம் இப்பொழுது விவாதிப்போம். மீதமுள்ள சமயத்தைப் பயனுள்ளதாக ஆக்கிக் கொள்வோம்" என்றான் வந்தியத்தேவன்.

"இந்த நிலம் மிகவும் வறண்ட நிலம் காற்று எப்பொழுதும் கிழக்கிலிருந்து மேற்காக வீசிக் கொண்டுதான் இருக்கிறது. காற்றின் திசை அறிந்து நம்பிதான் விற்படை எளிதில் முன்னேறிச் செல்லும். பாதுகாப்பான கவசங்களை அணிந்துகொண்டு காலாட்படை முன்னேறிச் சென்று வியூகங்களை வகுக்க வேண்டும். யானைப் படையும் குதிரைப் படையும் காலாட்படைக்குப் பக்கவாட்டில் செல்ல,

எளிதில் நாம் வீரபாண்டியனின் சேனையை நிர்மூலமாக்கி விடலாம்" என்றார் செங்கதிரவன்.

“ஐயா! நீங்கள் கூறியது அருமையான யோசனை ஆனால் நாளைய போரில் நாம் அவர்களை முன்னேறி வர விடவேண்டும்” என்று ஆதித்த கரிகாலர் கூற அந்தக் கிழவருக்கு ஒன்றும் புரியவில்லை.

“ஏன் கரிகாலா? இப்படிக் கூறுகிறாய்” என்று செங்கதிரவன் கேட்க,

“எல்லாம் காரணமாகத்தான்! நாளை முதல் ஆறு நாழிகைக்கு நாம் பின்தங்கி தான் இருக்க வேண்டும். அவர்களது சேனையை நமது எல்லைக்குள் வர விடவேண்டும். பின்பு என்ன செய்ய வேண்டும் என்பதை நாளை போர்க்களத்தில் நான் கூறுகிறேன்” என்றார் ஆதித்த கரிகாலர்.

கரிகாலனின் பேச்சு அனைவருக்கும் ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் கொடுத்தது. ஏனென்றால் இதுவரை செங்கதிரவன் வகுத்த வியூகங்கள் அனைத்தும் வெற்றி பெற்ற வியூகங்களே! அதை மாற்றியவர் யாரும் இல்லை.

“சரி அனைவரும் சென்று ஓய்வெடுங்கள்! நாளை காலை யார் யார் எந்தப் படைக்குத் தலைமையேற்றுச் செல்ல வேண்டும் என்பதை இரவு அந்தச் சபை முடிந்தவுடன் நான் கூறுகிறேன். இப்பொழுது என்னைச் சற்று தனியாக விடுங்கள்”

என்று கரிகாலர் கூற அனைவரும் அந்தப் பாசறையை விட்டு வெளியே சென்றனர்.

***வீரபாண்டியனின் பாசறை ....***

வீரபாண்டியனின் முதல் மந்திரி திருவாளன், "போருக்குச் சுந்தர சோழன் வரவில்லை. புலிக்குப் பதில் ஏதோ எலி வந்திருக்கிறது" எனக்கூற,

அதிர்ச்சியில் அவன் யார் என்று வீரபாண்டியன் கேட்க, அவனது பெயர் "ஆதித்த கரிகாலன் என்று கேள்வியுற்றேன்" என்றான் திருவாளன்.

நந்தினி இதைக் கேட்ட நொடி அவள் கையில் இருந்த மண்பானையைக் கீழே போட்டாள்! அவள் முகம் முழுவதும் வியர்க்கத் தொடங்கியது!

"வந்திருப்பது பொந்துகளில் ஒளிந்து கொள்ளும் எலி அல்ல , யானைகளைக் கூட கொன்று அதன் மேல் ஏறி நின்று உறுமும் புலி" என்று முணுமுணுத்தாள் நந்தினி.

வீரபாண்டியனின் எண்ணம் முழுவதும் சுந்தர சோழன் ஏன் போருக்கு வரவில்லை? அவன் போடும் திட்டம் என்ன? என்பதிலே சென்றுவிட்டதால் நந்தினி கூறியவை அவன் காதில் கேட்கவில்லை.

"சரி! திருவாளா! நீ இரவு நடக்கவேண்டிய விஷயத்தைப் பற்றி யோசி. நான் சென்று அவனைப் பார்த்துவிட்டு வருகிறேன்!" என்று தான் யாரைப்

பார்க்கப் போகிறோம் எனக் கூறாமல் எழுந்து சென்றான் வீரபாண்டியன்.

ஆதித்த கரிகாலன் வந்தியத்தேவனுடன் அங்கிருந்த ஒரு மரத்தடியில் பேசிக்கொண்டிருந்தார். கரிகாலர் தூரத்தில் இருந்த கூடாரத்தை உற்று நோக்கிக் கொண்டிருந்தார்.

“என்ன இளவரசே! எதைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?” என்றான் வந்தியத்தேவன் .

“சோழ தேசத்திற்கு எதிரிகளின் எண்ணிக்கையும் அதிகம். அதே போல ராஜவிசுவாசிகளும் அதிகம். அங்கே பார் அந்தச் செங்கதிரவரை! இந்தச் சோழதேசம் எப்பொழுதெல்லாம் போருக்குப் போகிறதோ அப்பொழுதெல்லாம் அவரும் இருப்பார். தந்தை ஆட்சியில் நடந்த அனைத்துப் போரிலும் தளபதியாக, சேனாதிபதியாக இருந்தார். சென்றமுறை வீரபாண்டியனுடன் நடந்த போரில் சேனையின் சேனாதிபதி பொறுப்பு இவருக்கே! அந்தப் போரில் இவரின் திட்டங்களும் வியூகங்களும் சோழரின் வெற்றியை உறுதிசெய்தது.

அன்று என் தந்தையைக் கூட இவரே காப்பாற்றினார். உடல் முழுவதும் போரில் பெற்ற வடுக்கள், இந்த வயதிலும் சோழ தேசத்து மேல் உள்ள விசுவாசம், இந்தப் போரிலும் அவர் பங்குபெறுகிறார். இவரைப் போன்ற ஆட்களை இப்பொழுது பார்ப்பதே அறிதாகிவிட்டது” என்றார் கரிகாலர்.

www.indianguide.in

சற்று இடைவெளி விட்டு மேலும் பேசத் தொடங்கினர், “இந்த யுத்தத்தில் இவரின் அறிவுரைகளைக் கேட்க வேண்டும் என்று பெரியபழுவேட்டரையர் என்னிடம் வேண்டிக் கொண்டார். தந்தையும் அதையேச் சொன்னார். அனால் அவரின் உதவி இந்த முதல் நிலை யுத்தத்தில் தேவை இல்லை என்று எண்ணுகிறேன் அதனால் தான் அவர் கூறிய வியூகத்தை வேண்டாம் என்றேன்” என்றார் கரிகாலர் .

“நமது வெற்றிக்கு இவரின் பங்கு மிகவும் அவசியமானது என்பது எனக்குப் புரிகிறது இளவரசே!” என்றான் வந்தியத்தேவன் .

“இந்தப் போரில் அவர் பங்கு பெரியது. அவரின் அனுபவம் இக்கட்டான நேரத்தில் நம்மைப் பாதுகாக்கும்” என்றார் ஆதித்தர்.

***போர் பாசறை ....***

இரு கூட்டத்தாரும் அமர்ந்திருக்க, அவர்கள் தரப்பில் கிழவர்கள் முன் நின்று பேசுவதற்காக எழுந்து நின்றுகொண்டிருக்க, சோழர்கள் தரப்பில் செங்கதிரவன் பேசத்தொடங்கினார்.

"போர் பன்னிரண்டு நாழிகை தொடர்ந்து நடக்கும். போர் நடப்பதும் முடிவதும் சங்கு நாதம் கொண்டு அனைவருக்கும் அறிவிக்கப்படும். ஒரு வாள் ஏந்திய வீரன் இன்னொரு வாளேந்திய வீரனுடன் மட்டுமே போர் புரிய வேண்டும். இரவு நேரங்களில் போர் நடக்கக் கூடாது. பன்னிரண்டாம் நாழிகை சங்கநாதம் கேட்டவுடன் யாரும் போர் புரியக் கூடாது.

www.indianguide.in

மருத்துவர்களை யாரும் தாக்கக் கூடாது. காயமடைந்த வீரனைக் காக்கும் வீரனை யாரும் தாக்கக் கூடாது. போரில் சரணடைந்தவரை யாரும் வதைக்கக் கூடாது" எனச் செங்கதிரவன் கூறச், சற்று நேரத்திற்குச் சபை அமைதியாக இருந்தது.

பாண்டியத் தளபதிகளில் ஒருவன், "சுந்தர சோழன் ஒரு தொடை நடுங்கி, உயிர் மேல் கொண்ட பயத்தினால் அவன் போர்க்களத்திற்கு வராமல் அவனது மகனை அனுப்பி இருக்கிறான்" என்றான். பாண்டிய கூட்டமே சிரிக்கத் தொடங்கியது.

"போருக்கு வீரர்கள் யார் வேண்டுமானாலும் வரலாம்" என வந்தியத்தேவன் கூற,

"எனில் சுந்தர சோழன் வீரன் இல்லையோ?" என அங்கே சிம்மாசனத்தில் அமர்ந்திருந்த ஒருவன் கேலியாகக் கேட்டான்.

அவனது உடை அலங்காரங்களைக் கண்டு இவன்தான் வீரபாண்டியனாக இருக்க வேண்டும் என்று ஆதித்த கரிகாலன், வந்தியத்தேவன், பார்த்திபேந்திர பல்லவன், சோழப் படைகள் அனைவரும் யூகித்துக் கொண்டனர்.

மேலும் அவன் கேலியாக பேசத் தொடங்கினான், "ஒருமுறை சோழ இளவரசனின் தலை கொண்டவன் எனும் பட்டம் பாண்டிய வம்சத்திற்கு போதாது போலும், மீண்டும் மீண்டும் வம்சத்தின் இள இரத்தத்தை இழப்பதற்காக போர்க்களத்திற்கு அனுப்பி வைக்கின்றனர்" எனக் கூறினான்.

www.indianguide.in

வந்தியத்தேவனுக்குக் கோபம் எங்கிருந்து வந்ததோ தெரியவில்லை, தனது வாளை உருவி ஒரே பாய்ச்சலில் அங்கு சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தவன் அருகே சென்று அவன் கழுத்தில் வந்தியதேவன் வாளை வைத்து, “உன்னைக் கொல்ல இந்த நொடிப்பொழுது போதும், ஆனால் உன் மரணம் என் கையால் நிகழக்கூடாது” எனக் கூற அவன் அவனது சுயநினைவிற்கு வந்த பொழுது பாண்டிய வீரர்களின் வாட்கள் வந்தியத்தேவனின் கழுத்தில் மொய்த்துக் கொண்டிருந்தது.

பார்த்திபேந்திரன் அவனைக் கட்டுப்படுத்தி வா என்று அழைத்துவந்தான். ஆதித்த கரிகாலர் மவுனமாகவே இருந்தார்.

# அத்தியாயம் 19

***இலங்கை ....***

அடர்ந்த வனங்களை எல்லாம் தாண்டி, பெரும்பாடுபட்டு அவனைத் தனது தோளில் சுமந்துகொண்டு கூடாரத்திற்கு வந்து சேர்ந்தார் அருள்மொழிவர்மர்.

பூதி விக்கிரம கேசரிக்கு இளவரசரின் தோளில் இருப்பவன் யார் என்று புரியவில்லை. மிகவும் பதற்றத்துடன் வீரர்களும் சேனாதிபதியும் இளவரசரை நெருங்கினர்.

அவரைத் தொட்டுத் தொட்டுப் பார்த்து, "தங்களுக்கு ஒன்றும் ஆகிவிடவில்லையே? இவன் யார்?" என்று வினா மேல் வினா எழுப்பிக் கொண்டிருந்தார் பூதிவிக்கிரம கேசரி.

இளவரசர் புன்னகையுடன், "இவன் பாண்டிய நாட்டு ஆபத்துதவிகளில் ஒருவன். அவனது கையில் இருக்கும் மோதிரத்தை உற்றுப்பாருங்கள் மீன் சின்னம் பொறிக்கப் பட்டிருக்கிறது. புதரில் மறைந்திருந்து என்னைத் தாக்க முயற்சித்தான் அப்பொழுது ஒரு தாய் என்னைக் கீழே தள்ளி இவனிடமிருந்து என்னைக் காப்பாற்றினார்.

www.indianguide.in

இவனை நான் தாக்கி செயலிழக்க வைத்து இங்கே கொண்டு வந்து விட்டேன், அந்தத் தாய் கண்ணிமைக்கும் நேரத்தில் எங்கோ ஓடி மறைந்து விட்டார்.” எனப் பெருமூச்சு விட்டு அருள்மொழி கூற,

உறையில் இருந்த வாளை உருவி அவன் கழுத்தில் வைத்து, "இவனை இங்கே இரண்டு துண்டாக வெட்டி விட வேண்டும்" என்று விக்ரம கேசரி கூறினார்.

“வேண்டாம்! இவனை வைத்துத் தான் இந்தப் போரை நாம் வெல்லப் போகிறோம்! இவனது கைகால்களை அவிழ்த்து விடுங்கள் பின்பு எல்லோரும் அவரவர் வேலையைப் பாருங்கள்” என்றார் அருள்மொழி.

“கையில் கிடைத்த பாண்டிய துரோகியை எவ்வாறு விடுவது? இளவரசருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது” என்று தன் மனதிற்குள் நினைத்துக் கொண்டார் விக்ரம கேசரி.

சற்று நேரத்திற்கெல்லாம் அவனுக்குச் சுய நினைவு வந்தது! அவன் கையிலிருந்த மோதிரம் எங்கோ போய் விட்டதை உணர்ந்தான். கைகளும் கால்களும் பிணைக்கப்படவில்லை. ஓடுவது சற்று கடினமாகத்தான் இருந்தது. இருந்தாலும் சத்தம் போடாமல் அங்கிருந்து ஓடத் தொடங்கினான்.

அங்கிருந்து ஓடிச் சென்று ஒரு மலை மீது ஏறினான். அந்த மலை அனுராதபுரத்தின் அரண்! அந்த மலை

உச்சியில் இருந்து பார்க்கும் பொழுது இலங்கை நகரின் எழிலும் அழகும் தெள்ளென தெரியும்!

மலைமீது ஒரு சிறிய நகரம் இருந்தது. அந்த நகரின் மத்தியில் ஒரு பிரம்மாண்ட கோட்டையும் அதைச் சுற்றி பெரிய பெரிய அகழிகளும் இருந்தன. அந்தக் கோட்டையை நோக்கி ஓடத் தொடங்கினான் பாண்டிய வீரன்.

வெகு நேரம் கழித்துக் கோட்டையின் வாயில் அவன் கண்ணுக்குத் தெரிந்தது. காவல் வீரர்களிடம் ஏதோ கூறிவிட்டு கோட்டைக்குள்ளே சென்றான். தன் முகத்தை முழுவதுமாக மூடிக் கொண்டு, அங்கிருந்த வீரர்களிடம் தளபதி எங்கு இருக்கிறார் எனக் கேட்க, அவர்கள் தளபதி இருக்கும் இடத்தைக் கூறினர்.

இரண்டடி எடுத்து வைத்த பிறகு, "தளபதியை நீ எதற்காக பார்க்க வேண்டும்" என்று காவலன் கேள்வி கேட்க,

“நான் இலங்கையிலிருந்து வீரர்களைப் பாண்டிய தேசம் அழைத்துச் செல்ல வந்த தூதுவன், என் பெயர் தமிழினியன்!” எனக் கூறினான்.

“ஓ பாண்டிய தூதுவனா நீ? சரி உங்களுக்குத் தேவைப்படும் சேனை தயாராக உள்ளது வேகமாகச் சென்று அவர்களைக் கூட்டிக்கொண்டு போ!” என்கிறான் காவல் வீரர்களில் ஒருவன்.

மீண்டும் மூச்சிரைக்க ஓடி ஓடி ஒரு வழியாக தளபதி இருக்கும் இடத்தை அடைந்து விட்டான்! தளபதியின்

www.indianguide.in

காதில் ஏதோ முணுமுணுக்க சரி வீரபாண்டியனின் விருப்பம் எதுவோ அது போல நடக்கட்டும் என்று கூறி ஒரு பெரும்படையை அவனுடன் அனுப்பி வைத்தான் இலங்கையின் தளபதி.

ஒருநாள் பிரயாணத்திற்குப் பிறகு சேனா வீரர்கள் அனைவரும் இவனுடன் துறைமுகத்திற்கு வந்து சேர்ந்தனர். ஓலை ஒன்றை அங்கிருந்த வீரனிடம் கொடுத்து இதை பத்திரமாக அங்கே சேர்த்து விடு! என்று கூறி விடைபெற்றான். தமிழினியன்.

மரக்கலங்கள் அனைத்தும் சேவூர் நோக்கிப் புறப்படத் தொடங்கின. இம்முறை துறைமுகத்தில் இருந்து புறப்பட்ட வீரர்கள் எண்ணிக்கை மிகவும் அதிகம்!

***சேவூர் ....***

அதிகாலையில் தளபதிகளை அவசரமாக வரச் சொல்லியிருந்தார் ஆதித்த கரிகாலர். அங்கே தளபதிகளுடன் இன்றைய போரில் வியூகம் எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றி விவாதம் நடந்ததாக போர் வீரர்கள் பேசிக் கொண்டிருப்பதை நாம் கேட்கலாம்!

பாண்டியனின் படைத்தளபதிகளும் மிகவும் வீரத்துடன் விவாதித்துக் கொண்டிருந்தனர். இவ்வளவு பெரிய அரசனை எதிர்த்து இந்தச் சிறுவன் வந்திருக்கிறானே? என்று ஏளனமாகப் பேசிக்கொண்டிருந்தனர்.

நந்தினியின் மனதில் மட்டும் ஒருவித அச்சம்! இருவரில் ஒருவர் தான் இருக்கப்போகிறது அது யார் என்று காலம் தீர்மானிக்கட்டும் என்று அவள் மனதிற்குள் நினைத்துக் கொண்டே இருந்தாள்.

இரு படையினரும் போர்க் களம் நோக்கி வந்து கொண்டிருந்தனர். முதலில் பாண்டியனின் படைகள் மொத்தமும் அணிவகுத்து நிற்கின்றது.

சோழப் படைகள் ஒன்றின் பின் ஒன்றாக வந்து கொண்டிருந்தன. முதலில் காலாட்படை வந்தது, அதன்பிறகு குதிரைப் படை வந்தது, பின்பு ரதங்கள் அனைத்தும் ஒன்றன் பின் ஒன்றாக அணிவகுத்து நிற்க,

"களங்கள் அதிர களிறுகள் பிளிற" வந்துகொண்டிருந்த யானைப் படையைக் கண்டு ஒரு நொடி பாண்டிய வீரர்கள் அஞ்சித்தான் போனார்கள்.

யானைகள் ஒன்றாக நடந்து வரும் பொழுது அது நிலநடுக்கம் போலத் தான் இருந்தது. பாண்டியரின் யானைப் படையோ சில ஆயிரம் யானைகளைக் கொண்டதாக இருந்தது. அதற்கு இருமடங்கில் இருந்தது சோழர்களின் யானைப்படை.

சோழர்களின் யானைகளின் தந்தத்தில் உலோகத்தால் ஆன கூர்மையான பொருட்கள் இணைக்கப்பட்டிருந்தன. யானைகள் துதிக்கையில் ஒருவித முள் போன்ற உலோகப் பந்துகளைச் சுழற்றிக்கொண்டு வருவதைக் கண்ட பாண்டிய தளபதிகள் அதிர்ந்தே போய் விட்டனர்.

www.indianguide.in

காரிருளில் ஒளிரும் நிலவைப் போல அந்தக் கருநிற யானைக் கூட்டத்தின் மத்தியில் ஒரே ஒரு வெள்ளை யானை இருந்தது. அதன் மேல் அமர்ந்திருந்தது ஆதித்த கரிகாலன். அது சோழ தேசத்தின் பட்டத்து யானை ஐராவதம். இந்திரனின் வெள்ளையானைக்கு நிகரான யானை இது. ஒருமுறை ஸ்ரீவிஜயத்தின் அரசன் சோழ தேசம் வந்த பொழுது இதை சோழர்களுக்குப் பரிசளித்தான்.

காலட்படைக்குத் தளபதியாக கந்தமாறனும், தேர்ப் படைக்குத் தளபதியாக பார்த்திபேந்திர பல்லவனும், குதிரைப் படைக்குத் தளபதியாக வந்தியத்தேவனும், யானைப் படைக்குத் தளபதியாக இமயனும், சேனாதிபதியாக ஆதித்த கரிகாலனும் இருக்க, ஒவ்வொரு படையிலும் உபதளபதிகள் ஐந்து பேர் இருந்தனர்.

வீரர்களுக்கு ஒலி எழுப்பும் கருவிகள் கொடுக்கப்பட்டிருந்தன. ஆபத்து நேரங்களில் அருகில் இருக்கும் படைகளின் உதவியை நாட இந்தக் கருவி பயன்படுத்த வேண்டும் என்று கரிகாலர் கூறியிருந்தார்.

இன்றைய போரின் வியூகம் எப்படி இருக்கப் போகிறது என்று பாண்டியர்களுக்குப் புரியவில்லை. பாண்டிய படையிலும் எண்ணற்ற வீரர்கள் அணிவகுத்து நின்று கொண்டிருந்தனர்.

யானைப் படைக்குத் தளபதியாக அதியன் இருக்க, குதிரைப் படைக்குத் தளபதியாக கோவன் இருக்க,

தேர்ப் படைக்குத் தளபதியாக மருதன் இருக்க, காலாட் படைக்குத் தளபதியாக சுந்தரன் இருக்க, வீரபாண்டியனை மட்டும் ஆதித்த கரிகாலரின் கண்கள் தேடிக்கொண்டிருந்தது. படைகளுக்கு எல்லாம் பின்னால் கடைசியில் ஒரு ரதத்தில் அவன் இருப்பதை யானை மேல் இருந்து எளிதாகப் பார்க்க முடிந்தது.

போர்த் தொடங்குவதற்கான சங்கநாதம் ஊதப்பட்டு விட்டது. இரு பிரிவு வீரர்களும் முன்னேறிச் சென்று கொண்டிருந்தனர்.

பாண்டியனின் குதிரைப்படை தொடக்கத்திலிருந்தே ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தது. வந்தியத்தேவன் இதைப்பற்றி ஒன்றும் கவலைப்படாமல் முன்னேறிச் செல்ல பார்த்துக்கொண்டே இருந்தான்.

குதிரைகள் கனைத்துக் கொண்டு சீறிப் பாய்ந்து கொண்டிருக்க பாண்டிய வீரர்களைத் தனது ஈட்டியால் தாக்கிக் கொண்டிருந்தான் வந்தியத்தேவன்.

பாண்டிய வீரர்களிடம் சென்ற குதிரைகள் எதையோ கண்டு பயப்படுவதை சற்று நேரத்திற்கெல்லாம் புரிந்துகொண்டான் வந்தியத்தேவன்.

குதிரை மேலிருந்து கீழே இறங்கி பாண்டிய வீரனின் குதிரை ஒன்றைப் பிடித்து நிறுத்தினான் வந்தியத்தேவன்.

பிடிபட்ட குதிரையின் அருகில் சென்ற பொழுது ஒரு வித துர்நாற்றம் வீசிக் கொண்டிருந்தது. அந்தக் குதிரையின் மேல் ஏதோ ஒரு திரவம் பூசப்பட்டிருந்தது. “இந்தத் திரவம் காரணமாகத்தான் பாண்டிய குதிரைகளை நம்மால் நெருங்க முடியவில்லையோ? இது என்ன பொருள் இப்படி துர்நாற்றம் வீசுகிறதே?” என்று தனக்குத்தானே பேசிக் கொண்டிருந்த வந்தியத்தேவனைப் பின்னிருந்து ஒரு குதிரை தாக்கி தரையிலிட்டது.

அந்தக் குதிரை மேல் அமர்ந்து இருந்தவன் பாண்டிய குதிரைப் படையின் தளபதி கோவன்.

"நேற்று இருந்த தைரியம் இன்று உனக்கு இல்லையா? பார்த்தாயா சோழ குதிரைப் படைகள் எல்லாம் அழிந்து கொண்டிருப்பதை!” என்று கூறிச் சிரிக்கத் தொடங்கினான் கோவன்.

வந்தியத்தேவன் தன் விரல்களை உதட்டில் வைத்து ஒருவித ஒலி எழுப்பிய உடன் மின்னல் போல எங்கிருந்தோ ஓடி வந்து அவன் முன் நின்றது ஆழி.

இந்தக் குதிரையே அன்று ராஷ்டிரகூடர்களின் கூட்டத்திடமிருந்து வந்தியத்தேவனைக் காப்பாற்றியது. வந்தியத்தேவன் ஒரே பாய்ச்சலாக குதிரை மேல் ஏறி அமர்ந்தான். பின்பு முதுகில் சொருகி வைத்திருக்கும் ஈட்டிகளை எடுத்து இரண்டு கைகளில் பிடித்துக்கொண்டு கோவனை நோக்கி முன்னேறிச் சென்று கொண்டிருந்தான்.

கோவன் அவனது குதிரையைத் திருப்பிப் பின்வாங்குவது வந்தியத்தேவனுக்குப் புரிந்தது, பின்வாங்கிய கோவனைத் துரத்தத் தொடங்கினான் வந்தியத்தேவன்.

போர்க்களத்தின் எல்லை தூரத்தில் இல்லாததை உணர்ந்தான் வந்தியத்தேவன்,

“ஆஹா! இவனைத் துரத்திக் கொண்டு வந்து இவன் விரித்த வலையில் சிக்கிக் கொண்டிருப்போம்!

இதுவல்லவா நேற்று கரிகாலர் கூறிய மலைமுகடு,” தனது மடியில் இருந்த தொலைநோக்கியை எடுத்துப் பார்க்க மேலே நூற்றுக்கும் மேற்பட்ட பாண்டிய வீரர்கள் வில்லுடன் நின்று கொண்டிருந்தனர்.

“சரிதான் இவனைப் பின்தொடர்ந்து சென்றால் நமது கதை இத்துடன் முடிந்து விடும், நாம் போர்க்களத்திற்கு மீண்டும் சென்று விடுவோம்” என்று தனக்குத்தானே பேசிக்கொண்டு குதிரையைக் களம் நோக்கிச் செலுத்தினான் வந்தியத்தேவன்.

ஆதித்த கரிகாலர் போரின் தொடக்கத்தில் இருந்தே தாக்கிக் கொண்டு முன்னேறிக் கொண்டிருந்தார்! அவரது யானை நூறுக்கும் மேற்பட்ட வீரர்களைக் கொன்று குவிக்க, மேலிருந்து தனது அம்பு மழையால் அவர் பங்கிற்கு அவரும் பாண்டிய வீரர்களைக் கொன்று குவித்துக் கொண்டிருந்தார்.

ஆனால் அவரது கண்கள் மொத்தமும் வீரபாண்டியனைத் தேடிக் கொண்டே இருந்தன. குதிரைப்படை மிகவும் பின்தங்கியே இருந்தது. வந்தியத்தேவனைக் காணவில்லை என்று தேடிய பொழுது தூரத்தில் ஆழி மேல் களம் நோக்கி வந்துகொண்டிருந்தான் வந்தியத்தேவன்.

இலங்கை வீரர்கள் அம்புகளை மிகவும் நேர்த்தியாக தொடுத்துக்கொண்டிருந்தனர். அவர்களின் சுருளம்புகள் காற்றில் சுருண்டு சுருண்டு சென்று சோழ வீரர்களைக் கொன்று குவித்துக்கொண்டிருந்தது.

காற்றின் வேகம் மிகவும் குறைவாக இருந்தாலும் கூட அந்த அம்புகளின் வேகம் கொஞ்சம் கூட குறையவே இல்லை. இரும்புக் கவசத்தையும் கிழித்துச் சோழர்களைக் கொன்று குவித்தது.

செங்கதிரவன் சேனையின் கடைசியில் நின்று வெற்றிலை மடித்துச் சுவைத்துக்கொண்டிருந்தார். அவர் ஏதோ

யோசித்துக்கொண்டிருக்கிறார் என்று சுற்றி இருந்த பாதுகாவலர்கள் உணர்ந்தனர்.

செங்கதிரவன் சற்று நேரத்திற்குப் பிறகு மிகவும் அமைதியாக அந்த இரு முக அம்பைத் தொடுக்கச்சொல்லுங்கள் என்றார். கட்டளை கொடுத்த பிறகு இரு முக அம்புகள் தொடுக்க பட, அந்த அம்புகள் காற்றின் வேகத்தைப் பயன்படுத்தி எதிரிகளின் மார்பில் சொருகியது. அந்த அம்பை

உருவ முயற்சித்தால் அந்த அம்பின் கழுத்தி**லி**ருந்த சிறு இரும்புத்துண்டு விடுவிக்கப்பட்டு அம்பு சொருகிய மொத்த இடத்திலுள்ள சதையைப் பிய்த்துக்கொண்டு வரும். இதற்கு முன் பாண்டியனின் அம்புகள் நிற்கவில்லை!

# அத்தியாயம் 20

வந்தியத்தேவன் மிகவும் வேகமாக குதிரை மேல் ஏறி போர்க்களம் நோக்கி வந்து கொண்டிருந்தான். குதிரை மிகவும் வேகமாக வந்த நிலையில் அவன் முன் ஐம்பதுக்கும் மேற்பட்ட பாண்டிய குதிரை வீரர்கள் அவனை வழிமறித்து நிற்க,

வந்தியத்தேவன் அவர்கள் அருகே வந்து குதிரையுடன் நின்றான். எதிர்பாராதவிதமாக அந்த வீரர்கள் அனைவரும் வந்தியத்தேவனைச் சுற்றி வட்டமடித்துக் கொண்டிருந்தனர்.

வந்தியத்தேவனின் மனதிலோ ஒரு துளி பயமில்லை, இங்கு நடப்பவை அனைத்தும் பார்த்திபேந்திர பல்லவன் கண்ணில் எதிர்பாராதவிதமாகப் பட்டது. பார்த்திபேந்திர பல்லவன் அவனது மடியில் சொருகியிருந்த கொம்பை எடுத்து ஊதத் தொடங்கினான். பார்த்திபேந்திர பல்லவன் எழுப்பிய அபாய ஒலி குதிரைப் படை வீரர்களைச் சென்று அடைந்தது. வந்தியதேவன் இருக்கும் இடத்திற்கும் வீரர்கள் இருக்கும் இடத்திற்கும் வெகு தூரம் இருந்தது. அதற்கு மேலாக பாண்டிய வீரர்கள் சோழ வீரர்கள் முன்னேறுவதைத் தடுத்துக் கொண்டிருந்தனர்.

நிலைமை கை மீறிப் போய்விட்டது. ஆதித்த கரிகாலனின் காதுகளிலும் அந்த ஒலி சென்று அடைய ஆதித்த கரிகாலன் யானை மேலிருந்து நடப்பவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

இரண்டு நாட்களாக அவர் மிகவும் அமைதியாக இருப்பதை அனைவரும் கவனித்துக் கொண்டுதான் இருக்கின்றனர். வந்தியத்தேவன் மேல் வைத்திருக்கும் அபார நம்பிக்கையோ என்னமோ அவரை வீரபாண்டியனைத் தேடி முன்னேறிச் செல்லுமாறு அவரது மனம் கூறிக் கொண்டிருந்தது.

அதற்கேற்றார்போல எதிரே வீரபாண்டியனும் பல சோழ வீரர்களைக் கொன்று குவித்துக் கொண்டிருந்தான். அவன் இருக்கும் திசை நோக்கி யானையுடன் முன்னேறிச் சென்று கொண்டிருந்தார் ஆதித்த கரிகாலர்.

வந்தியத்தேவனை வட்டமிட்டுக் கொண்டிருந்த வீரர்களில் ஒருவன், "டேய்! வீரனா நீ? நேற்று காண்பித்த வீரத்தை இப்பொழுது எங்களிடம் காட்டு!"

"உன்னால் முடிந்தவற்றையெல்லாம் முயற்சி செய்! உண்மையான வீரனாக இருந்தால் இங்கிருந்து தப்பித்துக் காட்டு" என்று கூறிச் சிரிக்கத் தொடங்க பாண்டிய வீரர்கள் அனைவரும் சிரிக்கத் தொடங்கினர்.

வந்தியதேவன் அவர்கள் பேச்சை எல்லாம் ஒரு பொருட்டாக நினைக்கவில்லை. சரியான சமயம் பார்த்துக் காத்துக் கொண்டிருந்தான். அவனது மனம் முழுவதும் இதில் ஒருவன் கூட உயிருடன் இன்று மாலை பாசறை செல்லக்கூடாது என்பதில் மட்டுமே இருந்தது.

அவன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்த சமயமும் வந்தது, அவன் காத்திருந்த உதவிப் படை இப்பொழுது அவனுக்கு அருகில் இருப்பதைப் பார்த்தவுடன், சிரிக்கத் தொடங்கினான்.

"முட்டாள் பாண்டிய வீரர்களே நீங்கள் என்னைப் பிடித்து விட்டதாக நினைத்து விட்டீர்கள். உங்கள் தளபதியுடன் சேர்த்து நான் தான் உங்களைச் சிறைபிடித்து விட்டேன்! அதோ பார் சோழப் படைகள் உங்களை நிர்மூலமாக்க இங்கே வந்து கொண்டிருக்கின்றன" என்று கூறி அவனது உடையுடன் இடுப்பில் சுற்றி வைத்திருந்த சுருள் வாளை உருவி சுழற்றத் தொடங்கினான். அவன் சுழற்றிய வேகத்தில் வாள் மண்ணில் மோதி மோதி எட்டுத்திக்கும் அவனைச்சுற்றிப் புழுதி மண்டலம் சூழ்ந்தது.

அந்தப் புழுதி மண்டலத்திற்குள் ஆள் எங்கே இருக்கிறான் என்று வெளியிருந்து பார்ப்பதே கடினமாகிவிட்டது. அந்த வீரர்கள் அனைவரும் குதிரை மேலிருந்து கீழே இறங்கி புழுதி மண்டலத்திற்குள் நுழைய, உள்ளே யாரும் இல்லை. ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டதுதான் மிச்சம்.

புழுதி போன பிறகு பாண்டிய வீரர்கள் அனைவரின் உடலிலும் காயங்கள் இருந்தன. அவர்களை அவர்களே தாக்கிக் கொண்டதற்கான காயம், இப்பொழுது அவர்கள் கண் முன்னே நிற்கும் காட்சி அவர்களை உயிருடன் கொன்றது. வந்தியத்தேவனும் குதிரைப் படையினரும் இப்பொழுது பாண்டிய வீரர்களைச் சுற்றி வட்டமடித்துக் கொண்டிருந்தனர்.

www.indianguide.in

வந்தியத்தேவனுக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை, கோவன் தப்பித்து விட்டான், இருந்தாலும் பரவாயில்லை நமது வீர சாகசம் பற்றி அனைவரும் பேசத்தான் போகிறார்கள் என்று அவனுக்கு அவனே பேசிக்கொண்டிருந்தான்.

பார்த்திபேந்திர பல்லவன் உச்சிப் பொழுதின் முதல் நாழிகைக்கு எல்லாம் பாதி தேர்ப்படையை நிர்மூலமாக்கி விட்டான். எண்ணற்ற பாண்டிய வீரர்களைக் கொன்று குவித்துக் கொண்டிருந்தான் கந்தமாறன். அனைவரும் போரில் திறம்பட செயல்பட்டுக் கொண்டிருந்தனர்.

ஆதித்த கரிகாலர் எதிர்பார்த்துக் கொண்டிருந்த தருணமும் வந்தது. வீரபாண்டியன் தனிமையில் ஆதித்த கரிகாலரின் முன்னால் நின்று கொண்டிருந்தான்.

இத்தனை நாள் தவ வாழ்வு வாழ்ந்து கொண்டிருந்த ஆதித்த கரிகாலரின் கனவு கண் முன் நின்று கொண்டிருக்கிறது. அவனைக் கொன்று அவன் தலையைக் கொண்டு போய் தஞ்சையில் வைக்க வேண்டும் இது மட்டுமே அவரது மனதில் ஓடிக்கொண்டிருந்தது. சுற்றி நடப்பவை எல்லாம் அவர் கண்ணில் படவில்லை .

வீரபாண்டியன் ஆதித்த கரிகாலனைக் கண்டவுடன் அவனும் யானைமீது ஏறி அமர்ந்தான். அவனது யானை கரிகாலர் யானையை விட உயரமாக இருந்தது, மேலும் யானையின் தந்தத்தில் முட்கள் நிறைந்த கவசமும் யானையின் துதிக்கையில் ஒரு

www.indianguide.in

முற்பந்தும் இருந்தது, யானை அந்த முற் பந்தைச் சுழற்றிக்கொண்டு முன்னேறி வந்து கொண்டிருந்தது.

கரிகாலர் யானை மீது அமர்ந்து ஒவ்வொரு ஈட்டியாக எறியத் தொடங்கினார். அது பாண்டிய வீரர்கள் மீது சொருகி பாண்டியனின் யானை முன்னேறி வருவதற்கு வழி செய்து கொண்டிருந்தது, கரிகாலரே வீரபாண்டியனின் காலன்! காலம் கடத்தாமல் கரிகாலரிடம் வந்தடைவதற்குக் கரிகாலர் வழி அமைத்துக் கொடுத்துக் கொண்டிருந்தார். வீரபாண்டியனின் யானை மிக விரைவாகவே ஆதித்த கரிகாலர் முன்னால் வந்து நின்றது.

"சோழ வீரர்கள் எல்லாம் மடிந்து கொண்டிருக்கிறார்கள் உனக்கு அதைப் பற்றி எல்லாம் கவலை இல்லையோ?” என வீரபாண்டியன் ஏளனமாகக் கேட்க,

"சோழ வீரர்கள் அவர்களின் தேசத்திற்காக சண்டை போட்டு வீர சொர்க்கம் அடைந்து கொண்டிருக்கிறார்கள், இதில் எனக்குப் பெருமையே தவிர வருத்தம் ஏதும் இல்லை. சற்று நேரத்திற்கெல்லாம் இந்தக் கூட்டம் தலைவன் அற்ற கூட்டம் ஆகிவிடும் பின் நான் ஏன் அதைப்பற்றி கவலைப்பட வேண்டும்" என்று கூறிச் சிரிக்கத் தொடங்கினார் ஆதித்த கரிகாலர்.

"வாய்ப்பேச்சில் வீரனாகத் தான் இருக்கிறாய் வாள்வீச்சில் வீரனா என்று மோதிப் பார்த்து விடலாம் வா!” என வீரபாண்டியன் கூறிய நொடியே ஆதித்த

கரிகாலன் யானை மீது ஏறி நின்று அவரது வாளை உருவி வெற்றிவேல் வீரவேல் என கோஷமிட்டு ஒரே பாய்ச்சலாக வீரபாண்டியன் யானையின் தலைமேல் குதித்து நின்றார்.

வீர பாண்டியனும் அவனது வாளை உருவி ஒரு சுழற்று சுழற்றி கீழே குதிக்க யானை தலைமேலிருந்து கரிகாலரும் கீழே குதித்தார்.

வாளுடன் வாள் மோதித் தீப்பொறிகளைக் கக்கிக் கொண்டிருந்தது, அகிலமே நடுங்கிக் கொண்டிருக்கும் இந்தச் சண்டையைப் பார்ப்பதற்காகவே வந்தியத்தேவன் குதிரைப் படையை மிகவும் வேகமாக முன்னேற்றிக் கொண்டிருந்தான்.

இரு மாவீரர்கள் சண்டையிடும் அந்த இடத்தில் காற்று கூட உள்நுழைய அச்சப்பட்டுக் கொண்டிருந்தது. வீரபாண்டியனின் வாள் வீச்சிற்குச் சற்றும் குறைந்ததாகத் தோன்றவில்லை கரிகாலரின் வாள் வீச்சு.

வலப்புறம் தாக்குவது போல் இடப்புறம் தாக்கும் பொழுதும் லாவகமாக அந்தத் தாக்குதலை எல்லாம் தடுத்து நிறுத்தினார் கரிகாலர். அவரது போர் முறை தற்காப்பு முறையாகவேதான் இருந்தது.

வீரபாண்டியன், “உன் வாள்வீச்சின் திறமை இவ்வளவுதானா? நீதான் என்னைக் கொலை செய்யப் போகிறாயா?” எனக் கூறிச் சிரித்துக் கொண்டிருந்தான்.

www.indianguide.in

வீரபாண்டியன் மிகவும் எச்சரிக்கையாகவே சண்டை போட்டுக் கொண்டிருந்தான். சற்று நேரத்திற்கெல்லாம் கரிகாலர் எதிர்த் தாக்குதலைத் தொடங்கினார். அவரது வாள் வீரபாண்டியனின் கழுத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

வீரபாண்டியன் அவனது வாளை வைத்து ஆதித்த கரிகாலனின் வாளைத் தடுத்து நிறுத்தி ஆதித்த கரிகாலரின் நெஞ்சில் ஓங்கி உதைத்தான், கரிகாலர் சற்று தூரம் சென்று விழுந்தார்.

"பரவாயில்லையே கிழவா! உன் உடலில் இன்னும் வலு இருக்கிறதே" எனக் கேலியாக கரிகாலர் கூற,

“யாரைப் பார்த்துக் கிழவன் என்கிறாய்” என்று வேகமாக கரிகாலனை நோக்கி ஓடிவந்தான் வீரபாண்டியன்.

ஒருபுறம் இவர்கள் இருவரும் மிகவும் கடுமையாக யுத்தம் செய்துகொண்டிருக்க, சோழப் படைகள் பாதிக்குமேல் பாண்டியப் படைகளால் நிர்மூலமாக்கப்பட்டது.

தேர்ப்படை மட்டும் இன்று சிறப்பாக செயல்பட்டு பாண்டிய வீரர்களைக் கொன்று குவித்தது. குதிரைப்படையும் காலாட்படையும் பின்தங்கியே இருந்தது.
வந்தியத்தேவன் குதிரைப் படையை முன்னேற்றிக் கொண்டிருக்க, பாண்டிய வீரர்கள் அவனைச்

www.indianguide.in

சோதித்துக் கொண்டிருந்தனர். ஒரு அடி நகர வேண்டும் என்றால் வந்தியத்தேவன் பத்து வீரர்களை எதிர் கொள்ள வேண்டியிருந்தது.

வந்தியத்தேவன் மிகவும் சோர்வடைந்து விட்டான். மேற்கே சூரியனும் மறையத் துவங்கி விட்டான்.

ஆதித்த கரிகாலன் வீரபாண்டியனின் தாக்குதலை சமாளித்துக் கொண்டு இருந்த நொடி எதிர்பாராதவிதமாக அவரது கையில் இருந்த வாள் நழுவிக் கீழே விழுந்தது, இப்பொழுதே முடிந்துவிடப் போகிறது இந்த யுத்தம் என்று கூறி  தனது வாளைச் சுழற்றிக்கொண்டு கரிகாலனை நோக்கி வந்து கொண்டிருந்தான் வீரபாண்டியன்.

அவனது வாள் கரிகாலனின் கழுத்தை நெருங்கும் நொடியில் யுத்தம் முடிவு பெற்றதற்கான சங்கு நாதம் கேட்டது!

"உனக்கு ஆயுள் கெட்டி! பிழைத்துப் போ! போய் உன் தந்தை சுந்தர சோழனை வந்து போர் புரியச்சொல், ஓடிவிடு அரண்மனைக்கு" என்று கூறி**ச்** சிரிக்கத் தொடங்கினான்.

ஆதித்த கரிகாலரின் கண்கள் இரண்டும் சிவந்து முகம் முழுவதும் கோபத்தின் வெளிப்பாடு. இந்த வார்த்தையை முன்னால் கூறியிருந்தால் வீரபாண்டியனின் தலை இந்நேரம் தரையில் விழுந்து இருக்கும் அது போன்ற கோபத்துடன் பூமியை ஓங்கி உதைத்தார் ஆதித்த கரிகாலர்.

www.indianguide.in

இவர்கள் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே, வந்தியத்தேவனும் பார்த்திபேந்திரனும் கரிகாலன் இருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தனர்.

***சோழர் பாசறை ….***

ஆதித்த கரிகாலர் மிகவும் கோபத்துடன் அவரது கத்தியைத் தீட்டிக் கொண்டு இருந்தார். வந்தியத்தேவன் தொண்டையைக் கனைத்துக் கொண்டு பேசத் தொடங்கினான்.

“கரிகாலரே! அவர்கள் இன்று நமது படைகளை நிர்மூலமாக்கி விட்டனர், மேலும் வீர பாண்டியனும் அவனது முழு வீரத்தை இன்று காட்டி விட்டான். ஆனால் எனக்குப் புரியாத விஷயம் ஒன்று மட்டும் தான், நீங்கள் எதற்கு இன்று தற்காப்பு முறையில் போர் புரிந்தீர்கள்? சோழர்களின் பலமே வியூகங்களை வகுத்து எதிரிகளை அழிப்பது தானே?” என்று வந்தியத்தேவன் பொறுமையாகக் கேட்க,

“நேரம் வரும்பொழுது உனக்கே புரியும் வந்தியத்தேவா!” என்று ஆதித்த கரிகாலர் கூறினார்.

“நாளைய போரின் திட்டம் பற்றி விவாதிக்க வேண்டாமா? வாருங்கள் அனைவரும் செங்கதிரவனைக் காண வேண்டும்” என்று பார்த்திபேந்திர பல்லவன் கூறினான்.

“நாளைய போர் மிகவும் கடுமையாக இருக்கவேண்டும், வீரர்கள் அனைவரும் அவர்களது முழு திறனைக் காட்ட வேண்டும். இன்று அந்தக்

www.indianguide.in

குதிரை மேல் பூசப்பட்டு இருந்த திரவம் என்னவென்று தெரியவில்லை ஆனால் அந்தத் துர்நாற்றம் காரணமாகத்தான் நமது குதிரைகள் அனைத்தும் பின் அடைந்துவிட்டன” என வந்தியத்தேவன் கூற,

“உனக்குப் பாரியைத் தெரியுமா?” என கரிகாலர் கேட்டார்.

“வேளிர் குல பாரி தானே?” என்றான் வந்தியத்தேவன்

“ஆம்!” எனக் கரிகாலர் கூறினார்.

“நன்றாகத் தெரியும்” என்றான் வந்தியத்தேவன்!

“அப்படி என்றால் மூவேந்தர்களை அன்று அவன் எப்படி வெற்றி பெற்றான் என்று உனக்குத் தெரியுமா? இயற்கையின் துணையுடன்! இயற்கையை அவனுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி மூவேந்தர்களின் படையையும் தட்டியங்காட்டில் நிர்மூலமாக்கி விட்டான்.

நமது படைகள் இன்று கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் அதுவே, முதலில் அவர்கள் அவர்களை நம்ப வேண்டும் எதிரே நிற்பவர்கள் மனிதர்கள் தான், உயிரை எடுக்கும் எமன் இல்லை, அவனால் உன் உயிரை எடுக்க முடியும் என்றால் உன்னாலும் அவன் உயிரை எடுக்க முடியும் அல்லவா இதை நமது வீரர்கள் உணர வேண்டும்.

இன்று நாம் பின்னடைவதற்கான முதல் காரணம் எதிரி மீது நமது வீரர்கள் கொண்டுள்ள பயம்தான்.

www.indianguide.in

பயம் கண்ணை மறைத்து விட்டதால் அவர்களால் போரில் வீரமாகச் செயல்பட முடியவில்லை” என்றார் கரிகாலர்.

இவர்கள் பேசிக் கொண்டிருந்த சமயம், ஒருவன் ஒரு ஓலையுடன் ஆதித்த கரிகாலரைப் பார்ப்பதற்காக வந்தான்....

செங்கதிரவர் அவரது அறையில் அனைவருக்காகவும் காத்துக்கொண்டிருந்தார். அவரின் திறமை மீது இருந்த நம்பிக்கை இன்று அவர் கொடுத்த யோசனையில் பன்மடங்காக பெருகியது.

தவிர அவர் ஆயுதங்களை வடிவமைப்பதில் வல்லவர். நிலக்கரியை மூலமாக வைத்து ஆயுதங்களை உண்டாக்கினால் அது வஜ்ராயுதமாகவே மாறிவிடும். அவர் கையால் உருவாகும் ஆயுதங்களை மட்டுமே தளபதிகள் சேனாதிபதி அரசர்கள் எல்லாம் உபயோகிக்கின்றனர்.

இத்துணை நேரமாகியும் யாரும் வரவில்லையே என்று எண்ணி செங்கதிரவன் அவரது கூடாரத்தை விட்டு வெளியே வந்தார்.

# அத்தியாயம் 21

ஓலையுடன் வந்த வீரனிடமிருந்து ஓலையைப் பெற்றுக்கொண்டான் வந்தியத்தேவன். பின் நாகரிகமாக அந்த ஓலையை ஆதித்த கரிகாலனிடம் கொடுத்தான் வந்தியத்தேவன். ஓலையை வாங்கிப் படித்த பிறகு "கதையே இப்பொழுது தான் தொடங்குகிறது வந்தியதேவா!" என்றார் ஆதித்தர்.

“அப்படியா அதில் என்ன எழுதியிருக்கிறது கரிகாலரே?”

“அதைப் பற்றி நாளை போர்க்களத்தில் கூறுகிறேன்! இப்பொழுது சென்று நாளை நடக்கவிருக்கும் போரினைப் பற்றி விவாதிப்போம் வா!”

வெகு நேரத்துக்குப் பிறகு ஆதித்த கரிகாலரின் முகத்தில் ஒரு ஆனந்த கலை. நிச்சயமாக ஏதோ ஒரு நல்ல செய்தி உண்டு என்பதை அவையிலிருந்த அனைவரும் உணர்ந்து கொண்டனர்.

கரிகாலன் இப்பொழுது நாளை நடக்கவிருக்கும் போரினைப் பற்றி விவாதிக்கத் துவங்கினார். “என் மனதில் இருக்கும் வியூகத்தைக் கூறுகிறேன் கேளுங்கள்” எனத் தொடங்கினார்.

“வீரபாண்டியனின் குதிரைப்படை மிகவும் வலிமை வாய்ந்ததாக இருக்கிறது, அவனது யானைப் படைகளில் யானைகளும் மிகவும் உயரமாக பலம் வாய்ந்ததாக இருக்கின்றன. முதலில் அந்த குதிரைப்

படையை நாம் அழிக்க வேண்டும். அவன் வலிமை அதிலே தான் இருக்கிறது. குதிரைப் படையை அழிப்பதற்கான வியூகத்தையே நாளை வகுக்க வேண்டும்." எனக் கூறிக்கொண்டே அவர் முன் இருந்த வரைபடத்தில் இருந்த வீரர்களின் உருவ பொம்மை எல்லாம் வியூகத்திற்கு ஏற்றார்போல் நிறுத்திக் கொண்டிருந்தார்.

"நாம் நாளை வகுக்க இருக்கும் வியூகம், சுழல் வியூகம்! அதாவது மகாபாரதத்தில் வரும் சக்கர வியூகத்தைப் போன்ற ஒரு சக்திவாய்ந்த வீதம், சுழன்று கொண்டே இருக்கும் இந்த வியூகத்தை எளிதில் உடைத்து விட முடியாது. அந்தச் சுழற்சிக்கு மத்தியில் சிக்கிக்கொண்ட வீரர்கள் யாராயினும் சொர்க்கத்தையே பிராப்தி பெறுவார்கள். மிகவும் யுக்தி வாய்ந்த ஒருவனால் மட்டுமே இந்த வியூகத்தை உடைத்து நடுவில் இருக்கும் நம்மை நெருங்க முடியும்.

சுழல் முகத்திற்கு முன்னால் இருந்து ஒருவர் மடிந்தால் பின் நிற்பவர், இறந்தவருக்குப் பதில் முன்னே வந்து நின்று கொள்ள வேண்டும். வியூகத்தின் நடுவில் எண்ணற்ற வீரர்கள் நின்று கொண்டே இருக்க வேண்டும். முன்னிருக்கும் வீரர்கள் சுழன்று கொண்டே வியூகத்தை முன்னேறி கொண்டு செல்ல வேண்டும். இதில் குதிரைப் படையின் பங்கு மிகவும் முக்கியம். பாண்டிய குதிரைப் படைகளை வியூகத்தின் நடுவே அழைத்து வருவது வந்தியத்தேவனின் குதிரைப் படையின் கடமையாகும்" என்று ஆதித்த கரிகாலர் கூற,

"அப்படியே ஆகட்டும்! இன்று நடந்தது போல நாளை தவறுகள் நடைபெறாது பார்த்துக் கொள்கிறேன்" என்றான் வந்தியத்தேவன்.

"தேர்ப் படைக்கும் யானைப் படைக்கும் நாளை வேலை இல்லை. நீங்கள் உங்களது போரை இன்று செய்தது போல சுதந்திரமாகச் செய்யலாம்" என்று கரிகாலர் கூறினார்.

“முக்கியமான ஒரு பதவி இன்னும் யாருக்கும் கொடுக்க வில்லையே? இதைப்பற்றி யாரும் என்னிடம் கேட்கக் கூடவில்லை! சேனையின் சேனாதிபதி பதவி கேட்பாரற்று கிடக்கிறதே” என்றார் கரிகாலர்.

“அது! சேனையின் சேனாதிபதி தாங்கள் அல்லவா?” என்றான் கந்தமாறன்.

"சேனாதிபதியா? நானா?” எனச் சிரிக்கத் தொடங்கினார் கரிகாலர்.

“இந்தப் போரில் நான் ஒரு பங்காளன். உத்தமசீலியின் தலையைக் கொய்த வீரபாண்டியனின் தலையை வெட்ட வந்த ஒரு சாதாரண பங்காளன். சேனையின் சேனாதிபதி பதவியை நான் இதோ இங்கு இருக்கும் வீரசோழ சக்கரபாணிக்கு வழங்கலாம் என்று உள்ளேன்! யாருக்கேனும் இதில் ஆட்சேபனை உண்டா?” எனக் கேட்டார் ஆதித்த கரிகாலர்.

அவையினர் அனைவரும் ஆதித்தரின் முடிவை ஆமோதித்து அமைதி காத்தனர்.

www.indianguide.in

“சக்கரபாணி பல போர்க்களங்களைக் கண்டவர், தந்தையின் காலத்தில் இருந்தே இவருக்குப் போர் செய்வது மட்டும்தான் தொழில். மேலும் தந்தை நடத்திய பல போர்களில் இவரே சேனையின் தளபதி” எனக் கூறிக்கொண்டே அங்கே ஓரமாக நின்று கொண்டிருந்த ஒரு புஜபல பராக்கிரம வீரனைச் சுட்டிக்காட்டினார் கரிகாலர்.

பார்ப்பதற்குச் சுமார் ஆறு அடிக்கு மேல் உயரம், அதற்கு ஏற்றார் போல பரந்து விரிந்த மார்பும், வீரத் தழும்புகளும், ஆங்காங்கே நரைத்த முடி, மழுங்காத பார்வை அமைதியான முகபாவம் இதுவே வீரசோழ சக்கரபாணியின் தோற்றம்.

ஆதித்த கரிகாலர் சேனாதிபதியை அறிவித்த நொடியே அனைவரும் அவர்களது விருப்பத்தைத் தெரிவித்தனர். இந்தப் பதவிக்கு இவரைத் தவிர சிறந்த ஆள் வேறு இல்லை என்று போர்க்களத்திற்கு வரும்முன் ஆதித்த கரிகாலனிடம் பெரிய பழுவேட்டரையர் கூறியது நினைவில் வந்தது.

"ஆனால் போர்க்களத்தில் இன்று அவர் போர் புரியவில்லையே” என்று வினவினான் வந்தியத்தேவன்.

“நானே யுத்தத்தை முடித்து விடுவது என்னும் எண்ணத்தில் அவரை இன்று யுத்தத்திற்கு அழைக்கவில்லை. ஆனால் அது என்னால் முடியவில்லை. நான் சேனையின் தலைமை ஏற்றால், எனக்குச் சேனையை மட்டுமே பார்க்கச் சமயம்

சரியாகப் போய்விடும். நான் வந்த நோக்கமும் நிறைவேறாமல் போய்விடும், நாளை முதல் சேனைக்குத் தலைமையாக இவர் இருப்பார். வீரபாண்டியனை அழிக்க நான் செல்வேன்" என்றார் ஆதித்த கரிகாலன்.

“சரி நேரமாகிவிட்டது அனைவரும் சென்று ஓய்வெடுங்கள்” என்றார் செங்கதிரவன்.

கரிகாலன் மட்டும் கூடாரத்திற்குச் செல்லாமல் போருக்கு அணியும் உடைகளை அணிந்துகொண்டு, போர்க்களத்திற்குச் சென்றார். அவர் விடியும் வரை போர்க்களத்தை நோக்கிக் கொண்டு அங்கேயே நின்று கொண்டிருந்தார். கரிகாலன் களத்தில் நின்று கொண்டிருப்பதை மலை முகட்டில் இருந்து நந்தினி பார்த்துக்கொண்டிருந்தாள்.

வீரபாண்டியன் நந்தினியை அழைத்து அவள் காதில் ஏதோ ஒரு ரகசியத்தைக் கூற மீண்டும் நந்தினி வீரபாண்டியனின் காதில் ஏதோ கூறி வீரபாண்டியனை உற்று நோக்கினாள்.

“சரி அவ்வாறே செய்து விடலாம்! போர் என்று வந்துவிட்டால் தர்மம் அதர்மம் எல்லாம் பார்க்க கூடாது, பாண்டவர்கள் ஜெயிப்பதற்காக அன்று கிருஷ்ணனே பல சூழ்ச்சிகளைப் புரிந்தான். நாம் புரிவதில் தவறு ஒன்றுமில்லை” என்றான் வீரபாண்டியன்.

www.indianguide.in

***யுத்தத்தின் இரண்டாம் நாள் ....***

போர்த் தொடங்குவதற்கு அரை நாழிகை மீதமிருந்தது. கரிகாலன் இரவு முழுவதும் உறங்காமல் நின்று கொண்டே இருந்தார். மகாபாரதத்தில் வரும் பீஷ்மர் போல களத்தைவிட்டு வெளியே வரவில்லை.

யுத்தம் தொடங்குவதற்கான சங்கநாதம் முழங்கத் தொடங்கியது. இரு படையினரும் அணிவகுத்து நின்று கொண்டிருந்தனர்.

யானை மேலிருந்து ஆதித்த கரிகாலன் கீழே இறங்கி களத்தின் மத்தியில் வந்து நின்றார். இடுப்பில் சொருகி இருந்த அவரது வாளை உருவி "சோழ பதாகை" என்று கர்ஜிக்க பாண்டிய படையிலிருந்து ஒரு பெரும் படை சோழ சைனியத்துடன் வந்து இணைந்தது.

வீரபாண்டியன் முகத்தில் ஒரு அதிர்ச்சியும் இல்லை. ஆனால் மீதம் இருந்த அனைவரும் நடப்பது என்ன என்று புரியாமல் விழி பிதுங்கி நின்றுகொண்டிருந்தனர்.

வந்தியத்தேவன் அவனது குதிரையை விட்டு இறங்கி நேராக கரிகாலனிடம் வந்து நின்று, “இங்கு என்ன நடக்கிறது?” என்று அதிர்ச்சியுடன் கேட்க,

நேற்றிரவு வந்த ஓலையை வந்தியத்தேவனிடம் நீட்டினார் ஆதித்த கரிகாலர்.

"கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம் ஒன்று முடிந்தது. லங்காபுரி வந்த நோக்கம் எளிதில் நிறைவேறியது, மணி முடியும் இந்திரன் ஆரமும் உள்ள இடத்தின் தேடுதல் வேட்டைத் தொடங்கியது, புலிகளின் பாதி என்னிடம் மீதி உங்களிடம் இப்படிக்குத் தமிழினியன்" என்பதைப் படித்தான் வந்தியத்தேவன்.

"எனக்கு ஒன்றும் புரியவில்லையே ஆதித்த கரிகாலரே?" என்றான் வந்தியத்தேவன்.

இலங்கை படகில் இருந்து இங்கு வந்த வீரன் ஒருவனை அழைத்து அவனிடம் நடந்தவற்றைக் கேட்குமாறு கூறினார் கரிகாலர்.

அப்படியே வீரன் ஒருவனை அழைத்தான் வந்தியத்தேவன். வந்த வீரன் நடந்தவற்றைக் கூறினான், "எதிர்பாராதவிதமாக இலங்கைப் படையை அழைத்து வர வந்த தூதுவன் அருள்மொழியின் கையில் அகப்பட்டான், கோட்டை இருப்பிடத்தை அடைவதற்காக அவனை முன்னோக்கிச் செல்ல விட்டு ஒரு மலையின் மேல் அவனை மீண்டும் கைது செய்து அவன் போக வேண்டிய வேடத்தில் அருள்மொழி சென்று எங்களை மீட்டார்."

"எப்படி மீட்டர்?" எனக் கேட்டான் வந்தியத்தேவன்.

"அவன் கையில் அணிந்திருந்த மீன் மோதிரத்தை எடுத்துக் கொண்டு முகத்தை முழுவதுமாக மூடிக் கொண்டு இலங்கைத் தளபதியிடம் சோழ தேசத்து அடிமைகளை மட்டும் அனுப்புமாறு வீரபாண்டியன்

www.indianguide.in

கோரிக்கை வைத்துள்ளார் என்று கூற, தளபதியும் யோசிக்காமல் எங்களை அவருடன் அனுப்பி வைத்து விட்டான். வந்திருப்பது இளவரசர் என்று எங்கள் யாருக்கும் தெரியாது. துறைமுகம் வந்த பிறகு அங்கே நின்று கொண்டிருக்கும் புலிக்கொடி பொருந்திய பெரிய பெரிய கலங்களைக் கண்டவுடனே எங்களுக்கு வந்திருப்பது சோழ தேசத்து வீரன் என்று புரிந்தது.

அங்கே துறைமுகத்தில் கையில் தீப்பந்தம் ஏந்தி அவரது மூடியிருந்த திருமுகத்தைத் திறந்த பொழுது தான் அது இளவரசர் இளங்கோ அருள்மொழிவர்மர் என்று எங்களுக்குப் புரிந்தது" என்றான் அந்த வீரன்.

"ஆஹா! எவ்வளவு பெரிய செயலை எத்தனை எளிதாக முடித்து விட்டார்!" என வந்தியத்தேவன் வியக்க.

"அவன் என் தம்பி நண்பா" என்றார் ஆதித்த கரிகாலர்.

அவரது கூற்றை ஆமோதித்துத் தலையசைத்தான் வந்தியத்தேவன்.

"போர் தொடங்கிவிட்டது! வா போர்புரிய போகலாம்" என்றார் கரிகாலர்.

சேனாதிபதி சேனைகளின் நடுவே நின்று கொண்டு முரசொலிக்கக் கட்டளையிட்டார். முரசொலி கேட்டதும் வீரர்கள் வட்ட வடிவில் அணிவகுத்து நிற்க மத்தியில் ஒரு பெரும்படை நிறுத்தப்பட்டிருந்தது.

முகப்புப் பகுதியில் இருந்த வீரர்கள் கேடயத்துடன் வேறு யாரும் உள்ளே நுழைந்து விடாதபடி பாதுகாத்துக் கொண்டிருந்தனர். அப்பெரும் படை சுழன்று கொண்டே இருக்க, மத்தியிலிருந்து அம்பு மழை பெய்யத் தொடங்கியது.

வந்தியதேவன் குதிரைப் படையை முன் நடத்தி சென்றுகொண்டிருந்தான். அவர்கள் தீட்டிய திட்டம் போல் குதிரைப் படையை அவன் அழைத்து வர வேண்டும். அதற்கு அவன் ஒரு யுக்தியைக் கையாள வேண்டும்.

புலிகள் பதுங்கி பாய்வது போல் பதுங்கிப் பாய்வதே வந்தியத்தேவனின் திட்டம்.

புதிய சேனாதிபதி வீரசோழன் மிகவும் சாமர்த்தியமாக வியூகத்தை நகர்த்திக் கொண்டிருந்தார், இருபுறமும் பாண்டிய வீரர்கள் கொன்று குவிக்கப்பட்டுக் கொண்டிருந்தனர்.

சோழ வீரர்கள் பாண்டிய வீரர்களின் கூட்டத்திலிருந்து அந்தப் பக்கம் சென்றது பாண்டிய வீரர்களின் மனதை வெகுவாக பாதித்து இருந்தது.

ஆனால் இது வீரபாண்டியனை ஒன்றும் செய்யவில்லை. ஏனென்றால் வீரபாண்டியனுக்கு இதெல்லாம் ஒற்றர்கள் வழி முன்பே தெரிந்துவிட்டது. இதைப்பற்றி நந்தினியிடம் விவாதிக்கும்போது அவளொரு யோசனையும் கூறிவிட்டாள்.

“சோழ வீரர்கள் இங்கிருந்து அந்தப் பக்கம் செல்லும் பொழுது நமது ஆபத்து உதவிகளையும் அவர்களுடன் அங்கே செல்லுமாறு கட்டளையிடுங்கள் இன்று யுத்தத்தில் தற்காப்பு மட்டும் போதுமானது, இன்று இரவு அனைவரும் உறங்கிய பிறகு அவரவர் கூடத்திற்குச் சென்று அனைவரையும் கொன்று விட ஆணையிடுங்கள்” என்றாள் நந்தினி.

இதற்குத்தான் வீரபாண்டியன் கிருஷ்ணரின் சூழ்ச்சியை பற்றி கூறிச் சிரித்துக் கொண்டிருந்தான்.

போர்க்களத்தில் இன்று பாண்டிய வீரர்கள் திறம்பட செயலாற்றவில்லை. பாண்டிய சேனாதிபதி தீட்டிய திட்டங்கள் அனைத்தும் தோல்வியில் முடிவுற்றது.

வீரபாண்டியன் கூறியதுபோல நம்பிக்கையான சில ஆபத்துதவிகள் வீரர்களுடன் வீரர்களாகச் சோழ சேனையுடன் கலந்து விட்டனர்.....

# அத்தியாயம் 22

உச்சிப் பொழுதின் முதல் சங்கநாதம் போர் புரிந்து கொண்டிருந்த வீரர்களின் காதில் விழுந்தது. கரிகாலன் இப்பொழுது பாண்டிய வீரர்களைக் கொன்று குவித்துக் கொண்டிருந்தார். வீரபாண்டியன் அவன் பங்கிற்குச் சோழ வீரர்களைக் கொன்று குவித்துக் கொண்டிருந்தான்.

வந்தியதேவன் மிகவும் உற்சாகத்துடன் போர் புரிந்து கொண்டிருந்தான். குதிரைப்படை இன்று மிகவும் அற்புதமான முறையில் போர் நடத்திக் கொண்டிருந்தது. நேற்றைய இழப்பைச் சரிகட்டும் விதத்தில் இன்றைய போர் அமைந்துவிட்டது.

வீரபாண்டியனை இன்று பாண்டிய வீரர்கள் தனியே விடவில்லை. அவனைச் சுற்றி கேடயம் போல வீரர்கள் அணிவகுத்து நின்றனர். அவனை நெருங்க வேண்டுமென்றால் மூன்று நிலையில் நிறுத்தப்பட்டிருந்த வீரர்களின் அரணைத் தாண்டி உள்ளே செல்ல வேண்டும். தனி ஒருவனாக அது நிச்சயம் முடியாது என்பதை ஆதித்த கரிகாலர் உணர்ந்தார்.

யாரையாவது உதவிக்கு அழைக்கலாம். அரணின் இரு வேறு திசையில் இருந்து உள் நுழைய முயற்சித்தால் வீரர்கள் குழப்பம் அடைவார்கள் என்று

மனக்கணக்கு தீட்டிக்கொண்டு வந்தியத்தேவனை அழைக்கலாம் என்று முடிவெடுத்தார்.

ஆதித்த கரிகாலன் அவரது இடுப்பில் சொருகி இருந்த சிறிய ஊதுகுழலை எடுத்து ஊதி வந்தியத்தேவனை அழைத்தார்.
சோழ குதிரைப் படைகள் பாண்டியனின் குதிரைப் படைகளைச் சுழல் முகத்திற்கு அருகே அழைத்துச் சென்று கொண்டு இருந்தன.

கரிகாலன் எழுப்பிய ஒலி வந்தியத்தேவனின் செவிகளை வந்து அடைந்த நொடியில் குதிரைப் படையில் ஒரு வீரனை நோக்கி, "நான் ஆதித்த கரிகாலரிடம் செல்கிறேன் இப்பொழுது முதல் படையை முன்னறிந்து வியூகத்தின் முகத்திற்கு அவர்களை அழைத்துச் செல்" என்று உத்தரவிட்டு ஆழியைச் செலுத்தினான்.

கந்தமாறன் போர் முகத்தில் நடுவிலிருந்து அம்பு மழைகளைப் பொழிந்து கொண்டிருந்தான். ஒவ்வொரு கணையும் ஒரு வீரனை மண்ணில் சாய்த்துக் கொண்டு இருந்தது. குருதி உடலில் இருந்து பெருகி பூமியின் தாகத்திற்கு நீராய் ஓடிக்கொண்டிருந்தது.

பார்த்திபேந்திர பல்லவன் தேர்ப் படையின் தளபதி மருதன் மற்றும் பாண்டிய ஆபத்துதவி ரவிதாசனுடன் நேருக்கு நேர் மோதிக் கொண்டிருந்தான்.

"அடேய் முட்டாள்! நீ யாருடன் மோதிக் கொண்டு இருக்கிறாய் என்று தெரியுமா உனக்கு? நான் ஒரு

மந்திரவாதியடா! என் மந்திரங்கள் உன்னை அழித்துவிடும் ஓடிப் போய்விடு. இல்லையெனில் மரணம் உன்னைக் கட்டித்தழுவும்” என்று கூறி, “ஹா.. ஹா ..ஹா ..ஹா.. ஹா” என்று சிரிக்கத் தொடங்கினான் ரவிதாசன்.

பார்த்திபேந்திர பல்லவன் எதுவும் பேசாமல் வாளை உருவி மண்ணில் குதித்தான், ரவிதாசனும் வாளைச் சுழற்றிக் கொண்டே கீழே இறங்கினான்.
பார்த்திபேந்திர பல்லவனுக்கு நிகரான வாள் சண்டை வீரன் இந்த உலகில் ஒருவரே அது அந்த அருள்மொழிவர்மர் என்று இந்த உலகிற்கே தெரியும்.

சண்டை தொடங்கி சில வினாடிகளில் ரவிதாசன் தோற்றுப் போய்விட்டான். பார்த்திபேந்திர பல்லவன் அவனைக் கொன்று விடலாம் என்று வாளைச் சுழற்றிக் கொண்டு வந்த நொடி சேனாதிபதி வீரசோழன் எழுப்பிய அபாய ஒலி கேட்டது. இவனை எப்பொழுது வேண்டுமானாலும் பார்த்துக்கொள்ளலாம் முதலில் அங்கே என்ன நடக்கிறது என்று பார்போம் என்று ஒலி வந்த திசை நோக்கி வேகமாக ரதத்தைச் செலுத்தும் படி உத்தரவிட்டான்.

மயிரிழையில் உயிர் தப்பினான் ரவிதாசன். போர்களத்தில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை மலை முகட்டில் இருந்து நந்தினி தெளிவாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

நந்தினியைச் சுற்றி ஐம்பதிற்கும் மேற்பட்ட காவல் வீரர்கள் இருந்தனர். நந்தினியுடன் பேசுவதற்காக

www.indianguide.in

யாரோ வந்திருப்பதாக நந்தினிக்குச் செய்தி சொல்லி அனுப்பப்பட்டது.

நந்தினி அங்கிருந்த குளக்கரைக்குச் சென்று கொண்டிருந்தாள். குளக்கரையில் இரண்டாம் படியில் அமர்ந்து அங்கிருந்து கற்களை எடுத்துக் குளத்தில் எரிந்து கொண்டிருந்தான் அவளது வளர்ப்பு அண்ணன் ஆழ்வார்க்கடியான் நம்பி.

நந்தினி இவனைக் கண்டவுடன் பதற்றத்துடன் குளக்கரை அருகே வந்து நின்றாள்.

"அன்புத்தங்கையே வீரபாண்டியன் உன்னைக் கவனிப்பதில் குறை ஒன்றும் வைக்கவில்லையே?" என்று ஆழ்வார்க்கடியான் கேட்க,

"நான் இங்கு இருப்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?” என வினா எழுப்பினாள் நந்தினி.

"ஆயிரம் இருந்தாலும் உன் அண்ணன் அல்லவா நான். நீ இருக்கும் இடம் எனக்குத் தெரியாமல் எப்படி போகும்?” என்றான் ஆழ்வார்க்கடியான்.

"சரி எதற்காக இங்கே வந்தீர்கள் என்று கூறுங்கள் அண்ணா"

"உன்னைப் பார்த்து, உன் மனப் பிரம்மையைக் கலைத்து, உன்னை என்னுடன் அழைத்துச் செல்வதற்காக வந்தேன். தாய் தந்தை இல்லாத பிள்ளை நீ! நந்தவனத்தில் இருந்து உன்னை அன்று நான் கண்டெடுத்தேன், அதனால் உனக்கு நந்தினி

என்று பெயர் சூட்டி ஒரு விஷ்ணு தொண்டு செய்பவராய் வளர்த்தேன்.

எதிர்பாராவிதமாக ஏதேதோ நடந்துவிட்டது உன் முன்னால் காதல் பற்றியும் இப்பொழுது நீ படும் வேதனை பற்றியும் நான் நன்கறிவேன்! இதிலிருந்தெல்லாம் உனக்கு விடுதலை அளிக்கவே நான் வந்தேன்” என்றான் ஆழ்வார்க்கடியான்.

“ஆதித்த கரிகாலர் பற்றி அல்லவா கூறுகிறீர்கள்? எனக்கு இன்றும் நன்றாக நினைவிருக்கூறது! முதல் முறை பழையாறை அரண்மனையில் அன்று அவருக்குக் குதிரை ஏறும் பயிற்சி அளிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. எதிர்பாராதவிதமாக அந்தக் குதிரை கட்டுப்பாடில்லாமல் ஓடி அரண்மனையை விட்டு வெளியே வந்து நாம் இருக்கும் வீதியில் அவரைக் கீழே தள்ளி விட்டு ஓடிவிட்டது.

அவர் கைகளில் ரத்தம் சொட்டிக் கொண்டிருக்க, அன்று அவரை முதன் முதலில் பார்த்தேன். அவரது காயங்களுக்கு மருந்திட வேண்டும் என்று தோன்றியது. நமது பாட்டி வைத்திருந்த பச்சிலை மருந்துகளை அவரது காயங்களுக்கு இட்டேன்.

அவர் என்று என்னிடம் கூறிய வார்கைகள் என் மனதில் இன்றும் ஒலிக்கிறது**!** "இதுபோன்று என் மனதின் காயங்களுக்கும் மருந்து போட்டு விடுவாயா?" என்று கேட்டுச் சிரிக்கத் தொடங்கினார்.

ஆனால் இன்றோ அவர் மனதின் காயமே நான் ஆகிவிட்டேன்.” என்று கண்ணீர் மல்க நந்தினி கூற,

www.indianguide.in

"அழாதே நந்தினி! நீ என்னுடன் வந்துவிடு நாம் இருவரும் சேர்ந்து ஆழ்வார் பாடல்களைப் பாடி வாழ்கையின் எஞ்சிய நாட்களை நடத்திக்கொள்ளலாம்" என்று கூறினான்.

இவர்கள் இங்கே பேசிக் கொண்டிருந்த சமகாலத்தில் போர்க்களத்தில் சோழர்கள் தீட்டிய திட்டம் போலே இன்று பாண்டியர்களின் குதிரைப்படை அகப்பட்டது. இப்பொழுது வீரபாண்டியனின் வியூகத்தை உடைத்து உள்ளே நுழையவேண்டும் என்று ஆதித்த கரிகாலரும் வந்தியத்தேவனும் முன்னேறிச் சென்று கொண்டிருந்தனர்.

வீரபாண்டியனின் சேனாதிபதி இரு வீரர்கள் வருவதைப் பார்த்துவிட்டு முரசொலி எழுப்புமாறு வேண்டினான். அந்த ஒலி சத்தம் கேட்டதும் வீரர்கள் ஒரு வட்டவடிவம் எடுத்து நின்றனர். அந்த வட்டத்தின் மத்தியில் வீரபாண்டியன் இருந்தான்.

வந்தியத்தேவனும் ஆதித்த கரிகாலனும் வேறு வேறு திசையில் பாண்டிய வீரர்களின் மூன்று வரிசை அரணை உடைப்பதற்காக முயற்சி செய்து கொண்டிருந்தனர்.

வந்தியதேவன் குதிரையுடன் அவனது சுருள் வாள் எடுத்துச் சுழற்றிக்கொண்டு அந்த அரணை உடைப்பதற்காக முயற்சி செய்து கொண்டிருந்தான்.

ஆதித்த கரிகாலனும் மறுமுனையில் அம்பு மழை பெய்ய வைத்து வீரர்களை வீழ்த்திக்

கொண்டிருந்தார். ஆனால் நுழைவதற்கான வாயில் மட்டும் கண்முன் தென்படவே இல்லை. ஒரு வீரன் மடிய அவன் இருந்த இடத்தில் வேறு ஒரு வீரன் வந்து நின்று கொண்டிருந்தான்.

இந்த வியூகத்தை நேரில் இருந்து கண்டால் மூன்று சுற்றுகள் கொண்ட வீரர்களின் அரண் போலத் தெரியும். ஆனால் அது ஒரு காட்சிப்பிழை மேலிருந்து இந்த வியூகத்தை உற்று நோக்கினால் வீரர்களின் கூட்டம் நடுவே மொய்த்துக் கொண்டிருப்பது தெரியும். கிட்டத்தட்ட ஆதித்த கரிகாலனும் வீரபாண்டியனும் ஒரே வியூகத்தை அமைத்து இருந்தனர்.

போர் முடிவதற்கான சங்கு நாதம் கேட்டது.

இன்றைய போரில் இழப்புகள் பாண்டிய வீரர்களுக்கே அதிகம். ஆதித்த கரிகாலன் இன்று அந்த வியூகத்தை உடைக்க முடியவில்லையே என்ற மன வருத்தத்துடன் அவரது கூடாரத்திற்குச் சென்றார். தன்னை யாரும் வந்து தொந்தரவு செய்யக்கூடாது என்று கூறிவிட்டு அந்தக் கூடாரத்தில் இருந்த தீப்பந்தத்தை அணைத்தார்.

நள்ளிரவின் முதல் நாழிகை. பாண்டிய வீரர்கள் தீட்டிய திட்டம் போல் ஒவ்வொரு கூடாரமாகச் செல்லத் தொடங்கினர். கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்த இடத்தில் கடைசி கூடாரத்தில் இருந்து ஆட்களைக் கொலை செய்யத் தொடங்கினர்.

செங்கதிரவன் இருந்த கூடாரத்திற்கு வந்தவுடன் அவர் எதிர்பாராத விதமாக இவர்களைக் கண்டு விட்டார். அபாயச் சங்கு ஒலியை உடனே சமயம் தாழ்த்தாது எழுப்பினார்.

சோழ வீரர்கள் உடனே எழுந்து விட்டனர். வந்தியதேவன் மிக அவசரமாக ஆதித்த கரிகாலர் இருந்த கூடாரம் நோக்கி ஓடத் தொடங்கினான்.

கூடாரம் மொத்தம் இருள் சூழ்ந்திருந்தது. உள்ளே பெரும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. கூடாரத்திற்குள் நுழையும் பொழுது யாரோ ஒருவன் வந்தியத்தேவனைக் குறிவைத்து அம்பு விட்டான். ஒரு நூலிழையில் அந்த அம்பு வந்தியத்தேவனைத் தாக்காமல் அங்கிருந்த ஒரு மரத்தில் குத்தி நின்றது.

யார் அவன் என்று திரும்பிப் பார்க்கும் பொழுது அவன் ஓடத் தொடங்கினான். அவனைத் துரத்திக்கொண்டு வந்தியதேவன் ஓட, அவன் கால் தடுக்கி ஒரு இடத்தில் கீழே விழுந்தான்.

"இருளில் அம்பு எய்வதற்கு நீ என்ன அந்த அர்ஜுனனா ? கூறு யார் நீ?” கேட்டுக்கொண்டே அவனது கத்தியை எடுத்து கீழே இருந்த அவனின் விரல்களை வெட்டத் தொடங்கினான். வலி பொறுக்காமல்,

“நான் பாண்டிய நாட்டின் வீரன்” என்று கூறினான் அந்த வீரன்.

“உனக்கு நான் ஒரு ரகசியத்தைச் சொல்கிறேன் என்னை விட்டுவிடு” என்று கெஞ்சத் தொடங்கினான் அந்த பாண்டிய வீரன்.

“ரகசியமா? என்ன ரகசியம்” என்று வந்தியத்தேவன் கேட்க,

“பராந்தக சோழர் காலம் தொட்டு நீங்கள் தேடி வரும் அந்த மணிமுடியும் ஆரமும் ஒரு குளத்தில் இருக்கிறது” என்றான் அந்த வீரன்.

“நீ கூறுவது உண்மையா?” என்று வந்தியத்தேவன் கேட்க ஆமாம் என்று தலையசைத்தான் பாண்டிய தேசத்து வீரன்.

“உன்னை நான் கரிகாலரிடம் அழைத்துச் செல்கிறேன்” என்று கூறி அவனைத் தோளில் சுமந்து கொண்டு கூடாரம் நோக்கி நடக்கத் தொடங்கினான் வந்தியத்தேவன்.

வந்தியத்தேவன் கூடாரத்தின் அருகில் வந்த பொழுது பாசறை மொத்தமும் தலைகீழாக இருந்தது. யார் யாரோ கீழே விழுந்து கிடந்தனர். இதில் பாண்டிய வீரர்கள் யார் சோழ வீரர்கள் யார் என்று கண்டறிவதே பெரும்பாடு ஆகிவிட்டது.

கரிகாலனின் கூடாரத்திற்கு வெளியே யாரும் இல்லை வந்தியத்தேவன் பாண்டிய வீரனை ஒரு மரத்தில் கட்டிவிட்டு தீப்பந்தம் ஏந்தி கூடாரம் நோக்கி ஓடத் தொடங்கினான்.

கூடாரம் மொத்தம் இருள் பரவி இருந்தது. வந்தியத்தேவன் கால் வைக்கும் இடமெல்லாம் சடலங்கள் இருந்தன. அது ஒரு பெரிய கூடாரம் ஆதலால் அந்தத் தீப்பந்தத்தின் ஒளி போதுமானதாக இல்லை.

வந்தியதேவன் எதிர்பாராதவிதமாக கால் தடுக்கி கீழே விழுந்தான். அவன் கை நிலத்தில் பட்ட பொழுது நிலம் மொத்தம் ஈரமாக இருந்ததை உணர்ந்தான். தீப்பந்தத்தை அவன் கையில் எடுத்துக் கொண்டு வந்தபொழுது செங்குருதி அவன் கையில் இருந்து வழிந்து கொண்டிருந்தது.

அந்த வீரனின் மனது கூட ஒரு நொடி பதறி விட்டது. “கரிகாலரே! கரிகாலரே” என்று ஒலி எழுப்பிக்கொண்டே அடுத்த அடிகளை வைத்தான்.

அவன் விழிகள்பிதுங்கி நிற்க, அவன் கண்ட காட்சி ஒரு நொடி அவன் முன் இருப்பது மனிதன் தானா இல்லை அந்த பரமசிவனா? எனும் சந்தேகம் அவன் மனதில் ஏற்பட்டது...

பார்த்திபேந்திரபல்லவன் மிகவும் நேர்த்தியாக பாண்டியர்களைக் கொன்றுகொண்டிருந்தான். அவனின் வீரம் முழுவதும் வெளிப்பட்டது. நிறைய வீரர்களைக் கொன்று அவர்களின் ரத்தத்தை எடுத்து உடம்பெல்லாம் பூசிக்கொண்டான்.

# அத்தியாயம் 23

வந்தியத்தேவனின் காலில் மிதிபட்டுக் கிடந்த சடலங்களை எல்லாம் தாண்டி கூடாரத்தின் நடுவே சென்றான்.

வந்தியத்தேவன் கண் முன்னே அவன் கண்ட காட்சி அவன் முன் நிற்பது மனிதன் தானா அல்ல அந்த பரமசிவன் தனோ? என்பதைப் போல இருந்தது.

அந்த மங்கலான வெளிச்சத்தில் அவன் கண்ட காட்சி...

இருபத்தைந்திற்கும் மேற்பட்ட சடலங்கள் குவிந்து ஒரு ஆசனம் போல இருக்க, அந்தச் சடலங்களுக்கு மேல் உடம்பெல்லாம் குருதி பூசிக்கொண்டு பெருமூச்சு விட்டு அமர்ந்திருந்தார் ஆதித்த கரிகாலர்!

அவரைக் கண்ட நொடி வந்தியத்தேவனின் மனது படபடவென்று அடிக்கத் தொடங்கியது. அவன் இதயத்துடிப்பு பன்மடங்கு பெருகி அறையில் இருந்த மௌனத்தில் வெளியே கேட்கத் தொடங்கியது.

"கரிகாலரே! உங்களுக்கு ஒன்றும் ஆகவில்லையே?" என வந்தியய**த்**தேவன் கேட்க.

"இல்லை இதுவரை ஒன்றும் ஆகவில்லை என்றார்" ஆதித்த கரிகாலர்.

“நான் பயந்தே விட்டேன்!” என்றான் வந்தியத்தேவன்.

“இங்கே எப்படி நடக்கப் போகிறது என்பது எனக்கு முன்பே தெரியும், இது மட்டும் இல்லை நமக்கு வேறொரு ஆச்சரியம் காத்திருக்கிறது” என்றார் ஆதித்த கரிகாலர்.

“வேறோரு ஆச்சரியமா? என்ன அது?” என்று வந்தியத்தேவன் கேட்க,

“நாளை போர்க்களத்தில் நீயே தெரிந்து கொள்வாய். இன்று வீரபாண்டியனின் வியூகத்தை உடைக்காததின் காரணமும் அதுவே! அவர்கள் நம்முடைய திட்டத்தையே நமக்கு எதிராகத் தீட்ட முயற்சிக்கின்றனர்.

நாம் இன்று அமைத்த வியூகத்தைச் சிறிதாக மாற்றி அவன் அவனைப் பாதுகாக்க அரணாக மாற்றிக்கொண்டான். நாம் இங்கு அசைந்தாலும், அந்த அசைவை அவன் அறிகிறான் அதை இன்று களத்தில் நான் கண்டேன்.

யாரோ ஒரு ஒற்றர் நமக்குள்ளே இருந்து நம் ரகசியங்களை அவனுக்கு எடுத்துக் கூறுகின்றனர்.” என்றார் கரிகாலர்.

வந்தியத்தேவன் அவர் கூறுவதை உண்ணிப்பாக கவனித்துக் கொண்டிருந்தான்.

www.indianguide.in

“நாளை முதல் யுத்தத்தின் போக்கு வேறு மாதிரி இருக்கும். நாளை பிறை வியூகத்தை அமைக்க வேண்டும். ஒரு தேர் வீரனுக்கு ஏழு யானையின் துணை, ஒரு யானைக்கு ஏழு குதிரை வீரனின் துணை, ஒரு குதிரை வீரனுக்கு ஏழு காலாட்படை வீரனின் துணை, ஏழு காலாட் படை வீரர்களுக்கும் கேடயங்கள் துணையாக நிற்க, மதில் சுவர் போல் அமைந்திருக்க வேண்டும் இந்தப் பிறை வடிவம். பிறையின் ஒரு எல்லையில் நீயும் மற்றொரு எல்லையில் நானும் மத்தியில் சேனாதிபதியுடன் பல்லவனும் இருக்க வேண்டும். நாளை உச்சிப் பொழுதிற்கு முன்னால் பாண்டியனின் அனைத்துத் தளபதிகளையும் கொன்றுவிட வேண்டும்.

அவன் நாளை அமைக்கப்போகும் வியூகம் எதுவாயினும் இரு பக்கத்திலிருந்தும் நீயும் நானும் தாக்குதல் நடத்த வேண்டும். இன்று அந்த வியூகத்தை உடைக்காததற்கு காரணம் நாளை நான் கூறுகிறேன். இப்பொழுது சென்று அனைவரும் நலமாக இருக்கிறார்களா? என்று பார்” என்றார் ஆதித்த கரிகாலர்.

வந்தியத்தேவன் விடைபெறும் நொடியில் பார்த்திபேந்திர பல்லவன் பிணங்களை எல்லாம் தாண்டி, தட்டித் தடுமாறி ஓடி வந்தான். மூச்சிரைக்க வந்தவனைப் பார்த்து,

“பார்த்திபா! என்ன நேர்ந்தது? ஏன் இப்படி மூச்சிரைக்க ஓடி வருகிறாய்?” எனக் கேட்டார் ஆதித்த கரிகாலர்.

www.indianguide.in

பார்த்திபேந்திர பல்லவன் கண்களில் நீர் வழியத் தொடங்கியது. சற்று நேரத்திற்கெல்லாம் ஓ என்ற சத்தம் வானை முட்டியது!

“என்ன நேர்ந்தது என்று கூறு!” என அலறினார் கரிகாலர்.

“கரிகாலரே... கரிகலரே... சோழ தேசத்தின் கதிரவன் இன்று அஸ்தமித்து விட்டது. நீங்காத இருள் இந்தப் போர்க்களத்தைச் சூழ்ந்து விட்டது.”

கரிகாலர் வாயிலிருந்து வார்த்தைகள் ஏதும் வரவில்லை, அவர் கண்ணில் கண்ணீரும் இல்லை, அவர் உடைந்தால் சோழப் படைகள் மொத்தம் தரைமட்டமாகி விடும்!

“நான் போர் வீரர்களிடம் முன்பே எல்லாக் கூடாரத்திற்கும் கடுமையான காவல் வேண்டும் என்று கூறினேன்” என்றான் பார்த்திபேந்திர பல்லவன்.

“எப்படி நடந்தது என்று தெரியவில்லை ஆனால் அவரே அபாய ஒலி எழுப்பி அனைவரையும் எச்சரித்தார். எதிர்பாராதவிதமாக அவரது உடலைப் பல துண்டுகளாக வெட்டி அவரது கூடாரத்தில் எறிந்துவிட்டுச் சென்றுவிட்டனர். ஒரு துணியை எடுத்து அதில் அவரின் உடலை மூடி வைத்திருக்கிறோம் நீங்கள் வந்து இறுதி மரியாதை செய்யுமாறு சேனாதிபதி உங்களை அழைக்கிறார்”

என்று கண்களில் கண்ணீர் வழிய பார்த்திபேந்திர பல்லவன் கூறினான்.

கரிகாலர் மனது கல் மனது என்று அனைவரும் நினைத்துக் கொண்டிருந்த தருவாய், ஏன் என்றால் இவ்வளவு பெரிய இழப்பு இது சோழ தேசத்திற்கு. கரிகாலனின் முகத்திலும் ஒரு வருத்தமும் இல்லை கண்களில் கண்ணீரும் இல்லை.

கரிகாலரின் மனதில் உள்ள வேதனையை அவர் முகம் காட்டத் தவறிவிட்டது. அவரே மனம் உடைந்தால் சேனை சுக்குநூறாகி விடும் என்ற ஒரே காரணத்தினால் அவரின் மனதில் உள்ள வேதனைகளை மறைத்து செங்கதிரவனுக்கு இறுதி மரியாதை செய்தார்.

கரிகாலன் இப்பொழுது பேசத் தொடங்கினார், “நமக்கு எதிராக நம் கூட்டத்திலே ஒற்றர்கள் இருக்கிறார்கள். இங்கு நடப்பவை எல்லாம் வீரபாண்டியன் ஒற்றர்கள் மூலமாக அறிந்து கொள்கிறான்.

சோழ தேசம் இன்று ஒரு மாபெரும் இழப்பைச் சந்தித்துள்ளது. எத்தனையோ போர்க்களத்தில் வெற்றி பெறுவதற்கு இவரின் அறிவுரையும் யுக்தியும் தான் காரணம். அப்படிப்பட்ட ஒரு மகத்தான உயிர் இப்படிப் பிரிந்து விட்டதே என்ற வருத்தம் எனக்கும் உண்டு.

ஆனால் இது அழுது புலம்புவதற்கான சமயம் அன்று. இந்தக் கோபத்தையும் வேகத்தையும் போரில்

www.indianguide.in

காட்டுங்கள்! நாளை பாண்டியனின் தளபதிகள் ஒருவன் கூட உயிருடன் இருக்கக்கூடாது” என்றார் ஆதித்த கரிகாலர்.

“வெற்றி பெற்ற பின் தகுந்த மரியாதையுடன் இவருக்கு நடுகல் வைக்கப்படும் அந்த அஸ்தியை ஒரு கலசத்தில் வையுங்கள் சோழ தேசம் மொத்தம் இவரின் சாம்பலைத் தூவுவோம்” என்று கர்ஜித்தார் ஆதித்த கரிகாலன்.

*யுத்தத்தின் மூன்றாம் நாள் ....*

போர் துவங்குவதற்கான சங்கு நாதம் கேட்டது. முரசொலி வீரர்களின் காதில் விழுந்த நொடியில் பிறை வியூகத்தை அமைத்தனர் சோழ வீரர்கள்.

ஒரு முகப்பில் ஆதித்த கரிகாலரும் இன்னொரு முகப்பில் வந்தியத்தேவனும் நிற்க மத்தியில் சேனாதிபதி வீரசோழன் மற்றும் பார்த்திபேந்திர பல்லவன் இருந்தனர்.

பாண்டியன் இன்று எந்த வியூகம் அமைத்தாலும் அந்த வியூகத்தை விழுங்கும் விதத்தில் இருந்த சோழர்களின் வியூகம், எளிதில் பாண்டிய வீரர்களை அழித்து விடும்.

படைப்பிரிவுகள் இப்படி அணிவகுக்கப் பட்டதும், முறையான இடங்களில் நின்று கொண்டிருந்த தேர் வீர்கள், குதிரை வீரர்கள் ஆகியோர் சிங்க முழக்கமிட்டனர். தங்களுக்குரிய படைகளின் துணையோடு, துணிவுமிக்கவர்களும், தாக்குவதை

நன்கறிந்தவர்களும் இன்று முன் பிரிவில் நின்றனர். இருபடையின் வீரர்களும், தங்கள் ஒவ்வொருவரின் வியூகத்தையும் பிளக்க விரும்பி முன்னேறிச் சென்றனர்.
வீர பாண்டியன் இன்று அமைத்திருந்த வியூகம் வராஹ வியூகம். இந்த வியூகம் நான்கு கால்கள், ஒரு முகம், ஒரு வால் மற்றும் ஒரு உடல் என்று பார்க்க ஒரு காட்டுப் பன்றி போன்ற வடிவம் உடைய வியூகம்.

அதே போல இந்த வியூகம் அமைத்தால் வீரர்கள் ஓடிக்கொண்டே இருக்க வேண்டும், மிகவும் வேகத்துடன் செயல்பட வேண்டும்.

சோழ சேனையில் இடங்கை வீரர்கள் வலங்கை வீரர்கள் என்று இரு பிரிவுகளாக வீரர்கள் பிரிக்கப்பட்டு இருந்தனர். இடக் கையில் வாள் சுழற்றும் வீரர்கள் வலப்புறமும், வலங்கையில் வாள் சுழற்றும் வீரர்கள் இடப்புறமும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர்.

சோழ வீரர்கள் மிகவும் திறமையாக செயல்பட்டுக் கொண்டிருந்தனர். வீரபாண்டியன் அமைத்திருந்த வராக வியூகத்தின் மத்தியில் ஒரு யானையின் மேல் அவன் இருந்தான். இந்த வியூகத்தை இரு பக்கவாட்டிலிருந்து ஆதித்த கரிகாலனும் வந்தியத்தேவனும் உடைத்து உள் நுழைய இருந்தனர். எஞ்சியுள்ள சோழ வீரர்கள் அனைவரும் பாண்டிய வீரர்களை விட்டுவிட்டுத் தளபதிகளைத் தாக்கவேண்டும். உச்சிப் பொழுதிற்கு முன்னால் தளபதிகள் இல்லாத படையாக வேண்டும்

பாண்டியனின் படை என்பது ஆதித்த கரிகாலரின் உத்தரவு.

பல்லவன் முன்னேறிச் சென்று கொண்டிருந்தான். அவன் கண்ணில் பாண்டிய தளபதி கோவன் பட்டான். இருவருக்கும் இடையே சண்டை தொடங்கியது. கோவன் கையில் ஒரு நெடு வாள் இருந்தது, பார்த்திபேந்திர பல்லவன் கையில் ஒரு நேர் வாள் இருந்தது.

இருவரும் ஒருவரை ஒருவர் தாக்கத் தொடங்கினர். நெடுவாளை ஒருவன் பிடிப்பதற்கு அவன் இரு கைகளையும் உபயோகிக்க வேண்டும். ஆனால் நேர்வாளை ஒரு கையில் சுற்றலாம். பார்த்திபேந்திர பல்லவன் ஒருகையில் கேடயமும் மற்றொரு கையில் வாளையும் ஏந்தி நின்றான்.

கோவனின் தாக்குதல் அனைத்தையும் எளிதாகச் சமாளித்துக் கொண்டு இருந்தான் பார்த்திபேந்திர பல்லவன். கோவன் கையில் கேடயமும் ஏதும் இல்லாத காரணத்தினால் பல்லவனின் அடி ஒவ்வொன்றும் இடியென விழுந்தது.

ஆதித்த கரிகாலரும் வந்தியத்தேவனும் இருபுறமும் இருந்து ஒரே சமயத்தில் தாக்குதலைத் தொடங்கினர். வாரஹத்தின் இரு பக்கவாட்டிலிருந்து தாக்குதலை அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

வந்தியத்தேவன் அவன் பங்கிற்கு பாண்டிய வீரர்களைக் கொன்று குவித்துக் கொண்டிருந்தான்.

ஆதித்த கரிகாலர் ருத்ர தாண்டவத்தைத் தொடங்கிவிட்டார்.

கரிகாலரின் கண்ணில் பட்டவர் அனைவரும் இரு துண்டுகளாக மண்ணில் விழுந்து கொண்டிருந்தனர்.

சோழ வீரர்கள் பாண்டியனின் தளபதிகளைக் குறிவைத்துத் தாக்கிக் கொண்டிருந்தனர். இடக்கை வீரன் ஒருவனிடம் காலாட் படையின் தளபதி மருதன் சண்டையிட்டுக் கொண்டிருந்தான். அவன் இடக்கை வீரன் இடதுகையில் வாள் சுழற்றுபவன் எனும் எண்ணம் அவனின் மனதில் பதிந்துவிட்டது.

அதனால் அவனை எளிதில் வென்று விடலாம் என்ற எண்ணமும் தளபதியின் மனதில் வந்துவிட்டது.

தளபதியின் ஒவ்வொரு தாக்குதலுக்கும் பதில் தாக்குதல் வந்து கொண்டிருந்தது. அவன் எதிர்பாராத சமயம் இடக்கையில் இருந்த வாளை வலக்கைக்கு மாற்றி பாண்டிய தளபதியின் நெஞ்சில் இறக்கினான். வாள் பாண்டிய தளபதியின் உடலைக் கிழித்து வெளியே வந்தது.

சோழப் படையின் ஒவ்வொரு வீரனும் தனித்துவம் பெற்று இருந்தனர். இடக்கை வீரனுக்கு வலக்கை பழக்கமும் வலக்கை வீரனுக்கு இடக்கை பழக்கமும் பயிற்சிக்கப் பட்டு எதிரியைக் குழப்பத்தில் ஆழ்த்தித் தாக்கும் யுக்தியும் கற்பிக்கப்பட்டு இருந்தது.

இருபுறமும் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் வியூகம் இரண்டாகப் பிரிந்தது. தலை ஒரு

www.indianguide.in

பக்கமாகவும் வால் மற்றொரு பக்கமாகவும் பிரிந்து விட்டது. மத்தியில் சில வீரர்களுடன் வீரபாண்டியன் சிக்கிக் கொண்டான்.
வந்தியத்தேவன் ஒரு புறமிருந்து வீரபாண்டியனை நெருங்க, ஆதித்த கரிகாலர் மறுபுறம் இருந்து நெருங்கிக் கொண்டிருந்தார்.

அவனைச் சுற்றி இருந்த வீரர்களை வந்தியத்தேவன் தாக்கத் தொடங்கினான். வீரபாண்டியன் ஆதித்த கரிகாலரைத் தாக்கத் தொடங்கினான்.

ஆதித்த கரிகாலர் முதலில் அவரது வேலை கொண்டு தாக்கத் தொடங்கினார். வீரபாண்டியன் அதற்குத் தக்க பதிலடி கொடுத்துக் கொண்டிருந்தான்.

மேலும் சில வீரர்கள் ஆதித்த கரிகாலரை நெருங்கிக் கொண்டிருக்க, ஒரு கையில் வேலும் மற்றொரு கையில் வாளும் கொண்டு இருபுறமும் சண்டை செய்து கொண்டிருந்தார்.

வீரபாண்டியன் இதுதான் சமயம் என்று வாளைச் சுழற்றி கரிகாலர் கழுத்தைத் தாக்கப் போக, வேறொரு வாள் வீரபாண்டியனின் வாளைத் தடுத்து நிறுத்தியது.

அது வந்தியத்தேவனின் வாள்! யுத்தம் இப்பொழுது வந்தியத்தேவன் வீரபாண்டியன் இடையே நடந்து கொண்டிருந்தது.

வந்தியத்தேவன் வீரபாண்டியனின் ஒவ்வொரு அடியையும் சமாளித்துக் கொண்டிருந்தான். ஒரு

கட்டத்தில் வந்தியத்தேவனின் வாள் அவன் கை விட்டு கீழே விழுந்துவிட்டது.

ஒரே அடி வீரபாண்டியன் வந்தியத்தேவனின் நெஞ்சில் கொடுத்தான் அவனும் கீழே விழுந்து விட்டான்.
“முதலில் உன் கதையை முடிக்கிறேன் பின் அந்த ஆதித்தனின் கதையை முடிக்கிறேன்” என்று கூறிக்கொண்டே

வாளைச் சுழற்றிக் கொண்டு வந்தியத்தேவனை நோக்கி வந்தான் வீரபாண்டியன். அதிர்ஷ்டவசமாக வந்தியத்தேவனின் வாள் அவன் கையின் அருகாமையில் கிடந்தது. ஒரு நொடிப் பொழுதில் அந்த வாளை எடுத்து,

“கரிகாலரே! என்னை மன்னித்து விடுங்கள்” என்று கூறிக்கொண்டே வீரபாண்டியனின் தலையை வெட்டி மண்ணில் இட்டான் வந்தியத்தேவன்.

அனைவரும் உறைந்து போய் நின்றனர். ஆதித்த கரிகாலர் மட்டும் சிரித்துக் கொண்டிருந்தார்.

அந்தச் சிரிப்பைக் கேட்டவுடன் வந்தியத்தேவனின் உடல் நடுங்கி விட்டது. நாம் தவறு செய்துவிட்டோமே! காலம் காலமாக இவனைப் பழிவாங்கவல்லவா கரிகாலர் கனவு கண்டார்.

“இவன் வீரபாண்டியனா? இதற்கு முன்பு வீரபாண்டியனை நீயும் பார்த்ததில்லை நானும் பார்த்ததில்லை! இவன்

www.indianguide.in

வீரபாண்டியன் இல்லை. இந்த உண்மை எனக்கு நேற்று காலை தான் தெரியும் அதனால் தான் நேற்றைய போரில் இவனைக் கவனித்துக் கொண்டு மட்டும் இருந்தேன்.

இவன் வீரபாண்டியன் இல்லை எனும் உண்மை எனக்கு நேற்றைய போரிலிருந்து புரிந்தது, வீரபாண்டியன் அன்றைய கூட்டத்திற்கு வரவில்லை, இன்று வரை போர்க்களத்திற்கும் வரவில்லை" என்றார் ஆதித்த கரிகாலர்.

சுற்றியிருந்த அனைவரும் திகைத்துப் போய் இருக்க, எங்கிருந்தோ ஒரு ரதம் வேகமாகக் களம் நோக்கி வந்து கொண்டிருந்தது. வந்தியத்தேவன் எழுந்து ஆதித்த கரிகாலரின் அருகே வந்து நின்றான்.

அந்த ரதம் இவர்கள் இருவருக்கும் முன்னே வந்து நின்றது. ரகத்திற்கு உள்ளிருந்து ஆறடி உயரத்தில் உடலெல்லாம் கவசம் அணிந்து கூர்மையான பார்வையோடு கோபமான முகத்தோடு ஒருவன் இறங்கினான்.

ரதத்தில் வந்தவனைக் கண்டு ஆதித்த கரிகாலனின் சிரிப்பு விண்ணை முட்டியது, வந்தியத்தேவனுக்கு ஒன்றும் புரியவில்லை. ரதத்தில் இருந்து இறங்கியவனைப் பார்த்து பின் மீண்டும் கரிகாலரைப் பார்த்தான்.

அதற்குள் பார்த்திபேந்திர பல்லவன், வீரசோழன் ஆகிய அனைவரும் ஆதித்த கரிகாலர் அருகே வந்து விட்டனர்.
கரிகாலரின் சிரிப்புச் சத்தம் அந்த மீன் சின்னம் பொறித்திருந்த கவசம் அணிந்தவனை மிகவும் கோபமேற்றியது.

“யார் இவன்?” என்றான் வந்தியத்தேவன்.

“இவன்தான் வீரபாண்டியன்! உத்தமசீலியின் தலைகொண்ட வீரபாண்டியன்!” எனக் கூறி மீண்டும் சிரிக்கத் தொடங்கினார் ஆதித்த கரிகாலர். அவரது சிரிப்பில் ஏளனமும் கோபமும் வெளிப்படத் தொடங்கியது.

“அப்படியென்றால் இவன் யார்” என்றான் வந்தியதேவன் மண்ணில் விழுந்து கிடந்த சடலத்தைச் சுட்டிக்காட்டி.

“இவன் வீரபாண்டியன் தந்தையின் இரண்டாம் மனைவியின் மகன். இவன் பெயர் விக்கிரம பாண்டியன்” என்றார் ஆதித்தர்.

“இவன் சேரர்களின் வழிவந்தவன்” என்றான் பல்லவன். மேலும், “ஆனால் இவர்கள் இருவரும் ஒற்றுமையாக இல்லை சண்டையிட்டுப் பிரிந்துபோய்விட்டதாக நான் கேள்விப்பட்டேன்” என்றான் பல்லவன்.

www.indianguide.in

“இது அனைத்தும் வீரபாண்டியன் தன்னைக் காத்துக்கொள்ளும் பாதுகாப்பு முயற்சிகள்” என்றார் ஆதித்த கரிகாலர்.

# அத்தியாயம் 24

வீரபாண்டியன் அவனது தம்பியை உற்று நோக்கிக் கொண்டிருந்தான். அவன் கைகள் ஆதித்த கரிகாலரைக் கொலை செய்யத் துடித்துக்கொண்டிருந்தது. பெரும் வேகம் கொண்டு ஆதித்த கரிகாலரைத் தாக்க ஓடி வந்தான்.

வந்தியத்தேவன் அவனைத் தடுப்பதற்காக கரிகாலரின் முன் வாள் ஏந்தி நின்றான். வந்தியத்தேவனைத் தள்ளிவிட்டார் ஆதித்த கரிகாலர்.

வீரபாண்டியனின் வாள் கரிகாலரின் புலிச்சின்னம் பொறிக்கப்பட்டிருந்த கவசம் மேல் பட்டு ஒலி எழுப்பியது. மீண்டும் கரிகாலரைத் தாக்க வந்த வீரபாண்டியனை கரிகாலரின் வாள் தடுத்தது.

இரு வாள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி எழுப்பிய சத்தம் அந்த யுத்தக்களம் எங்கும் எதிரொலித்தது. கரிகாலருக்கு இந்த வீரபாண்டியனைச் சமாளிப்பது சற்று கடினமாகத்தான் இருந்தது.

வீரபாண்டியனின் ஒவ்வொரு அடியும் மிக வேகமாகவும் பலமாகவும் இருந்தன. கரிகாலரை ஒரு கட்டத்தில் வீரபாண்டியன் அடித்துக் கீழே தள்ளிவிட்டான்.

கீழே விழுந்த கரிகாலர் சிரிக்க தொடங்கினார்.

“என் அருகில் வந்து விடாதே! சற்று முன் இப்படித் தான் வந்தியத்தேவன் உன் தம்பியைக் கொன்றான், உன்னையும் அதே போல் கொலைசெய்ய வேண்டுமா ?” என்று கேலியாக சிரித்தார் கரிகாலர்.

வீரபாண்டியன் கரிகாலரை நெருங்கிய நொடி அன்றைய தின போர் முடிந்துவிட்டதை அறிவிக்கும் சங்கு நாதம் கேட்டது.

வீரபாண்டியனை நோக்கி, “ஏன் நிற்கிறாய் வா மோதிப் பார்க்கலாம்! விதிமுறைகளை எண்ணி அச்சமா? இந்த நினைப்பு நேற்று இரவு எங்கள் பாசறைக்கு ஆட்களை அனுப்புவதற்கு முன் இருந்திருக்க வேண்டும்” என்றார் கரிகாலர்.

வீரபாண்டியனிடம் கூற வார்த்தைகள் இல்லை அவன் ஒன்றும் பேசாமல் களத்தை விட்டு வெளியே செல்லத் தொடங்கினான்.

“யுத்தம் இன்றே முடிந்துவிட்டது. நாளை போரிட அவனிடம் தளபதிகள் இல்லை, சேனாதிபதிகள் இல்லை. அவனைக் காக்கவும் அவன் தம்பி இல்லை” என்றான் பார்த்திபேந்திர பல்லவன்.

அனைவரும் சிரிக்கத் தொடங்கினர். ஆதித்த கரிகாலர் எதுவும் பேசவில்லை. தனியாகக் கூடாரம் நோக்கி நடக்கத் தொடங்கினார்.

*பாண்டியனின் பாசறை ....*

“நாம் நினைத்ததை விட புத்திசாலியாக இருக்கிறான். இவர்கள் இந்தப் போரில் வென்று விடக்கூடாது என்று தான் அந்தச் செங்கதிரவனை முதலில் தீர்த்துக் கட்டச்சொன்னேன். அவன் இறந்துவிட்டான் என்ற செய்தி கேட்டு அனந்தப்பட்டேன்.

அவனை விட இந்தக் கரிகாலன் அறிவாளியாக இருக்கிறான். அவன் கண்ணில் துளிகூட பயமில்லை. அந்தக் கண்களில் என்னைக் கொல்லும் வெறி மட்டுமே இருந்தது!

ஒன்று அவன் நாளை சாக வேண்டும் இல்லையென்றால் அவன் என்னைச் சாகடிக்க வேண்டும்!” என்றான் வீரபாண்டியன்.

நந்தினி இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் உடைந்துவிட்டாள். அவளின் மனதின் குமுறல் கண்களில் அருவியாக வழிந்தது.

திருவாளன் வீரபாண்டியனை நோக்கி, “யார் அந்த ஒற்றன்? நமது ரகசியங்களை அறிந்து அவனிடம் சொன்னவன்?” என்று கேட்டபொழுது, நந்தினி மனதில் வந்த பெயர் ஆழ்வார்க்கடியான் நம்பி! அவன் தான் வெளியே இருந்து இவளைச் சந்திக்க வந்தவன். நிச்சயம் இது அவனின் வேலை தான்.

அன்று நானும் அவனும் பேசிக்கொண்டிருந்த சமயம் வீரபாண்டியன் அங்கிருந்த குளக்கரைக்கு வந்தது நினைவில் வந்தது. வீரபாண்டியனைக் கண்டு அன்று

www.indianguide.in

நானும் பதறி அவனைப் போகச்சொன்னேன், நிச்சயம் அவனே தான் என்று முடிவெடுத்தாள்.

***சோழர் பாசறை ....***

கரிகாலனைச் சுற்றி வீரர்களின் கூட்டம். அனைவரும் அவருக்கு வாழ்த்துத் தெரிவித்து கோஷமிட்டனர். கரிகாலர் பேசத் தொடங்கினார்,

“இன்னும் யுத்தம் முடியவில்லை! அவனிடம் இன்னும் சேனா பலம் இருக்கிறது. பின் நாம் இதுவரை அவனை நேருக்கு நேராகச் சந்திக்கவில்லை.

இன்று நம்முடன் செங்கதிரவரும் இல்லை. அவரின் உதவி இப்பொழுது தான் நமக்குத் தேவை” என்றார் கரிகாலர்.

வந்தியத்தேவன் கரிகாலரை நோக்கி, “உங்களுக்கு வீரபாண்டியன் இன்னும் போருக்கு வரவில்லையென்று எப்படித் தெரியும்” என்று கேட்டான்.

“நிச்சயம் அனைவரும் அறிய வேண்டிய உண்மை அது” என்றார் கரிகாலர்.

“யுத்தம் தொடங்கி இரண்டாம் நாள் காலை நான் இந்த கூடாரத்திற்கு பின் இருக்கும் வனத்திற்குச் சென்றேன். அங்கே ஒருவீரன் என்னைப் பார்த்தவுடன் ஓடிவந்தான். அவன் கையில் ஒரு ஓலை இருந்தது. அதை எழுதியவர் நமது முதல் மந்திரி அன்பில் பிரம்மராயர்.”

www.indianguide.in

“அவருக்கு இங்கும் கண்கள் இருக்கின்றதே!” என்று வியப்பாகக் கேட்டான் கந்தமாறன்.

புன்னகை புரிந்த ஆதித்தர் அந்த வீரன் கொடுத்த ஓலையை அவரின் இடுப்பில் சொருகி வைத்திருந்தார். அந்த ஓலையை எடுத்து நீட்ட, அதை வாங்கிப் படித்தான் பார்த்திபேந்திர பல்லவன்.

**“வீராதி வீரர் கரிகாலருக்கு,**

நீங்கள் போர் புரிவது வீரபாண்டியனுடன் அல்ல! அவன் இன்னும் களத்திற்கு வரவில்லை. இது அவனின் தம்பி என்றறிகிறேன். மேலும் ஒரு பெண் நாகம் உங்கள் காலை உங்களுக்கே தெரியாமல் சுற்றிவருகிறது........”

“இதைக் கொடுத்த வீரன் பார்ப்பதற்கு வீரனைப் போன்றே இல்லை. அவனது பானை வயிறும் அவனது தோற்றமும்! ஆனால் அவன் நடக்கவிருக்கும் தாக்குதலைப் பற்றிய குறிப்பையும் கொடுத்தான். இன்று இரவைத் தாண்டினால் வீரபாண்டியனை அடையலாம் என்றான்.

இவர்களின் உதவி காரணமாகத் தான் நமது படையை நேற்று காப்பாத்த முடிந்தது. மேலும் வீரபாண்டியனைப் போர்க்களத்திற்குக் கொண்டுவர முடிந்தது” என்றார் ஆதித்தர்.

பிறகு, “அந்தப் பலகையை இங்கே போடுங்கள்” என்றார் கரிகாலர், அப்படியே அவர் முன் பலகை

www.indianguide.in

போடப்பட்டது. அது சேவூரின் வரைபடம். சிப்பாய்கள் கூட்டத்திற்கு நடுவே ஒரு ராஜாவும் ராணியும் இருப்பது போல பொம்மைகளை வைத்தார்.

“நாளைய போரில் தெரியும் அந்தப் பெண் நாகம் யார், இந்த வீரபாண்டியனுக்கும் அவளுக்கும் என்ன தொடர்பு என்று” என கரிகாலர் கூறினார்.

“நாளைய போரில் கண்ணில் படும் அனைவரையும் கொன்றுவிடுங்கள். யாரையும் உயிருடன் விடாதீர்கள். உத்தமசீலியின், செங்கதிரவரின், எண்ணற்ற வீரர்களின் மரணத்திற்கு நாளை அர்த்தம் கிடைக்கும்!”

கரிகாலர் கூறும் வார்த்தைகளை மீறும் பழக்கம் யாருக்கும் இல்லை, அதனால் அனைவரும் அவர் கூறியபடி நடந்துகொண்டனர்.

வீரபாண்டியன் இன்று போரில் பயன்படுத்திய யுக்திகளைச் சூழ்ச்சிகளை எல்லாம் கரிகாலர் மனதில் கணக்கெடுத்து வைத்திருந்தார்.

வீரபாண்டியனை வெல்லக் காத்துக்கொண்டிருந்தார். இரவின் ஒவ்வொரு நொடியும் அவருக்கு ஒரு தினமாக நகர்ந்து கொண்டிருந்தது.

வந்தியத்தேவன் கரிகாலருடன் அமர்ந்து போர்க்களத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனது கண்ணில் புதிய விடியல் தெரிந்தது. சூரியன் உதயத்தில் அந்தக்களம் புத்தொளி பெற்றது.

எதிர்பார்த்துக்கொண்டிருந்த விடியல் வந்ததை உணர்ந்தார் ஆதித்த கரிகாலர். மிகவும் உற்சாகமாக எழுந்து அவரது கூடாரத்திற்குச் சென்றார் .

# அத்தியாயம் *25*

கதிரவன் காலையில் கிழக்கில் உதித்துவிட்டான். போர்க்களம் மொத்தம் ரத்தவாடை, சிந்தி சிதறிக் கிடைக்கும் மாமிசபிண்டங்கள், அதைக் கொத்தி திண்ணும் பிணம்தின்னிக் கழுகுகள், சிதறிக் கிடக்கும் சடலங்களைத் தின்று ஊளையிடும் நரிகளின் கூட்டம்.

வீரபாண்டியனின் ஆபத்துதவிகள் சிலரைத் தவிர எல்லா தளபதிகளும் உபதளபதிகளும் நேற்றைய போரில் மடிந்துவிட்டனர். வீரபாண்டியன் வேறு வழியின்றி ஆபத்துதவிகளை தளபதிகளாக அறிவித்தான்.

மகிந்தனின் சேனையும் அவனைக் கைவிட்டு விட்டது. வீரபாண்டியனின் மனது துவண்டுவிடவில்லை, வீரன் அல்லவா? யார் அவனைக் கைவிட்டாலும் அவன் மேல் அவன் கொண்டுள்ள நம்பிக்கை ஒரு நூல் அளவும் குறையவில்லை.

இருதரப்பு சேனையும் அணிவகுத்து நின்றது. ஆதித்த கரிகாலர் யானை மேல் அமர்ந்து இருந்தார். வீரபாண்டியனும் ஒரு யானை மேல் அமர்ந்திருந்தான்.

யுத்தம் தொடங்க சங்குநாதம் கேட்டது!

“வீரர்களே யாருக்கும் தயவு காட்டக் கூடாது அனைவரையும் கொன்று குவித்துவிடுங்கள்” என்றான் வீரபாண்டியன்

**வீ**ரபாண்டியன் இன்று அமைக்கவிருக்கும் வியூகம் கருட வியூகம். அவன் கருடனின் வால் பகுதியிலிருந்து சேனையை வழிநடத்துவான். அவனை நெருங்குவது என்பதே ஒரு சிம்மசொப்பனம். கிட்டத்தட்ட கருடனின் தலை, உடல் எல்லாம் தாண்டிச்செல்ல வேண்டும்.

கரிகாலர் மிகவும் அமைதியாக யானை மீது அமர்ந்திருந்தார். அவர் இந்த வியூகத்தை எப்படி உடைப்பது என்று யோசித்துக் கொண்டிருக்கிறார் என்று எல்லாரும் நினைத்துக் கொண்டிருந்தனர். கந்தமாறனும், பல்லவனும் பறவையின் இறக்கைகைகள் பக்கமாகச் செல்லும்படி உத்தரவிட்டார் சேனாதிபதி.

சிறிது நேரம் எந்த ஒரு வியூகமும் இல்லாமல் இந்தப் போர் நடந்தது. சோழ வீரர்கள் கருடனின் தலைப் பகுதியில் இருந்தவர்களைத் தாக்கிக் கொண்டிருந்தனர்.

கருடனின் உடல் பகுதியில் இருந்த வீரர்கள், இறக்கை பகுதியில் இருந்த வீரர்கள் எல்லாம் சோழ வீரர்களைத் தாக்கத் தொடங்கினர். கரிகாலர் யானை மேலிருந்து அம்புகளை பாண்டிய வீரர்கள் மேல் எய்து கொண்டிருந்தார்.

மஹாபாரதம் படித்தவர்களுக்கு இது நன்றாகத் தெரியும். அதில் யுத்தத்தின் இரண்டாம் நாள் பீஷ்மர்

www.indianguide.in

வகுத்த வியூகம் இந்தக் கருட வியூகம். இதை எதிர்கொள்ள பாண்டவர்கள் அமைத்த வியூகம் அன்றில் பறவையைப் போன்ற ஒரு வியூகத்தை வகுத்தனர்.

இதை ஆதித்த கரிகாலர் நன்றாக அறிவார், வீரர்கள் ஒருவருடன் ஒருவர் போர் புரிந்து ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டு இருந்தனர். வெற்றிவேல் வீரவேல் என்ற கோஷம் வானை முட்டியது.

இப்பொழுது சோழப் படை அந்த பறவையின் கழுத்து வரை நுழைந்து விட்டது. இப்பொழுது முரசு கொட்டுபவனைப் பார்த்து சைகை செய்தார் ஆதித்த கரிகாலர். முரசு இரண்டு முறை தொடர்ந்து கொட்டிய பின் ஒரு நொடி இடைவேளையில் மூன்று முறை கொட்டப்பட்டது.

சோழப் படை வீரர்கள் முரசொலி கேட்ட நொடியில், வியூகத்தை வகுக்கத் தொடங்கினர். அவர்கள் இன்று வகுத்த வியூகம் புலியின் வியூகம். புலி ஒன்று கருடனின் கழுத்தில் இருந்து பெரியதாக வளரத் தொடங்கியது.

அந்தப் புலி வியூகத்தின் தலைப் பகுதியில் ஆதித்த கரிகாலர் இருந்தார். மிகவும் வேகமாக அந்த வியூகம் வளர்ந்தது. பாண்டிய சேனை சிதறியே விட்டது. சிதறிய சேனை இங்கும் அங்குமாக ஓடியது. புலி வியூகம் வளர்ந்த நொடியில் கரிகாலர் வீரபாண்டியனை நெருங்கிவிட்டார்.

கனவில் கூட இதை வீரபாண்டியன் எதிர்பார்க்கவில்லை. அவன் என்ன நடக்கிறது என்று ஒரு நொடி குழம்பிவிட்டான். அவன் மனதில் இப்பொழுது உள்ளது எல்லாம் ஒரே யோசனை தான், தலைவன் இறந்தால் இந்தப் போரில் நமக்கு வெற்றி என்பது மட்டும் தான்.

வீரபாண்டியன் ஆதித்த கரிகாலனைக் கொன்றுவிட வேண்டும் என்று மிக ஆக்ரோஷமாக அவனது யானையை ஆதித்த கரிகாலனிடம் செலுத்தினான்.

கரிகாலரும் இதற்காகத் தான் காத்திருப்பது போல மிகவும் வேகமாக அவரது யானையை முன்னே செலுத்தினார். மலையோடு மலைகள் மோதுவது போல இரு பெரிய யானைகளும் ஒன்றோடு ஒன்று மோதி நின்றன.

இரு யானைகளும் ஒன்றோடு ஒன்று மோதிய நொடி இடியும் மின்னலும் ஒன்றை ஒன்று தாக்கினால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது. வீரபாண்டியன் யானையை விட்டுக் கீழே குதித்து, ஆதித்த கரிகாலனை நோக்கி,

"வா! இன்று இந்தக் களத்தை விட்டு நம்மில் ஒருவர் தான் போக வேண்டும்" என்றான்.

கரிகாலர் சிரித்து கொண்டே, "அது நிச்சயம் நீ இல்லை! உன்னுடைய தலையோடு நானே தஞ்சை செல்லப் போகிறேன்" என்றார்.

“பேசி பயமுறுத்ததே. வாள் எடுத்துச் சண்டையிட்டு நிரூபித்துக் காட்டு” என்றான் வீரபாண்டியன்.

கரிகாலர் மிகவும் வேகமாக கீழே குதித்துத் தாக்க முயற்சித்தார். ஆனால் வீரபாண்டியனை அவரால் சமாளிக்க முடியாதது போல் நடித்தார்.

வீரபாண்டியனின் ஒரு ஒரு அசைவையும் உள்வாங்கிக் கொண்டிருந்தார் கரிகாலர். வாளை அவன் சுழற்றி வரும் ஒரு ஒரு முறையும் அந்த வாள் கரிகாலரின் கழுத்திற்கே வந்துகொண்டிருந்தது.

இருவரும் பயங்கரமாக சண்டை போட்டுக் கொண்டிருந்தனர். வீரசோழன் மிகவும் வேகமாக கரிகாலரை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தான்.

வீரபாண்டியன் கரிகாலரின் நெஞ்சில் ஓங்கி உதைத்தான். கரிகாலர் இரண்டடி பின் சென்று விழுந்தார். அவருக்கு இப்பொழுது வீரபாண்டியனின் முழு சக்தியும் தெரிந்துவிட்டது.

ஆதித்தகரிகாலர் மிகவும் வேகமாக வீரபாண்டியனை நோக்கி ஓடிச்சென்றார். அவரை எதிர்பார்த்து வீரபாண்டியன் யானையென நிற்க, புலியென பாய்ந்தார் கரிகாலர்.

ரவிதாசன் வீரசோழனை வழியில் தடுத்து நிற்க, அவனைச் சமாளிக்க ஈட்டிகளை எறியத் தொடங்கினான் வீரசோழன்.

நந்தினி இந்தக் காட்சிகளை எல்லாம் அந்த மலைமுகட்டில் நின்றபடி பார்த்துக்கொண்டிருந்தாள். அவளின் மனதில் ஒரு வித பயம். யாரை யார் வெல்லப்போகின்றனர் என்று ஒன்றும் புரியாமல் நின்றுகொண்டிருந்தாள்.

விதி இன்று அவளுக்கு எதிராக இருக்கிறது. இருவரில் யார் இறந்தாலும் அந்த இழப்பு நந்தினியையே பாதிக்கும். எங்கோ பிறந்து சோழ தேசத்தில் வளர்ந்து பின் இங்கே இந்த நிலைமையில் நிற்கிறாள்.

வீரபாண்டியன் கரிகாலனை மிகவும் பலமாகத் தாக்கிக் கொண்டிருந்தான். அவன் தாக்குதலைச் சமாளித்த கரிகாலரின் ஒவ்வொரு தாக்குதலுக்கும் வீரபாண்டியனின் உடல் எங்கும் வாட்கள் பட்டு ரத்தம் வழிந்து அவன் உடல் முழுதும் ஒழுகிக்கொண்டிருந்தது.

வீரசோழன் ரவிதாசனைத் தாக்கிக்கொண்டிருந்தான். ரவிதாசன் மிகவும் எச்சரிக்கையோடு சண்டை போட்டுக்கொண்டிருந்தான்.

ஒருவரை ஒருவர் தாக்கி யார் வெல்வார்கள் என்பது சந்தேகமாக இருந்தது. வீரசோழன் ஒரு நொடி ரவிதாசன் அசந்த நொடியில் அவனைக் கீழே தள்ளினான். பின் அவனது ஆயுதங்களைப் பிடுங்கி சோழ வீரர்களை அழைத்து, “இவனைச் சிறை பிடியுங்கள் யுத்தம் முடியும் வரை இவனை எங்கேயும் விடாதீர்கள்” என்று கட்டளையிட்டான்.

www.indianguide.in

இப்பொழுது அவன் முன்னேறிச் செல்ல தடை ஏதும் இல்லை. ஆதித்த கரிகாலர் வெகு நேரமாக ஒரு வாளை அவரது உரையிலே வைத்திருந்தார், அது அன்று பழுவேட்டரையர் கொடுத்த வீராதி வீரர் உத்தமசீலியின் வாள்!

தக்க சமயத்தில் அவரது உரையில் வைத்திருந்த வாளை உருவி அவரது கையில் இருந்த வாளைத் தூக்கி எறிந்தார்.

“இது தான் அந்த உத்தமசீலியின் வாளோ? இதில் தான் என்னைக் கொல்லப்போகிறேன் என்று சபதம் எடுத்தாயோ?” என்று வீரபாண்டியன் கேட்க, புன்முறுவல் மட்டுமே பதிலாக தந்தார் கரிகாலர்.

மீண்டும் இருவருக்கும் இடையே போர் தொடங்கியது. இந்த சமயத்திற்கெல்லாம் வீரசோழன் அவர்கள் அருகே வந்துவிட்டான்.

அங்கே நடக்கும் அந்தப் போரை வேடிக்கைப் பார்த்தான். இருவரும் சமமாக சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். சரி வீரபாண்டியனைச் சூழ்ச்சி செய்து வதைக்கலாமா? என்று சிந்தித்தான்.

சோழர்களிடம் அவனின் இந்திர ஆரமும் மணிமுடியும் கிடைத்ததாகச் சொன்னால் எளிதில் அவன் மனம் பதறும் கவனம் சிதறும் எளிதாக கரிகாலர் அவனைக் கொன்று விடலாம் என்று வீரசோழன் ஒரு நொடி நினைத்தான். பின் வேண்டாம்

www.indianguide.in

இத்துணை பெரிய வீரனை வீழ்த்த சோழர்கள் சூழ்ச்சி புரிந்தார்கள் என்று அவப்பெயர் வந்து விட வேண்டாம் என்று எண்ணினான்.

அதற்குள் கரிகாலர் ஒரு பெரிய அடியாக வீரபாண்டியனை நெஞ்சில் அடித்தார். அவன் ஐந்தடி தள்ளி போய் விழ, வளரியை எடுத்து வீரபாண்டியனை நோக்கி வீச அது அவனின் கழுத்தில் ஒரு பெரிய காயத்தை ஏற்படுத்தியது. அவன் சுதாரிக்கும் முன் கரிகாலர் அவரின் இடுப்பில் சொருகியிருந்த சிறிய சிறிய கத்திகளை ஒன்றின் பின் ஒன்றாக வீசினார்.

கத்திகள் வீரபாண்டியனின் உடம்பெங்கும் குத்தி நிற்க, அவன் மூச்சு விடும் போதெல்லாம் காயங்களில் இருந்து ரத்தம் பெருகிக் கொண்டிருந்தது .

இருந்தாலும் அவன் தளரவில்லை, கரிகாலர் ஒரு ஈட்டியை எடுத்து அவன் காலடியில் இட்டார். “இதை ஊன்றி எழுந்து நில்” என்றுஅவர் கூற, அந்த ஈட்டியைத் தள்ளி விட்டு எழுந்து நின்றான் வீரபாண்டியன்.

அவன் உடம்பில் குத்தியிருந்த ஒரு ஒரு கத்திகளாக உருவினான் வீரபாண்டியன். அந்த இடங்களில் இப்பொழுது ரத்தம் வழியத் தொடங்கியது. அவன் உடல் மொத்தம் ரத்தம் கரை புரண்டு ஓடியது.

கரிகாலரை நோக்கி, “நான் வீழ்வேன் என்று நினைத்தாயோ?” என்றான் வீரபாண்டியன். அவன்

தள்ளாடி தள்ளாடி வாளை எடுத்துக் கொண்டு கரிகாலரை நோக்கி வந்தான்.

அவனின் ஒரு ஒரு தாக்குதலும் முன்னை விட பலமாக இருந்தது. அவனின் தேசப்பற்று அவன் உயிர் போவதைத் தடுத்து, அவனை இன்னும் சண்டையிடச் செய்து கொண்டிருந்தது.

நிற்கமுடியாமல் அவனது வாளைச் சுழற்றி கீழே விழுந்தான் வீரபாண்டியன். அந்த வாள் கரிகாலனின் வயிற்றில் கிழிக்க அங்கே இருந்து செங்குருதி வெளிவந்தது.
கரிகாலர் சுதாரித்து கொண்டு தனது இடது கையில் வீரபாண்டியனின் அதிபதி வர்மபுள்ளியில் அடித்தார். அவன் நிலைக்குலைந்து கீழே விழுந்தான்.

“வீரபாண்டியா! உன் வீரம் என்னை மெய்சிலிர்க்க வைத்தது! நீ இந்தப் பூலோகத்தை விட்டுப் போகவேண்டிய தருணம் நெருங்கிவிட்டது. நீ ஒரு மாவீரனாக வீர சொர்க்கம் போகப் போகிறாய்” என்றார் கரிகாலர்.

வீரபாண்டியன் முகத்தில் ஒரு துளி பயமில்லை. கரிகாலர் அவரது வாளைச் சுழற்றிக்கொண்டு வந்த நொடி ஒரு பெண்ணின் குரல் அவரைத் தடுத்தது.
அந்தப் பெண் வேறு யாருமில்லை. ஆதித்தரின் மனதில் இன்னும் ஆறாத காயமாக இருக்கும் நந்தினி.

“நந்தினி! நீ இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்” என்று ஆதித்த கரிகாலர் அதிர்ச்சியோடு கேட்க,

www.indianguide.in

“ஐயனே! எனக்கு நீங்கள் ஒரு வரம் தரவேண்டும். இவரை உயிருடன் விட்டுவிடுங்கள்” என்றாள் நந்தினி.

“இவனுக்காக உயிர்ப் பிச்சை கேட்கிறாயா நந்தினி? சோழ தேசம் மீது உனக்குக் காதல் இல்லையா? என் மீது காதல் இல்லையா?” என்றார் கரிகாலர்.

“அப்படி இல்லை ஐயனே! எனக்கும் சோழ தேசம் மீது காதல் உண்டு. ஆனால் நான் பாண்டிய நாட்டைச் சேர்ந்தவள்” என்று கூறி, “உங்களின் காலில் விழுகிறேன்! அவரை ஒன்றும் செய்துவிடாதீர்கள்” என்று அழத் தொடங்கினாள் நந்தினி

கரிகாலருக்கு ஒன்றும் புரியவில்லை. இவள் ஏன் இப்படி அழுகிறாள் என்று ஒன்றும் புரியவில்லை.

“நந்தினி! நீ செல்” என்றான் வீரபாண்டியன்

“அரசே! உங்களைக் காப்பது எனது கடமை. நான் உங்களுக்காக உயிர் பிச்சை கேட்கிறேன்” என்றாள் நந்தினி.

“போயும் போயும் இவன் காலைப் பிடிக்கிறாயே! இவன் காலைப் பிடிப்பதற்கு பதில் நீயே உன் கையால் என்னைக் கொன்றுவிடலாம்” என்றான் வீரபாண்டியன்.

“உங்களை விட்டால் எனக்கு யார் இருக்கிறார்கள்? எனக்கு நீங்கள் வேண்டும்” என்றாள் நந்தினி.

“இவன் காலை நீ பிடித்த நொடியே இந்த யுத்தம் வீணாகப் போய்விட்டது” என்று கூறினான் வீரபாண்டியன்.

இந்த உரையாடல்களை எல்லாம் கேட்ட கரிகாலர் உடைந்தே விட்டார்! தன் காதலி தன் எதிரியின் மனைவியா? தான் காண்பது கனவாக இருக்கக்கூடாதா? என்று ஒரு நொடி நினைத்தார், அவர் மனதிற்குள் உத்தமசீலியின் உருவம் வந்து நின்றது. கண் திறந்த நொடி கரிகாலரின் காலை நந்தினி பிடித்திருந்தாள்.

“உங்களின் அழிவு காலம் ஆரம்பம். என்னுடைய வம்சத்தின் கடைசி உயிர் உள்ளவரை உங்களைப் பழிவாங்கிக் கொண்டே தான் இருப்பார்கள்” என்றான் வீரபாண்டியன்.

வீரபாண்டியன் மேலும் பேசத் தொடங்கினான். அந்தப் பேச்சு கரிகால**ரு**க்குக் கோபத்தை வரவழைக்கும் படி இருந்தது.

“உன் தந்தை, உன் தம்பி, நீ! யாரும் உயிரோடு இருக்கமுடியாது. உன் மரணத்தின் காரணம் நான் தான். சோழ தேசத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் பசி பட்டினியில் வாடுவர், புலிக் கொடியின் வீழ்ச்சி வெகு தூரத்தில் இல்லை!”

இந்த வார்த்தைகளைக் கேட்ட நொடி கரிகாலர் முகம் கோபத்தில் சிவந்தது. தன் காலைப் பிடித்திருந்த நந்தினியைத் தள்ளி விட்டார். கீழே விழுந்திருந்த

வீரபாண்டியன் நெஞ்சில் தனது இடது காலை வைத்தார் கரிகாலர்.

“என் காலுக்குக் கீழே நிலத்தில் விழுந்த மீனைப் போல நீயும் துடித்துக்கொண்டிருக்கிறாய்! சற்று வேகமாக மிதித்தால் உன் இருதயத் துடிப்பும் அந்த மீனின் துடிப்பைப்போல நின்றுவிடும்.

நீ மீண்டும் பிறந்தாலும் உன்னால் என்னை வெல்ல முடியாது! சோழ தேசத்தை அல்ல, அங்கு இருந்து ஒரு பிடி மண்ணைக் கூட எடுத்துச் செல்ல முடியாது. என் வம்சத்தை அல்ல, அவர்கள் உடலில் இருக்கும் உடையில் இருக்கும் தூசியைக் கூடத் தொட முடியாதடா!” என்று கூறிய கரிகாலர், அவரது வாளை ஓங்கி,

“உத்தமசீலிரியாரே இது உங்களுக்காக, மலையனுக்காக, செங்கதிரவனுக்காக, சோழதேசத்திற்காக” என்று நிலம் அதிரக் கத்தி வீரபாண்டியனின் தலையை நந்தினியின் கண் முன்னே வெட்டியெறிந்தார்....!!!

வீரபாண்டியனின் உடலில் இருந்து ரத்தம் பெருகி ஓடியது. சிறிது நேரம் தலையற்ற வீரபாண்டியனின் உடல் நீர் விட்டு வந்த மீனைப் போலத் துடிதுடித்துக் கொண்டிருந்தது.

அவனது தலையை மட்டும் கையில் எடுத்து அதில் திறந்து இருந்த அவனின் கண்ணை மூடினார் கரிகாலர். துடித்துக்கொண்டிருந்த வீரபாண்டியனின் இருதயம் துடிப்பை நிறுத்தியது.

www.indianguide.in

நந்தினி அங்கேயே மயங்கி விழுந்தாள். யுத்தம் முடியும் சங்கு நாதம் கேட்டது. களத்தில் எஞ்சி இருந்த பாண்டிய வீரர்கள் ஓடிவிட்டனர்.

களத்தில் மயங்கிக் கிடந்த நந்தினியை சோழர்களிடம் இருந்து தப்பிவந்த ரவிதாசன், சோமன் சாம்பவன், பரமேஸ்வரன் இன்னும் சில வீரர்கள் எழுப்பினர். அவள் மூர்ச்சை தெளிந்தவுடன் அழுது அழுது கண்கள் சிவந்தன.

வீரபாண்டியன் வைத்திருந்த வாளை ரவிதாசன் எடுத்து நந்தினி கையில் கொடுத்தான். அங்கே கிடந்த வீரபாண்டியன் உடல் மேல் ஈக்கள் மொய்க்க, எறும்புகள் ரத்தத்தைக் குடித்துக்கொண்டிருந்தன.

நந்தினி அந்த உடலைக் கட்டியணைத்தாள். “இந்த மரணத்திற்கு நான் நிச்சயம் பழிவாங்குவேன். இங்கே இவருக்கு வந்த இதே நிலை சோழ வம்சத்தில் எல்லோருக்கும் என்னால் வரும் என்று நான் இந்த வீரபாண்டியன் உடல் சாட்சியாக சபதம் எடுக்கிறேன்” என்று அவள் கூறிய நொடி அனைவரும் திகைத்துப் போய்விட்டனர். நந்தினியின் கோபத்தை முதல் முறையாக அவர்கள் பார்க்கின்றனர்.

“ரவிதாசன் தலைமையில் ஆபத்துதவிகள் உங்களுக்கு உதவி செய்யும்” என்றான் சாம்பவன். அனைவரும் வீரபாண்டியன் உடல் சாட்சியாகச் சபதம் எடுத்தனர்.

கரிகாலர் வீரபாண்டியனின் தலையை ஒரு ஈட்டியில் குத்தி வைத்திருந்தார். அவரின் கண் வேறு எதையும் பார்க்காமல் அந்தத் தலையையே உற்று நோக்கிக் கொண்டிருந்தது.

அவரை யாரோ அழைப்பது போல இருந்தது அவர் குரல் வந்த திசை நோக்கிய பொழுது அங்கே வந்தியத்தேவன் நின்று கொண்டிருந்தான்.

பாதி போரில் அவனைப் பாண்டியனின் மணிமுடியைத் தேடிவரும்படி அனுப்பிவைத்தார் ஆதித்தர். அவன் சென்ற சில நாழிகையிலே யுத்தம் முடிந்துவிட்டது. அவன் எங்கு தேடியும் அந்த மணிமுடி கிடைக்கவில்லை. சோர்ந்து மீண்டும் கூடாரத்திற்கே திரும்பிவிட்டான்.

நந்தினியைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கையில் தான் வந்தியத்தேவனின் குரலைக் கேட்டுத் திரும்பினார் கரிகாலர்.

# அத்தியாயம் 26

வந்தியத்தேவனைக் கண்ட நொடி அவர் ஓடிச் சென்று அவனைக் கட்டி அணைத்துக் கொண்டார்.

“நண்பா! நாம் இந்தப் போரில் வெற்றி பெற்றுவிட்டோம்.” என்று கூறும் பொழுது மகிழ்ச்சி அவர் வார்த்தைகளில் இருந்ததே தவிர அவரின் முகத்தில் இல்லை.

வந்தியத்தேவன் ஆதித்த கரிகாலரை அணைத்து, “கரிகாலரே! இங்கே எந்தக் குளத்திலும் அந்த மணிமுடி இல்லை, பின் இந்தக் காடுகளில் உள்ள அனைத்துக் குகைகளிலும், குட்டைகளிலும் பார்த்துவிட்டேன் எங்கேயும் அந்த மணிமுடி கிடைக்கவில்லை ஆனால் அங்கே ஒருவரை பார்த்தேன் அவர் பெயர் கருவூர்த்தேவர் என்றார்” என வந்தியத்தேவன் கூறிய பொழுது,

“என்ன! கருவூர்த்தேவரை நீ பார்த்தாயா?” என்ன கூறினார் என்றார் ஆதித்த கரிகாலர்.

“இளையவன் இலங்கையை வெல்வான். சதிகார கூட்டத்தின் கதை முடிந்தது. அவர்கள் சோழதேசத்திற்கு எதிரே நடத்திய யாகமும் முறியடிக்கப்பட்டது. நான் சல தினங்கள் வெளியூர் செல்கிறேன் அந்த வேளையில் ஆதித்த கரிகாலனையும் சுந்திரசோழரையும் நீ

பார்த்துக்கொள் என்றார்” என வந்தியத்தேவன் கூறினான்.

“அவர் அப்படிக் கூறியிருந்தால் நிச்சயம் அதில் அர்த்தம் இருக்கும். நான் தந்தையோடு தஞ்சையில் சில தினங்கள் தங்கலாம் என்று இருக்கிறேன். வந்தியதேவா நீயும் என்னோடு தஞ்சை வந்துவிடு” என்றார் ஆதித்த கரிகாலர்.

“சரி கரிகாலரே! அப்படியே செய்வோம்”

கரிகாலர் கருவூர்த்தேவரின் பெயரைக் கேட்ட நொடி அவருக்கு அருள்மொழியின் ஞாபகம் வந்துவிட்டது. அன்று வந்த வீரன் “அருள் மொழியிடம் இருந்து தகவல் வந்தது அதற்கு பதிலை தான் நான் இப்பொழுது எடுத்துச் செல்கிறேன். போகும் வழியில் உங்களை எச்சரிக்குமாறு பிரம்மராயர் கூறினார்” என்று கூறியது கரிகாலரின் நினைவில் வந்தது.

வெற்றிபெற்ற பிறகு எப்படியும் சில நாட்களில் பட்டாபிஷேகம் நடக்கும் அதற்கு அருள்மொழி நிச்சயம் வருவான் என்று அவர் மனதிற்கு அவரே ஆறுதல் கூறிக்கொண்டார் .

போர்க்களம் விட்டு அனைவரும் சோழதேசம் நோக்கிப் புறப்படத் தொடங்கினர். சிலர் உயிரற்று உடலாகி களத்திலே சோழ புகழ் பாடி நின்றனர், சிலர் கை, கால் இழந்து வீராதி வீரனாக தாய் தேசம் நோக்கிச் சென்றனர்.

www.indianguide.in

ஆதித்த கரிகாலர் வீரபாண்டியனின் தலையை ஒரு பல்லக்கில் வைத்து எடுத்துச் செல்கிறார் என்ற செய்தி ஊரெங்கும் பரவியது. அவரைப் பார்க்க அவர் செல்லும் வழி எல்லாம் மக்கள் கூட்டம் கரை புரண்டு ஓடியது.

தஞ்சை எல்லைக் காவேரி இருகரையும் தொட்டுக்கொண்டு ஓடிக்கொண்டிருந்தது. சூரிய ஒளி பொன்னியில் விழுந்து தங்க ஆறு ஓடுவது போல் ஜொலித்துக்கொண்டிருந்தது. கரிகாலர் தஞ்சை எல்லையை அடைந்துவிட்டார்.

எல்லை வந்ததும் அவர் அவரின் குதிரையிலிருந்து கீழே இறங்கினார். வீரர்கள் அனைவரும் அவரைச் சுற்றி நின்றுகொண்டிருந்தனர்.

“எல்லோருக்கும் வாழ்த்துக்கள்! இந்த யுத்தத்தில் பங்கெடுத்த அனைவருக்கும் இந்த வெற்றியில் பங்கு உள்ளது. நாம் இந்த வெற்றியை நிச்சயம் கொண்டாடுவோம். நீங்கள் எல்லோரும் முன்னேறிச் செல்லுங்கள். நான், வந்தியத்தேவன், கந்தமாறன், பார்த்திபேந்திரன் நால்வரும் ஒரு வேலையாக செல்கிறோம். எல்லோரும் அரண்மனை சென்று எனக்காகக் காத்திருங்கள்” என்றார் ஆதித்த கரிகாலர்.

வந்தியத்தேவனுக்கு ஒன்றும் புரியவில்லை, கரிகாலரின் அருகே நின்று படைகள் செல்வதைக் கவனித்துக் கொண்டிருந்தான் வந்தியத்தேவன்.

அவர்கள் சென்றவுடன் கரிகாலர் பொன்னி நதியில் இறங்கி அதன் நடுவே சென்று மூன்று முறை முங்கி எழுந்தார். அவரின் உடைகளை எடுத்து வர உத்தரவிட்டார்.

கரிகாலர் உடைகளை எல்லாம் மாற்றிக்கொண்டு, அனைவரும் குதிரையில் வாருங்கள் என்று கூறி குதிரையேறினார். குதிரை மிகவும் வேகமாக ஒரு ஒற்றையடி பாதையில் சென்றது.

வந்தியத்தேவன் அந்த இடத்தைப் பிரம்மிப்பாகப் பார்த்தான். அங்கே தூரத்தில் ஒரு பள்ளிப்படை கோவில் இருந்தது. அது ஒரு வனத்திற்கு நடுவே இருந்தது. புதர்கள் மண்டி இருந்த அந்த இடத்தை நோக்கி கரிகாலர் சென்றார்.

“இது உத்தமசீலியாரின் பள்ளிப்படை! இங்கே தான் அந்த வீரன் உறங்கிக்கொண்டிருக்கிறார்” என்றார் கரிகாலர்.

அந்தப் பள்ளிப்படைக்கு முன்னே ஒரு ஐந்தடிக்குக் குழி பறிக்குமாறு கூற, வந்தியத்தேவன் குழி தோண்டினான்.

உத்தமசீலியின் வாளை எடுத்து உயர்த்தி, “உங்கள் வேலையை உங்கள் வாள் முடி**த்**துவிட்டது. என்னுடன் இருந்து இந்த யுத்தத்தை நடத்திக் கொடுத்ததற்கு நன்றி! இந்த வாள் உங்களின் பாதுகாப்பிற்காக உங்களுடன் இருக்கட்டும்” என்று கூறி அந்தக் குழிக்குள் அந்த வாளை வைத்து மூடினார் ஆதித்த கரிகாலர்.

www.indianguide.in

மௌனம் அந்த இடத்தைச் சூழ்ந்தது. கரிகாலரின் கண்ணில் கண்ணீர் வந்தது. அது ஆனந்தக் கண்ணீர்! வந்தியத்தேவன் செல்வோம் கரிகாலரே என்றான். நால்வரும் மீண்டும் தஞ்சையின் எல்லைக்கு வந்த பொழுது, எல்லையில் காஞ்சியின் தலைமை காவலன் சடையன் நின்றுகொண்டிருந்தான்.

கரிகாலர் இன்னும் கோட்டைக்கு வரவில்லை என்பதைக் கோட்டை சென்று அறிந்துகொண்டான். அவசரச்செய்தி கொண்டு வந்ததால் மீண்டும் எல்லைக்கு வந்து கரிகாலருக்காகக் காத்திருந்தான்.

கரிகாலர் சடையனைப் பார்த்ததும், “சடையா? இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய் எல்லையில் எல்லாம் நலம் தானே” எனக் கேட்க,

“இல்லை கரிகாலரே! எல்லையில் சில நாட்களாக நிலைமை சரியில்லை. நீங்கள் போருக்குச் சென்றதை அறிந்து நமது மாடுகளை, ஆடுகளை எல்லாம் கவர்ந்து சென்றுவிட்டனர். மேலும் சில பெண்களையும் கவர்ந்து சென்று விட்டனர்” என்று சடையன் கூறிய நொடி கரிகாலர் குதிரை விட்டு கீழே இறங்கினார்.

வந்தியத்தேவன் கரிகாலரை நோக்கி, “நீங்கள் தஞ்சை செல்லுங்கள்! நான் கந்தமாறனுடன் காஞ்சி செல்கிறேன்” என்றான்.

கரிகாலரின் மனதில் நண்பன் இல்லாமல் பட்டாபிஷேகம் எப்படி என்று நினைக்க, “என்னைப்

www.indianguide.in

பற்றி கவலை வேண்டாம் இளவரசே! நான் உங்களின் பட்டாபிஷேகத்திற்கு இல்லை என்று வருத்தப்படவேண்டாம். என் உடல் இங்கில்லை என்றாலும் உள்ளம் என்றும் உங்களைச் சுற்றியே இருக்கும்! நான் செல்கிறேன்" என்று கூறி குதிரையேறி சடையனுடன் காஞ்சி நோக்கிச் சென்றான் வந்தியத்தேவன்.

ஒரு மனதாக வந்தியத்தேவனை அனுப்பிவைத்துவிட்டு பார்த்திபேந்திரனுடன் தஞ்சைக்குள் பிரவேசித்தார் ஆதித்த கரிகாலர். மக்கள் கூட்டம் கூட்டமாக அரண்மனை முன் திரண்டிருந்தனர்.

"வீரபாண்டியனின் தலை கொண்ட கோப்பரகேசரி வாழ்க ! வாழ்க!!!" என்ற கோஷம் விண்ணை முட்டியது. கொம்பு, பறை இசையோடு அமோக வரவேற்பு! பொய்க்கால் குதிரையாட்டம் புலியாட்டம், சிலம்பம் என்று மக்கள் அவர்களின் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

அரண்மனையை நெருங்க நெருங்க மக்கள் வெள்ளம் பெருக்கெடுத்தது. சுற்றும் முற்றும் உள்ள ஊரில் இருந்து அனைவரும் அவரைப் பார்க்க வந்தனர். சிலர் மரத்தின் மீது எல்லாம் கூட அமர்ந்திருந்து அவரைக் கண்டனர்.

இளையபிராட்டி குந்தவை, அவரின் தோழிகள், பழுவேட்டரையர்கள், சித்தப்பா மதுராந்தகன், செம்பியன் மாதேவி, சுந்தரசோழர், வானவன்மாதேவி என்று எல்லாரும் இருந்த

www.indianguide.in

பொழுதும் ஆதித்த கரிகாலரின் கண்கள் அருள்மொழியைத் தேடியது.

பின்னிருந்து ஆதித்த கரிகாலரின் கண்களை யாரோ மூடிய நொடி அவரின் கைகளைத் தடவிப் பார்த்தார் கரிகாலர். கையில் ஒரு வளையம் அணிந்திருந்தான், வலயத்தைத் தொட்டபொழுது அதில் புலி உள்ளது தெரிந்தது. அருள் மொழி என்று கூறி திரும்பினார் ஆதித்த கரிகாலர்.

அவரின் கண் முன்னே அருள்மொழி நின்று கொண்டிருப்பதை அவரால் நம்பமுடியவில்லை.

“தம்பி நீ எப்படி வந்தாய் எப்போது வந்தாய் ?ஏன் வந்தாய் ?” என்று கேள்வி மேல் கேள்விகள் கேட்க, உடனே “அண்ணா” என்று எட்டி தாவி கட்டித்தழுவினர் அருள் மொழிவர்மர்.

“பதிலை நான் சொல்கிறேன்” என்று பிரம்மராயர் முன்னே வந்த நொடி,

“நீங்கள் இல்லையென்றால் இந்தப் போரில் வெற்றி பெற்றிருக்க முடியாது” என்று கூறி அவரின் இரு கைகளையும் சேர்த்து பிடித்துக் கொண்டார் ஆதித்த கரிகாலர்.

“நான் தான் அருள்மொழியை அழைத்தேன், இங்கே உங்களின் பட்டாபிஷேகம் மற்றும் மதுராந்தகனின் திருமணம் இரண்டும் நடக்கப்போகிறது. அதற்குத் தான் அவரை ஒரு சில தினங்கள் முன் வருமாறு என்

சிஷ்யனிடம் கூறி அனுப்பினேன்" என்றார் பிரம்மராயர்.

"நல்லதே நடக்கும்!" என்று கூறிய ஆதித்தர், அங்கே வைத்திருந்த பல்லக்கை நோக்கிச் சென்று அதன் திரையை விலக்கி உள்ளே இருந்து வீரபாண்டியனின் தலையை எடுத்துத் தன் தலைக்கு மேலே தூக்கிய நொடியில் நிலங்கள் அதிரும் வகையில் "சோழம் ! சோழம் !" என்று சோழமக்கள் கோஷமிட்டனர்.

அடுத்த முழுநிலவு நாளன்று இளவரசர் ஆதித்த கரிகாலருக்கு பட்டாபிஷேகம் என்று சுந்தரசோழர் அறிவித்தார்.

வெகு வருடங்களாக உத்தமசீலியின் மரணத்திற்கான அர்த்தம் கிடைத்தது. சோழதேசம் வாழ்க என்ற கோஷம் வானில் உள்ள தேவதைகளைக் கூட சோழதேசத்திற்கு அழைத்து வந்தது.

# அத்தியாயம் 27

முழு நிலவு நாள்! சோழநாடே திருவிழாக் கோலம் பூண்டிருந்தது. மக்கள் நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் வந்திருந்தனர். சோழ தேசம் மொத்தம் எதிர்பார்த்துக் காத்திருந்த நல்ல நாள் அது. பாட்டும் கூத்துமாக மக்கள் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தனர்.

இளவரசர் அங்கே ஒரு அரியாசனத்தில் அமர்ந்திருந்தார். மஞ்சள் மற்றும் சிவப்பு கலந்த உடை. அவருக்குப் பின்னால் பெரிய புலிச் சின்னம் பொறித்திருந்த சிவப்புத் துணி தொங்க விடப்பட்டிருந்தது. இரண்டு பெண்கள் மயிலிறகால் அவருக்கு விசிறி கொண்டிருந்தனர். கையில் ஒரு பெரிய வாள்! பார்வை மிகவும் கூர்மையாக நடப்பவற்றைக் கவனித்துக் கொண்டிருந்தது.

அப்போது அங்கே வந்திருந்த ஒரு பெண் யாழ் மீட்டி,

***காலம் போற்றும் காலன் நீயே !***
***பாண்டியனை வென்ற வீரன் நீயே !***
***ஆதியும் நீயே அந்தமும் நீயே!***
***கோபம் நீயே குணமும் நீயே !***

என்று பாடத் தொடங்க தேவரடியார்கள் ஆடத் தொடங்கினர்.

நடனம் உச்சத்தைத் தொட்ட நொடி, தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் குந்தவையும் அவர்களுடன் ஆட, சோழதேசமே ஆடத் துடங்கியது.

மக்கள் நொடிக்கு நொடி உற்சாகமாக கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர். அருள்மொழி அண்ணன் அருகே அடக்கமாக நின்று நடப்பவற்றைப் பார்த்துக் கொண்டிருக்க, அருள்மொழியை மட்டும் ஒருத்தி ஒளிந்திருந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

வானதி பார்ப்பதைப் பார்த்துவிட்ட கரிகாலர், "தம்பி என்ன இந்தப் பெண் உன்னை இப்படிக் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருக்கிறாள்?" என்று கூற அவர் முகத்தில் ஒரு வித புன்னகை தெரிய கரிகாலரும் அவரது நண்பன் பார்த்திபேந்திரனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

ஆதித்த கரிகாலர் அந்தக் கூட்டத்தை உற்று நோக்கினார். அங்கே அவரின் கண்ணில் மட்டும் நட்சத்திரங்களுக்கு இடையில் மின்னும் முழுமதியென ஒரு முகம் தெரிந்தது. அது அவர் மறக்க நினைக்கும் முகம், தலை விரிகோலத்துடன் நந்தினி! பாண்டியனின் தவறால் அன்று மதுரை எரிந்தது. இன்று பாண்டியனைக் கொன்றதால் சோழம் எரியும் என்பது போல இருந்தது அவளின் தீ கக்கும் பார்வை!

"நந்தினி ...."என்று அவர் மனத்திற்குள் நினைத்த நொடி அந்த உருவம் மாயமாக மறைந்தது. சோழ தேசம் இன்று உண்ணுவதற்காக அங்கே பெரிய விருந்தே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

www.indianguide.in

ஆடிக்கொண்டிருக்கும் குந்தவையும் நந்தினியைக் கவனித்தது போல திடீரென்று ஆட்டத்தை நிறுத்திவிட்டு எங்கேயோ வேகமாகச் சென்றாள். இதைக் கவனித்தார் கரிகாலர். எங்கே செல்கிறாள் என்று பார்க்கும்படி வீரன் ஒருவனுக்கு ஆணையிட்டார் கரிகாலர்.

குந்தவை கூட்டத்தைப் பிளந்து உணவு சமைக்கும் இடத்திற்குச் சென்றாள். “யாரங்கே! இந்த உணவுகளைப் பரிசோதியுங்கள்” என்று அவள் கூறிய நொடி, ராஜமருத்துவர்கள் குழு அங்கே வந்தது.

அவர்களுடன் மயில் ஒன்றும் எடுத்துவரப்பட்டது. வரகு சோறு நிலத்தில் இறைக்கப்பட்டது. மயில் அதன் அருகே சென்றவுடன் சிலிர்த்துக்கொண்டு ஓடியது. ராஜ வைத்தியர், “அந்த உணவில் நஞ்சு இருக்கிறது தாயே!” என்றார்.

“பெரும் இழப்பு தவிர்க்கப்பட்டது” என்று வைத்தியர் கூற, இதைச் செய்தவர்கள் யார் என்று விசாரிக்கும்படி கூறினாள் குந்தவை.

அருள் மொழி தலைமையில் நாற்படை வீரர்களும் அணிவகுத்து நிற்க சிம்மாசனம் நோக்கி நடக்கத் தொடங்கினர் கரிகாலர்.

முதலில் யானைப்படை. யானைகள் அனைத்தும் அவர் நடந்து வந்த வேளையில் மண்டியிட்டு வணங்கியது. பின் குதிரைப்படை. குதிரைகள் அனைத்தும் இரு கால்களில் எழும்பி அவரை

www.indianguide.in

வணங்கியது, பின் ஆயுதம் ஏந்திய வீரர்கள் ஆயுதங்களை அவர் முன் நீட்டி மண்டியிட்டு நின்றனர், பின் தளபதி சின்னப் பழுவேட்டரையர் அவரை வணங்கி முன்னே சென்றார். அருள்மொழியையும் கரிகாலனையும் பின்னே ஒரு படை சூழ முன்னேறிச் சென்றார் ஆதித்த கரிகாலர்.

ஒரு எல்லை வந்தவுடன் வாளை மேல் ஏந்தி நின்ற அருள்மொழியைக் கண்டதும் நாற்படையும் அருள்மொழிக்கு பின்னால் நின்றது. அருள்மொழியோடு அனைவரும் ஆதித்த கரிகாலர் முன் வணக்கம் செய்ய, சிம்மாசனத்தில் அமர்ந்தார் கரிகாலர்!

குந்தவை ஒன்றும் நடக்காதது போல மீண்டும் விழா நடக்கும் இடத்திற்கு வந்தாள். அப்போது வேள்வி முன் அமர்ந்திருந்தார் ஆதித்த கரிகாலர். அருள்மொழி அவரின் எதிரே நிற்க, அவருக்கு முன்னாள் சோழ இளவரசர்கள் அணியும் கிரீடம் இருந்தது. அதில் இரத்தின கற்களும் வைரம் போன்ற விலை உயர்ந்த பொருட்கள் எல்லாம் பதிக்கப்பட்டு இருந்தன.

அரசர் சுந்தர சோழர், மும்முடி பிரம்மராயர், செம்பியன் மாதேவி, வானவன் மாதேவி, இளையபிராட்டி குந்தவை எல்லோரும் முக மலர்ச்சியோடு இருக்க, பெரிய பழுவேட்டரையை நோக்கிய அரசர் அந்த மகுடத்தை எடுத்து ஆதித்த கரிகாலரின் தலையில் வைக்கும்படி கூற அவரும் அந்த மகுடத்தை எடுத்துக் கரிகாலரின் சிரசில் வைத்த நொடியில் சோழ மக்கள் எழுப்பிய ஒலி அவர்களின் உற்சாகத்தைக் காட்டியது.

www.indianguide.in

வீரர்கள் அனைவரும், அருள்மொழியும் கரிகாலர் முன் அவரவர் ஆயுதங்களைச் சமர்ப்பித்து நின்றனர். மக்கள் அனைவரும் ஒரே குரலில் பின் வருமாறு பாடினர்.

*கல்லணைப் பெருவேந்தன்*
*வழிவந்த கரிகாலன்*
*வாழிய வாழியவே!*

*உத்தம சீலியின்*
*உறைவாள் ஏந்தி*
*உயர்ந்தோர் சபையில்*
*உரைத்தாய் வெஞ்சினம்*
*வீர பாண்டியன்*
*உயிர் பறிப்பேன் என்றே!*

*நாற்படையின் நாயகனாய்,*
*அழிவற்ற ஆதவனாய்*
*ஆதித்தன் நிற்க,*
*பாண்டிய நகரை நரகமாக்க*
*நகர்ந்தன படைகள் - சோழ*
*நகரை விட்டே!*

*கல்லணைப் பெருவேந்தன்*
*வழிவந்த கரிகாலன்*
*வாழிய வாழியவே!*

*பல்லாயிரம் வீரர்கள்*
*புடைசூழ்ந்து தாக்க*

www.indianguide.in

*பரிகளுக்கிடையே ஓர்*
*அரிமாவென்றே*
*சேவூர்க் களந்தனில்*
*செங்குருதிக் குடித்த*
*காலன் பரகாலன் - எங்கள்*
*ஆதித்த கரிகாலன்!*

*வீரவாளேந்தி நீ நிற்க*
*விரிந்தது சோழம்*
*வீரபாண்டியன் சிரமெனும்*
*தோரணங் கொண்டு!*

*கல்லணைப் பெருவேந்தன்*
*வழிவந்த கரிகாலன்*
*வாழிய வாழியவே!*

*மாவிலைத் தோரணம்*
*மங்கள முழக்கம்*
*மாலை மலர்களோடு*
*மணந்தது மாநகரம் - எங்கள்*
*மன்னவனின் வீரம்போற்ற!*
*கல்லணைப் பெருவேந்தன்*
*வழிவந்த கரிகாலனே*
*வெற்றித் திருமகள் - உன்*
*வாளில் வாகைசூட*
*விண்ணையும் ஆள*
*வாழ்த்தி வணங்குவோமே!*
*ஆதித்த கரிகாலன் வாழியவென்றே!*

கரிகாலரின் புகழைப் பாடிய நொடி, எங்கிருந்தோ அனைவருக்கும் ஒரு வேகமும் சக்தியும் வந்து

www.indianguide.in

தொற்றிக்கொள்ள, ஆதித்தர் புன்முகத்தொடு அமர்ந்திருந்தார்.

சிம்மாசனத்தில் இருந்து எழுந்த ஆதித்த கரிகாலர் பிரமாணம் எடுக்க முன்னே வந்தார்.

"கரிகாலர், விஜயாலயர் வழிவந்த சுந்தரசோழரின் புதல்வனாகிய நான், என் முன்னோர்கள் கட்டிக்காத்த இந்தச் சோழதேசத்தை இன்னுயிர் ஈந்தும் பாதுகாப்பேன்! சோழ நாட்டின் முடி இளவரசன் எனும் உன்னதப் பொறுப்பேற்று, சோழ நாட்டு மக்களின் நலனையும், உணர்வுகளையும் மதிப்பேன் என்றும் என் பதவியைக் கொண்டு எந்த பாரபட்சமும் பார்க்காமல், மனுநீதிச் சோழன் வழி வந்தவன் எனும் பெ0ருமையை நிலை நாட்டுவேன் என்று சோழ குலதெய்வம் நிசும்பசூதனி சாட்சியாகவும் சோழ மக்கள் சாட்சியாகவும் பிரமாணம் எடுக்கிறேன்." என்று அவர் கூறிய நொடியில்,

"கரிகாலன் வழிவந்த ஆதித்த கரிகாலர் வாழ்க வாழ்க! சோழ இளவரசன் ஆதித்த கரிகாலர் நீடூழி வாழ்க! *வீர பாண்டியன் தலைகொண்ட கோப்பரகேசரி ஆதித்த கரிகாலர்* வாழ்க வாழ்க!" என்ற மக்களின் கோஷம் விண்ணைத் தொட்டுத் திரும்பியது!

பின் அரியணை மேலிருந்து கீழே இறங்கி அருள்மொழியை நோக்கி வந்த கரிகாலர் அருள் மொழியைக் கட்டி அணைத்தார்.......

“போதும்! அவன் ஓய்வெடுக்கட்டும்” என்றாள் குந்தவை.

“சரி தேவி அவன் உறங்கட்டும்” என்றார் வந்தியத்தேவர்.

“எனக்கு உறக்கம் வரவில்லை அத்தை! பின் என்ன நடந்தது மாமா?” என சிறுவன் ஒருவன் கேட்க,

“அதை இன்னொரு நாள் கூறுகிறேன் மதுராந்தகா” என்றார் வந்தியத்தேவர்.

“வந்தியத்தேவரே! கரிகாலரின் கதையைச் சொல்லி மதுராந்தகனை (ராஜேந்திரனை ) அவரைப் போல் வளர்க்க எண்ணுகிறீர்கள் போல” என்றார் அருள்மொழி.

“இவன் உங்களுக்கு எப்படியோ தெரியாது! ஆனால் எனக்கு இவன் தான் ஆதித்த கரிகாலன்!” என்றார் வந்தியத்தேவர். வந்தியத்தேவனின் வார்த்தைகள் அருள்மொழிக்கு ஆதித்த கரிகாலரை நினைவிற்கு கொண்டுவர அன்று நிசும்பசூதனி கோவிலுக்குச் செல்லும் வழியில், “நான் மரணித்தால் உனக்கே மகனாய்ப் பிறப்பேன்” என்று கரிகாலர் கூறிய வார்த்தைகள் நினைவிற்கு வந்தது.

மூடியிருந்த அறையின் கதவைத் திறந்த வீரன் ஒருவன், “ஆதித்த கரிகாலரைக் கொன்றவர்கள் பற்றிய தகவல் கிடைத்துள்ளதாக முதல் மந்திரி கூறச் சொன்னார் அரசே” என்று கட்டில் மேல் அமர்ந்திருந்த

ராஜ ராஜ சோழராகிய அருள்மொழியை நோக்கிக் கூறினான்**.......**

**"ஸ்வஸ்திஸ்ரீ வீரபாண்டியன் தலைகொண்ட கோப்பரகேசரி ஆதித்த கரிகாலனுக்கு யாண்டு**"......
..........................................................................................

ஆதித்த கரிகாலன் பாகம் ஒன்று முற்றும்.

# பின்னுரை

வரலாற்று நாவல் என்ற அடிப்படையில் இந்தக் கதை எழுதப்பட்டிருந்தாலும், இந்தக் கதையில் நிறைய புனைவு உள்ளது. இந்தக் கதையில் உள்ள வரலாற்று உண்மைகளைக் கூறவேண்டும் என்ற கடமையும் பொறுப்பும் எனக்கு உண்டு.

உத்தமசீலி என்றொரு சோழ இளவரசன் இருந்தார் என்ற தகவல் நமக்குக் கிடைக்கிறது. அவர் பராந்தக சோழனின் மகன் என்பதையும் நாம் அறியமுடிகிறது. பராந்தக சோழனின் வேறு இரு மகன்களின் இறப்புப் பற்றிய குறிப்பு நம்மிடம் உள்ளது. ஆனால் உத்தமசீலியின் மரணம் பற்றி நமக்கு எந்தக் குறிப்பும் இல்லை.

வீரபாண்டியன் தன்னைச், "சோழன் தலைகொண்ட கோவீரபாண்டியன்" என்று அழைத்துக்கொள்வதால், முன்னம் ஒரு சோழனை இவர் வென்றான் போலும். ஆயினும் யார் தலையை இவர் கொண்டார் என்பது இன்னும் விவாதப் பொருளாய் உள்ளது. உத்தமசீலியை இவரே கொன்றிருக்க வேண்டும் என்ற கோணத்தில் நிறையபேர் அவர்களின் கருத்துக்களைக் கூறுகின்றனர்.

வீரபாண்டியனின் தலையை ஆதித்த கரிகாலன் எடுத்ததாக அவரின் கல்வெட்டுகள் மறைமுகமாகக் கூறுகின்றன. மத்தபுரீஸ்வரர் கோவிலில் ஆதித்த கரிகாலரின் கல்வெட்டுகள் இருப்பதாக தொல்லியல்

துறை வெளியிட்ட பாபநாசம் கல்வெட்டுகள் என்ற புத்தகம் கூறுகிறது.

இதுதவிர இந்தக் கதையில் நிறைய சிறிய சிறிய உண்மைச் செய்தித்துளிகளை அங்கும் இங்குமாகத் தூவியுள்ளேன். சான்றாக, விஷங்களை அறிய அன்று மயிலைப் பயன்படுத்தினர். யானையை நிறுத்தி ஆற்றைக் கடந்தனர். இதுபோல இன்னும் பல தகவல்கள். இந்தப் புத்தகம் எப்படி ஏற்றுக்கொள்ளப்படுகிறதோ அதைப் பொறுத்து இந்தப் புத்தகத்தின் இரண்டாம் பாகத்தை எழுதலாம் என்றிருக்கிறேன். சக நிகழ்வுகளின் கோர்வையே உலக அரசியல், அப்படி ஆதித்த கரிகாலனின் கொலைக்கும் காந்தளூர் சாலை போருக்கும் இருக்கும் தொடர்பை அடுத்த பாகத்தில் காண்போம்...!

உங்களின் ஆதரவிற்கு நன்றி!

இப்படிக்கு
**இன்ப பிரபஞ்சன்**